இறக்கை: 9 இறகு: 7

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

ஜூலை 2020

விலை ₹25

காக்கை கரவா கரைந்துண்ணும்



- இரா. மோகன்ராஜன்
- சு. இராமசுப்பிரமணியன்
- க. பஞ்சாங்கம்
- ஜோ டி குரூஸ்
- க. முகுந்தன்
- இரா. காமராசு
- வேணுமாதவன்
- அமரந்த்தா
- சோனியா ஷா
- மோ. செந்தில்குமார்
- சாவித்திரி கண்ணன்
- அப்பணசாமி
- என். சரவணன்
- இரா. எட்வின்

## படைப்புத்துறைக்கு கொரோனா சொல்லும் பாடம்

டிராட்ஸ்கி மருது



# கே.எம்.லீலா நினைவு விருது

**19-3-1961**
**6-7-2017**

‘காக்கைச் சிறகினிலே’ இதழின் ஆசிரியர் திரு வி.முத்தையா அவர்களின் துணைவியார் திருமதி கே.எம்.லீலா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நாள்: 6-7-2020. அவர்தம் நினைவு நாளில் அவர்களின் மகன் திரு. அலெக்ஸாண்டர் அபிலாஷ், மகள் திருமதி. மோனிஷா குடும்பத்தினர் இணைந்து தங்களது தாயாரின் நினைவாக **“கே.எம். லீலா நினைவு விருது”** என்ற பெயரில் ரூ. 25,000 மதிப்புள்ள விருது ஒன்றினை ஆண்டுதோறும் வழங்க முன்வந்திருக்கிறார்கள். இந்த ஆண்டின் விருதுக்குரியவர் பற்றிய அறிவிப்பு பின்னர் வெளியாகும்.

**– க.சந்திரசேகரன்**
**பொறுப்பாசிரியர்**

**காக்கைச் சிறகினிலே**

காக்கை கரவா கரைந்துண்ணும்

இறக்கை: 9 இறகு: 7

**திருவள்ளுவராண்டு 2051**
**ஆடி**
**ஜூலை 2020**

*ஆசிரியர்*
***வி.முத்தையா***
9841457503

*பொறுப்பாசிரியர்*
***க.சந்திரசேகரன்***
9715146652

*ஆசிரியர் குழு*
***இரா.எட்வின்***
***முகிலன்***
***அமரந்த்தா***
***கசன்***

*தொடக்க கால நெறியாளர்கள்*
***கி.பி.அரவிந்தன்***
***வீர.சந்தானம்***

*நெறியாளர்கள்*
***டிராட்ஸ்கி மருது***
***க.பஞ்சாங்கம்***
***கே.எம்.வேணுகோபால்***

*புலம்பெயர் நாடுகளுக்கான தொடர்புக்கு:*

**கனடா:**
**வி.மகேந்திரன்**
V.Mahenthiran
Mahenthiran_v@hotmail.com

**ஐரோப்பா:**
**க.முகுந்தன்**
K.Mukunthan
kmukunthan@gmail.com

**காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், கட்டுரையாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.**

# நீதித்துறையை உலுக்கியுள்ள மக்களின் குரல்

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான் குளத்தில், செல்பேசிக் கடை நடத்திவந்த தந்தையும் மகனும் கொடூரமாக அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் தமிழகம் முழுவதும் பெருத்த கொதிநிலையை ஏற்படுத்தியுள்ளதோடு உலகின் கவனத்தையும் ஈர்த்திருக்கிறது. குறிப்பிட்ட நேரத்துக்கு மேல் கடையைத் திறந்து வைத்திருந்ததால் எச்சரித்த போலீசாரை அவமரியாதையாகப் பேசியதாகக் கூறி காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள்தான் இப்படியான கொடூரக் கொலைக்கு ஆளாகி இருக்கிறார்கள். தொடர்புடைய காவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு பின்னர், தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கொரோனா பொது முடக்கத்தைக் கடைபிடிக்க அரசு அறிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளை மீறுபவர்களை காவல்துறை கண்டிக்கலாம்; எச்சரிக்கை செய்யலாம்; வழக்குப் பதிவு செய்யலாம்; வருவாய்த்துறையினர் மூலம் கடையைப் பூட்டிச் சீல் வைக்கச் செய்யலாம். ஆனால் கொலைகூடச் செய்யலாம் என்பதை தூத்துக்குடி மாவட்டக் காவல் துறையினர் சாத்தான்குளத்தில் செய்து காட்டியிருக்கிறார்கள். இது ஒரு அரச பயங்கரவாதம். ஆமாம், அரச பயங்கரவாதம். குடிமக்கள் மீது நிகழ்த்தப்பட்டுள்ள இந்த வன்கொலையை வேறு என்ன பெயர் சொல்லி அழைப்பது?

கடந்த மூன்று மாத காலமாக அரசு அவ்வப்போதும் தொடர்ந்தும் அறிவிக்கும் பொது முடக்கங்களால் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு விதத்தில் பாதிக்கப்பட்டு பெருத்த மன உளைச்சலில் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டுள்ளன. இன்னும் பலர் தமது வாழ்வாதாரத்தையே இழந்து மான அவமானங்களுக்குப் பயந்து ஒரு வேளை உண்டும் மறுவேளை பட்டினி கிடந்தும் இலைமறை காய்மறைவாக மிகுந்த கௌரவத்தோடு நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் அந்த மக்களுக்கு ஆதரவாகவும் அனுசரணையாகவும் இருக்க வேண்டிய அரசுத் துறையின் அங்கமான காவல்துறையை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளாமல், கட்டுக்கடங்காத அதிகாரத்தை கைகளிலும் கைத்தடிகளிலும் துவக்குகளிலும் ஏந்திக்கொண்டு திரியச் செய்ததன் விளைவு, அரச பயங்கரவாதத்தில் கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறது. சாதாரண குடிமக்கள் மீது நிகழ்த்தப்பட்டுள்ள இந்த வன்கொலை கொடூரமானது; தண்டிக்கப்பட வேண்டியது; உடனே முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டியது.

கொடுங்காயப்படுத்தி குற்றுயிரும் குறையுயிருமாய் இருந்த தந்தையையும் மகனையும் கோவில்பட்டி நீதிபதி கண்ணால் பார்க்காமலேயே நீதிமன்றக்காவலில் வைக்க அனுமதி அளித்திருப்பதாக மக்கள் குரல் உயர்த்துகிறார்கள். சிறையில் அடைப்பதற்கு முன் மருத்துவர் எவ்வாறு சான்றிதழ் அளித்தார்? சிறைக்காவலுக்குப் போனபோது சிறைக்காவலில் எவ்வாறு அனுமதித்தனர் என்பதெல்லாம் முன்னுக்குப்பின் முரணான தகவல்களாக வந்து கொண்டிருக்கின்றன.எது உண்மை என்பது முழுமையான விசாரணைக்குப் பிறகே தெரியவரும் என்றாலும் மக்கள் நீதித்துறையை நோக்கியே கொதிக்கிறார்கள்.

நீதிபரிபாலன அமைப்பு ஒன்றே சாதாரண மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அரண் என்று நம்பியிருந்த மக்களின் நம்பிக்கையைக் குலைத்துப் போட்டிருக்கிறது கீழமை நீதிமன்ற நடவடிக்கை. மேலும், இந்த வன்கொலை சம்பவத்துக்குள் ஏதோ ஒன்று ஒளிந்து கொண்டுள்ளது. அது மதமா? சாதியா? இல்லை அதிகாரமா? என்பதுதான். இதைக் கண்டடைந்துவிட்டால் இரட்டைக் கொலையின் பின்னணி விவரங்கள் பிடிபட்டுவிடும். இந்த நிலையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை தாமாக முன்வந்து இந்த வழக்கை விசாரிக்க ஆணையிட்டிருப்பதுதான் இந்தத் துயர நிலையிலும் கொஞ்சம் நம்பிக்கை தருவதாக இருக்கிறது. சட்டத்தை நீதிமன்றங்கள்தான் கையிலெடுக்க வேண்டும். காவல்துறை அல்ல என்பதை நீதிமன்றம் நிலைநாட்ட வேண்டிய தருணம் வந்திருக்கிறது.

காக்கைச் சிறகினிலே
காக்கை கரவா கரைந்துண்ணும்

ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும் 29 அல்லது 30ஆம் தேதியில் 'காக்கைச் சிறகினிலே' அஞ்சல் செய்யப்படுகிறது. 5ஆம் தேதிக்குள் இதழ் கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய செல்பேசி எண்: 98414 57503.

**உறுப்பினர் கட்டணம்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் விலை | ரூ. | 25 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 275 |
| இரண்டு ஆண்டுக் கட்டணம் | ரூ. | 500 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ. | 1250 |
| மாணவர் சந்தா | ரூ. | 200 |

(மாணவர்கள், கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றிதழோடு விண்ணப்பிக்க வேண்டும்)

காசோலைகள், வங்கி வரைவோலைகள் அனைத்தும் KAAKKAI, (A/c No. 60111010005660. SYNDICATE BANK, Triplicane, Chennai - 5. IFSC: Synb0006011) என்ற பெயருக்கு, சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும். பணவிடை (மணியார்டர்) மூலமும் சந்தா செலுத்தலாம்.

**வெளிநாட்டு உறுப்பினர் கட்டணம்**

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | $ | 30 |

உறுப்பினர் கட்டணத்தை KAAKKAI, (A/c No. 60111010005660. SYNDICATE BANK, Triplicane, Chennai - 5. Shift Code : SYNBINBB 031) என்ற பெயருக்கு, சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

*தொடர்பு முகவரி:*
காக்கை
288, டாக்டர் நடேசன் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
*செல்பேசி:* 98414 57503,
*தொலைபேசி :* 044-28471890,
*மின்னஞ்சல்:*
kaakkaicirakinile@gmail.com
*முகநூல்:*
https://www.facebook.com/kaakkai.cirakinile

## சிறகுக்குள்ளே...

05 கொரோனா அறம்..! ■ இரா.மோகன்ராஜன்

11 செயற்கை அறிவு ■ சு.இராமசுப்பிரமணியன்

15 இந்திய இலங்கை ஒப்பந்தம் - ஒரு மீள்பதிவு

17 யார் பகைவர்... யார் நண்பர் ■ ஈரோஸ் பாலகுமார் பேட்டி - ஒரு மீள்பதிவு

20 மா.அரங்கநாதன் கதைகளை வாசித்தல் ■ க.பஞ்சாங்கம்

26 அறிமடம் ■ ஜோ டி குரூஸ்

32 ஊர் சுற்றிக் காக்கையார் ■ க.முகுந்தன்

42 எழுத்து சொல் பொருள் ■ வேணு மாதவன்

44 சேகுவாரா: மருத்துவ சர்வதேசியத்தின் ஊற்றுக்கண் ■ அமரந்த்தா

50 கொரோனா தொற்றுக்கான மூலகாரணி அசாதாரண மிருகங்களா? ■ சோனியா ஷா

54 படைப்புத்துறைக்கு கொரோனா சொல்லும் பாடம் ■ டிராட்ஸ்கி மருது

57 மிகையுணர்ச்சி ஊட்டப்பட்ட ஒரு வாசகப் பிரதி சிறந்த மொழிபெயர்ப்பாகுமா? ■ மோ. செந்தில்குமார்

66 இந்தியாவுக்கான கருத்தியலை வடித்தெடுப்பதில் டி.டி. கோசம்பியின் வகிபாகம் ■ அப்பணசாமி

73 இராவணனை சிங்களத் தலைவனாக ஹைஜாக் செய்வதன் அரசியல்! ■ என்.சரவணன்

அட்டைப் புகைப்படம்: ஓவியர் டிராட்ஸ்கி மருது

கட்டுரை

■ இரா.மோகன்ராஜன்
mohanrajan.r@gmail.com

# கொரோனா அறம்..!



யுத்தம் இருபுறமும் கூரான கத்தியைப் போன்றது. யாரையும் காயப்படுத்தாமல் விடாது. அதற்கு எதிரி நண்பன் என யாதொருவரும் கிடையாது. யுத்தத்திற்கு நீதி தேவதை போன்றே கண்கள் கிடையாது. அது இரு யுத்தத்தின் துருவத்தையும் கொல்லக்கூடியது. துருவங்கள் இல்லாதது. போர் என்றால் போர்தான். போர் என்றால் அழிவு. அழிவென்றால் போர். அதற்கு வேறு நிறம் கிடையாது. எனவேதான் மனிதர்கள் அதற்கு நிறம் கொடுக்கிறார்கள். யுத்தம், யுத்தம் குறித்து ஏதும் சொல்லாது போவதால் மனிதர்கள் யுத்தம் குறித்துச் சொல்கிறார்கள். நீதி வகுக்கிறார்கள். குணா கவியழகன் குறிப்பிடுவதுப் போல 'யுத்தமே அறமற்றது. யுத்தத்திற்கு அறமா!' என்று. இரு புறமும் கூரானக் கத்தியைப் பிடிப்பதற்குச் சில வழிமுறைகள் தேவைப்படுவதைப் போல யுத்தத்திற்கு அவ்வாறன நீதியும், நெறியும் தேவைப்படுகின்றன. இருபுறத்தையும் கையாள்வதற்கு இந்த நீதி அவசியமானது. இல்லையென்றால் கத்தியையும், யுத்தத்தையும் கையாள முடியாது. கத்தியும், யுத்தமும் வேறு வேறல்ல. எனவேதான் அறமற்ற ஒன்றிற்கு அறம் தேவைப்படுகிறது. அறமற்றதற்குத்தானே அறம் தேவைப்படுவதாக இருக்கிறது.

யுத்தத்திற்கென்று அறங்கள் இருக்கின்றன. யுத்தத்தின் நீதியை மீறாதிருக்கும் அறம். உலகெங்கும் யுத்தத்திற்கான நீதிகள் வகுக்கப்பட்டுப் பொது அறம் ஒன்று கடைபிடிக்கப்படுவதுண்டு. யுத்த அறத்தை மீறினால் தண்டனைகள் இருக்கின்றன. அவை போர்க் குற்றம் என்று அடையாளம் காணப்படுகின்றன. மனித உரிமை மீறல் தொடங்கி, பொது மன்றங்களைத் தாக்காதிருக்கும் வகையிலான உடன்பாடுகள் கண்டறியப்பட்டு அதன் வழி யுத்த நெறிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. போர் அறம் என்பது மனித அறம்தான். மனிதனுக்கான அறம்தான் ஆனால் அது தன்னளவில் மீறுதலுக்குள்ளாவதையும் காணக்கூடியதாகவே இருக்கிறது. மருத்துவ வளாகங்கள், செஞ்சிலுவைச் சங்க சின்னங்கள் உள்ள இடங்களில் யுத்தக் கருவிகளைப் பயன்படுத்தக்கூடாது என்பது நாடுகளுக்கிடையிலான போர் குறித்த அய்.நா வரையறை கூறுகிறது. ஆனால் இந்த நெறிமுறை, நீதி, சட்டவாக்கம் என சகலத்தையும் கடந்து போரறம் கடைபிடிக்கப் படுவதில்லை.

ஏறக்குறைய கொரோனா போன்ற தொற்றும், மனிதர்களுக்கெதிரான யுத்தமே. எனவே தொற்றுக்கென்று அறங்கள் தேவைப்படுகின்றன. தொற்று தொற்றாக இருக்கும் வரை அதற்கு அறமென்று ஏதும் தேவைப்படுவதில்லை. ஆனால் அது அரசியல் போராக மாறும்போது அறம் அவசியமாகிவிடுகிறது. சாதாரணமாகத் தொற்று காணப்படுபவரை தனிமைப்படுத்தி

சிகிச்சை அளிப்பது நடைமுறை. அதுவே பணக்காரர்களுக்கு மட்டுமே சிகிச்சை என்று சொல்லும்போது தொற்றை எதிர்கொள்வதற்கான அறம் பிறழந்துவிடுகிறது. யுத்தம் எவ்வளவு செயற்கையானதோ அவ்வளவு செயற்கையானது தொற்றை எதிர் கொள்ளும் அரசியலுமாகும். இயற்கை தன்னளவில் அறத்தைக் கொண்டி ருக்கிறது. அதை நாம் மீற இயலாது. கூடாது. அப்படியிருந்தால் இயற்கை தன்னைத்தனே சரி செய்து கொள்கிறது. தனது ஒழுங்கு குலைந்து இயல்பு நிலை திரும்பும்போது மீண்டும் அதை சரிசெய்து கொள்ளும் அறத்தை, நீதியை இயற்கை கொண்டிருக்கிறது. இயற்கை அப்படியெதுவும் சொல்லாதபோதும்.

ஒழுங்கற்ற ஒன்று ஒழுங்கில் அமைவதற்கு அறம் தேவைபடுகிறது. நோய்த் தொற்றும் அப்படித்தான் அது ஒழுங்கில் செல்கிறது. மனித நடத்தையில், ஒழுங்கில் பிழை நிகழும்போது நோய் ஒழுங்கு குலைகிறது. இதை ஒழுங்கு படுத்துவது ஓர் பொது அறம். யுத்தம் போலவே தொற்றும் ஓர் அரசியலாக இருப்பதால் தொற்றறம் ஒன்று தேவைப்படுகிறது. கண்காணித்தல் அவசிய மாகிறது. யுத்தத்தில் மருத்துவ வளாகங்களில் கூட யுத்தக் கருவிகளைப் பயன்படுத்தக்கூடாது. ஆனால் அப்படி நடப்பதில்லை. கொரோனா யுத்தத்திலும் அப்படித்தான். கத்தியைப் போன்றே யார் வைத்திருக்கிறார்கள், தொற்றை அல்லது தொற்றுத் தடுப்பை, எதற்கு, யாருடைய நலனுக்கு பயன்படுத்துகிறார்கள் என்பதைப்பொறுத்தே அமைகிறது.

அரசென்பது அதிகாரவர்க்கத்தின் கருவி. லெனின் சுட்டுவதுபோல அது ஓர் ஒடுக்கும் கருவி. ஒடுக்கும் கருவிக்கு ஒரு துணைக் கருவிகள் கிடைக்கும்போது அதையும் ஒடுக்குவதற்குத்தான் பயன்படுத்தும். எதையும் ஒடுக்கும் கருவியாக மாற்றும் அதிகாரவர்க்க அரசு, தொற்றையும் தனது ஒடுக்கும் கருவியாகப் பயன்படுத்த முடியும் என்பதைத்தான் இந்த தனிமைப்படுத்தப்பட்ட, சமூக விலக்க நாளில் பார்க்கக்கூடியதாக இருக் கிறது. தொற்று அதன் பரப்பெல்லையைக் கடந்து இன்றைக்கு அரசியல் எல்லைக்குள் நுழைந் திருக்கிறது. நோய் தன்னியல்பிலிருந்து அரசியல் நிலையாக மாற்றமடைந்து கொண்டுள்ளது. தொற்றின் கூறுகள் அரசியல் கூறாகப் பண்பு மாற்றமடைந்து கொண்டுள்ளது. இந்த அரசியல் பண்பு மாற்றத்திற்கு எடுத்துக்காட்டுக் கூற வேண்டுமானால் அது விளிம்புநிலை மக்களை வெகுவேகமாகப் பலியெடுத்து வருவதைச் சொல்லாம்.

அதிகாரவர்க்கம் முதலில் என்ன செய்தது? தொற்று முதலில் அதிகாரவர்க்கத்தினரைப் பற்றியபோது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேக வேகமாகத் தொழிலாளர்களை தனது வீட்டிலிருந்தும், தெருவிலிருந்தும், ஊரிலிருந்தும், நகரங்களிலிருந்தும் வெளியேற்றியது. அவர்கள் வெளியேறும் வரை அவர்களுக்கும் சேர்த்து கண்ணீர் வடிப்பதுபோலக் காட்டிக் கொண்டு அவர்களுக்கு நோய்த் தொற்று இருக்கிறதா என்று தனக்குக் கிடைத்த வசதிகளைக் கொண்டு அவர்களையும் பரிசோதித்துப்பார்த்துக் கொண்டது. வீட்டுக்குப் பத்துப்பாத்திரம் தேய்க்க வேலைக்காரர் வேண்டும். அவர் பல வீடு செல்பவர். எனவே அவரிடமிருந்து தொற்று தனக்குப் பரவாதிருக்க வேண்டுமானல் வேலை யாளுக்கு தொற்று பரிசோதனை செய்தாக வேண்டும் இது வேலையாளின் மீதான கரிசன மல்ல, தன் மீதான கரிசனை. இப்படித்தான் அரசும் செய்து கொண்டிருக்கிறது. செய்யும்.

நகரங்களைப் பொறுத்தவரைத் தேவைப்படாத எதுவும் குப்பைதான். தொழிலாளர்கள் இப்போது நகரங்களுக்குத் தேவைப்படவில்லை. எனவே அவர்கள் தேவைப்படாதக் குப்பைகள். குப்பைகள் மீது யாதொருவரும் கரிசனை கொள்வதில்லை. குப்பையிலிருந்து தொற்று பரவிவிடாதிருக்கச் சில நடவடிக்கைகளை எடுப்பதால் அது குப்பையின் மீதோ, குப்பைத் தொட்டியின் மீதான கரிசனமோ கிடையாது. குப்பைத் தொட்டியில் கிருமிநாசினி தெளிக்கப்படுகிறது. அப்படித்தான் வெறுங் காலுடனும், வெற்று வயிறுடனும் துரத்தப்பட்ட விளிம்புநிலையினர் மீது கிருமிநாசினி தெளிக்கப்படுகிறது.

அவர்கள் வெளியேறிவிட்டார்கள். வெளி யேற்றப்பட்டுவிட்டார்கள். துரத்தப்பட்டுவிட் டார்கள். இனி சமூக விலக்கம், இடைவெளி என்பது மேட்டுக்குடிக்கும், கீழ்குடிக்குமாகத் தெளிவாக இனம் பிரிக்கப்பட்டுவிட்டது. எனவே அதை எதிர்கொள்வதற்கான நடவடிக்கை, அரசியல், என்பன தெளிவாகவே இருக்கும். மேட்டுக்குடி கொரோனா, கீழ்குடி கொரோனா என்று ஏதும் இல்லை. ஆனால் அதை அவ்வாறு அரசியல் அதிகாரவர்க்கம் தெளிவாக பிரித்து விட்டது. தொற்றை வர்க்கமாக, வகைமையாகப் பிரித்தாகிவிட்டது. மேட்டுக்குடிக்கும், கீழ்குடிக்கு மானச் சமூக இடைவெளியைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள வேண்டியிருக்கும். மெய்யாகவே அரசின் சவால் என்பதே இதுதான். இந்த நடவடிக்கைகளே மொத்தமாக தொற்றுக்கு எதிரான போர் என்று அரசு பொதுவில் குறிப்பிடுகிறது. நாடுகளுக்கிடையிலான ஆக்கிரமிப்புப் போரில் கூட போர்வீரார்களாகச் சாவது விளிம்புநிலையினர்தான் என்பது நினைவிருக்கட்டும்.

இந்திய மண்பரப்பும், விளிம்புநிலையினரின் பாதங்களும், வாழ்வும் நடந்தே தேய்ந்து போய்க் கொண்டிருக்கிறது. மக்கள் நடந்து கொண்டே இருக்கிறார்கள். தொற்று அரசியல் அவர்களை வெறிபிடித்து துரத்திக் கொண்டிருக்கிறது. முடிவில்லாதப் பாதைகள் முடிவற்ற பயணத்தில் அவர்களை திசையறியாமல் அழைத்துச் செல்கிறது. அழுக்குப்படிந்த பசித்த வயிற்றுடனும்,

சோர்ந்த கண்களுடனும் அவர்கள் வாழ்வை கடக்க முயற்சிக்கிறார்கள். சாலைகளும், தண்ட வாளங்களும் வாழ்வும் அவர்களுக்கு கடக்க முடியாத மரணத்தையே பரிசளிக்கின்றன. கொரோனா என்பது உயிர்க் கொல்லிதான். விளிம்புநிலையினரை மட்டுமே கொல்லாமல் கொல்லும் அரசியல் உயிர்க் கொல்லி.

மும்பையின் தாராவியிலும், இலங்கையின் யாழ்ப்பாணத்திலும், எதியோப்பியா, சூடான் என அரசியல் விளிம்பில், வாழ்வின் விளிம்பில் வைக்கப்பட்டுள்ளோரையே காவு கொள்ளும் கொரோனா, இனியும் தொற்று நோயல்ல. அது ஓர் வர்க்க அரசியல் தொற்று. 'பணக்காரர் களிடமிருந்து பரவும் நோய் என்று நமது முதல்வர் சொன்னார். விமானப்பயணம் செய்யும் பணக் காரர்களால்தான் கொரோனா தொற்று ஏற் படுகிறது என்ற பொருள்பட குற்றம் சாட்டினார். எனவே விமானநிலையங்கள் மூடப்பட்டன. சூப்பர் மால்களின் கதவுகள் சாத்தப்பட்டன. பிரபல உணவு விடுதிகள், உல்லாசத் தளங்கள் என பணக்காரர்களின் தலங்கள் யாவும் இறுகக் கட்டுப்படுத்தப்பட்டன. அந்த இறுக்கமும், தொடர் கண்காணிப்பும், விளிம்புநிலையினர் அகற்றமும் மேட்டுக்குடியினருக்கு நோய் தொற்றிலிருந்து பாதுகாப்பளிப்பதாக அரசும், அதிகாரவர்க்கமும் கருதியது. செயற்படுத்தியது. அது மெய்யும் கூட.

இப்போது கொரோனா என்பது கீழ்குடிகளின் நோய். கீழ்குடிகளுக்கான நோய். அதை பரப்புப வர்களும் அவர்களே. இப்போது கண்காணிப்பு என்பது பிறிதொரு கீழ்குடியை தொற்று தொற்றக்கூடாதென்பதல்ல. மேட்டுக்குடியை நெருக்காதிருக்க வேண்டும் என்பதே. போர் மேட்டுக்குடிக்கானது. சாவது கீழ்குடி. போரும் தொற்றும் ஒன்றுதான். தொகை தொகையாகச் சாகும் மனிதர்கள் இனி வெறும் எண்ணிக்கையில் அடங்கிவிடும். இலக்கங்கள் சுவாரசியமான செய்திகளுக்கானவையாகிவிடும்.

முகக்கவசங்கள் பத்து உருபா தொடங்கி, இருநூற்றிஅய்ம்பது உருபா வரை விற்கிறது. நோய்க்குத் தக்கவாறு அது இருக்கிறது. வசதிக்குத் தக்கவாறு அது இருக்கிறது. ஆனால் எல்லாம் ஆறுமணிநேரத்திற்கு மட்டுமே பயன்படுத்தி யாகிவிட வேண்டும். பிறகு அது பயன்தராது என மருத்துவர்கள் சொல்கிறார்கள். சிலர் அதை கிருமிநாசினியில் நனைத்தோ, சவக்காரத்தில் துவைத்தோ பயன்படுத்தச் சொல்கிறார்கள். முகக்கவசம் பல இடங்களில் தட்டுப்பாடாகவே இருக்கிறது. போர்வீரர்கள் என்று சொல்லியாகி விட்டது. ஆனால் தடுப்புக்கவசத்திற்கு எங்கு போவது. மக்கள் முகக்கவசத்திற்கு தன்வசமுள்ள தோள் துண்டையோ, புடவை முந்தானையையோ மஞ்சள் தெளித்துப் பயன்படுத்துகிறார்கள். அவர்களால் அவ்வளவுதான் முடியும். 250 ரூபாய் முகக்கவசம் பணக்காரர்களுக்கானது. முகக் கவசத்தில் கூட தெளிவான பிரிப்பு இருக்கிறது. இன்னும் கூடுதல் விலையில், துணியில், மோஸ்தரில், தங்கத்தில், வெள்ளியில் கூட கவசங்கள் வரக்கூடும்.

வலியவர்களின் போரில் எளியவர்கள் குறுக்கே வந்து சாவது விதி. அல்லது இயற்கையானது. கொரோனா தொற்று உங்கள் உடல்வலிமை நோய் எதிர்ப்புத் தன்மையைப் பொருத்து தொற்றுவது, மெய். பல தொற்றுகள் அப்படித்தான் ஏற்படுகின்றன. அப்படித்தான் சாகடிக்கின்றன நலமடையச் செய்கின்றன. தொற்றுக்கு எந்த அரசியலும் தெரியாது. மேட்டுக்குடி, கீழ்குடி அதற்கு இல்லை. போரைப்போல கொல்லமட்டுமே தெரியும். இருப்பதை அழிக்க மட்டுமே தெரியும். ஆனால் போரை நடத்துபவர்கள் போல கொரானாவை கட்டுப்படுத்தக்கூடியவர்கள் அதி காரத்தில் இருப்பவர்களால்தான் முடியும். அதிகாரம் மக்களிடமோ, விளிம்பு நிலையின ரிடமோ இருக்கவில்லை. இருப்பதில்லை. விளிம்பு நிலையினரின் உடல் போரையோ, கொரோனா வையோ எதிர்கொள்ளும் திறனுடன் இல்லை. இருக்கவும் முடியாது. ஊட்டச்சத்து இல்லாத விளிம்பு நிலையினர் கொரோனாவுக்கு பலியாவது இயற்கையானது என்பது நமது மனம் கொள்ளும் நிறைவு. ஊட்டச்சத்து அவர்களுக்கு, அவர்களது உடலுக்கு ஏன் கிடைக்கவில்லை என்ற கேள்வி பொருளற்றதாகத் தோன்றலாம் அதேசமயம், அவர்களுக்கு ஊட்டச்சத்து சென்று சேராததில் அரசியல் இல்லையென்று ஒருபோதும் சொல்லிவிட முடியாது. சாதியையும், அது சார்ந்த மதத்தையும் கையில் வைத்திருப்போரின் அரசியலே அவர்களை விளிம்பில் வைத்திருக்கிறது. அவர்களுக்கான ஊட்டச்சத்தை கையில் வைத்திருக்கிறது. அவர்களது விதியை கையில் வைத்திருக்கிறது.

**கொரோனா இனியும் தொற்றல்ல. அது அரசியல். முழுக்க முழுக்க அரசியல். மருந்து வணிகம் தொடங்கி அரசியல் வணிகம் வரையிலும் அதில்தான் நடக்கிறது.**

கொரோனா இனியும் தொற்றல்ல. அது அரசியல். முழுக்க முழுக்க அரசியல். மருந்து வணிகம் தொடங்கி அரசியல் வணிகம் வரையிலும் அதில்தான் நடக்கிறது. அனைத்தும் கொரோனாவின் பெயரில் கொரோனாவுக்கு எதிரென்று சொல்லிக் கொண்டே எடுக்கும்

நடவடிக்கைகள் யாதொன்றும் மனிதருக்கு விரோதமாக முடிவதைத்தான் கொரோனா அரசியல் என்கிறோம். கொரோனா தடுப்பில் எந்த ஒரு அறமும் இருக்கவில்லை. பின்பற்றப் படவில்லை. பயங்கரவாதத்தின் பெயரிலான யுத்தத்தைப்போலவே கொரோனாவின் பெயரிலான யுத்தமும் மக்களைக் கொல்வதற்கான தாகவே இருக்கிறது.

ஒரு சில நாட்களில் கொரோனா கட்டுக்குள் கொண்டுவரப்படும், சில திங்களுக்குள் அது முற்றிலும் முடக்கப்படும் என்று மக்களின் வாழ்வை முடக்கி வைத்துக்கொண்டு சொன்னவர் களின் கொடும்பாவியை எரித்தவர்கள் கைது செய்யப்படுகிறார்களா. கொரோனா அச்சத்தில் வெளியில் பிடித்துத் தள்ளப்பட்டவர்கள் சாலையோரங்களிலும், தண்டவாளங்களிலும், துடிக்ககத் துடிக்கக் கொல்லப்படுகிறார்கள். தொற்றைப் பரப்பும் கொசுவினும் கீழாக அம் மக்கள் நசுக்கி அழித்தொழிக்கப்பட்டுக் கொண்டி ருக்கிறார்கள். தொற்றிற்காகக் கொசுவைக் கொல்வது அறம். கொரோனாவிற்காக விளிம்பு நிலையினர், நகர்ப்புற ஏழைகள், வெளிமாநிலத் தொழிலாளர் பலிகொடுக்கப்படுவது கொரோனா அரசியலின் அறம். கொசுவிற்காக யாரேனும் கவலைப்படுதல் உண்டா என்ன..!

சமமற்ற வாழ்வு சமமற்ற நீதி, சமமற்ற சமூகம் இதில் ஒன்று போலவே பொது முடக்கம். வாழ்வு மறுக்கப்பட்டவர்களுக்கு கீழ் குடிக்கும், மேல்குடிக்கும் ஒரே முடக்கம். சின்ன மீனுக்கும், பெரிய மீனுக்கும் ஒரே நீதி. ஒரே அறம். பூகம்பம் மனிதர்களைக் கொல்வதில்லை. மனிதர்கள்தாம் மனிதர்களைக் கொல்கிறார்கள் என்று பூகம்பம் பற்றி வல்லுநர்கள் சொல்வார்கள். அதாவது மனிதர்கள் ஏற்படுத்தியிருக்கும் உயர்ந்த கட்டடங்கள், நீர் தேக்கங்கள், போன்றவை பூகம்பத்தில் உருக்குலைவதால்தான் அழிவே தவிர பூகம்பத்தால் அல்ல என்று அவர்கள் வாதிடுவர். அது போலத்தான் கொரோனா உட்பட தொற்றுகள் மனிதர்களைக் கொல்வதில்லை. மனிதர்கள் ஏற்படுத்தி வைத்திருக்கும் அரசியலும், நீதியும் ஏற்றத்தாழ்வுகளுமே கொல்கின்றன. குறிப்பாகக் கீழ் குடியினர் என்று எவரையும் தேடிப்பிடித்து தொற்றுக்கள் கொல்வதில்லை. கீழ்குடிக்கு மறுக்கப்படும் வாழ்வும், அரசியலும், அறமுமே கொல்கின்றன என்றே சொல்ல வேண்டும்.

அய்ம்பது நாட்களைக் கடந்திருக்கும் கொரோனா முடக்கத்தில் மேட்டுக்குடிகள் யாதொருவரும் தற்கொலை செய்து கொள்ள வில்லை. குறுந்தொழில் முடக்கமும், அன்றாட வாழ்க்கைப் பாட்டிற்கு வழியறியாத ஏழைகளுமே தற்கொலை செய்து கொள்ளும் செய்திகள் வந்து கொண்டுள்ளன. குடும்ப வன்முறைகள் இரு குடிகளுக்கும் பொது என்று சொல்லிவிட முடியாது. அடிப்படையான சிக்கல் என்பது கீழ் குடிகளுக்கு வாழ்வாதாரப் போராட்டமாகவே இருக்கிறது. கொரோனா முடக்கம் மிகத்தெளிவாக அரசுத்துறைகளின் முடக்கமாகவும், தனியார் துறைக்கான திறப்பாகவும் மாற்றப்பட்டுள்ளது. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வீட்டுக்குள் இருக்கும்போதே எட்டுவழிச் சாலைகளுக்கான வேலைகள் தொடங்கிவிட்டன. நாளை தெருவில் இறங்கி நடக்கும் போது அவை நம்முடைய சாலைகளாக இருக்கப் போவதில்லை. மின்சாரம் தனியாருக்குப் போய்விட்டது. பொதுத்துறை சார்ந்த பல நிறுவனங்கள் கொரோனா காலங் களில் தாரைவார்க்கப்படுதலுக்குப் பெயர்தான் பொது முடக்கம். பொதுத்துறை முடக்கமே பொதுமுடக்கமாகும். மறுதலையில், பொதுத்துறை முடக்கத்திற்கு ஆதரவான போராட்டங்களை முடக்கவும் பொதுமுடக்கம் பயன்பாட்டில் இருக்கிறது. போராட்டங்களைத் தடுக்கும் 144 ஆக கொரோனா மாறிக்கொண்டுள்ளது. 144ஐ விட கொரோனா அச்சம் போராட்டங்களைத் தடுக்கும் வல்லமைவாய்ந்ததாக இருக்கிறது. கொரோனா என்பதும் 144 என்பதும் வேறு வேறல்ல.

கொரோனா என்பது இன்றைக்கு ஓர் அறிவிக்கப்படாத அவசரநிலைப் பிரகடனம். அறிவிக்கப்படாத அடக்குமுறை. அறிவிக்கப்படாத சனநாயகப்படுகொலை. அறிவிக்கப்படாத பாசிசம். மகாராட்டிரத்திலிருந்து நடந்து நடந்து சாகும் ஆயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளிகள் கொரோனாவினால்தான் இறக்கிறார். நேரடியாக கொரோனாவினால் அல்ல. ஆனால் கொரோனா நேரடியாகத்தான் தாக்க வேண்டும் என்பதில்லை. அதிகாரவர்க்கத்தின் வழியாக ஊடுபாய்ந்து வரும் கொரோனா நேரடியாகத் தாக்குவதில்லை. வீதிகளின் ஓரத்திலும், வாழ்க்கையின் ஓரத்திலும் ஓதுங்கிச் செல்வோரை வாகனங்கள் கொல்வதாக சொல்வது ஆபாசம். அவர்களைக் கொல்வது அதிகாரவர்க்கத்தின் கொரோனா. உலகமயத்தின், மறுகாலணியத்தின் கொரோனா. அதிகார வர்க்கத்தின் உயர்சாதியின் கொரோனா.

மறை நீரைப் போல, மறை அரசியலின், மறைத் தொற்று அவை, மறை படுகொலைகள் அவை. கெரோனா பெயரில் நடக்கும் அதிகாரவர்க்கப் படுகொலைகள் அவை. கொரோனா தடுப்பில் வேறுபாடு காட்டப்படுதல் என்பதே, சிகிச்சை அளிப்பதில் அலட்சியம், தனியார் மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை என்பதெல்லாம் விளிம்பு நிலையினருக்கு, கிராம, நகர்ப்புற தலித்துகளுக்குக் கறுப்பினத்தவருக்கு எதிரானதாக கொரோனாத் தொற்று கொடும் ஆயுதமாக மாறியிருப்பது, மாற்றப்பட்டிருப்பது அல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும்.?

உலகமயம் சுரண்டலை பொதுவாக்கும்போது தொற்றுக்களும் பொதுவாக்கப்படுவது நீதி. அறம். அப்படித்தான் அது உலகெங்கினும் பொதுவாகி யிருக்கிறது. உலகம் சுருங்குவதாக ஒப்புக்

கொண்டால் தொற்றுக்கள் விரிவடைவதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். தொற்றை எதிர்கொள்ளும் அரசியலும் அப்படியானதே இங்கு விளிம்பு நிலை மக்கள், நகர்ப்புற ஏழைகள், தலித்துகள் என்றால் அமெரிக்காவில் ஆப்ரிக்க அமெரிக்க பழங்குடியினர். இந்த பொதுமுடக்க நாளில் தமிழகத்தில் மட்டும் பத்துக்கு மேல் தலித்துகளுக்கு எதிரான நிகழ்வுகள் நடந்தேறிக் கொண்டுள்ளன. அவற்றிற்கு எதிரான சனநாயக சக்திகளின் பொதுப் போராட்டம் முன்னெடுக்கப் படவேயில்லை. ஆனால் அமெரிக்காவில் கறுப் பினத்தவரின் போராட்டம் அப்படி இருக்க வில்லை என்பதைத்தான் இப்போது பார்க் கிறோம்.

அமெரிக்காவில் கறுப்பின மக்களின் விதியை எழுதும் வெள்ளைநிற ஆபாசத்தை அது எரி யூட்டுகிறது. கேள்வி கேட்கிறது. இசுலாமியர்களின் தொற்றெனச் சொன்ன அதே அரசியல் அறமே கறுப்பர்களைச் சொல்வதற்கு முயல்கிறது. கொரோனாவில் இந்திய விளிம்புநிலை மக்கள் சாவது எப்படி நீதியாக்கப்பட்டுள்ளதோ, அறமாக்கப்பட்டுள்ளதோ அது போலவே அமெரிக்காவில் கறுப்பினத்தவர் சாவது பொது நீதியாக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்தை மீறியதாக ஒரு வெள்ளையன் அமெரிக்க காவல்துறையால் கைது செய்யப்படு வதற்கும், கறுப்பினத்தவன் கைது செய்யப்படு வதற்குமான சமூக இடைவெளியை காவல் துறையின் அணுகுமுறையிலேயே கவனிக்கலாம். இங்கு மேல்சாதியினருக்கும் கீழ்சாதியினருக்குமான கைதும், காவலும் எப்படியான நீதியையும் அறத்தையும் கொண்டிருக்கிறதோ அவ்வாறே அமெரிக்கா, கறுப்பின மக்களுக்கானதை கொண்டிருக்கிறது.

கறுப்பினத்தவனே போக்குவரத்தை மீறக் கூடியவன், கொடிய குற்றங்களுக்கு காரணமான அவனே தொற்றை பரப்பக்கூடியவன், இசுலாமி யனும், தாரவித் தமிழனுமே கொரோனாவுக்கு காரணம் என்ற இந்திய மனநிலைக்கும் வெள்ளையன் மனநிலைக்கும் இடைவெளியேது மிருப்பதில்லை. இரண்டும் பாசிச மன நோயாளிகளின் வக்கிர கருத்தியலே. வெள்ளையன் பொய் சொல்ல மாட்டான், வெள்ளைத் தோல் பொய்யறியாதது. வெள்ளையன் சுரண்டமாட்டான் குடிகெடுக்க மாட்டான். வெள்ளை என்பதும், வெள்ளையன் என்பதற்கும் தூய்மை என்று பொருள். தூய்மை என்றால் மெய்மை என்று பொருள். இந்த ஆபாச சித்திரம் இந்தியாவின் மேட்டுக்குடியினனால் விளிம்பு நிலையினன் வரையிலும் புறையேற்றப்பட்ட சித்திரம். புறவைகளில் காக்கை என்பது கறுப்பு நிறங் கொண்டது. காக்கை திருடக்கூடியது. எனவே கறுப்பு நிறமென்பது திருட்டிற்குறியது. கறுப்பு அசுத்தமானது. எனவே காக்கை ஆகாயத் தோட்டி. ஆகாய துப்புரவாளன். அப்படித்தான் இருக்கவேண்டும். இருந்தாகவேண்டும். சிங்கப்பூர் போன்ற இடங்களில் அதை சுட்டுக்கொல்வதற்கு சகல உரிமையும் படைத்தவனாக மனிதன் இருக்கிறான். அமெரிக்காவில் கறுப்பினத்தவரை சுட்டுக்கொல்லும் சகல அறங்களும், நீதியும் உடையவர்களாக அமெரிக்கர்கள் இருக்கிறார்கள்.

ஜார்ஜ் ஃப்ளோய்ட் ஒரு அமெரிக்க கறுப் பினத்தவர். அவர் குற்ற நடவடிக்கையில் ஈடுபட்டி ருப்பார். ஈடுபட்டிருக்கக்கூடும் என்ற அமெரிக்க வெள்ளை பாசிச நீதியை அறத்தை இந்திய மேட்டுக்குடியும் ஏற்றுக்கொள்ளும். ஒரு பாசிசமே பிறிதொரு பாசிசத்தை ஏற்று அங்கீகரிக்கும். கொரோனா தொற்று கறுப்பின காட்டுமிராண் டிகளால் பரவுகிறது என்பதை இந்திய உயர்சாதி மனநிலை எதுவித விமர்சனமுமற்று ஏற்று கொள்ளும்.

கடந்த மே *25* ஆம் திகதி, புளொரிடாவைச் பிறப்பிடமாகக் கொண்ட ஜார்ஜ் ஃப்ளோய்ட் என்ற *46* வயது கறுப்பினத்தவர் செய்ததெல்லாம்




ஊரடங்கு தளர்த்தப்பட்டபோது மினாபொலீஸ் நகரில் உள்ள ஒரு பெட்டிக்கடையில் சிகரெட் வாங்கியபோது கொடுத்த *20* டொலர், தாள் கள்ளப் பணமாக கண்டறியப்பட்டதுதான். அது குறித்து அவரிடம் விசாரித்து முரணான பதில் வருமிடத்து அந்த பெட்டிக்கடைகாரர் காவல் துறையை அழைத்திருக்கலாம். ஆனால் கடைக் காரர் அப்படி செய்யவில்லை. உடனடியாகக் காவல்துறையை அந்த இடத்திற்கு வரவழைத்து விட்டார். காவல் துறை வந்ததும் வராததுமாக அந்த கறுப்பினத்தவரிடம் எதுவித விசாரணை களையும் மேற்கொள்ளாமல் ஒரு பயங்கர வாதியைப் பிடித்தது போல கைகளை முறுக்கி கீழே தள்ளி கழுத்தில் தனது முழங்காலை வைத்து குரல்வளையை அழுத்த ஜார்ஜிற்கு இப்போது மூச்சுத் திணறத் தொடங்கியது. 'தன்னால் மூச்சு விடமுடியவில்லை!" என்று ஈனசுவரத்தில் முனகியவரை அருகில் நின்றிருந்த மற்ற நான்கு போலீசாரும் காப்பாற்றவோ, தலைமைக்

காவலரை விலகச் சொல்லவோ முயலவில்லை. இதுதான் அதிகாரத்தின் மனநிலை. வெள்ளை மனநிலை. ஏறக்குறைய 8 நிமிடம், 40 வினாடிகள் அவரது தலை தரையோடு அழுத்தப்பட்டிருக்கவே மூச்சுவிட இயலாத நிலையில் அவர் இறந்து போனார். ஜார்ஜ் அவரது தரப்பு நியாயத்தை சொல்வதற்கு முன்பாகவே மூச்சடக்கப்பட்டு விட்டார்.

கொலைக் குற்றவாளிக்குக்கூட தனது தரப்பைச் சொல்லும் வாய்ப்புத் தரப்படுகிறது. பெரிய சன நாயக நாடு, மனித உரிமைகளை என்ன விலை கொடுத்தும் காப்பாற்றக்கூடிய நாடு என்ற பிம்பத்தையெல்லாம் ஜார்ஜின் படுகொலை கலைத்துப்போட்டுவிட்டது. கொரோனா காலத்திலும்கூட நிறவெறியுடன் அலையும் கொடும் வெள்ளை நிற வெறியை நோயை, வெளிக் கொண்டுவந்துவிட்டது. சவ்வின் என்ற அந்த வெள்ளை காவல் அதிகாரி பொதுவெளியில் கறுப்பினத்தவரை எதுவித நீதியும், அறமுமற்று, தானே கொலைத்தண்டனையை வழங்கிக் கொண்டுள்ளார். பொது வெளியில் கறுப்பினத்தவரைக் கொல்வதற்கு எதுவித முகாந்திரமும் தேவையில்லை. கறுப்பினத்தவர் என்ற ஒன்றே போதுமானது என்ற மனநிலைதான் வெள்ளை இனவெறியின் உச்சம். ஏற்கனவே வெள்ளை அமெரிக்கா கறுப்பு அமெரிக்கா என்று அமெரிக்காவினுள் இரண்டு அமெரிக்கா இயங்குவதை ஜார்ஜின் படுகொலை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது. முக்கியமாகக் கொரோனா யுத்தம் என்று சொல்லி இந்திய விளிம்புநிலையினரை படுகொலைக்கு உள்ளாக்கும் அதே மனநிலைதான் அமெரிக்காவில் கறுப்பினத்தினர் மீதானதாகவும் இருக்கிறது. பாசிச மனநிலை என்பது பொதுவில் இப்படித்தான் வெளிப்படும் என்பதற்கு ஜார்ஜின் படுகொலையும் எடுத்துக்காட்டாக இருக்கிறது.

ஆயிரம், ஐந்நூறு கிமீ தொலைவுகளை, முடிவுறாத சாலையில் எரிக்கும் வெயிலையும், வெப்பத்தையும் தனது குருதியில் நனைத்து கடந்து செல்ல முயலும் நகர்ப்புற கூலித் தொழிலாளிகள் பற்றி தனது திங்கள்தோறுமான வானொலி உரையில் வருத்தமாக இருக்கிறது என்ற ஒற்றைச் சொல்லுடன் வீழ்ந்து மடியும் அவர்களது உடல்களைக் கடந்து செல்லும் நமது பிரதமரைப் போல கறுப்பினத்தவரின் படுகொலையை கடந்து செல்ல முயல்கிறார் அமெரிக்க அதிபர். ட்ரம்ப், ஜார்ஜை ஒரு ரவுடி என்கிறார். குரு சிஸ்யரை மிஞ்சுவது புதிதல்ல. எனினும் இரண்டிலுமிருக்கும் ஆபாசமும், அருவெறுப்பும் அளவிடமுடியாதது. அதிலும் ட்ரம்ப் கறுப்பினத்தின் மீது ஒட்டுமொத்த காழ்ப்புடன் தன்னை நிறுவிக் கொள்கிறார். ட்ரம்ப் வெள்ளை இனத்தின் பிரதிநிதி. வெள்ளை இனத்தின் அதிபர். வெள்ளை மாளிகை என்பது கறுப்பர் மாளிகை அல்ல.

நூற்றாண்டுகள் மாறினும் அமெரிக்க மனநிலை மாறிவிடவில்லை எனினும் கறுப்பர்களுக்கான ஆதரவு அலை புளொரிடா மாகாணப் புயல்போல சுழன்று அடித்துக் கொண்டுள்ளது. மக்கள் நிற வேறுபாடு காணாது வீதிகளில் திரள்கிறார்கள். பொது போக்குவரத்துக்களை தடுத்து நிறுத்துகிறார்கள். சில இடங்களில் வாகனங்களை எரியூட்டுகிறார்கள். அங்கெல்லாம் காவல்துறை பொதுமக்கள் மீது தீவிர நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. அமெரிக்கக் காவல்துறை மன்னிப்புக் கேட்டுக் கொண்டுள்ளது. அவர்கள் மக்களின் கோபத்தைப் புரிந்து கொள்கிறார்கள். ஒடுக்கப்பட்டவர்களின் கோபம் வெள்ளை மனங்களையும் ஏற்கச் செய்கிறது. பல இடங்களில் போராட்டக்காரர்கள் முகக்கவசங்களைத் துறந்து அல்லது அப்படித் துறப்பதைத் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக மாற்றிக்கொண்டிருந்தார்கள். '"தேவைப்பட்டால் ராணுவ நடவடிக்கை எடுப்பேன்!" என்று முழங்குகிறார் ட்ரம்ப்.

"சூறையாடல் தொடங்குமிடத்தில்தான் அதற்கு எதிரான நடவடிக்கையும் தொடங்குகிறது!" என எச்சரித்தபடியே கறுப்பின நீதியை புறந்தள்ளுகிறார். அவருக்கு இப்போது கண்ணுக்குத் தெரியாத எதிரி கண்ணுக்குத் தெரியத் தொடங்கிவிட்டார். கொரோனாவில் தொடரும் உயிரிழப்பு, தடுப்பு நடவடிக்கைகளில் அலட்சியம், பொருளாதார வீழ்ச்சி இவற்றை திசைதிருப்ப ஒரு எதிரி கிடைத்தாகிவிட்டது. மோடிக்கு வெட்டுக்கிளி படையெடுப்பும், சீனாவின், எல்லை ஆக்கிரமிப்பும், பாக்கிஸ்தான் ராணுவ குவிப்பும் கிடைத்திருப்பது போல ட்ரம்ப்பிற்கு கறுப்பினத்தவரின் உயிரற்ற உடல் கிடைத்திருக்கிறது. ஏற்கனவே கொரோனா தடுப்பில் கறுப்பினத் தவருக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதில் வேறுபாடு காட்டப்படுவதாக அமெரிக்க கறுப்பினத்தவர்கள் கொதித்துப்போயுள்ள நிலையில் ஜார்ஜின் மரணம் நிகழ்ந்திருக்கிறது. கொரோனா காலத்தில் வெள்ளை வெறித்தனத்தில் நேர்ந்துள்ள பெருந்துயரம். அதற்கெல்லாம் நீதி கேட்கும் போராட்டமாகத்தான் இது மாறிக்கொண்டுள்ளது.

கடந்த 25 நாட்களாகத் தொடருகிறது அமெரிக்க ஆப்பிரிக்க குடியினர் போராட்டம். நிறவெறிக்கு எதிரான போராட்டத்தில் கொலம்பசு சிலை முதல் அமெரிக்காவிற்கு ஆப்பிரிக்காவிலிருந்து கறுப்பினத்தவரை அடிமையாக ஏற்றுமதி செய்த பார்வெல் சிலை வரை உடைத்து வீழ்த்தப்படுகிறது. வாசிங்டனிலுள்ள காந்தியார் சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவிலும் வெள்ளை அறத்தின் சிலைகளுக்கு மட்டுமே இடமுண்டு. கறுப்பின அலையில் இப்போது அவை சிக்குண்டுள்ளன. அடிமை முறை நீதி. அடிமை முறையிலானத் தேசக் கட்டுமானம் என்ற அமெரிக்க வெள்ளை அறம் வீழ்ந்து கொண்டுள்ளது. வெள்ளை அமெரிக்காவின் வெள்ளைக் கொரோனாவை கறுப்பினம் எதிர்கொள்ளும்.

# செயற்கை அறிவு

## AI-ARTIFICIAL INELLIGENCE

■ சு.இராமசுப்பிரமணியன்

அறிவு என்று சொன்னாலே அது இயற்கைதான். தொட்டு உணர்தல், கண்ணால் பார்த்தல், காதால் கேட்டல், மூக்கால் நுகர்தல், நாக்கால் சுவை அறிதல் என்று இவை அனைத்துமே இயற்கை அறிவுதான். இவை அனைத்தும் மனிதர்களுக்கானது மட்டுமல்ல, தாவரங் களுக்கும், விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் என்று அனைத்து உயிரினங்களுக்குமே பொது வானது.. நாம் காட்சிகளை நமது கண்களால் படம்பிடிக்கிறோம். மனிதனால் உருவாக்கப்பட்ட காமிராவும் காட்சிகளைப் படம்பிடிக்கிறது. கண்ணின் செயல், இயற்கை அறிவு என்றால், காமிராவின் செயல் மனிதனால் உருவாக்கப்பட்ட கருவியின் செயற்கைஅறிவு.

மனிதனால் வடிவமைக்கப்பட்ட இதுபோன்ற செயற்கைஅறிவு கருவிகள் எத்தனையோ நம் அன்றாடப் பயன்பாட்டில் இருந்துவருகின்றன. எனில், 'செயற்கைஅறிவு' என்பது குறிப்பாக எதனைச்சுட்டுகின்றது என்னும் கேள்வி எழுகிறது அல்லவா? இன்றைய நிலையில், நம் அன்றாட வாழ்வில் ஏதேனும் ஒருவிதத்தில் நாம் கணினி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துபவர் களாகவே இருக்கிறோம் ஆனாலும் அந்தக்கணினி அப்படி ஒன்றும் குறுகிய காலத்தில் துள்ளிக்குதித்து இன்றைய நிலைக்கு ஓடிவந்துவிடவில்லை.



பிரிட்டனைச்சேர்ந்த இயந்திரவியல் பொறியாளரான சார்ல்ஸ் பேபேஜ் *(Charles Babbage, a mechanical Engineer)* கணினிகளின் தந்தை *(father of Computer)* என்று அழைக்கப்படுகிறார். அவர் தான், முதன்முதலாக 'நிரல்' அடிப் படையில் செயல்படும் இயந்திரக் கணினியை *(mechanical programmable Computer)* வடிவமைத்தவர்.

ஆரம்பகால, முதல் தலைமுறை இயந்திரகணினி *(mechanical Computer)*, ஒரு மிகப்பெரிய கல்லூரிக் கட்டிடம் அளவிற்கு இருந்தது. எலக்ட்ரானிக் வால்வுகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அவற்றைப் பயன்படுத்திய இரண்டாம் தலைமுறை எலக்ட்ரானிக் இலக்கவியல் கணினிகளின் *(Electronic Digital Computer)* அளவு குறைந்தது. குறைகடத்தி *(Semi-conductors)* கண்டறியப்பட்ட பிறகு, மூன்றாம் தலைமுறைக் கணினிகள் டிரான்சிஸ்டரைப் *(Transistor)* பயன்படுத்தின. கணினியின் அளவு மேலும் குறைந்தது, அடுத்து, ஒரு மீச்சிறிய சில்லில் *(micro-chip)*, முழு எலக்ட்ரானிக் சுற்றையும் வடிக்கும் தொகுப்புச்சுற்றுத் தொழில்நுட்பம் *(IC-Integrated Circuits)* வளர்ந்த பிறகு, நான்காம் தலைமுறைக் கணினிகள் உருவாகின. கணினிகள் நம் வீட்டு மேசைமீது வந்து அமர்ந்தன.

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட எலக்ட்ரானிக் உறுப்புகளை, ஒரே 'நுண்சில்லில்' வடிக்கும் மைக்ரோபுராசசர் *(Microprocessors)* தொழில்நுட்பம் உருவானபிறகு, கணினிகளின் மைய அலகு *(CPU)* மைக்ரோபுராசசர்களைப் பயன்படுத்தும் ஐந்தாம் தலைமுறை கணினிகள் உருவாகி, இன்றைய சூப்பர் கணினி *(Super Computer)* அளவிற்கு, கணினி தொழில்நுட்பம் வளர்ந்தது, வளர்ந்து கொண்டும் இருக்கிறது.

அடுத்தடுத்த தலைமுறைக் கணினிகள் உருவானபோது,

கணினிகள் செயல்படும் வேகமும் செயல்திறனும் கூடியது. பல சிக்கலான கணித மற்றும் தர்க்க செயல்களுக்கு எளிதில் விடைகாணமுடிந்தது. பலநூறு பணிகளை ஒருங்கிணைக்க முடிந்தது. மனித ரோபோக்களும் *(Robots)* வடிவமைக்கப்பட்டு, பயன்பாட்டுக்கு வந்தன

சூப்பர்கணினி, ராக்கெட் ஏவும் தொழில்நுட்பம் போன்ற மிகவும் சிக்கலான, துல்லியமான செயல்களுக்குப் பயன்பட்டுவருகிறது.. முப்பரிமாண அணுக்கருசோதனைக்கான ஆய்வுகள் *(3D nuclear test simulation)*, வானிலை முன்னறிவிப்புத் தொழில்நுட்பம், மூலக்கூறு இயக்கவியல் ஆய்வுகள் போன்ற துறைகளிலும் சூப்பர் கணினிகள் பயன்படுகின்றன.

2020ஆம் ஆண்டில் சீனாவின் வுகான் நகரில் புறப்பட்டு, பூமியெங்கும் பரவி, மக்களை வீடுகளுக்குள் முடக்கி, பொருளாதாரத்தைச் சிதைத்து, உயிர்ப்பலிகளையும் வேண்டிநிற்கும் நோபல் கரோன வைரஸ் *(COVID-19)* பரவலை எப்படிக் கட்டுப்படுத்துவது என்னும் ஆய்வில் சூப்பர் கணினிகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

என்னதான் சூப்பர்கணினி என்றாலும், கணினியை ஒரு 'முட்டாள் பெட்டி' *(Idiot Box)* என்று அழைப்பது வழக்கம். காரணம், கணினி நாம் என்ன செய்யச் சொல்கிறோமோ அதை மட்டுமே செய்யும். சொந்தமாக சிந்தித்து செயல்படும் திறன் எந்த ஒரு கணினிக்கும் இல்லை..

மனிதனைப்போலவே வடிவமைக்கப்பட்ட சில குறிப்பிட்ட ரோபோக்கள், சில குறிப்பிட்ட செயல்களை, மனிதனைப்போலவே செய்யக்கூடிய திறன்பெற்றவை. ஆனாலும், அவற்றிற்கும் சொந்தமாக சிந்திக்கும் திறன் கிடையாது.

**இனிமேல்வரும் காலம் என்பது 'அறிவியல் புதினம்' என்னும் நிலையைக் கடந்து, 'அறிவியல் பயங்கரம்' (Science fiction to science horror) என்னும் நிலைக்கு மாறிவிடும் ஆபத்து உள்ளதாக அறிவியலாளர்களில் சிலர் எச்சரிக்கவும் செய்கிறார்கள்,. அதன்காரணமாகவே, செயற்கை அறிவு தொழில்நுட்பத்தை, அறமற்ற அறிவியல் என்று சொல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.**



இங்குதான் 'செயற்கைஅறிவு' என்னும் கோட்பாடு வருகிறது. ஒரு கணினி. மனிதர்களைப் போன்றே சிந்திக்கவும், செயல் படவும் கூடியதாக மாற்றப்படும் போது, அது 'செயற்கை அறிவு' *(Artificial Intelligence)* பெற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கலிபோர்னியாப் பல்கலைக் கழகம், கணினி துறையைச்சேர்ந்த ஸ்டார்ட் ரஸ்ஸல் *(Stuart Russel )* மற்றும் பீட்டர் நோர்விக் *(Peter Norvig)* ஆகியோர் எழுதிய செயற்கைஅறிவு பற்றிய புத்தகத்தில், செயற்கை அறிவு என்பதை கீழ்க்காணும் விதத்தில் வரையறை செய்கிறார்கள்.

1 மனிதர்களைப் போலவே சிந்திக்கும் இயந்திரங்கள் *(mechines that think like human).*

2 மனிதர்களைப் போலவே செயல்படும் இயந்திரங்கள். *(mechines that act like human)*

3 பகுத்தறிவுடன் சிந்திக்கும் இயந்திரங்கள். *(mechines that think rationally )*

4 பகுத்தறிவுடன் செயல்படும் இயந்திரங்கள். *(mechines that act rationally )*

சொல்வது மிகவும் எளிது. ஆனால், ஒரு இயந்திரத்தை, மனிதன் சிந்தித்து செயல்படுவது போலவே செயல்பட வைப்பது அத்தனை எளிது அல்ல. அது பல சவால்கள் நிறைந்தது. பொதுவாக இயந்திரங்கள் அனைத்துமே உயிரற்ற சாதனங்களால் *(inanimate mechine parts)* ஆன தொகுப்பு மட்டுமே என்பதை நினைவில் இருத்த வேண்டும்.

மனிதனைப்போன்றே சிந்திப்பதற்காக, கணினித் தொழில்நுட்பத்துடன் உயிரி தொழில்நுட்பத்தை இணைக்கிறார்கள். அதன்பொருட்டு, மனித மூளையில் உள்ள இயற்கை 'நியூரான்களை' *(Neurons)* கணினி தொழில்நுட்பத்துடன் கோர்த்து விடுகிறார்கள். அப்படியானால் சுருக்கமாக, செயற்கை அறிவு' கணினிகளை, 'உயிரிகணினி' *(Bio-Computer)* என்றும் சொல்லலாம்.

நியூரான்செல்கள், நரம்பு மண்டலத்தோடு *(Nervous System)* தொடர்புடையவை. அவை உடலில் உருவாகும் மின்னாற்றலால் தூண்டப்படக்கூடியவை. தசை *(muscles)* மற்றும் சுரபிகளுக்குத் *(glands)* தேவையான தகவல்களைக் கடத்துவது, நியூரான் செல்களே.

நியூரான் செல்கள் மூன்று வகைப்படும்.

1. உணர்வு நியூரான்கள் *(Sensory Neurons)*

தொடுதல், ஒலி, ஒளி போன்ற உணர்வுகளை மூளைக்கு அல்லது தண்டுவடத்திற்குக் கடத்தும் பணியைச்செய்வன.

2. மோட்டார் நியூரான்கள் *(Motor Neurons)*

மூளை அல்லது தண்டுவடத்திலிருந்து கட்டளைகளைப் பெற்று, அவற்றை தசைச்செல்கள், மற்றும் சுரபிகள் போன்ற உறுப்புகளுக்குக் கடத்துவன. (மறைந்த இயற்பியலாளர் ஸ்டீஃபன் ஹாக்கின், இந்த மோட்டார் நியூரான் செயலிழப்பு ஏற்பட்டதாலேயே தசைகள் சுருங்கி, சக்கர நாற்காலியில் முடங்கிப்போனவர்)

3. இணைப்புநியூரான்கள் *(Inter-neurons)*

மூளைக்குள்ளும், தண்டுவடத்திற்குள்ளும் உள்ள அனைத்து நியாரான்களையும் இணைக்கும் பணியைச்செய்வன. அவற்றிற்குள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இணைப்புகள், 'நியூரான்சுற்றுகள்' *(neural-circuits)* எனப்படும்.

**'செயற்கைஅறிவு' கணினித்தொழில்நுட்பம்:**

நடைமுறையில், தொழில்நுட்பத்துடன், உயிரியலைக் கலந்து, அதன்மூலம் செயற்கை அறிவுக்கான கணினி உருவாக்கப்படுகிறது. *(Biology is combined with Technology).* மனித மூளையிலுள்ள இயற்கை நியூரான்கள் *(real neorons)* ஒரு கணினி சில்லில் புதைக்கப் படுகின்றன.*(embeded in a computer chip).*

இப்படி நியூரான்களைப் பயன்படுத்தும் சூப்பர்கணினி, தானாகவே கற்றுக்கொள்ளவும், செயல்படவும் *( to learn and function)* முடியும் என்று நம்பப்படுகிறது. தொழில்நுட்பமும், உயிரியலும் சேர்ந்த 'கலப்பு சில்லுகளில் *(hybrid-chips)*, ஏராளமான ஆற்றலைச் சேமிக்கமுடியும்.

ஆரம்பநிலையில், உயிரிகணினிகளில், சுண்டெலிகளின் 'கருக்கள் '*(embryos)* நியூரான் மூலங்களாகப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இப்போது, மனித நியூரான்களைப் பயன் படுத்தும் தொழில்நுட்பத்தை ஜப்பான் அறிவியலாளர்கள் கண்டறிந்திருக்கின்றனர்.

கணினிஉயிரி ஆய்வுக்கூடங்களில் *(bio-computer labs.)*, மனிதத்தோல் செல்களை*(human skin cells)* நகலெடுத்து *(morph)*, நான்கு அல்லது ஐந்து தினங்களே ஆன மனிதக்கருவிலிருக்கும் *(human embryo)*, 'ஆதிசெல்களுடன்' *(stem cells)* கலந்து, பின் உண்மையான மனித நியூரான் களாக வளர்ச்சியடையும் விதத்தில் அவை தூண்டப்படுகின்றன. ஆரம்பத்தில், மனித மூளையிலிருந்து நியூரான்கள் பெறப்பட்டு ஆய்வுக்காகப் பயன்படுத்தப் பட்டபோது, அதற்கு எதிர்ப்புக் கிளம்பி, வலுத்தது. அதன் காரணமாகவே, இந்த புதிய முறையை ஜப்பானிய ஆய் வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.



தோல்செல்கள், நியூரான்களாக மாற்றம்பெற்ற பிறகு, அவை அவற்றை வளர்க்கும் ஒரு திரவ ஊடகத்தைக்கொண்டு *(liquid medium)*, மீச்சிறிய உலோக ஆக்சைடு சில்லில் புதைக்கப்படுகின்றன *(embeded.in metal-oxide nano-chip).* அப்படி, நியூரான்கள் புதைக்கப்பட்ட உலோக ஆக்சைடு சில்லில், 2,200 மின்தகடுகள் *(electrodes)* உள்ளன. இந்த மின்தகடுகள்தான், நியூரான்களுக்கு எப்போது மின் உள்ளீடுகளைக் கொடுக்க வேண்டும் என்பதையும், என்னவிதமான வெளியீடு கிடைக்கும் என்பதையும், அறிவியலாளர்களுக்குத் தெரியப்படுத்தும்.

இதுபோன்று, உயிரற்ற இயந்திர உறுப்புகளும் *(Mechine parts)* உயிருள்ள உறுப்பு களும் *(Organic parts)* இணைந்து செயல்படும் கணினிகள், அல்லது ரோபோக்கள் *Cyborg (cybermetic organism)* என்று அழைக்கப்படு கின்றன.

இப்படி, செயற்கையாக உருவாக்கப்படும் நியூரான்கள், மனித மூளையிலிருந்து நேரடியாக எடுக்கப்பட்ட நியூரான்களைப் போன்றே அனைத்துப் பண்புகளையும் கொண்டிருக்கும். ஆனாலும், மனிதத் தோலிலிருந்து நியூரான்களை உருவாக்கும் போது, மூளைக்குள் சென்று நியூரான்களை எடுக்கும் சிக்கலும், அதனால் ஏற்படும் எதிர்ப்பும் தவிர்க்கப்படுகிறது.

செயற்கை அறிவைப் பயன் படுத்தி, மனிதர்களைப்போல கற்றுக்கொள்ளவும், மொழி களைப் புரிந்துகொள்ளவும், பொதுஅறிவுடன் *(common sense)* செயல்படவும், கணினிகளை, அல்லது மனித ரோபோக்களை

வடிவமைக்க முடியும் என்று அறிவியலாளர்கள் நம்புகிறார்கள்.

மனிதர்களாகிய நமக்கெல்லாம், மனம் என்று ஒன்று இருகிறதே ! பல சூழல்களில் மனம், அறிவுடன் முரண்படுவதை அன்றாட வாழ்வில் நாம் பார்த்து வருகிறோம் அல்லவா? இக்கட்டான சூழலில் உதவி செய்யாத, இன்னும் சொல்லப்போனால் பிறரைத் துன்புறுத்துகிற கல்மனம் படைத்தவர்களையும், தொடர்பே இல்லாதபோதும், உதவிசெய்து பிறருக்காகத் தங்கள் உயிரையும் இழக்கும் நல்மனம் படைத்தவர்களையும் நாம் பார்க்கிறோம்தானே? இப்படிப்பட்ட மனம் சார்ந்த பண்புகளை, செயற்கைஅறிவுபெற்ற ஒரு கணினிக்குக் கற்றுக்கொடுக்க முடியுமா என்னும் கேள்வியும் எழுகிறதுதானே?

அன்பு, பாசம், காதல், காமம், நல்லுறவு, வல்லுறவு, சோகம், மகிழ்ச்சி, விருப்பு, வெறுப்பு, நட்பு, துரோகம், வலி, பசி போன்ற மனித உணர்வுகளை, கணினிக்கு எப்படிக் கற்றுக்கொடுப்பார்கள் என்பதும் புரியவில்லை. அப்படி உண்மையாகவே ஒரு கணினி கற்றுக்கோள்ளுமானால், அதனால் ஏற்படப்போகும் நன்மைகளை விடவும், தீங்குகள்தான் அதிக அளவில் நம் கண்முன்வந்து நம்மை அச்சுறுத்துகின்றன.



செயற்கை அறிவைக்கொண்டு ஒரு இயந்திரம், மனிதர்களைப்போலவே, பகுத்தறிவுகொண்டு சிந்திக்கவும் முடியும், செயல்படவும் முடியும் (think and act rationally) விதத்தில் எப்படி பயிற்றுவிப்பார்கள் என்பதும் நமக்குப் புரியவில்லை

முழுமையாக, அது எப் போதுமே சாத்தியமற்றது என்று தான் நான் நம்புகிறேன். வேறு விதமாகச் சொல்வதானால், சாத்தியப்படாமல் போவதே மனிதகுலத்திற்கும், மற்ற உயிரினங்களுக்கும் நல்லது.

மேலும், மனிதர்களைப்போல இயந்திரங்களை உருவாக்க வேண்டிய அவசியம் என்ன என்னும் நியாயமான கேள்வியும் எழுகிறது. இந்தக் கேள்விகளுக் கெல்லாம், அறிவியலாளர்கள் நேர்மையாகப் பதில் சொல்ல மாட்டார்கள்.

உயிரி ஆயுதம் உருவாக்கும் முயற்சியில் மனிதன் ஈடுபட்ட போதுதான், நோபல்கரோனா வைரஸ் (KOVID-19) உலகெங்கும் பரவி பல உயிர்களைப் பலி வாங்கி, மக்களின் வாழ்வா தாரத்தை சிதைத்து, இயல்பு வாழ்க்கையை சீரழித்துவிட்டது என்னும் ஒரு குற்றச்சாட்டும் உள்ளது. கோவிட் 19 இயற்கை யாகவே உருவாகியிருந்தாலும், உயிரித் தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருப்பதும் உண்மைதானே.

இதுபோல, ஆய்வுக்கூடங்களில் உருவாக்கப்படும் நியூரான்கள், கணினிகளுக்கு செயற்கை அறிவை கொடுப்பதற்காக மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதற்கு எந்தவிதமான உத்திரவாதமும் இல்லை என்று அறிவியலாளர்களே கூறுகின்றனர். இதுபோன்ற எந்தவிதமான செயல்களுக்கும் அவற்றைப் பயன்படுத்தும் சாத்தியமும் உள்ளது என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

அதாவது, இனிமேல்வரும் காலம்என்பது 'அறிவியல் புதினம்' என்னும் நிலையைக் கடந்து, 'அறிவியல் பயங்கரம்' (Science fiction to science horror) என்னும் நிலைக்கு மாறிவிடும் ஆபத்து உள்ளதாக அறிவியலாளர்களில் சிலர் எச்சரிக்கவும் செய்கிறார்கள்,. அதன்காரணமாகவே, செயற்கைஅறிவு தொழில்நுட்பத்தை, அறமற்ற அறிவியல் என்று சொல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல், மனிதனின் அறிவியல் கண்டுபிடிப்புகள் அனைத்துமே மனிதனின் தேவைசார்ந்து இருந்துவந்தன... ஆனால், எப்போது மனிதன், மக்களுக்கு எந்தவிதத்திலும் தேவைப்படாத அறிவியல் ஆய்வுகளிலும் , கண்டுபிடிப்புகளிலும் ஈடுபடத் துவங்கினானோ அப்போதே, அழிவும், அவ்வப்போது பேரழிவும் ஏற்படத்தொடங்கிவிட்டன.

மனிதனின் எந்த ஒரு அறிவியல் கண்டுபிடிப்பும், மனிதனுக்குக் கட்டுப்பட்டதாக இருக்கவேண்டுமே தவிர மனிதனைக் கட்டுப்படுத்துவதாக இருக்கக் கூடாது.

மனிதகுலம் மட்டுமன்றி, இந்த பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும், தாவரங்களுக்கும் எந்த விதத்திலும் கேடு விளைவிக்காமல், தேவையை மட்டுமே மனதில்கொண்டு, புதிய கண்டுபிடிப்புகளை நோக்கிய அறிவியல் பயணம் அமையவேண்டும். அதுபோன்றதொரு நிலை வந்தால்மட்டுமே, மனிதர்களிடையே, அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும். அதுவே, வாழ்விற்கான அறிவியல் அறமும் ஆகும்.

# இலங்கையில் அமைதி மற்றும் சுமூக நிலையை ஏற்படுத்தும் இந்திய இலங்கை ஒப்பந்தம்

## 33 ஆண்டுகள் கடந்த பிறகும்...

1983 ஜூலை 23, தொடக்கம் இரண்டு கிழமைகளுக்கும் மேலாகத் திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் இலங்கைத் தமிழர்களை வதைத்தும், அவர்தம் சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், வெலிக்கடை சிறைச்சாலை அரசியல் கைதிகள் உள்ளடங்கலாக 3000 பேர் வரை படுகொலை செய்ததுமான ஒரு கறைபடிந்த நிகழ்வாகும். அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி உள்ளிட்ட உலகத் தலைவர்களால் கடும் கண்டனத்தை இலங்கை அரசு பெற்றது. அது, வரலாற்று வடுவானது. இத்துயரம் கண்டு தமிழகம் வெகுண்டெழுந்தது. அதன் தொடர்ச்சியாக, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாக்கும் இடையே யூலை 29, 1987ம் ஆண்டு ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்குடன் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தம் இலங்கை ஒரு பல்லின, பல்மத, பல்மொழி நாடாக ஏற்று வடகிழக்கை தமிழ் முஸ்லீம் மக்களின் இணைந்த தாயகப்பிரதேசமாக ஏற்று தமிழ் மொழியை அரச மொழியாக ஏற்று மாகாண சபைகளூடான அதிகாரப் பரவலாக்கத்தை முன்வைக்கின்றது. இவ்வொப்பந்தம் மூலம் ஏற்படுத்தப்பட்ட வடகிழக்கு மாகாணசபை முறைமையும் அதிகார அலகுகளும் சிறிலங்கா அரசின் வஞ்சகமான இராசதந்திர அணுகுமுறைகளால் செயல்படாமல் போனது. ஒப்பந்தம் ஏற்பட்டு 33 ஆண்டுகள் ஆகின்றன. ஒப்பந்தத்தை திருப்பிப் பார்க்கும் ஒரு மீள்பதிவாக அந்த ஒப்பந்த நிபந்தனைகள் இங்கே வெளியிடப்பட்டுள்ளன.

இந்திய குடியரசின் பிரதமர் மேதகு திரு. ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதிபர் மேதகு திரு. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ம் தேதி கொழும்பு நகரில் சந்தித்துக் கொண்டனர். இந்தியா இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே நிலவி வரும் தொன்று தொட்ட நட்புறவை பலப்படுத்தவும், அதனை வளர்த்து பராமரிக்கும் உயர்மிகு முக்கியத் துவத்தை இணைத்து, இலங்கையின் இனப் பிரச்னையை தீர்க்கும் உடனடித் தேவையை ஏற்று, இலங்கையில் வசிக்கும் அனைத்து இன மக்களின் பாதுகாப்பு வளமை, மேம்பாடு ஆகியவற்றுக்காகவும் வன்முறையைத் தவிர்ப்பதற்காகவும் இந்த இலக்கினை நிறைவேற்றும் முகத்தான் கீழ்க்கண்ட ஒப்பந்தம் இந்த நாளில் கையெழுத்திடப்படுகிறது,

இதன் தொடர்பாக,

1.1 இலங்கையின் ஒற்றுமை, இறையாண்மை , பிரதேச ஒரு மைப்பாடு ஆகியவற்றை பராமரிப்பதில் ஆர்வம் கொண்டு,

1.2 இலங்கை பல இன, பல மொழி பேசும் மக்களை அதாவது சிங்களர், தமிழர், முஸ்லீம்கள் (மூர்ஸ்), பர்ஹர்கள் ஆகியோரைக் கொண்டது என்பதையும் அங்கீகரித்து,

1.3 ஒவ்வொரு இனமும் தனி கலாச்சார, மொழியைக் கொண்டது, அவற்றை வளர்ப்பது அவசியம் என்பதை ஏற்று,

1.4 இலங்கைத் தமிழர்களின் சரித்திரபூர்வமான வசிப்பிடமாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் இருந்து வந்திருக்கிறது. இங்கு மற்ற இனத்தவருடன் தமிழர்கள் சேர்ந்து வாழ்கிறார்கள் என்பதையும் அங்கீகரித்து,

1.5 இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவற்றை பலப்படுத்துவதின் அவசியத்தை உணர்ந்து இலங்கையின் பல இன, பல மொழி, மதங்கள் கொண்ட சமூகத்தின் தன்மையை பாதுகாப்பதின் தேவையையும் உணர்ந்து அதன்



● இந்திய–இலங்கைஒப்பந்தம் 1987 யூலை 29

அனைத்து குடிமக்களும் உரிமைகளுடனும், மகிழ்ச்சியோடும் வாழ கீழ்க்கண்டவாறு முடிவு செய்யப்படுகிறது.

2. தீர்மானிக்கும் பொருட்டு

2.1 கீழ்க்கண்டவாறு வடக்குகிழக்கு மாகாணங்கள் ஒரே நிர்வாகப் பகுதியாக இணையவும், அவைகளை பொது மக்கள் வாக்கெடுப்பு மூலம் தனியாகப் பிரிக்கவும், அனுமதிக்க இலங்கை அரசு தீர்மானிக்கிறது.

2.2 மாகாண கவுன்சிலுக்கான தேர்தல் தேதி பத்தி 2.8ல் குறிப்பிட்டுள்ளபடியும் பொது மக்கள் வாக்கெடுப்பு தேதி பத்தி 2.3ல் குறிப்பிட்டுள்ளபடியும் நிர்வாகப் பகுதியாகத் தேர்நதெடுக்கப் பட்ட மாகாணக் கவுன்சிலுடன் இயங்கும். இந்த ஒரே தீர்வாகப் பகுதிக்கு ஒரு கவர்னர், ஒரு முதல்வர், ஒரு அமைச்சரவையும் இருக்கும்.

2.3 1988ம் ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதியோ அதற்கு முன்னரோ ஒரு பொது மக்கள் வாக்கெடுப்பு நடைபெறும். இந்த வாக்கெடுப்பு,

அ. வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணம் ஒரே நிர்வாகப் பகுதியாக இணைந்து இருப்பதா? தொடர்ந்து 2.2.ல் கண்டுள்ளபடி ஆளப்படுவதா அல்லது

ஆ. தனி நிர்வாகப் பகதியாக தனக்கென தனி மாகாணக் கவுன்சில், தனி கவர்னர், தனி முதல்வர், தனி அமைச்சரவை யுடன் இயங்குவதா என்பதைத் தீர்மானிக்கும்.

இலங்கை ஜனாதிபதி அத்தகைய பொதுமக்கள் வாக்கெடுப்பை

தனது விருப்பப்படி ஒத்தி வைக்கவும் உரிமை உண்டு.

2.4 இன வன்முறை அல்லது மற்ற காரணங்களுக்காக அல்லது வேறு காரணங்களுக்காகவும் இடம் பெயர்ந்தவர்களும் அத்தகைய பொதுமக்கள் வாக்களிப்பில் வாக்களிக்க உரிமை உண்டு. அவர்கள் எந்த இடத்திலிருந்து வெளியேறினார்களோ அந்த இடங்களுக்குத் திரும்ப தேவையான சூழ்நிலைகள் உருவாக்கப்படும்.

2.5 அத்தகைய பொதுமக்கள் வாக்கெடுப்பு நடைபெறும் பொழுது இலங்கை தலைமை நீதிபதி தலைமையில் இலங்கை அரசால் குறிப்பிடப்பட்டு, இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒருவர், கிழக்கு மாகாணத் தமிழர்களின் பிரதிநிதிகளால் குறிப்பிடப்பட்டு, ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒருவர் இடம் பெறும் கமிட்டியால் கண்காணிக்கப்படும்.

2.6 பொதுமக்கள் வாக்கெடுப்பு முடிவு சாதாரண பெரும்பான்மை அடிப்படையில் அமையும்.

2.7 பொதுமக்கள் வாக்கெடுப்புக்கு முன்னதாக இலங்கை சட்டங்கள் அனுமதிக்கும் பிரச்சார முறைகளுக்கு உரிமை உண்டு.

2.8 மாகாண கவுன்சில்களுக்கான தேர்தல் அடுத்த 3 மாதங்களுக்குள் 1987 டிசம்பர் 31ஆம் தேதிக்கு முன்னதாக நடைபெறும். வடக்கு, கிழக்கு மாகாண தேர்தல்களின்போது இந்தியப் பார்வையாளர்கள் வரவேற்கப்படுவார்கள்.

2.9 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி வாக்கில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவசர நிலை நீக்கப்படும். இந்த ஒப்பந்தம் கையெழுத்தான 48 மணி நேரத்திற்குள் போர் நிறுத்தம் அமலுக்கு வரும். போராளிகள் தங்களது ஆயுதங்களை இலங்கை அரசு குறிப்பிடும் அதிகாரிகளும், ஒத்துக்கொள்ளப்பட்ட நடைமுறைப்படி ஒப்படைப்பார்கள். போர் நிறுத்தம் ஆயுத ஒப்படைப்பு ஆகியவைகளின் உடன் விளைவாக இலங்கை ராணுவமும் மற்ற பாதுகாப்புப் படைகளும் 1987ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் தேதி நிலவரப்படி முகாம்களுக்கு திரும்புவார்கள். ஆயுத ஒப்படைப்பு, இலங்கை பாதுகாப்புப் படைகள் முகாம்களுக்கு திரும்புவது போர் நிறுத்தம் ஏற்பட்ட 72 மணி நேரத்திற்குள் நடைபெறும்.

2.10. வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்ட அமல், பாதுகாப்பு பராமரிப்பு பணிகளுக்காக நாட்டின் மற்ற பகுதிகளில் உள்ளது போன்ற அமைப்புகள் பயன்படுத்தப்படும்.

2.11. எல்லா அரசியல் கைதிகளுக்கும், பயங்கரவாதச் சட்டம், மற்ற அவசரநிலைச் சட்டங்களின் கீழ் சிறையில் உள்ள, வழக்கு விசாரணையில் உள்ள அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும். தேசிய வாழ்க்கை நீரோட்டத்திற்கு இளைஞர்களான போராளிகளைக் கொண்டு வர விசேஷ முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொள்ளும். இந்த முயற்சிகளுக்கு இந்தியா ஒத்துழைப்புத் தரும்.

2.12 மேலே கண்ட ஷரத்துக்கள் அனைத்தையும் இலங்கை அரசு ஏற்று அமல் செய்யும். மற்றவர்களும் அவ்வாறே செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

### ஒப்பந்தப் பத்திரப் பரிமாற்றம்

2.13 இந்த தீர்மானங்களுக்கான நடைமுறை ஏற்கப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட திட்டங்களை இலங்கை அரசு உடனடியாக அமல் செய்யும்.

2.14 இந்த தீர்மானங்களுக்கு இந்திய அரசு உத்தரவாதம் அளிக்கும். இந்த திட்டங்களை அமல்படுத்துவதில் ஒத்துழைக்கும்.

2.15 இந்த திட்டங்கள் 4.5.1986ஆம் தேதிக்கும் 19.12.1986ஆம் தேதிக்கும் இடைக் காலத்தில் விவாதிக்கப்பட்ட திட்டங்களுக்கு சம்மதிப்பதை நிபந்தனையாக கொண்டுள்ளன. மேற்கண்ட காலத்தில் இறுதியாக்கப்படாத விபரங்கள் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் தேதியிலிருந்து ஆறு வார காலத்திற்கு இந்திய இலங்கை பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படும். மேலும் இலங்கை அரசோடு, இந்திய அரசு நேரடியாக இந்த திட்டங்களை அமல் செய்ய ஒத்துழைப்பதையும் நிபந்தனைகளாகக் கொண்டுள்ளன.

2.16 மேலும் இந்த ஒப்பந்தத் திட்டங்களை இலங்கையில் செயல்படும் எந்த ஒரு போராளிகளின் குழுவாவது ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் இந்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் இந்த திட்டங்கள் நிபந்தனைகளாகக் கொண்டுள்ளன. இதன்படி,

அ) இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு விரோதமான நடவடிக்கைகளுக்கு இந்தியப் பகுதி பயன்படாமல் பார்த்துக்கொள்ள இந்தியா தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஆ) இலங்கை கடற்படையுடன், தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கைகளைத் தடுக்க இந்திய கடற்படை, கடலோர காவல் படை ஒத்துழைப்பு தரும்.

இ) இந்த திட்டங்களை அமல் செய்ய ராணுவ உதவி வழங்கும்படி இலங்கை அரசு கோரினால், கோரிய உதவியை கோரிய சமயத்தில் இந்தியா ஒத்துழைப்பு வழங்கும்.

ஈ) இலங்கையில் உள்ள இந்தியக் குடிமக்களை இந்தியாவுக்கு அழைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு துரிதப்படுத்தும். உடன் விளைவாக தமிழ் நாட்டில் இருந்து தமிழ் அகதிகள் இலங்கை திரும்பவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உ) வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் அனைத்து இனத்தவரின் உயிருக்கும் உடலுக்கும் ஊறு ஏற்படால் பாதுகாப்பை உறுதி செய்ய இந்திய இலங்கை அரசுகள் ஒத்துழைக்கும்.

2.17 இந்த ஒப்பந்தத்தில் கண்டுள்ள வடக்கு கிழக்கு தேர்தல்களில் அனைத்து இனத்தவரும் சுதந்திரமாக முழுமையாக, நேர்மையாக பங்கு பெறுவதை இலங்கை அரசு உறுதி செய்யும். இதன் தொடர்பாக இலங்கை அரசுக்கு இந்திய அரசு முழு ஒத்துழைப்பு தரும்.

2.18 இலங்கையின் அரசு அலுவல் மொழியாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் முதலியன இருக்கும்.

3. இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதும் அமலுக்கு வரும்.

அதிகாரப்பூர்வமான அசல் நகல் உள்ளிட்ட இரண்டு பிரதானப் பகுதிகளையும் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம்நாள் அன்று இலங்கை கொழும்பில் நம் இருவரின் சாட்சிப்படி இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திடுகிறோம்.

**ஜூனியஸ் ரிச்சர்ட் ஜெயவர்த்தனா**
**இலங்கை ஜன நாயக சோஷலிச குடியரசு அதிபர்**

**ராஜீவ் காந்தி**
**இந்திய குடியரசின் பிரதமர்**

திரும்பிப் பார்க்கிறோம்



# யார் பகைவர்... யார் நண்பர்...

## வீரகேசரி நாளிதழுக்கு ஈரோஸ் பாலகுமார் அளித்த பேட்டி

25-1-1988

“பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தைகள் தவிர்த்த வேறு வழிகள் ஏதுமில்லை. தமிழ் மக்களுக்கும் சொந்த நலன்கள் இருக்கின்றன. இந்தியாவுக்கும் சொந்த நலன்கள் இருக்கின்றன. இரண்டும் முரண்பட்டால் இரு பகுதியினரிடையேயும் நல்லுறவு நிலவ முடியாது. இரண்டும் முரண்படாத வகையில் உறவைப் பேணக்கூடிய வாய்ப்பு ஒன்று பூகோள ரீதியாக ஏற்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி இப்பொழுதுள்ள இந்தப் பிரச்சனைக்கு ஒட்டு மொத்தமான தீர்வைக் காண வேண்டியுள்ளது. என்று வவுனியாவில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த ஈழப் புரட்சி அமைப்பின் (ஈரோஸ்) புரட்சிகர நிறைவேற்றுக் குழு உறுப்பினர் திரு வி. பாலகுமார் தெரிவித்தார். கடந்த வாரம் இனந்தெரியாதவர்களினால் தமது இரண்டு உறுப்பினர்கள் கடத்தப்பட்டது தொடர்பாகவும் இயக்க வேலைகள் தொடர்பாகவும் வவுனியாவுக்கு வந்திருந்த திரு பாலகுமார் எளிமையாகவும், அமைதி நிறைந்த நிதானமான தோற்றத்துடனும் காணப்பட்டார். இச் சந்திப்பின்போது இன்றைய சூழ்நிலையில், ஈரோஸ் இயக்கத்தின் நிலைப்பாடு. தமிழ் மக்கள், இந்தியப் படையினர், விடுதலைப் புலிகள் மற்றும் ஏனைய இயக்கங்கள் தொடர்பான நிலைமைகள் குறித்தும் அவர் விளக்கமளித்தார்.

*இந்தியா தென்கிழக்காசியாவில் பூகோள அரசியல் ரீதியாக தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதன் ஒரு படியாக இந்து சமுத்திரத்தில் தனது நிலைகளை வலுப்படுத்த வேண்டிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனைப் பொறுத்த மட்டில் இந்தியாவுடன் எமக்கு எந்த முரண்பாடும் கிடையாது. மேலைத்தேய பிற்போக்கான வல்லரசு களின் ஆதிக்கம் இங்கு வருவதை நாம் எதிர்க் கின்றோம். இலங்கைஇந்திய ஒப்பந்தம் எங்களுக்கு திருப்தியளிக்காத போதிலும், அதனை நாம் எதிர்க்கவில்லை, அதனை மேலும் செழுமைப் படுத்த முயல்வதே எங்களது நோக்கமாகும்.*

*இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பான சில கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், சில முக்கியமான நிகழ்ச்சிகள் தொடர்பாக ஒரு வரையறுப்பையும், கண்காணிப்பையும் செய்ய வேண்டிய அவசியம் ஒன்று இந்தியப் படைக்கு ஏற்பட்டுள்ளது. இதனை நாம் உணரக்கூடியதாக உள்ளது. அத்துடன் இலங்கைப் படையினரின் அட்டகாசங்களையும் அட்டூழியங்களையும் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வரவேண்டிய அவசியமும், சூழ்நிலையும் ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாகவே இந்தியப் படையினர் இலங்கைக்குள் வந்தபோது*



அதனை நாம் எதிர்க்கவில்லை, வரவேற்றோம். தற்போது ஏற்பட்டுள்ள இந்தியப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகள் மோதல் மக்கள் மத்தியில் மிகுந்த குழப்பத்தையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. யார் நண்பர், யார் பகைவர் என்று தெளிவாக வரையறுத்து இனங்காண முடியாத கஷ்ட நிலை உருவாகியுள்ளது. இதே வேளையில் இந்தியப் படையின் தென்கிழக்குப் பிராந்தியத் தளபதி திபேந்தர்சிங், இப்போது வடக்கிற்கு பொறுப்பாக வந்துள்ள தளபதி பாண்டே ஆகியோரை நாம் சந்தித்தபோது இந்தியப் படை ஆக்கிரமிப்புப் படையாக மாறுவதை நாம் விரும்பவில்லை என வலியுறுத்தினோம். இன்று வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இந்தியப் படையின் நிலைகள் விஸ்தரிக்கப்பட்டு நடமாட்டமும் மிகுந்த அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பொது மக்களுக்குப் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளுக்காக மட்டுமல்லாமல் இனப்பிரச்சனை சரியான முறையில் தீர்க்கப்படுவதற்காக வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட்ட பகுதிகளில் தமிழ்ப் பிரதி நிதிகள் தங்களது சரியான ஒரு நிலைப்பாட்டை எடுப்பதற்கும் இந்தியப் படையினர் இங்கு இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனினும் மக்களுக்கு துன்பங்களையும், தொல்லைகளையும் தந்துள்ள, தற்போதைய மோதல் நிறுத்தப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளும் நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன. ஏனெனில் இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பேச்சுவார்த்தைகள் தவிர்த்த வேறு வழிகள் ஏதுமில்லை. இதேவேளை இந்தியப் படையினருக்கும், புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள மோதல் நிலைமையை பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் எவ்வாறு செயற்படுகின்றது என்பதை அவதானிக்க வேண்டியது, இக் கட்டத்தில் முக்கியமான ஒரு கடமையாகும். இன்றைய நெருக்கடி நிலையில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் வெளிச்சத்திற்கு வராமல் மறைக்கப்பட்டுள்ளது.

இலங்கைஇந்திய ஒப்பந்தத்தின்படி சகல இயக்கங்களையும் சார்ந்த முக்கியமான அரசியற் கைதிகள் சுமார் 1,300. பேர் இன்னும் விடுவிக்கப்படவில்லை. இவர்கள் மகசீன் பெலவத்தை, பூசா போன்ற முகாம்களில் இன்னும் வாடுகிறார்கள். அத்துடன் வடக்கு,கிழக்கு பகுதிகளுக்கு அப்பாற்பட்ட இடங்களில் இடம் பெற்ற தீவிரவாத சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படப் போவதில்லை எனக் கூறுவது மோசமானதாகும். மன்னம் பீட்டியில் இடம்பெற்ற ஒரு சம்பவம் தொடர்பாக கைதானவர்களை மன்னம்பீட்டி வடக்கு, கிழக்கு எல்லைகளுக்கு அப்பாற்பட்டது என்று கூறி விடுதலை மறுக்கப்படுவது இன்னும் விசித்திரமானது. இந்நிலையில் கொழும்பு, மலையகம் போன்ற இடங்களில் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படாத ஒரு சிக்கலான நிலை ஏற்பட்டுள்ளது.

‘சகல அரசியற் கைதிகளும் எந்தவிதமான நிபந்தனையுமின்றி பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவார்கள்’ என்று இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியை நாம் சந்தித்தபோது எங்களுக்குக் கூறப்பட்டது. ஆனால் ஒப்பந்தத்திற்கு முரணான வகையிலேயே இன்று இலங்கை அரசாங்கம் அரசியற் கைதிகளை விடுவிக்காமல் சிறைகளில் தடுத்து வைத்துள்ளது. வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பாக இந்திய அரசு அறிவித்த பின்னரும் இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக எதுவும் அறிவிக்காமல் உள்ளது. இதுவும்பிரச்சனைக்குரிய ஒரு விடயமாகும். இது தொடர்பான சட்டமூலம் சம்பந்தப்பட்ட விடயத்தில் மிதவாதக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியினரே நியாயமான சந்தேகத்தை எழுப்பியுள்ளார்கள். இதேவேளையில் உத்தேச சபைகளின் அதிகாரங்கள் தொடர்பான சிக்கல்கள் இன்னும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

ஈரோஸ் இயக்கத்தைப் பொறுத்தவரை மலையகத்தை இணைக்காத எந்த ஒரு தீர்வையும் ஒரு தீர்வாக நாங்கள் ஏற்கப் போவதில்லை. அது தொடர்பான அரசியற் கோரிக்கைகளை முன்வைத்து நாங்கள் செயற்படவுள்ளோம். எனினும், நாங்கள் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்குத் தடங்கலாக இருக்கப் போவதில்லை. இதனை செழுமைப்படுத்தவே முயன்று வருகின்றோம். இப் பிரச்சனைக்கான தீர்வு இடைக்காலத் தீர்வாக இருந்தபோதிலும் அது பரந்துபட்டதாக அமையவேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றோம்.



வட கிழக்கைச் சேர்ந்த பொது மக்களின் குறிப்பாக வறிய மக்களின் துன்ப நிலை தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சமயாசமய ஊழியர்கள் போன்றோர் தமது தொழில் முயற்சிகளைத் தொடர முடியாமல் இன்னும் பாதிக்கப் பட்டுள்ளார்கள். வன்னிப் பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் விவசாயிகள் முழுமையாக விவசாயத்தில் ஈடுபட முடியாத நிலையே நிலவுகிறது. செய்கைகள் மேற்கொள்ளப்பட்ட விவசாயத்தையும் முழுமையாக பராமரிக்க முடியாதுள்ளது. மீனவர்களுக்கு இதுதான் மீன் பிடிப்பதற்கான பருவ காலமாகும். ஆனால் தீவுப் பகுதிகள், யாழ்ப்பாணம், மட்டக் களப்பு போன்ற பகுதிகளில் மீனவர்கள் இப்போது மீன் பிடித் தொழிலில் ஈடுபட முடியவில்லை. இயற்கைக்கும் வழமைக்கும் மாறாக பகலில் அதுவும் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே மீன்பிடிக்க அனுமதிக்கப்படுகிறது. பொருத்தமற்ற இந்தச் செயலினால் மீனவ மக்களின் ஜீவனோபாய முயற்சிகள் தடை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளினால், அசம்பாவித சம்பவங்களினால் ஏற்பட்ட பாதிப்புடன் நில்லாமல் தமிழ் மக்களின் அடிப்படைப் பொருளாதாரமே தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகள் காரணமாக இங்கு வந்துள்ள இந்தியப்படை ஆக்கிரமிப்புப்படை என்ற பழிக்கு ஆளாகும் நிலைமைக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது. ஆனால் இந்தியப் படை விஸ்தரிப்பு செய்யப்பட்டுள்ளதனால் மக்களுக்குப் பலதரப்பட்ட தொல்லைகள், பிரச்சனைகள் மற்றும் உளவியல் ரீதியான பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன. இராணுவ உயரதிகாரிகள் பக்குவமாகவும், பண்பாகவும் நடந்து கொண்டபோதிலும், கீழ் மட்டத்திலுள்ளவர்கள் நடந்து கொள்வது பற்றி நாம் விசேடமாகக் கூற வேண்டிய அவசியமில்லை. எனவேதான் தமிழர்களின் நலன்களுக்கும் இந்தியாவின் நலன்களுக்கும் முரண்பாடு இல்லாத வகையில், இந்தியா ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தி இனப் பிரச்சனைக்கு ஒட்டு மொத்தமான ஒரு தீர்வைக் காண வேண்டுமென்று வலியுறுத்துகின்றோம். இதற்கு 'அவசியமானது தமிழர் பிரதிநிதிகள் யார், தமிழர் தரப்பில் பிரதிநிதித்துவம் வாய்ந்த சக்தி எது என்று தெரிய வேண்டியது முதலில் சகல தேடுதல் வேட்டைகளும் உடனடியாக நிறுத்தப்படுவதுடன் போர்க்கால சூழ்நிலைகள் நிறுத்தப்பட்டு ஓர் உடன்பாட்டிற்கு வருவதுடன் மக்களிடையே அமைதியையும், சுமூக நிலையையும் ஏற்படுத்த வேண்டும். இதன் மூலமே மக்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்ப முடியும். இதற்கான சகல முயற்சிகளையும் செய்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். இப்போதும் செய்து வருகின்றோம்.

இன்றைய நிலையில், தமிழர்களின் துன்பங்களை, அபிலாசைகளை பிரதிநிதித்துவப்படுத்தி அவர்களுக்காக குரல்கொடுக்கும் தலைமை யார் என்பது குறித்துச் சந்தேகமும் கேள்விக்குறியுடன் கூடிய குழப்பமான நிலைமையுமே நிலவுகிறது. முக்கியமாக, இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள் டில்லியிலும், கொழும்பிலும் நடைபெற்றன. பிரச்சனைக் குரியவர்களின் இடங்களான யாழ்ப்பாணத்திலோ, திருகோணமலையிலோ, மட்டக்களப்பிலோ இடம் பெறவில்லை. நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் மக்களது கருத்துக்கள் அபிலாசைகள் என்பன சரியான முறையில் பிரதிபலிக்கப்படவில்லை. தேர்தல்கள் நடைபெற்று 15 வருடங்கள் ஆகிவிட்டன. எனவே இந்தச் சூழ்நிலையில் தமிழர் அமைப்புகள் அத்தனையும் அடங்கியதும், இலங்கை இந்திய அரசுகளின் பிரதிநிதிகளும் உள்ளடங்கிய விசேடமான பரந்துபட்ட பிரதிநிதித்துவக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று இந்தியாவைக் கோரியுள்ளோம். உயர் மட்டக்குழுவான இது நிரந்தரமாக நின்று தமிழ்மக்களை எதிர்நோக்கும் பிரச்சனைகளை ஆராய்ந்து அனைத்துக்குமான முடிவு உடன் வரவேண்டும். இதன்மூலம் நிரந்தரமான கருத்துருவம் ஒன்று மக்களிடையேயும் அரசியல் ரீதியாகவும், சர்வதேசத்திலும் உருவாக்க முடியும்.

ஈழப்புரட்சி அமைப்பு வெளியிட்ட சிறுவெளியீட்டிலிருந்து எடுத்து நன்றியுடன் காக்கை மீள்பதிவு செய்துள்ளது.
-ஆசிரியர்

கட்டுரை

■ க. பஞ்சாங்கம்
drpanju49@yahoo.co.in



## மா. அரங்கநாதன் கதைகளை வாசித்தல்

# கட்டுரைகள் கதைகளாக மலரும் மாயவித்தை

நற்றிணைப் பதிப்பகம் வெளியிட்டுள்ள “மா. அரங்கநாதன் படைப்புகள்” என்ற தொகுப்பில் தொண்ணூறு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஒன்று “அஞ் சலி.“ ஒரு மாதப் பத்திரிகையில் முத்துக்கறுப்பன் எனும் விமர்சகரைப் பற்றி மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் வந்த இரண்டு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. முதல் கட்டுரை, இரண்டாவதுகட்டுரை என்ற தலைப்பு மட்டுமல்லாமல் “முடிவுரை“ என்று கட்டுரைக்கே உரிய தலைப்பும் இடப்பட்டுள்ளது. இது எப்படிச் சிறுகதையாகும்? இப்படி ஒரு கேள்வி எழுப்ப வேண்டுமென்றால் சிறுகதைக்கென்று ஓர் இலக்கணம், வரையறை-இருக்கிறது என்று நம்பிக்கொண்டிருக்கிற கல்வியாளர்கள் மனத்திடமிருந்துதான் எழும்பும்.

இலக்கிய வகைமைகளுக்கு இடையிலான கறாரான எல்லைக்கோடுகள் என்றைக்கும் இருந்ததில்லை என்பது மட்டுமல்ல அப்படியெல்லாம் எல்லைகளை வகுத்துவிட முடியாது என்கிற புரிதல் நடந்த காலகட்டத்தில் இந்தக் கதை எழுதப்பட்டுள்ளது. (2007). வடிவம், ஒழுங்கு, என்ற மரபான பார்வையைச் சிதறடிக்கிற நோக்கிலேயே தன்னுடைய பெரும்பாலான கதைகளைப் படைத்துள்ளார் மா. அரங்கநாதன்.

“அஞ்சலி“ என்ற இந்தக் கதையில் அப்படியே கட்டுரையைப் பயன்படுத்தி உள்ளார்; “என்ன பெயர் வைக்கலாம்?” (2015) என்ற கதையில் எழுத்தாளர் முத்துக்கறுப்பன், தனக்குத் தோன்றியதை, தான் கண்ட காட்சியை எல்லாம் எந்த ஒழுங்கும் இல்லாமல் அப்படி அப்படியே ஒரு பதினொரு பகுதியாக சிறு சிறு குறிப்புப் போல எழுதி வைக்கிறார். காலையில் எழுந்து இவைகளைக் கதைகளாகவோ கட்டுரைகளாகவோ விரிவாக எழுதலாம் என்ற நினைப்போடு உறங்கச் செல்கிறார். காலையில் பார்த்தால் ‘ஆளு’ எழவேயில்லை. தூக்கத்திலேயே போயிருக்க வேண்டும் என்று கதை முடிந்து விடுகிறது.

“ஐயன்மீர்-சற்றுப் பொறுங்கள்.” (2015) என்றொரு கதை. ஒன்றரைப் பக்கம்தான். எழுத்தாளர் முத்துக்கறுப்பன் கடவுள் பற்றிய விசாரணைமிக்க ஒரு கட்டுரைப் பகுதியை முருகேசனிடம் படித்துக்காட்டிவிட்டு, “இதை எப்பவோ படிச்சது. ஆனால் எழுதியது யாருன்னு தெரியல. நாம எழுதியது மாதிரி காட்டினா அது நல்லாவா இருக்கும்?” என்கிறார்.

கேட்டுக் கொண்டிருந்த முருகேசன், “நானும் இதப் படிச்சிருக்கேன். ஆனா இத எழுதியது வேறு யாருமில்ல. நீதான்” என்கிறார். பத்து ஆண்டுகளுக்கு முன்பு நீ எழுதிய “கட்டுரை“தான். நீ எழுதியது உனக்கே ஞாபகம் இல்ல. “எழுதி என்ன கிழிச்சே” அந்தக் கட்டுரைத்தலைப்பு கூட எனக்கு ஞாபகம் இருக்கு.” ஐயன்மீர்-சற்றுப் பொறுங்கள்.” “முத்துக்கறுப்பன் மௌனி ஆனான்” என்று கதை முடிகிறது.

இவ்வாறு மா. அரங்கநாதன் கதைவெளி முழுவதும், வடிவம் குறித்த மரபார்ந்த பார்வையைக் கேள்விக்கு உட்படுத்தும் பல்வேறு சோதனை வடிவங்களைக் கண்டு களிக்க வாசகர்களுக்கு நிறைய வாய்ப்புகள் திறந்தபடிக் கிடக்கின்றன.

சிறுகதையைக் குறித்து அரங்கநாதனின் புரிதல் பெரிதும் நுட்பமானது. “அத்தனை எளிதில் சிறுகதையைக் கோடிட்டுக் காட்டிவிட முடியாது - கவிதையைப் போல.” என்று எழுதுகிறார். (சிறுகதையைப் பற்றி, ப. 855).

சிறுகதை என்பது “சில மணி நேரம் நம்மை அமைதியுறச் செய்வது” என்கிறார். அந்தச் “சில கணங்கள் விசாரிக்கப் படுகையில் அவை ஒரு குழந்தையானது தனது கையைக் காலை ஆட்டிக்கொண்டு சொல்ல வருகிற விஷயங்கள்தாம். விஷயங்களை விடக்

கையையும் கால்களையும் அசைப்பது முக்கியம். விஷயமே இல்லாத விஷயமாக அந்த விஷயம் இருப்பதால் ஏற்பட்ட சங்கடம்." (ப. 855) இப்படி ஒரு தீவிரமான தளத்தில் சிறுகதை என்கிற இலக்கியப் படைப்பைப் பார்த்துப் பிரமிப்பு மனநிலையிலோடு இயங்குகிறார். அதனால்தான் மா. அரங்கநாதனின் சிறுகதைகள் ஒன்றைப் போல் ஒன்றில்லை என்பது மட்டுமல்ல வேறு யாருடைய கதையைப் போலவும் இல்லாமல் ஒவ்வொன்றும் தனியாகத் தெரியும்படியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளன.

சரி! மேற்கண்ட அந்த மூன்று கதைகளுக்கு வருவோம். ஏற்கெனவே எழுத்தாளர்களை விமர்சிக்கும் இரண்டு கதைகளைக் (1. கவிக்குயில், 2. ஓர் இரங்கற் கூட்டம்) குறித்த என் கட்டுரையைக் காக்கை வாசகர்கள் வாசித்திருப்பீர்கள். தொடர்ந்து இங்கே சுட்டிக் காட்டப் பட்டுள்ள மூன்று கதைகளும் எழுத் தாளர்கள் பற்றிய கதைகள்தாம்.

அஞ்சலிக் கதையில் வரும் முதல் கட்டுரையில் விமர்சகர் முத்துக்கறுப்பன் விமர்சனத்துக்குள்ளாகிறார். "விமர்சனமே இல்லாத நமது மொழியில் இப்போது ஒருவர் தோன்றியிருக்கிறார். "ஆமாம்-தோன்றித்தானிருக்கிறார்" - இப்படிக் கிண்டல் செய்யப்படுகிறார். படிக்காம லேயே எழுத முடியும்; ஆனால் விமர் சனம் செய்ய முடியுமோ? பத்தாம்பசலித் தனமான இந்த முத்துக்கறுப்பனால் முடிகிறதே! இவரது படிப்பு ஊறறிந்த விஷயம்.

இப்படிப்பட்டவர்தான் "அன்பு என்ற விஷயம் குறித்துப் புத்தருக்கு முன் யாருமே சொன்னதில்லை" என்கிறார். வேதங்களில், இதிகாசங்களில் சொல்லப் பட்ட அன்பு எல்லாம் "ஆரவாரத் தன்மை" கொண்டவை. காரண காரியத் தோடு சொல்லப்படுவது "அன்பு" ஆகாது. "இவன் தமையன், எனவே அன்பு காட்டு" என்று காரணம் மூலம் பிறப்பது அன்பு ஆகாது என்கிறார்; அப்படியென்றால் இவர் தன் மகன் மேல் காட்டுவது அன்பு ஆகாதா? "அது அன்பு ஆகாது" என்று ஏற்றுக் கொள்வாரா? என்று கேட்கிறார் கட்டுரையாளர்.

> **தோன்ற வேண்டுமென்றால் அதற்கு முதலில் எதுவுமே இல்லாத இடம் வேண்டும்.. எதுவும் மனத்துக்கண் இல்லை என்னும் நிலை. மனமே இல்லை எனும் நெறி. இல்லை இல்லை என்பதால் ஏற்படும் நெறி... காலம் காலமாக இங்கே வழங்கி வந்த-வருகிற-கடவுள் என்னும் சொல்லின் பொருளும் இதுதான். இந்தக் கோட்பாடு பூங்குன்றனிலும் வள்ளுவத்திலும் திருமூலரிலும் நம்மாழ்வாரிடமும் உண்டு.**

வேதம், இதிகாசம் பற்றியெல்லாம் கருத்துரைக்கிறாரே! முதலில் அவைகளைப் படித்திருக்கிறாரா? படித்தவர் களைக் கிண்டல் செய்தால் இவர் படித்தவர் என்று ஆகிவிடுமா?

"வேதங்கள், ரிஷிகளின் மூக்கால் இழுக்கப்பட்டு வாயால் வெளியிடப்பட்ட கரியமில வாயு என்கிறார். காற்றிலிருந்து இழுக்கப்பட்டது என்று சொல்வது ஒரு கவிதை நியாயம் என்பதைக்கூட அறியாத இவர் ஒரு எழுத்தாளர்! கரியமிலவாயுவும் உபயோகமான ஒன்று தான்-சோடா குடித்தது கிடையாதா?" என்று கேட்கிறார்.

இப்படிப் போகிறது ஒரு விமர்சகரைப் பற்றிய விமர்சனம். இதுபோலவே "படைப்பிலக்கியத்திற்கு மதம், போர் என்று இருப்பதெல்லாம் ஏற்புடையது. ஆகாது; விடுதலைஉணர்வு படைப்பிலக்கியத்தின் இன்றியமை யாத தன்மை"-என்றெல்லாம் முத்துக்கறுப்பன் முன் வைக்கும் ஆழமான கருத்துக்கள் மிகவும் சிறுபிள்ளைத் தனமாகக் கேலி செய்யப்படும் கூத்தை எடுத்துரைக்கிறார் கதை சொல்லி.

இரண்டாவது கட்டுரை, முத்துக்கறுப்பனின் விமர்சனப் பாங்கைப் பாராட்டிக் கொண்டாடுகிறது. இந்த முத்துக் கறுப்பன் "சாந்தம்" என்ற ரசம் குறித்தும் சிலப்பதிகாரம் குறித்தும் எழுதியுள்ளவை விமர்சன முறையை மேலோங்கச் செய்கிறது; மேலும் "ஒரு படைப்பை விமர்சனம் பண்ணுவது என்பது அந்தப் படைப்பு நம்மை என்ன பண்ணிற்று என்று நம்மையே கேட்டுக் கொள்வதுதான். இந்தப் படைப்பால் இவ்வாறு ஆனேன் என்று சொல்லிவிட்டாலே போதும்-அதுவே சிறந்த விமர்சனம்" என்றெல் லாம் முத்துக்கறுப்பன் கூறுவதைக் கொண்டாடி மகிழ்கிறது. மேலும் முதல் கட்டுரையாளர் "முத்துக்கறுப்பன்" என்பது தவறு; கருப்பு என்றுதான் இருக்கவேண்டும்" என்று கூறுவதற்கும் இரண்டாவது கட்டுரையாளர் பதில் சொல்லி விடுகிறார். கருப்பு என்பது நிறத்தைக் குறிக்கும்; கறுப்பு என்றால் கோபம். எனவே "கோபக்காரன்" என்ற பொருளில்தான் இந்தச் சொல்லை முத்துக்கறுப்பன் பயன்படுத்துகிறார் என்றும் பதில் சொல்லி விடுகிறார்.

முடிவுரையாக இரண்டு கட்டுரை களும் வெளிவந்த கால இடை வெளியில் முத்துக்கறுப்பன் காலமாகி யிருந்தார் என்று கதையை முடிக்கிறார்.

முத்துக்கறுப்பன் என்ற விமர்சகர் குறித்து இரண்டு பேர் இரண்டு விதமாகக் கருத்துரைத்திருக்கிறார்கள்; அப்படியென்றால் எந்த முத்துக்கறுப் பனை நாம் எடுத்துக் கொள்வது?

ரோலண்ட் பர்த் (1915-1980) எழுத்தாளர் இறந்து விட்டார்" என்று அறிவித்தார். ஒரு படைப்பின் அர்த்தம் வாசகர்களின் தரத்திற்கேற்ப வடிவமைக்கப்படுகிறது; படைப்பாளியால் அல்ல; எனவே படைப்பாளி இறந்துவிட்டார் என அறிவித்தார். அதைப்போலவே மா. அரங்கநாதன் இங்கே "விமர்சகரும் இறந்து விட்டார்" என்று இந்தக் கதை மூலம் அறிவிக்கிறார். எந்தவொரு விமர்சன எழுத்தும்கூட, வாசிப்பவர்களின் தரத்திற்கு ஏற்றவாறுதான் அர்த்தம் செய்யப்படுகின்றது. விமர்சகர் முத்துக்கறுப்பனே சாட்சி என்று சொல்லி, இறந்துபோன விமர்சகர் முத்துக் கறுப்பனுக்கு "அஞ்சலி" செலுத்துவது போலக் கதைக்கு "அஞ்சலி"என்று பெயர் சூட்டுகிறார். பிரஞ்சுத் திறனாய்வாளர் ரோலண்ட் பர்த்தின் அந்த அறிவிப்பை அறிந்து கொள்ள வாய்ப்பில்லாதவர்கள் இந்தக் கட்டுரைகள், கதையாக மலரும் மாயத்தையும் புரிந்து

கொள்ள மாட்டார்கள். பெயர் சூட்டுவதில் இருக்கிறது கதையின் சூட்சுமம். இந்தக் கதைக்கு மட்டுமல்ல அரங்கநாதனின் கதைகள் பலவற்றிற்கும் இது பொருந்தும்.

“என்ன பெயர் வைக்கலாம்?” என்ற கதை பல்வேறு குறிப்புக்களின் தொகுதி. முதற்குறிப்பு பள்ளியிலிருந்து புறப்படும்ஒரு பெண் இமயமலைச் சாரலில் பாட்டுப் பாடிக் கொண்டே நடக்கிறாள், அடுத்துசகாராப் பாலை வனம். அடுத்து மெரினா கடற்கரை. பாட்டு முடிகிறது. அந்தப் பெண்ணும் சாந்தோம் பள்ளியிலிருந்து மயிலாப்பூர் வீடு வந்து சேர்கிறாள்.

மற்றொரு குறிப்பு “என்னைவிடப் பெரியவனும் இல்லை; என்னைவிடச் சின்னவனும் இல்லை” என்று எழுதிய உலகத்துச் சிந்தனையாளன் வாழ்ந்த மணணைப் பற்றி ஏன் அதிகமாக அறிந்துகொள்ள முன்வரவில்லை இந்த விமர்சகர்கள்?”

இன்னொரு குறிப்பு, சமஸ்கிருத வேதங்களிலோ, பைபிளிலோ பாம்பு கொடிய ஐந்துவாகச் சொல்லப் பட்டிருக்கிறதேயொழிய, தெய்வத்தோடு சம்பந்தப்பட வில்லை...

இவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத அதேநேரத்தில் மா. அரங்கநாதனின் சோதிடம் குறித்த பார்வை, சிவமதச் சார்பு, வேத மறுப்பு, வைதீக எதிர்ப்பு, பண்டிதர்களின் இலக்கணப் புலமை குறித்த கிண்டல் என அந்தக் குறிப்புக்கள் அமைந்துள்ளன என்பதையும் கவனித்துக்கொள்ள வேண்டும்.

காலையில் எழுந்து இக் குறிப்புக்களைக் கொண்டு கதைகளோ கட்டுரைகளோ எழுதலாம் என்று படுத்தவர் தூக்கத்திலேயே காலமாகிவிட்டார் என்று கதைமுடிகிறது. வாழ்வின் அபத்தம் இப்படித்தானே இருக்கிறது.

கதை, கவிதை எழுதுகிறவர்கள் கையாளும் ஒரு முறைமையை முன் வைத்து இந்தக் கதையை வடிவமைத்துள்ளார். நடையில், தூக்கத்தில், வாசிப்பில், கழிவறையில், குளியலறையில் எனத் தோன்றுகின்ற சிந்தனை வரிகளைக் குறித்து வைத்துக் கொண்டு பிறகு தேவையின் நெருக்கடி முற்றும்போது இவைகளை எல்லாம் பயன்படுத்தி ஒரு படைப்பாக்கி விடுகிற முறை ஏறத்தாழ எல்லா எழுத்தாளர்களும் கைப்பிடிக்கிற ஒன்றுதான்.

இப்படியாக நாட்குறிப்பில் எழுதி வைத்தவற்றை எல்லாம் திரட்டி அதற்கும் ஒரு நாவல் வடிவம் கொடுத்துப் பெரிய எழுத்தாளர் என்று பேர் வாங்கி விடும் விபத்தும் இந்த எழுத்துலகில் நடந்து கொண்டுதானே இருக்கிறது. இந்த அபத்தத்தைக் கிண்டல் செய்கிற ஒரு படைப்பாக இந்தக் கதை எனக்குத் தோன்றுகிறது.

அதாவது தன் எழுத்திற்கென்று ஒரு குறிக்கோள், ஓர் அறம் என்று ஏதுமில்லாமல் வந்ததை எழுதி வெந்ததைத் தின்று மடியும் போலிகளைக் கேலி செய்கிறாரோ; அதனால்தான் “என்ன பெயர் வைக்கலாம்?” என்று கதைக்குத் தலைப்புச் சூட்டுகிறாரோ!

“ஐயன்மீர்-சற்றுப் பொறுங்கள்”-என்ற இந்த மூன்றாவது கதையும் “கட்டுரையால்” ஆனதுதான். கடவுள் கோட்பாடு பற்றிய விசாரணைக் கட்டுரை. “கடவுள் என்றால் ஒன்றுமில்லை“ என்றுதான் பொருளாம். “நாஸ்தி“ என்ற வடசொல்லிற்கும் கூட “இல்லை“ என்பதுதான் பொரு ளாம். தொடர்ந்து புதிதாக எழுதியதை முத்துக்கறுப்பன் வாசிக்கிறான்; முருகேசன் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

“தென்னாட்டில்-ஒரு கோட்பாடு-சித்தாந்தம் உண்டு. இந்தத் “தென்னாடு“ என்பதிலுள்ள “தென்“ என்ற சொல் தெற்குத் திசையைக் குறிப்பதில்லை. தென்படும், தோன்றும் என்னும் பொருள்தரக் கூடியது.

தோன்றும், எது தோன்றும் என்று சொல்லப் படவில்லை. இந்தச் சித்தாந்தம் தமிழ் மொழிக்கே உரியது. தோன்ற வேண்டுமென்றால் அதற்கு முதலில் எதுவுமே இல்லாத இடம் வேண்டும்.. எதுவும் மனத்துக்கண் இல்லை என்னும் நிலை. மனமே இல்லை எனும் நெறி. இல்லை இல்லை என்பதால் ஏற்படும் நெறி... காலம் காலமாக இங்கே வழங்கி வந்த-வருகிற-கடவுள் என்னும் சொல்லின் பொருளும் இதுதான். இந்தக் கோட்பாடு பூங்குன்றனிலும் வள்ளுவத்திலும் திருமூலரிலும் நம்மாழ்வாரிடமும் உண்டு.”

இப்படி வாசித்துவிட்டு, எப்பவோ படிச்சது. ஆனால்எழுதியது யாருன்னு தெரியல. நாம எழுதியது மாதிரி காட்டினா அது நல்லாவா இருக்கும்? என்று முருகேசனிடம் கேட்கிறார். இதன் மூலம் பிறர் எழுத்தைத் தன் எழுத்தாகச் “சுட்டிவிடுகிற” போக்கு எழுத்துலகில் இருப்பதைச் சுட்டிக் காட்டி விடுகிறார்.

கேட்டுக் கொண்டிருந்த முருகேசன், “நானும் படிச்சிருக்கேன். அதை எழுதியது வேற யாருமில்ல நீதான்... பத்து வருஷம் முன்னாடி இருக்கும். நீ எழுதியது உனக்கே ஞாபகம் இல்ல. எழுதி என்ன கிழிச்சிருக்கே” என்று வேகமாகக் கேட்டதும் இல்லாமல்,” அந்தக் கட்டுரைத் தலைப்பு கூட எனக்கு ஞாபகம் இருக்கு. “ஐயன்மீர்-சற்றுப் பொறுங்கள்” நீ செக் பண்ணிப் பாரு!

“முத்துக்கறுப்பன் மௌனி ஆனான்” என்று கதையை முடிக்கிறார்.

இந்தக் கதை மூலம் எழுத்தாளருக்கும் வாசகருக்குமான உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காட்சிப் படுத்தி விடுகிறார். தாகூர் சொல்வார், “தன்னுடைய வில்லிலிருந்து வெளியேறி விட்ட அம்பு, அதற்குப் பிறகு தன்னுடையது அல்ல; அதை அதோடு மறந்துவிட வேண்டும.” எழுத்தாளர்களும் தங்கள் எழுத்தை மறக்காமல் தாங்களே தூக்கிக் கொண்டு தெருவெல்லாம் சுமந்து திரியக் கூடாது. அந்த எழுத்துப் “படைப்பாகப்” புறப்பட்டிருக்கும் பட்சத்தில் வாசகர்கள் அதைத் தங்கள் நினைவு மண்டலத்தில் ஏற்றிப் பாதுகாத்துக் கொள்வார்கள். இங்கே அப்படித்தான் எழுதிய முத்துக்கறுப்பன் மறந்து விட்டார்; வாசகர் முருகேசன் அந்த எழுத்தைத் தன் நெஞ்சுக்குள் போற்றிப் பேணுகிறார். ஒரு நுட்பமான “கருத்தாக்கத்திற்கு“ அழகான காட்சி வடிவத்தைப் படைத்துக் காட்டி விடுகிறார் கதை சொல்லி.

இவ்வாறு போலிகள் பெருத்த தமிழ் இலக்கிய வெளியில் ஓர் உண்மையான சுயமான, தேடல் நிறைந்த படைப்பாளி தான், என்பதைத் தன்னுடைய ஒவ்வொரு கதை மூலமாகவும் நிலைநாட்டிச் சென்றிருக்கிறார் மா. அரங்கநாதன்.

நூல் அறிமுகம்

■ சு.இராமசுப்பிரமணியன்




# சிகரம் தொட்ட இலக்கியவாதிகள்

வானதி பதிப்பகம் வெளியிட்டிருக்கும் இந்நூல், ஒருவிதத்தில், கோவை விஜயா பதிப்பக உரிமையாளர் மு. வேலாயுதத்தின் 'தன் வரலாறு' என்றும் சொல்லலாம். மதுரை மாவட்டம் மேலூர் அருகே உள்ள உலக நாதபுரம் என்ற கிராமத்தின் ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்து, பள்ளிப்படிப்போடு கல்வியை முடித்துக்கொண்டு, பல்வேறு அடித்தட்டு வேலைகள் செய்து, இன்று தமிழ்ப்படைப்புலகமும், வாசகர்களும் அறிந்த புத்தகப் பதிப்பாளர் என்னும் நிலைக்கு உயர்ந்த தனது வாழ்க்கை வரலாற்றை, 13 உச்சம் தொட்ட படைப் பாளிகள் மற்றும் பதிப்பாளர்களைப் பற்றி சொல்வதன் வழியே பதிவு செய்திருக்கிறார், விஜயா மு. வேலாயுதம்.

"எதார்த்தமும், உண்மையும் இருக்கிற படைப்பாளிகள் காலத்தை வென்று நிற்கிறார்கள்" என்று சொல்லும் வேலாயுதம், மு.வ என்னும் படைப்பாளியில் துவங்கி சக்தி வை.கோவிந்தன் என்னும் பதிப்பாளரோடு நூலை நிறைவு செய்கிறார்.

ஒவ்வொரு இலக்கியவாதியைப் பற்றிய பதிவிலும், மேலும் பல இலக்கியவாதிகள் பற்றிய செய்திகளும், அவர்கள் தொடர்புடைய பல சுவைமிகுந்த நிகழ்வுகளும் நூல் முழுவதும் விரவிக்கிடக்கின்றன.

வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூரில் பிறந்த திருவேங்கடம்தான் பின்னர் மு.வரதராசன் என்று ஆகியிருக்கிறார். 60 வயதைக்கடந்து வாழ்ந்துகொண்டி ருப்பவர்கள் அனைவருமே மு.வ.வின் நூல்களைக் கண்டிப்பாக வாசித்திருப்பார்கள்.

அன்றைய காலகட்டத்தில், திருமணங்களுக்குச் செல்பவர்கள் மு.வ., திரு.வி.க, அண்ணா போன்றோரின் நூல்களை வாங்கிப் பரிசளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்னும் மு,வேலாயுதத்தின் பதிவு, இன்றைய தலைமுறையினர் அறிந்துகொள்ளவேண்டிய செய்தி.

மு.வ. புதினம், சிறுகதை, மட்டுமல்லாமல் 6 நாடகங்களும் 11 கட்டுரை நூல்களும், 24 இலக்கிய நூல்களும் எழுதியிருக்கிறார், அவரது 'அகல் விளக்கு' புதினம் சாகித்ய அகாடமி விருது பெற்றது.

"யான், எனது என்ற செருக்கு இடம்தரும் எந்த விழாவும் குறையவேண்டும்; சமுதாய விழாக்கள் பெருகவேண்டும்" என்றுசொல்லி 1972ஆம் ஆண்டு, அவரது மணிவிழா (60 வயது நிறைவு) கொண்டாட்ட ஏற்பாடுகளை மறுதலித்திருக்கிறார். வெளிச்சம்தேடி அலையும் இன்றைய இலக்கியவாதிகளுக்கான செய்தி யாகவும் இதனைப் பார்க்கலாம்.

கோவில்பட்டிக்கு அருகே, கி.ரா.வின் ஊரான இடைச் செவலைச் சேர்ந்த ஆளுமைமிக்க படைப்பாளி கு.அழகிரிசாமி. வேலைகளை முடித்துவிட்டு, கனல் மைந்தனோடு இரவு 11 மணிக்கு மேல் கு.அழகிரி சாமியை, மு.வேலாயுதம் சந்தித்த நிகழ்வு சுவாரசியமாக உள்ளது.

"நள்ளிரவில் எழுத்தாளனைப் பார்க்க கனி வர்க்கங் களுடன் வாசகர்களா?" என்று வியப்படைந்த கு.அழகரி சாமி காலை 4 மணி வரை பேசிக்கொண்டிருந்தார் என்று அறியும்போது, நள்ளிரவு 12 மணி முதல் காலை 4 மணி வரை வாசகர்களுடன் உரையாடிய ஒரு தமிழ்ப் படைப்பாளியும் இந்த மண்ணில் வாழ்ந்திருக்கிறார் என்று நம்மையும் வியக்கவைக்கிறார்.

கண்ணதாசனுக்கு அறிமுகமெல்லாம் தேவை இல்லை என்றாலும், " எப்படி வாழவேண்டும் என்பதற்கும், எப்படி வாழக்கூடாது என்பதற்கும் கண்ணதாசனே உதாரணம் " என்று மு.வேலாயுதம் குறிப்பிடுவது, கண்ணதாசனின் ஒருவரி வாழ்க்கைச் சுருக்கம் என்பதாகக் கொள்ளலாம்.

ஜெயகாந்தனுக்கு ஞானபீடம் விருது அறிவிக்கப் பட்டபோது, அப்துல்கலாம் இந்தியக்குடியரசுத் தலைவராக இருக்கிறார். விழாவிற்கு, ஜெயகாந்தனுடன், மு.வேலா யுதமும் சென்றிருக்கிறார். “விழா மேடையில் விருது அறிவிக்கப்பட்ட உடனேயே, உயர்ந்த பீடத்தில் முதல் வரிசையில் அமர்ந்திருந்த கலாம், இரண்டாம் வரிசையில் அமர்ந்திருந்த ஜெயகாந்தனை நோக்கி குழந்தையைப் போல ஓடோடி வந்து விருதை அளிக்கிறார். அரங்கமே அதிர்ந்துபோய் பார்க்கிறது” என்று நேரில் பார்த்ததைப் பதிவு செய்கிறார். இதுபோன்ற மாமனிதர்களை வைத்துத் தான், ‘ கற்றாரை கற்றாரே காமுறுவர்’ என்று சொல்லி யிருப்பார்கள் போலும்.

‘தீபம்’ இதழ் ஆசிரியரும், ‘சமுதாய வீதி’ நாவலுக்கு சாகித்ய அகாடமி விருது பெற்றவருமான நா. பார்த்தசாரதி பற்றியும், அவருடன் மு.வேலாயுதத்திற்கு இருந்த நெருக்கம் பற்றியும் பல நிகழ்வுகளை நினைவுகூர்ந்து, கொஞ்சம் விரிவாகவே பதிவுசெய்திருக்கிறார்.

சாகித்ய அகாடமி விருதுபெற்ற நாவலான ‘குறிஞ்சி மலர்’ வெளிவந்த பிறகுதான், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் அந்த அபூர்வமான மலர்பற்றி பொதுவெளியில் தெரிய ஆரம்பித்திருக்கிறது. அதன் பிறகே கொடைக்கானல், உதகமண்டலம் மலைகளுக்கு சுற்றுலா வருபவர்களை குறிஞ்சி மலரைக்காட்ட அழைத்துச் செல்லும் வழிகாட்டிகளும் பெருகியிருக் கின்றனர். அந்த காலகட்டத்தில் பிறந்த பல பெண் குழந்தைகளுக்கு, குறிஞ்சிமலர் என்று பெயர்சூட்டி மகிழ்ந்திருக்கின்றனர்,

நா.பா வுடன், ராஜவல்லிபுரத்தில் வல்லிக்கண்ணன், நாகர்கோயிலில் சுந்தர ராமசாமி, திருவனந்தபுரத்தில் நீலபத்மநாபன் ஆகியோரைச் சந்தித்த நிகழ்வுகளையும், மு.வேலாயுதம் நினைவுகூர்கிறார். சுந்தர ராமசாமி மிகத்திறமையாகக் கார் ஓட்டுவார் என்றும், வளைவுகளில் அவர் கார் ஓட்டுவது, அசலாக சர்க்கஸ் காட்டுகிற மாதிரி இருக்கும் என்றும் குறிப்பிடுகிறார்.

சிவகெங்கையைச் சேர்ந்த பேராசிரியர் மீ.ரா.வை (மீ.ராஜேந்திரன்)ப் பற்றிக் குறிப்பிடும்போது, எவ்விதக் குடும்பப் பின்னணியும் இல்லாமலேயே, புத்தகத் துறையைப் புரட்டிப்போட்ட நெம்புகோல் என்கிறார்.

1970-75களில் மீ.ரா.வின் ‘கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்’ புத்தகம் கையில் இல்லாத மாணவ மாணவியரே இல்லாத நிலை இருந்ததாகப் பெருமையுடன் குறிப்பிடுகிறார். ‘அன்னம் விடு தூது’ என்று மீ.ரா. நடத்திக்கொண்டிருந்த சிற்றிதழில்தான் ‘நூலாயுதம்’ என்று தனக்கு ஒரு பட்டம் வழங்கியதாக மு. வேலாயுதம் குறிப்பிடுகிறார்.

1975 முதல் 2002 வரை, ‘அன்னம்’ வெளியீடாக வந்த நூல்களின் பட்டியல் 120க்கு மேல் இருக்கும் என்றும் அதில் உச்சம்தொட்ட படைப்பாளிகளின் வரிசையைப் படித்தால் மூச்சிரைக்கும் என்று குறிப்பிடு கிறார். அதோடு, கி.ரா தொடங்கி, கோ.கேசவன் ஈராக ஒரு நீண்ட படைப்பாளர் பெயர்ப்பட்டியலையும் தரு கிறார்.

உரைநடைமாற்றம், சொற்சிக்கனம், குறுகத்தரித்த வாக்கிய அமைப்பு, அறிவியல் தமிழுக்கான வாக்கியத் தேவை, என்று தமிழில் பெரும் மாற்றத்தை உருவாக்கியவர் என்றும், கோடிக்கணக்கான வாசகர்களைக் கொண்டி ருந்தவர் என்றும், கணையாழியின் ‘கடைசிப்பக்கம்’ மற்றும் ஆனந்த விகடனில் ‘கற்றதும் பெற்றதும்’ தொடர் கள் எழுதியவர் என்றும், கணினி பயன்பாட்டில் முன்னணி எழுத்தாளர் என்றும் சுஜாதாவை அறிமுகம் செய்கிறார், வேலாயுதம்.

மதுரையில் நடந்த ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் பேசும்போது, “நான் பசியே அனுபவித்ததில்லை. வறுமையின் கொடுமைபற்றி எனக்குத் தெரியாது. எனவே சி.ஆர். ரவீந்திரன், , நாஞ்சில் நாடன் மாதிரி அதைப்பற்றி எடுத்தாள என்னால் முடியாது” என்று சுஜாதா தெரிவித்த கருத்தை அவரது எழுத்து நேர்மைக்கு சான்றாகக் கூறுகிறார், வேலாயுதம்.

“நான் கலில்ஜிப்ரானைப் படிக்கும்போதெல்லாம் தமிழில் இப்படி எழுத யாருமில்லையே என்று ஏங்குவேன். அந்த ஏக்கம் இப்போது இல்லை. இதோ அப்துல் ரஹ்மான் வந்துவிட்டார்” என்று கண்ணதாசனும், “வார்த்தைகளின் சித்து விளையாட்டு என்பது அவர் கடுந்தவம் இயற்றாமலே தமிழன்னை அவருக்கு வழங்கியுள்ள வரம்” என்று கலைஞரும் கவிக்கோவைப் பாராட்டியிருக்கிறார்கள்.

கவிக்கோ மிகவும் நேர்மையானவர் என்பதற்கு ஒரு நிகழ்வு சான்றாகக் குறிப்பிடப்படுகிறது. எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்த காலத்தில் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் தமிழறிஞர்களின் பிள்ளை களுக்கு இட ஒதுக்கீடு இருந்தது. தகுதியானவர்களைத் தேர்வுசெய்யும் குழுவில் கவிக்கோ இருந்திருக்கிறார். எத்தனையோ சொந்தபந்தங்கள் அதற்காக அவரை அணுகியபோதும், அதற்கு இடம்தராமல், நேர்மையாக உண்மையான இலக்கியவாதிகளைக் கண்டறிந்து அவர்களின் பிள்ளைகள் பயன்பெறுமாறு செய்திருக் கிறார். அதில்தான், நாஞ்சில்நாடன், பாண்டிச்சேரி பேராசிரியர் பஞ்சாங்கம், கவிஞர் இங்குலாப். போன் றோரின் பிள்ளைகள் மருத்துவப் படிப்பிற்குத் தெரிவு செய்யப்பட்டு, மருத்துவர்களும் ஆகியிருக்கிறார்கள்.

தமிழ் இலக்கியத்தின் மேதைகள் ஜெயக்காந்தன், சுந்தர ராமசாமி, தொ.மு.சி.ரகுநாதன், பேரா. நா. வானமா மலை, கிருஷ்ணன் நம்பி போன்றோரை இனம்கண்டு, மணிக்கொடி காலம் என்பதுபோல் ‘சரஸ்வதி’ கால எழுத் தாளர்கள் என்று அடையாளப்படுத்தும் விதமாக, ‘சரஸ்வதி’ இதழை ஆரம்பித்து, வெற்றிகரமாக நடத்தி யிருக்கிறார், வ.விஜயபாஸ்கரன்.

60 ஆண்டுகளுக்கு முன்பு ஓர் இலக்கிய முற்போக்கு இதழ் 7000 பிரதிகள் விற்றது என்பது சரித்திர சாதனை என்று வேலாயுதாம் சொல்வதில் மிகை இல்லை. சரஸ்வதி இதழில்தான், சுந்தர ராமசாமியின் ‘ஒரு புளியமரத்தின் கதை’ வெளிவந்திருக்கிறது.

இடதுசாரி சிந்தனையாளரான வ. விஜயபாஸ்கரன் நடத்திவந்த சரஸ்வதியை, 1962இல் முடக்கியது, அதே இடதுசாரிக்கட்சியினர்தான் என்றும் அவர்கள் சரஸ்வதிக்குப் போட்டியாக ஆரம்பித்த ‘தாமரை’ இதழே அதற்குக் காரணம் என்பதும் அதன்பின்னணியில் ப.ஜீவானந்தம் இருந்தார் என்பதும் கொஞ்சம் அதிர்ச்சி



"விழா மேடையில் விருது அறிவிக்கப்பட்ட உடனேயே, உயர்ந்த பீடத்தில் முதல்வரிசையில் அமர்ந்திருந்த கலாம், இரண்டாம் வரிசையில் அமர்ந்திருந்த ஜெயகாந்தனை நோக்கி குழந்தையைப் போல ஓடோடி வந்து விருதை அளிக்கிறார். அரங்கமே அதிர்ந்துபோய் பார்க்கிறது"

யாகவே உள்ளது. அதன் காரணமாக, சரஸ்வதியை நிறுத்திவிட்டு, 'சமரன்' என்றொரு இதழையும் ஆரம்பித்து நடத்தியிருக்கிறார், வ.விஜய பாஸ்கரன். ("கலைஞர்கள் மீதான கட்சியின் மேலாதிக்கத்தை நிறுவ 'தாமரை' தோற்றம் கண்டபோது 'சரஸ்வதி' தனது ஆயுளை முடித்துக்கொண்டது." வேதசகாயகுமார், 'தற்கால இலக்கியம், வாசகப்பார்வை என்னும் நூலில்.)

பழநியப்பச்செட்டியாரைப் பற்றி எழுதும்போது, அவரது ஆசிரியரான கதிரேசன் செட்டியார் பற்றி மு.வேலாயுதம் குறிப்பிடும் செய்தி மற்றவர்களுடன் பகிரக்கூடியதாக இருக்கிறது. கதிரேசன் செட்டியார் ஒரு காந்தியவாதி. 'காந்தி பாடசாலை'யைத் தோற்றுவித்து, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மற்ற மாணவர்களுக்குச் சமமாக அமர்ந்து கல்விகற்க ஏற்பாடு செய்திருக்கிறார். அந்த ஏழை மாணவர்களுக்கு சிலேட்டு, பென்சில், புத்தகம், நோட்டு, உடை என்று அனைத்தும் இலவசமாகக் கொடுக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்.

அன்றைய புதுக்கோட்டை சமஸ்தானத்தில், காந்தி பெயரைச் சொல்வதுகூட குற்றமாகக் கருதப்பட்டிருக்கிறது. அதனால், காந்தி பெயரால் நடத்தப்பட்ட பாடசாலைக்கு அரசு அச்சுறுத்தலும் தந்திருக்கிறது. அதனை சமாளிக்கும் விதமாக, காந்தி என்பது தனது பேரனின் பெயர் என்று விளக்கமளித்திருக்கிறார், கதிரேசன் செட்டியார்.

அப்படியானால்,அந்தப் பெயருக்கு முன்னால் 'தலையெழுத்து'(initial) இடம்பெறவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன்பேரில், எஸ்.கே.டி. காந்தி பாடசாலை என்று பள்ளியின் பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்ட் தலைவர் பா.ஜீவானந்தம் இந்தப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறார்.

சேரன்மகாதேவியில், வ.வே.சு.ஐயர் நடத்திய குருகுலத்தில் படித்த மாணவர்களிடையே நிலவிய சாதிப் பாகுபாட்டையும், அதற்கு எதிரான போராட்ட முன்னெடுப்புகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் இடதுசாரியினரும், பெரியாரிஸ்டுகளும், அதே காலகட்டத்தில், அதற்கு நேர்மாறாக தாழ்த்தப்பட்ட மாணவர்களை, மற்ற மாணவர்களுக்கு இணையாக நடத்திய கதிரேசன் செட்டியார் பற்றி இதுவரை பொதுவெளிக்குக் கொண்டுவரவில்லை என்பதையும் வருத்தத்துடனேயே பதிவுசெய்ய வேண்டியிருக்கிறது.

சக்தி வை.கோவிந்தன், தனக்கு நேரடியாகத் தொடர்பு இல்லாத ஒரு ஆளுமை என்று சொல்லும் மு.வேலாயுதம், அவர் பற்றியும் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். புதுக்கோட்டை சமஸ்தானம், ராயபுரத்தைச் சேர்ந்தவர், வை. கோவிந்தன். சுத்தானந்த பாரதியின் எழுத்தின்மீது ஏற்பட்ட ஈர்ப்பு காரணமாக, அவரது நூல்களை வெளியிடுவதற்கென்றே, 'அன்பு நிலையம்' என்ற நிறுவனத்தை, சில நண்பர்களுடன் சேர்ந்து ஆரம்பித்திருக்கிறார். சுத்தானந்த பாரதி மொழிபெயர்த்த, உலகப் புகழ்பெற்ற பிரஞ்சுக் காவியமான 'ஏழை படும் பாடு' முதல் வெளியீடாக வந்திருக்கிறது.

வ.ரா வை கவுரவ ஆசிரியராகக்கொண்டு 'சுதந்திரம்' என்றொரு பத்திரிகையையும் வை.கோவிந்தன் ஆரம்பித்து நடத்தியிருக்கிறார். கு.அழகர்சாமியும், தொ.மு.சி. ரகுநாதனும் அந்தப் பத்திரிகையை முழுமையாக நிர்வகித்திருக்கிறார்கள்.

1939இல் 'சக்தி' என்னும் மாத இதழைத் தொடங்கியிருக்கிறார். ஆரம்பத்தில் முழுக்கமுழுக்க ஆன்மிக இதழாகவே சக்தி இதழ் வெளிவந்திருக்கிறது.. சுத்தானந்த பாரதிதான், ஆரம்பத்தில் சக்தி இதழை வழி நடத்தியிருக்கிறார். பின்னால், தி.ஜ.ர (தி.ஜ.ரங்கநாதன்) ஆசிரியராகப் பொறுப்பேற்ற பிறகு, இதழின் உள்ளடக்கத்தில் பெரும் மாறுதல் நிகழ்ந்திருக்கிறது. தி.ஜ.ரவின் அயராத உழைப்பில், உருவத்திலும், உள்ளடக்கத்திலும், தமிழில் முதல் 'டைஜஸ்ட்' இதழாக வளர்ச்சியடைந்திருக்கிறது சக்தி இதழ்.

சக்தி இதழாசிரியர் வை.கோவிந்தனின் மறைவிற்குப் பிறகு அவரது குடும்பம் நலிவுற்றிருக்கிறது. அதற்காக, மு.வேலாயுதத்தின் முன்முயற்சியில் பலர் கோவிந்தனின் குடும்பத்திற்கு நிதி திரட்டியிருக்கின்றனர். பலரும் நாளிதழ்களில் வெளியான விளம்பரத்தைப் பார்த்துவிட்டு, தாமாகவே முன்வந்து நிதியளித்திருக்கின்றனர். அவர்களில் ஒருவர் நடிகர் சிவகுமார்.

சக்தி வை.கோவிந்தனின் மகள்வழிப் பேத்தியான அழகம்மையின் கல்விச்செலவை நடிகர் சிவகுமார் முழுமையாக ஏற்றிருக்கிறார். அந்தப் பெண் எட்டாம் வகுப்புப் படிக்கும்போது ஆரம்பித்த உதவி, எம்.எஸ்சி படிப்பு முடியும் வரைத் தொடர்ந்திருக்கிறது. பள்ளி, கல்லூரிக் கட்டணங்களை நேரடியாக அந்தந்த கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பிவிடுவாராம். அதுபோக, இதரச் செலவுகளுக்காக ஒவ்வொரு மாதமும் ரூ.1000 அந்தப் பெண்ணின் முகவரிக்கு நேரடியாக மணியார்டர் மூலம் அனுப்பி வந்திருக்கிறார். இன்று நடிகர் சூரியா, 'அகரம்' அறக்கட்டளையை நிறுவி, ஏழை மாணவர்களுக்கு, குறிப்பாக அரசுப்பள்ளி மாணவர்களுக்கு உதவிசெய்து, கல்விக்கண் திறந்துவருகிறார் என்பது நாம் அறிந்த செய்தி. அதற்கான 'வித்து' அவரது தந்தையான சிவகுமாரிடம் இருந்து பெற்றது என்பது நாம் அறியவேண்டிய செய்தி. அவர்களது கல்விப்பணி சிறக்க நாமும் நெஞ்சார வாழ்த்துவோம்.

நூல்: இதயம் தொட்ட இலக்கியவாதிகள்
ஆசிரியர்: மு.வேலாயுதம்
**வானதி பதிப்பகம்** / பக்கம் : 224 / விலை : ரூ.175

சிறுகதை

■ ஜோ டி குரூஸ்

# அறிமடம்...

மாலையில் அலுவலக வேலைகள் முடிந்து வீட்டுக்குக் கிளம்பலாமாவென இருந்த வேளையில் அமுதனை அலைபேசியில் அழைத்தாள் சுமதி அக்கா. அலைபேசி அழைப்புக்கும், கைநீட்டி அதை எடுப்பதற்கும் இடையிலான ஒருசில நொடிகளுக்குள் இணைப்பு துண்டிக்கப் பட்டது. “ஏங்க, கூடப் பிறந்த தம்பி இல்லாம எப்புடி மகனுக்கு கலியாணம் பண்ணுறாங்க மதினி” என மூன்று வாரங்களுக்கு முன்னால் வீட்டில் ஒரே கலாட்டா.

அக்கா தன் ஒரே மகனுக்கு மூன்று வாரங்களுக்கு முன்னால் திருமணம் செய்து வைத்திருந்தாள். எந்த நேரமும் அழைப்பு வருமென்று எதிர்பார்த்து ஏமாந்து போயிருந்தார் அமுதன். தாய்மாமன் இல்லாமல் திருமணம் செய்து வைக்கிறாளே அக்கா, நண்பர்களும், உறவுகளும் என்ன சொல்வார்கள், எப்படிச் சமாளிப்பது என்று மனதை வருத்திக் கொண்டிருந்தார்.

திருப்பி அழைக்கலாமா, வேண்டாமா என பதட்டமாய் கழிந்தன நிமிடங்கள். அதற்குள் மனதில் பழைய நினைவுகளின் அலைகள்.

சுமதிதான் குடும்பத்தில் தலைமூத்த பிள்ளை. மூன்று மாதக் குழந்தையாக அவள் பிறண்டு படுத்தபோது, எடுத்த கருப்பு வெள்ளைப் படமொன்று அமுதனின் பண்ணை வீட்டு நடுச் சுவற்றில் வெகுகாலம் இருந்தது. அப்படியே அமுல்பேபி போல் இருப்பாள் அக்கா சுமதி. பிள்ளைக்கு கண் பட்டுவிடப் போகிறதென்று பின்னாளில் படத்தைக் கழற்றி பீரோவில் வைத்துவிட்டார்கள். அந்தக் காலத்தில் அமுதனின் பப்பா, அப்பாவின் அப்பா தோமாஸ் கொழும்பு துறைமுகப் பணியிலிருந்து விடுமுறையில் வந்தவர், அவள் நடை பயின்றதைப் பார்த்ததும் “எங்க ராசா பெத்த ராணி” என்றபடியே தோட்டத்து கிணற்றடிக்கு கூட்டிப் போய் குட்டித் தொட்டியில் உக்கார வைத்து துலாவில் பத்து பதினைந்து வாளி தண்ணீர் எடுத்து ஊற்றி அக்காவை விளையாட விடுவாராம். ஆனால் அமுதன் பிறந்ததும், ராசா பெத்த ராணி போய், அதுவே ராசா பெத்த ராசாவா யிற்று. தன் மூத்த வாரிசு என்பதால், அமுதனை மட்டும் பெரிய தொட்டியில் விட்டு நூறு, நூற்றி இருபது வாளி தண்ணீரை சளைக்காமல் இறைத்து ஊற்றுவாராம். அமுதன் குளித்து வெளிவந்த பிறகே பேத்தியை தொட்டிக்குள் விடுவாராம். ஊரிலும் வலைக்கு போய்விட்டு கடற்கரையிலிருந்து வீட்டிற்கு வரும் வேளைகளிலும் அங்காடியிலிருந்து வாங்கிவரும் அவித்த பனம்பழம், வறுத்த நிலக்கடலை போன்றவற்றை சமபங்காய் இருவருக்கும் தருவதுபோல் தந்துவிட்டு, மதியச் சாப்பாட்டுக்கு மேல் அக்கா தூங்கியதும் முற்றத்து மணலுக்குள் காகிதத்தில் பக்குவமாய் பொதிந்து புதைத்து வைக்கப்பட்டிருந்த இன்னொரு பங்கை, எடுத்து அமுதனுக்குத் தருவாராம். தோமாஸ் பப்பா இறந்த வீட்டில் அக்கா சொல்லி அமுதவை இவை.

கல்லெல்லாம் சிலை செய்தான் பல்லவ ராஜா என்று பாடியபடியே சிறுவயதில் அக்கா ஆமந்துறை மரியன்னைப் பள்ளிக் கலையரங்கில் ஒரு விழா நிகழ்வில் ஆடினாள். நண்பர்கள் முட்டி சார்லசும், கட்டையன் செல்வதாசும் அமுதனை முன் வரிசைக்கு கூட்டி வந்து அமர்த்தி இருந்தார்கள். நிலவைப் பிடித்தபடியே தேவதையொன்று வானிலிருந்து இறங்கி வந்ததுபோல் அவள் வந்தது, இன்னும் கண்ணுக்குள்ளேயே நிற்கிறது. கைபிடித்து அக்கா அழைத்துச்

சென்ற அந்த ஆரம்பப்பள்ளி நாட்களை, அமுதனால் இன்னும் மறக்க முடியவில்லை. ஆரஞ்சுப் புளிப்பு மிட்டாயும், கல்கோனாவும் பள்ளி வருவதற்காய் லஞ்ச மாய்த் தருவாள் அக்கா.

பெற்ற தாயிடம் கிடைத்த ஏளனப் பேச்சுகளும், அவமானங்களும் புகுந்த வீட்டில் சரியாகிவிடும் என்று நினைத்தவளுக்கு, இரண்டு வருடம் கூட நிலைக்கவில்லை மண வாழ்க்கை.

**ஆ**மந்துறையிலிருந்து பாளையங்கோட்டை இக்னேசியஸ் காண்வெண்டுக்கு ஆங்கில வழிக்கல்வி படிக்கப் போன முதல் மாணவி அக்கா சுமதிதான். பள்ளியின் கொடையாக தலையில் பேனும், முகத்தில் பருவும் வர ஆரம்பித்திருந்தன. வெள்ளிக்கிழமைச் சந்தைக்கு அமுதன் திசையன்விளை போனால் அங்கு காய்கறி வாங்குவானோ இல்லையோ, முதலில் விநாயகர் கோவில் சந்திப்பில் ஆணைகுடிக்காரர் கடையில் பாசிப் பயிறும், கஸ்தூரி மஞ்சளும், பூலாங்கிழங்கும் அக்காவுக் காக கண்டிப்பாய் வாங்கி வருவான். இளவெயிலில் காயவைத்து, உரலில் இடித்துத் துணி அரிப்பில் அரித்து, முகத்தில் பூசக் கொடுப்பான். அக்காவும் தம்பிக்கு பிடிக்கும் என்பதாலேயே ஞாயிற்றுக்கிழமையானால் ஆத்தாவோடு சண்டை போட்டாவது மாசிச் சம்பலும், இடியாப்பமும், தேங்காய்ப்பாலும் செய்ய வைத்துவிடுவாள்.



ஓவியம்: **த.சௌந்தர்**

கொற்கை புனித மரியன்னை கல்லூரியில் இளங்கலை வேதியியல் படித்தவள், முதுகலையில் அங்கேயே ஆங்கில இலக்கியம் படித்தாள். ஆமந்துறையில் வீட்டுப் பக்கத்தி லேயே, தூரத்து உறவு முறையில் மாமா வேண்டும், அவரை மணந்திருக்கலாம். அய்யாவின் பிடிவாதத்தால் அவள் வாழ்க் கையே திசை மாறிப் போனது. பிறந்த வீட்டில்தான் சாப்பாடு, உடுதுணி என ஆண் பிள்ளை, பெண்பிள்ளை பாகுபாடு. பெற்ற தாயிடம் கிடைத்த ஏளனப் பேச்சுகளும், அவமானங்களும் புகுந்த வீட்டில் சரியாகி விடும் என்று நினைத்தவளுக்கு, இரண்டு வருடம் கூட நிலைக்கவில்லை மண வாழ்க்கை.

திருமணம் முடிந்த கையோடு துபாய் போன கணவன் திரும்ப விடுமுறையில் வந்து, பிறந்திருந்த மகனை கொஞ்சி விட்டுப் போனதோடு சரி. துபாயில் நடந்த சாலை விபத்தில் மரித்துப் போனார். இறந்த மகனின் உடல்கூட வேண்டாம் இழப்பீட்டுப் பணம் வந்தால் போதுமென்று கணவன் குடும்பத்தார் சொல்ல, தன் கணவனின் இறந்த உடலை இங்கு கொண்டு வந்தே ஆக வேண்டுமென மல்லுக்கட்டினாள் அக்கா. அங்கு ஓடு இங்கு ஓடு, அவனைப் பார், இவனைப் பார் என எங்கெங்கோ முயன்று அவள் கணவனின் உடலை இங்கு கொண்டு வந்து சேர்ப்பதற்கே ஒரு மாதத்திற்கு மேல் ஆனது. ஒரு நாள், இருநாள் துக்கமல்ல, ஒவ்வொரு நாளும் துக்கம். துக்கம் விசாரிக்க வந்த அய்யாவின் உறவுகள் இதுதான் வாய்ப்பு என உதிர்த்த வார்த்தைகள், "நம்மளும் புள்ள வளத்து கெட்டிக் குடுக்குறோம் இப்புடியா நடக்குது" துக்கத்துக்கு மேல் துக்கமாய் தடாலடியாய் இன்னொன்றும் அவள் பங்குக்கு செய்து வைத்தாள் அக்கா. தனக்கு இளம் வயதாயிற்றே, மறுமணம் ஏதாவது செய்து வைத்துவிடுவார்களோ என்ற பதட்டத்தில், தன் கணவனின் இறந்த உடல் மீது சத்தியமும் செய்து "இப்பிறவியில் வாழ்ந்தது இவரோடு, இனிமேல் எனக்கு இன்னொரு வாழ்க்கை தேவையில்லை, என் பிள்ளைக்காகவே என் மீதியுள்ள காலத்தை வாழ்வேன்" என்று கொஞ்ச நஞ்சமிருந்த அமுதனின் நம்பிக்கையிலும் மண்ணள்ளிப் போட்டாள்.

சின்ன வயதிலேயே வாழ்க்கையைத் தொலைத்தவளாயிற்றே, எஞ்சியுள்ள காலத்தை

பாசநேசமாய் கழிப்போம் என்று எண்ணவில்லை அவளது கணவன் வீட்டார். கைக் குழந்தையோடு நின்றவளை, வேலைக்குப் போ என ஓடஓட விரட்டினார்கள். விடிகாலயிலேயே எழுந்து, கைக்குழந்தையைக் கவனித்து மாமனார், மாமியாருக்கு சமைத்துப் போட்டுவிட்டு, பேருந்துநிலையம் ஓடிப் பஸ்பிடித்து பாளையங் கோட்டையில் இறங்கி, நடையாய் நடந்து பள்ளிக்கூடம் வந்து, வேலைமுடித்து இரவில் திரும்பி வருவதற்குள் குழந்தை தூங்கிவிடுவான். வந்ததும் வராததுமாய் மகன் சாப்பிட்டானா, சாப்பிடவில்லையா என எதையும் கேட்க முடியாது. மாமனாருக்கும், மாமியாருக்கும் பெயரன் முக்கியம், அவனுடைய தாய் எப்பாடு பட்டாலும் அதுபற்றி கவலை இல்லை. பதட்டத்திலேயே பல நாட்கள் ராப்பட்டினி.

திருமணம் முடிந்த புதிதில் ஒரு ஞாயிற்றுக் கிழமை அத்தி பூத்தார்ப்போல் அக்காவைப் பார்க்கப் போயிருந்தாளாம் ஆத்தா. தற்செயலாய் குளித்துவிட்டு வந்த அக்காவின் காலில் இருந்த தழும்புகளைக் காட்டி “இப்புடி வங்குபுடிச்ச கால எவனுக்குத்தாம் புடிக்கிம். என்னோட காலப் பாத்தியா எப்புடி பளபளன்னு இருக்குன்னு” அக்காவின் மாமியாரின் எதிரிலேயே சொன்னாளாம் ஆத்தா. போதாதா.. “நாம்பெத்த அழகுராசாவுக்கு இந்த ஊர்ல ஒரு பொண்ணு கிடைக்கலயின்னு, இந்த ஆக்கங்கெட்ட தூக்குவெளக்க ஆமந்துறையில இருந்து கொண்டுவந்த மனுசன்னு மாமனாரைத் திட்டினாளாம் மாமி.

**எ**ப்போதும் என் பிள்ளை இறந்ததற்கு, உன் ராசிதான் காரணமெனக் குத்தலான வார்த் தைகள். திக்கு தெரியாத காட்டில் நின்றது போலிருந்ததாம். ஆனாலும் வைராக்கியமாய் வாழ்ந்தாள் அக்கா. தன் அத்தனை திறமைகளையும் மறைத்துக் கொண்டு கணவன் வாழ்ந்த வீடே கோவில் என்று இருந்தவளை, அடித்துத் துன்புறுத்தி நகைகளையும் அபகரித்துக் கொண்டு வீட்டை விட்டே துரத்தின புகுந்த வீட்டு உறவுகள். செய்தியை அக்கம் பக்கத் திலிருந்தவர்கள் தொலைபேசியில் தெரிவிக்க, ஓடிப்போய் குழந்தையோடு அக்காவை ஆமந்துறைக்கு அள்ளிக்கொண்டு வந்தார்கள். வந்த நாளிலிருந்தே அண்ணன் தம்பிமாரோடு எங்களை அடிக்க வந்தாள் என ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் நீதிமன்றங்களில் வம்பு வழக்குகள் போட்டார்கள் புகுந்த வீட்டுக்காரர்கள். பாத்திரம் தேய், விறகு வெட்டு, வீட்டைச் சுத்தம் செய் என வரம்பு மீறி வேலை வாங்குவதற்கோ, அசிங்கமாய்த் திட்டித் தீர்ப்பதற்கோ, ஆத்தாவுக்கு ஒரு காரணமும் தேவையில்லை ஆனால் ஆயிரம் காரணங்களோடு பிறந்த வீடு திரும்பியிருந்தாள் சுமதி. படித்த படிப்புக்கு வேலையில்லை, கையில் குழந்தை. அக்காவை நினைத்தாலே அமுதனுக்கு கண்களில் நீர் முட்டும்.

அக்கா கைம்பெண்ணாய் ஆமந்துறை வந்த புதிது, பங்குச் சாமியாரிடம் பள்ளியில் ஆசிரியை வேலைக்காய் விண்ணப்பிப்பதற்காக அழைத்துப் போன அய்யா வாய்தவறி அறுதலிக்கு ஒரு வேலை போட்டுக் குடுங்க என்று சொல்லிவிட்டாராம், அமுதனிடம் அதைச் சொல்லிச் சொல்லி மாய்ந்துபோனாள் அக்கா. அன்றிலிருந்து அய்யாவோடு அமுதன் பேசுவதில்லை. பின் நாட்களில் எப்போது அமுதன் ஆமந்துறை வந்தாலும், அது அக்காவையும் அவள் மகனையும் பார்ப்பதற்காகவே இருந்தது.

**இந்தப் பிறவியில் இவளுக்கு தம்பியாய் பிறந்தது தனது பாக்கியம், இன்னொரு முறை அக்கா, தம்பியாய் பிறக்கவா போகிறோம் என அடிக்கடி நினைத்துக் கொள்வான் அமுதன்.**

இன்றும் அவள் வாய் திறந்தால், மடைதிறந்த வெள்ளமாய் எப்போதும் கம்பனும், பாரதியும், வள்ளுவனும், நாலடியாரும் இளங்கோவும் அவள் சொல்ல ஆரம்பித்தால் கேட்டுக்கொண்டே இருக்கலாம். ஆங்கில இலக்கியத்திலோ கேட்கவே வேண்டாம். ஷெல்லியும், ஷேக்ஸ்பியரும் நர்த்தனமாடுவார்கள். “நம்ம ஊரு பட்டுக் கோட்டை கலியாண சுந்தரத்தவிட சின்ன வயசு, இருபத்தி மூணு வயசுலே செத்துப் போயிற்றான் கிறிஸ்டோபர் மார்லோ. அவன் மட்டும் உயிரோட இருந்திருந்தா ஷேக்ஸ்பியர்லாம் ஒண்ணும் இல்லாமப் போயிருப்பாரு” என்பாள் அக்கா. கவலைகளை மறக்க பியானோ வாசிக்கவும் கற்றுக் கொண்டிருந்தாள். பத்து வருடங்களுக்கு முன்னால் வரை ஆமந்துறைக் கோவில்களில் அவளுடைய பியானோ இசைதான்.

**கு**டும்பப் பாசத்தில் பிள்ளைப் பூச்சியாய் ஒடுங்கி இருந்த அக்கா, வேலையில் படு சுட்டி. தெளிவான சமூக அக்கறையுள்ள மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை. வருடாந்திரத் தேர்ச்சியில் படுமோசமாக இருந்த ஆமந்துறைப் பள்ளி, அக்கா தலைமை ஆசிரியையாய் பொறுப்பேற்ற பிறகே நூறு சதவீதம் தேர்ச்சியைக் கொடுத்தது. ஒருமுறை சென்னையிலிருந்து சில சமூகப் பெருசுகள் தொலைபேசியில் அழைத்து உயர்மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசு கொடுப்பதற்காக வருகிறோம் உயர் மதிப்பெண் பெற்ற பிள்ளகளை அவர்களின் பெற்றோரோடு தயாராக வைத்திருங்கள் என்று போன் செய்திருக்கிறார்கள். காலையிலேயே வருகிறேன் என்றவர்கள் வழக்கமான அரசியல்வாதிகள் போடும் பீடிகைபோல் தலைவர் அந்த ஊரிலிருக்கிறார், இந்த ஊரைக் கடந்துவிட்டார் என இழு இழு என இழுத்து மதிய உணவு நேரமும் கடந்தபின் வந்து சேர்ந்தார்களாம். வந்ததும் வராததுமாக தலைவருக்கும், செயலாளருக்கும் போர்த்துவதற்கு சால்வை வைத்திருக்கிறீர்களா, புகைப்படம் எடுக்க யாரவது தயாராக இருக்கிறார்களா, மதிய உணவு தயாராக இருக்கிறதா எனக் கேட்க அனைத்துக்கும்

பொறுமையாய் இருந்தவள், பரிசுப் பொருளாய் அவர்கள் கொண்டு வந்த டிக்ஸனரிகளைக் கண்டதும், “கடந்த முறை கொடுத்த அதே டிக்ஸனரிகள், பரிசு பெறுவதும் அதே குழந்தைகள். இதற்கு செலவழித்த பணத்தைக் கொடுத்தாலாவது ஏழைக் குழந்தைகள் பள்ளிக் கட்டணம் கட்ட உதவுமே” எனக் கேட்டாளாம். கேட்டது தலைமை ஆசிரியை என்றும் பாராமல் வந்தவர்கள் தங்கள் வாய்க் கொழுப்பைச் சீலையில் வடிக்க, இது தனது குழந்தைகளைப் படிக்க வைக்க காத்துக் கடலுல சீவன போக்குற ஏழை மீனவர்கள் வாழ்ற ஊர். நீங்க வாறீங்கன்னு அதுவ தொழில போட்டுட்டு இங்க வந்து காத்துக் கெடக்குதுவ. வருசம் மாறுனாலும் பரிசு வாங்குறது அதே பிள்ளைகள். வருசா வருசம், அதுகளுக்கு டிக்ஸனரியே திரும்பத் திரும்ப குடுத்தா அந்த டிக்ஸனரிய எங்க கொண்டு போயி வைக்கும் என்று கேட்டாளாம். “மரியாத யில்லாம பேசுற நீ”யின்னாங்களாம். “போங்கடா, நீங்களும் உங்க சமூக அக்கறயும்” ன்னு வெளுத்து வாங்குனவ அந்த டிக்ஸனரி விலையைப் போல பத்து மடங்கு அதிகமா தன்னோட கைக்காசப் போட்டுப் பரிசு வாங்குன குழந்தைகள் எல்லோருக்கும் வந்தவர்கள் எதிரிலேயே பள்ளிக் கட்டணத்தைக் கட்டினாளாம். மனசுல பட்டுட்டா யாருன்னு இல்ல, அள்ளி அள்ளிக் குடுத்திற வேண்டியது.

கடந்த வருடம் பெரியம்மா மக, லீனஸக்கா புருசன் இறந்த அடக்கத்துக்கு அமுதனும் போயிருந்தார். சுமதி அக்காவை கெட்டிப் பிடித்து அழுத லீனஸ் சொன்னாள், “அய்யோ தங்கச்சி, இன்னுவர நீ பட்ட கஷ்டம் எனக்கு தெரியல. கொஞ்சநஞ்சமா, இருபத்தெட்டு வருசம். நாளையில இருந்து இந்த மனுசன் என்னோட இல்ல, ஆனா அவரு இல்லாத வாழ்க்கைய என்னால நெனச்சிக் கூடப் பாக்க முடியல. இத்தன வருசமா நீ என்னபாடு பட்டுருப்பன்னு அழுறா. இத்தனைக்கும் முப்பது வருசத்துக்கு மேல அவரோட வாழ்ந்து முடிச்சவ. அக்கா சுமதி கல்லைப்போல் அசையாமல் அமர்ந்திருந்தாள். அமுதனால் அந்தக் காட்சியைப் பார்த்தபடி அங்கேயே இருக்க முடியவில்லை. யாரை நினைத்து அழுவது என்று தெரியாமல் வெளியே வந்திருந்தார்.

இன்றும் ஆமந்துறை போவதென்றால் அது அக்காவைப் பார்ப்பதற்கும் அவளோடு மனந்திறந்து அளவளாவுவதற்காகவும் மட்டுமே. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் வாய்விட்டு அவளைச் சிரிக்க வைத்துவிடவேண்டும் என்பதிலேயே குறியாய் இருப்பான் அமுதன். உறவுகளைப் பேணுவதிலும், சமூக அக்கறையோடு இருப்பதிலும் அமுதனுக்கு ஆரம்பப் பாடம் அக்காவின் நடைமுறைகள். இந்தப் பிறவியில் இவளுக்கு தம்பியாய் பிறந்தது தனது பாக்கியம், இன்னொரு முறை அக்கா, தம்பியாய் பிறக்கவா போகிறோம் என அடிக்கடி நினைத்துக் கொள்வான் அமுதன்.

கடந்த காலங்களில், அமுதனிடம் பேசினாலும் குடும்பநலன் விசாரித்தபடியே தன்னோடு சம்பளமில்லாமல் பணியாற்றும் ஆசிரியர்களின் சம்பள விசயமாக அமைச்சருக்கு எழுதிய கடிதம் பற்றியோ, பள்ளிக்கான அங்கிகாரம், நன்கொடையாளர்கள் பற்றியோதான் அதிகமாக இருக்கும்.

“நம்ம தலைமுறைய மாரி பரிதாபமான ஒரு தலைமுறை இனி இருக்கப் போறதில்ல அக்கா. நம்ம, நம்மளப் பெத்தவங்களுக்கு பயந்து நடந்தோம் சரி. இப்ப நம்ம பெத்த பிள்ளைகளுக்கும் பயந்து சாகுறம்.”

“தாய்ட்ட பெறாத பாச நேசத்த பிள்ளைக்கு குடுக்கணும்னு நெனச்சேன் தம்பி.”

“பெரிய படிப்புன்னு எத்தன நாளைக்கி படிச்சுகிட்டே இருந்தான். எஞ்ஜினியரிங் முடிச்ச பிறகு சிவில் சர்வீஸ் எழுதுறமின்னு டெல்லியில போயி கெடந்து நீங்க கஷ்டப்பட்டு சம்பாதிச்ச பணத்த பூராவும் தீர்த்தான். அங்க இஷ்டத்துக்கு ஆடிட்டு, படிப்பயும் பாதியில விட்டுட்டு வந்தான். இத்தன சிரமத்த எடுத்து அவன ஐந்து நட்சத்திர அந்தஸ்த்துல வளக்குற உங்கள, கால் காசுக்கு மதிக்கிறதே இல்ல. எப்பவும் என்னய விடுதிக்கு அனுப்பி படிக்க வச்சான்னு குறை சொல்லுறது.”

“.....”

“மடிக்கிள வச்சி கொஞ்சிறது சரிக்கா. ஒரு குறிப்பிட்ட வயசுக்கு மேல மனசளவுல தூக்கி போட்டுறனும். சின்ன வயசுல நம்ம வீட்டுல கோழிக் குஞ்சி பொறிச்சி பாத்திருக்கம.”

“....”

“முட்டையில இருந்து வெளிய வந்ததும், நம்ம போடுற கம்பு, கேழ்வரகக்கூட தாய்க் கோழி பிள்ளைகளுக்கு கொத்திக் குடுக்கும். பிறகு மேய்ச்சலுக்கு கூட்டிற்றுப் போகும். நாளாக ஆக அதுகள பக்கத்துலே நெருங்க விடாது.”

“ஆமா.”

“உலகத்துல சிவில் சர்வீஸ் மட்டுந்தான் இருக்கா, எத்தனையோ வேல வாய்ப்புகள் இருக்கு அக்கா.”

“தகப்பன் இல்லாம வளர்ந்த புள்ளன்னு..”

கடந்த வருட துவக்கத்தில் சுமதி அக்கா அமுதனைக் கூப்பிட்டு அவனுக்கு ஏதாவது ஒரு வேலை வாங்கிக்கொடு என்று கேட்டிருந்தாள். மகனுக்கு வேலை எடுத்துத் தருகிறேன் என்று சொன்ன நாளிலிருந்து, அக்காவிடமிருந்து தொடர்ச்சியான அழைப்புகள். ஆத்தாவைப் பார்க்க ஆமந்துறை போனால், எப்படி, எங்கிருந்து, யார் மூலம் கேள்விப் படுவாளோ தெரியாது காலையிலேயே அமுதனுக்குப் பிடித்த இடியாப்பமும், தேங்காய்ப்பாலும், மாசிச் சம்பலுமாக தோட்டத்தில் காவலிருந்தாள்.

**கொ**ற்கைத் துறைமுகத்தில் காலியாக இருந்த தலைமைப் பொறியாளர் வேலை பற்றிய அறிவிப்பு வந்திருந்தது. அந்த வேலையை தன் மகனுக்கு வாங்கித் தா என்று அழாத குறையாக கேட்டாள் அக்கா. துறைமுக நிர்வாகத்தில் குறைந்த பட்சம் இருபத்திஐந்து வருடம் முன் அனுபவம் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையோடிருந்த அந்தத் தலைமைப் பொறியாளர் வேலை, இருபத்தியேழே வயதேயான தன் மகனுக்கு எப்படி கிடைக்கும் என்று அவள் தாய்ப் புத்தி யோசிக்கவில்லை. தேவையான அனுபவத்தோடு லஞ்சம்

கொடுப்பதற்காகவே கோடிக் கணக்கில் பணத்தையும் கையில் தயாராய் வைத்தபடி அங்கே வேலை செய்யும் அதிகாரிகளே, அரசியல்வாதிகள் பின்னால் முட்டி மோதுகிறார்கள். நிலைமையை முடிந்தவரைத் தெளிவாக விவரித்துச் சொன்ன பின்னும் ஏமாற்றத்தோடே சரியெனத் தலையாட்டினாள். இத்தனைக்கும் அக்கா, அரசாங்க நெளிவு சுளிவுகளையும், அதிகார துஷ்பிரயோகங்களையும் அறியாதவள் அல்ல. தாய்ப்பாசம் அவள் கண்களை மறைத்தது.

“முன்னாலமாரி மருமகன்கிட்ட என்னால பேசமுடியிலக்கா.”

“தம்பி நீ வாங்கிக் குடுத்த வேலையில இருந்து விலகி, வேற வேலக்கி மாறிப்போனது உனக்கு வருத்தமா?”

“என்னக்கா சொல்லுறீங்க, நம்ம என்னதான் தூக்கிவிட்டாலும், அவன் தன்னோட கைப்புடிச்சி ஏறணும். அதுதான் நிலைக்கும். அவன் நம்ம புள்ளக்கா.”

“கலியாண விசயமா சொன்னிய, அதுக்கு என்ன சொன்னான். அவனுக்கும் வயசாயிற்று தம்பி. காலாகாலத்துல கல்யாணமாவது சரியா நடந்தாத் தான அவனோட வாழ்க்கயாவது நல்லாயிருக்கும்.”

‘அக்காகிட்ட எதெச் சொல்ல, கலியாணப் பேச்ச எடுத்ததுமே மருமகன் விதண்டா வாதம் பேசுனத சொல்லுறதா, அல்லது இப்புடி பொறுப்பற்றவங்கிட்ட, யாரோ ஒருத்தன் பொத்திப் பொத்தி வளர்த்த புள்ள மாட்டிச் சீரழிஞ்சிறக்கூடாதேன்னு நான் பயந்தத சொல்லுறதா. முணு வயசுல ஆரம்பிச்சு, இந்த நிமிசம்வர அவனோட வாழ்க்கையில நடந்த அத்தன சம்பவங்களையும் தப்பாவே பாத்து, தப்பாவே புரிஞ்சி, தன்ன மடியிலயும், தோள்லயும் போட்டுத் தாலாட்டுன தாயோட குடும்பத்துல ஒருத்தரக்கூட விடாம அவன் கேவலமாப் பேசுனத சொல்லுறதா. என்னோட கலியாணத்தப்பற்றிப் பேசுறதுக்கு, நீயெல்லாம் யாருடான்னு அவன் ஏகவசனத்துல திட்டுனதச் சொல்லுறதா. நான் பேச வார்த்தையே வராம ஊமையா நின்னதச் சொல்லுறதா. “டேய், நாங்கள்லாம் கொழும்பு முத லாளி. நீ, உன்னோட அக்கா எல்லாரும் கப்பல்ல பெயிண்ட் அடிச்ச ஒரு கூலிக்காரனோட பிள்ளைக யாரு, யாருட்ட என்ன கேக்கனுமின்னு தராதரம் வேண்டாம். ஒரு கூலிக்காரனோட புள்ளைக்கி குடியிருக்க பங்குளா வீடுதான் வேணுமோ, சின்னதா வீடுகட்டி இருக்க மாட்டாளோ உன்னோட கொக்கா சம்பளத்த வாங்கி இங்க எனக்கு அனுப்புன்னா, வீட்டுலோன் அடைக் கிறாளாம். ஓ.. நான் கஷ்டப்பட்டு படிச்சி, வேலைக்கிபோயி, அவள வச்சிக் காப்பாத்துவேன்னு மனப்பால் குடிச்சிகிட்டு இருக்காளோ. அவ எங்கப்பாவுக்கு மட்டுமில்லடா, சாகுறவர எனக்கும் அடிமை’’ எப்புடிக்கா உங்கிட்ட சொல்றது. அவனோட அப்பாமேல நமக்கு வெறுப்பாம். சின்னதுல இருந்தே அத அவங்கிட்ட காட்டுனமாம், அதுனாலதான் அவன விடுதிக்கு அனுப்பி படிக்க வச்சமாம். உனக்கு அவன் புள்ளக்கா, எங்களுக்கு எங்க அக்கா பெத்த புள்ள. அதுனாலதான் இந்த வாலிப வயசுலயும் அவன என்னோட மடியில போட்டு தாலாட்ட முடிஞ்சிது. சின்னதுல இருந்தே அவன் நம்மள வெறுத்துகிட்டுதான் இருந்திருக்கான், ஏத்துக்கிறவேயில்ல. உன்னோட பட்டணத்து நிலத்த நான் எவ்வளவோ சொல்லியும் புருசன் வீட்டுக்காரங்களுக்கு மனசாரக் குடுத்த, ஆனா அவன் அந்தசொத்த, உங்கிட்ட இருந்து பிடுங்கி அவனோட சொந்தங்கள்ட்ட சேத்திட்டதா சந்தோசப் படுறான். உனக்கு குடுக்கிறதுல சந்தோசம். குடு, இன்னுங்குடு, உன்னால முடிஞ்ச அளவுக்கு குடுத்துகிட்டே இரு. நீ மகிழ்ச்சியா இருந்தாச் சரி. ’

**அ**லைபேசியில் திரும்பவும் அக்காவின் அழைப்பு. அலைபேசியை எடுத்து அக்கா என்ற அமுதனால் அதற்கு மேல் பேச முடியவில்லை. நீண்ட மௌனத்திற்கு பிறகு அக்காவே பேசினாள். அக்காவின் குரலில் தெளிவும், சாந்தமும் இருந்தது.

“நீ பேச்சத்துப் போய் இருக்கதுலருந்தே எனக்கு புரியிது தம்பி. கலியாணத்துக்கு கூப்புடல..”

“அது உங்களோட விருப்பம். எப்படிப்பட்ட சூழல்ல இருந்தீங்களோ எனக்குத் தெரியாது. நீங்க சந்தோசமாயிருந்தா அதுவே எனக்கு போதும்.”

“எனக்குத் தெரியும் தம்பி. உன்னோட குடும்பத் துல யாரும் என் கலியாணத்துக்கு வரக்கூடாதுன்னு சொன்னான். எனக்கோ, அவனுக்கு ஒரு நல்ல காரியம் நடந்தாப் போதும்னு இருந்திச்சி. எப் படியோ அவனுக்கு ஒரு வாழ்க்கைய அமைச்சிக் குடுத்து என்னோட கடமைய முடிக்கணும். அவனும் பிள்ளைகள் பெறணும், பந்த பாசம்ன்னா என்னென்னு அவனுக்கும் புரியணுமின்னு நெனச் சேன்.”

“புரியிதக்கா.”

“இப்ப ஒரு முக்கியமான விசயத்தச் சொல்லக் கூப்பிட்டேன். பக்கத்து வீட்டு சாந்தி கிட்ட, உங்கூட பேசப் போறன்னு சொன்னேன். எந்த தைரியத்துல உங்க தம்பிகூட பேசப் போறீங்கன்னு எங்கிட்ட கேட்டா.”

“....”

“அடியே அவன் என்னோட தம்பி, அவன இங்க நில்லுன்னு சொன்னா நிப்பான், உக்காருன்னா உக்காருவாம்ன்னு சொன்னேன்.”

“....”

“கலியாணம் முடிஞ்சி, புள்ள பெத்து, புருசனோட துணை இல்லாம வளத்து ஆளாக்கி, அவனுக்கு ஒரு வேலை வாங்கிக் குடுத்து பல்லக் கடிச்சிகிட்டு கலியாணத்தயும் பண்ணி வச்சி, அவன மனைவியோட அனுப்பி வச்சிற்று நேத்துதாம் நிம்மதியா தூங்குனேன்.”

“மறுவீடு போயிருக்கானோ!”

“இல்ல தம்பி, எனக்கே நேற்றுதான் ஒரு தெளிவு கிடைச்சிது. திறவொரு காட்சியின் தெளிந்தனம்னு கணியன் பூங்குன்றன் சொல்லுறாமுல்ல அந்த மாதிரியான தெளிவு. அதனால அவன மொத்தமா அவன் மனைவியோட அனுப்பிற்றேன்.”

“என்னக்கா சொல்லுறீங்க? கலியாணம் முடிஞ்சி ஒரு மாதம்கூட ஆகல்லிய.”

"அதச் சொல்லுறதுக்குத்தான இப்ப உன்னக் கூப்பிட்டேன். நேற்று காலையில, மணி ஒம்போதுக்கு மேல ஆயிற்று, காப்பி குடிக்க மகனும், மருமகளும் இன்னும் வரலியன்னு கதவ தட்டி குடுக்கலாமுன்னு அவங்களோட அறைக் கதவுப் பக்கம் போய் நின்னேன். நான் அங்க போயி நிக்கவும் அவன் கதவத் திறக்கவும் சரியா இருந்திச்சி. "என்ன, நாங்க என்ன பேசுறோமுன்னு ஒட்டுக் கேக்க பூன போல வந்து நிக்கிறியா நாய" ன்னு கேட்டுகிட்டே புதுப் பொண்டாட்டி பக்கத்துல இருக்காளேன்னுகூட பாக்காம என்னய அடிக்க கைய தூக்கிகிட்டு வந்தான் தம்பி. ஒரு நொடிகூட யோசிக்காம காபி தம்ளர்கள கீழ போட்ட மேனிக்கி அவனுக்கு, செவுட்டுல ஒண்ணு குடுத்தம். கண்மூடி கண் திறக்குறதுக்குள்ள சம்பவம் நடந்து முடிஞ்சிற்று. நான் அவன அடிப்பேன்னு அவன் எதிர்பாக்கல. குனிஞ்ச தல நிமிராம பொண்டாட்டியக் கூட்டிகிட்டு வீட்டவிட்டு வெளிய போயிற்றான்."

"..."

"என்னோட பிணத்திலகூட நீங்க இரண்டு பேரும் முழிக்கக் கூடாதுன்னு சொல்லி அனுப்பிற்றேன்."

"மருமகளும் ஒண்ணும் சொல்லலியா!"

"முப்பத்திரண்டு வருசம் வளத்து ஆளாக்குன உங்களையே இப்புடி அலட்சியப்படுத்தி அவமானப்படுத்துறார, நேற்று வந்த நான் எம்மாத்திரமின்னு சமையலறையில வச்சி ஒருநாள் என்கிட்ட சொன்னாள். வந்த ரண்டு நாள் அத்தை, அத்தையின்னு கூப்பிட்டா, அதுக்குப் பிறகு என்னப் பார்த்தாலே ஒரு நக்கலான பார்வை. நம்ம நம்புறபடி நரகம்னு ஒண்ணு இருந்தா, அங்க நான் இவனோட கடந்து வந்த பாதைய விட மோசமா இருக்காது தம்பி. நான் இறந்த பிறகு அவன் வந்து இந்த வீட்ட உரிமை கொண்டாடட்டும்."

"..."

"பெற்றதும் போதும், கொடுத்ததும் போதும்ன்னு இருக்கு. ஆனா, இப்ப பரந்து விரிஞ்ச வானத்துல ஒரு பறவையப் போல சுதந்திரமா சிறகடிச்சி பறக்குறமாரி இருக்கு."

"என்னக்கா சொல்றீங்க?"

"எனக்குத் தெரியும் தம்பி, எம்புள்ள அவந் தகப்பனவிட மோசம். ஆனாலும் விட்டுற முடியுமா..? சில சூழல்கள்ல, நாம தெரிஞ்சே முட்டாளாகுறதில்லியா, அந்தமாரி நான் தெரிஞ்சே இத்தன காலம் கொத்தடிமையாயிற்றந் தம்பி. அந்த நாட்கள்ல இருந்தே இத்தன அடிகள் பிறந்த வீடு, புகுந்த வீடு, சொந்த வீட்டுல மகனோட வாழ்க்கன்னு வாங்கியும் நான் சரியா பக்குவப்பட்டிருக்கல. ஆனா, அந்த நொடிப் பொழுதுல நான் கொடுத்த அடி என்னுடைய வாசல்கள திறந்து விட்டு எனக்கே எனக்கான காற்ற, என்ன சுவாசிக்க வச்சிற்று."

"அக்கா..!"

●

# நேரலை

■ பொன்.தனசேகரன்



பிணத்துக்காக
பருந்துகள் வட்டமிடுவதைப்
பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

யாரிடமிருந்து யாருக்கு
என்று தெரியாமல்
எந்தப் பாதையிலிருந்து வருகிறது
என்றும் தெரியாமல்
மருத்துவமனைகளில்
விழுந்து கொண்டிருக்கும்
தலைகளை எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்.

முகக்கவசம் போட்டுக் கொண்டு
தனிமனித இடைவெளியில்
புதைகுழிகளைத் தோண்டிக் கொண்டிருக்கிறீர்கள்.

இருக்கும் இடத்தைக் கை கழுவிவிட்டு
நரகத்திலிருந்து நரகத்துக்கு
உங்கள் உடலைத் தூக்கிக் கொண்டு நடக்கிறீர்கள்.

செத்துப் பிழைத்துக் கொண்டிருந்த
நீங்கள்
மூச்சுவிட முடியாமல்
திணறிக் கொண்டிருக்கிறீர்கள்.

சாவின் வாசனை தெரியாமல்
நீங்கள் இறந்துபோகப் போகிறீர்கள்.

நீங்கள் இறந்துவிட்டீர்கள்*.

**** திலீப் குமார் எழுதிய ஒரு குமாஸ்தாவின் கதையின் கடைசி வரி***



# ஊர் சுற்றிக் காக்கையார்

**குஞ்சரம் 1**

## சார்லஸ் போதலேர் கவிதை

### தொலைதேச வாசனை

■ சார்லஸ் போதலேர்

இலையுதிர்கால வெம்மாலைப் போழ்தொன்றில்
விழிகள் மூடி நானுன் மார்பின் வாசனையை நுகரும்போதில்
மாற்றமின்றி எறிக்கும் சூரியக்கதிர்கள் ஒளியூட்டும்
ஆனந்தக் கடற்கரைகள் விரிவதைக் காண்கிறேன்

தனித்துவ மரங்களையும் இனிய கனிகளையும் வழங்கும்
இயற்கையையுடைய சுறுசுறுப்பற்ற ஒரு தீவு,
மெலிந்ததும் உறுதியானதுமான உடல்களுடைய ஆண்களும்
நேர்கொண்ட விழியால் ஆச்சரியப்படுத்தும் பெண்களும்,

ஈர்க்கும் காநிலைகளை நோக்கி உன்வாசனையின்
வழிகாட்டலில்,
கடலலையால் இன்னமும் களைப்புற்றேயிருக்கும்
பாய்மரங்கள் நிறைந்த துறைமுகத்தைக் காண்கிறேன்

காற்றில் மிதந்து என் நாசிகளைப் பொரும வைக்கும்
பசும்புளியமரங்களின் வாசனை
கடலோடிகளின் பாடல்களோடு என்னுயிரில்
கலக்கின்ற வேளையில்.

தமிழில்: **கவிஞர் க.வாசுதேவன்** – பிரான்சு

### Parfum exotique

■ *Charles BAUDELAIRE*

Quand, les deux yeux fermés,
en un soir chaud d'automne,
Je respire l'odeur de ton sein chaleureux,
Je vois se dérouler des rivages heureux
Qu'éblouissent les feux d'un soleil monotone ;
Une île paresseuse où la nature donne
Des arbres singuliers et des fruits savoureux ;
Des hommes dont le corps est mince et vigoureux,
Et des femmes dont l'oeil par sa franchise étonne.
Guidé par ton odeur vers de charmants climats,
Je vois un port rempli de voiles et de mâts
Encor tout fatigués par la vague marine,
Pendant que le parfum des verts tamariniers,
Qui circule dans l'air et m'enfle la narine,
Se mêle dans mon âme au chant des mariniers.



Charles Baudelaire (1821 - 1867)

பிரெஞ்சு இலக்கியத்தின் குறிப்பிடத்தக்க கவிஞரும், கட்டுரையாளரும், கலை விமர்சகரும் ஆவார். இவரது மிகவும் பிரபலமான படைப்பான, நச்சுப் பூக்கள் (லெஸ் ஃப்ளூர்ஸ் டு மால் ) என்கிற கவிதை நூல், 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வேகமாக தொழில்மயமாக்கப்பட்டதால் பாரிஸின் அழகு சீரழிந்துவந்த காட்சிகளைக் காட்டுகிறது. போதலேரின் உரைப்பாக்கள் பாணியானது வெர்லைன், ஸ்டீபன் மல்லர்மே உள்ளிட்ட பல தலைமுறை கவிஞர்களைப் பாதித்தது.



Charles-Marie (1818 - 1894)

பிரெஞ்சு இலக்கியத்தில் ரோமான்ரிச இலக்கியப் போக்குக்கு எதிரான பர்ணாசியன்களின் (Les parnasiens) முன்னோடியாக இருந்தவர். சுய அந்தரங்க உணர்வுகளை மிகைப்படுத்திய ரோமான்ரிசத்தை நிராகரித்து பொது உணர்வுகளையே முன்னிறுத்திய கவிதைப்போக்கு பர்ணாசியன்களின் முக்கிய இலக்காக இருந்தது.

## குஞ்சரம் 2 சார்லஸ் மேரி கவிதை

### காண்பிப்பவர்கள்

■ சார்லஸ் மேரி

சோர்வுற்ற விலங்குபோல், படுகாயமுற்று, தூசியில் மூழ்கி,
கழுத்தில் சங்கிலியுடன், கோடையின் வெம்மைச்
சூரியனைநோக்கிக் கதறியவாறு,
குருதிதோய்ந்த தன்னிதயத்தை விரும்பியோர் உன்
அலங்காரத்தெருவில்
அழைத்துச்செல்லட்டும், ஓ பச்சைத் தசையுண்ணும்
இழிசனமே !

மடமையுற்ற உன் விழியில் வரட்டுத்தீயை மூட்டுவதற்காய்,
உன் சிரிப்பையோ அன்றில் உன் மொக்கையான
கருணையையோ யாசிப்பதற்காய்,
ஒளியினதும் தெய்வீகச் சுயஅடக்கத்தினதும் பேரின்பத்தினதும்
ஆடையை
விரும்பியோர் கிழித்துவிடட்டும்.

என் வரட்டு ஊமைப் பெருமையுள்,
புகழற்ற என் கல்லறையுள்,
இருண்ட நித்தியகாலத்திற்காய் நான் மூழ்கிப்போனாலென்ன,
என் போதையையோ அன்றில் வேதனையையோ உனக்கு
விற்கப்போவதில்லை.

உன் கூப்பாடுகளுக்கு என் வாழ்வை நான் வழங்கேன்.
உன் வரலாற்றாளர்களுடனும், கணிகையருடனும்
உன் சாதாரண பலகைமேடையில் நான் நடனமிடேன்.

தமிழில்: **கவிஞர் க.வாசுதேவன்** – பிரான்சு

### Les montreurs

■ Charles-MARIE

Tel qu'un morne animal, meurtri, plein de poussière,
La chaîne au cou, hurlant au chaud soleil d'été,
Promène qui voudra son cœur ensanglanté
Sur ton pavé cynique, ô plèbe carnassière !
Pour mettre un feu stérile en ton oeil hébété,
Pour mendier ton rire ou ta pitié grossière,
Déchire qui voudra la robe de lumière
De la pudeur divine et de la volupté.
Dans mon orgueil muet, dans ma tombe sans gloire,
Dussé-je m'engloutir pour l'éternité noire,
Je ne te vendrai pas mon ivresse ou mon mal,
Je ne livrerai pas ma vie à tes huées,
Je ne danserai pas sur ton tréteau banal
Avec tes histrions et tes prostituées.



## குஞ்சரம் 3 ஆமென்

தட்டுங்கள் திறக்க முடியாது
கேளுங்கள்
கொடுக்க முடியாது
வாழ்தலின் நம்பிக்கையற்று
மடிந்துக்கொண்டிருக்கும்
உங்கள் பிணங்களை தோளில் சுமந்தபடி
வாழப் பழகிக் கொள்ளுங்கள்
ஏனென்றால்
நாம் நோயுடன் போராட வேண்டும்
நோயாளியுடன் அல்ல
பசித்திருக்கும் விலாவிலிருந்து
இதோ வழிகிறது
எல்லாருக்குமான ரத்தம்
ஆமென்

*– பாரதி கவிதாஞ்சன்*
*(இந்தியா - யூன் 2020)*

சிறுகதை

குஞ்சரம் 4

■ வ.ஐ.ச. ஜெயபாலன்

# யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்கள்



“யாழ்பாணியள் வந்து எங்களைத் துலைச்சுப்போடப் போறாங்கள்” நிலக்கிழார்கள் சாக்குருவிச் சோதிடம் சொன்னார்கள். அதுவரை எழை வன்னி விவசாயிகளின் வீட்டு முற்றதிற்குக் கூட வந்திராத பெரும் பெரும் காணிக்கார வன்னியரெல்லாம் அடிக்கடி அவர்கள் வீடுகளுக்கு வந்து யாழ்ப்பாணத்தாரை அகற்றச் சங்கம் கூட்டினார்களாம்.

நிலக்கிழாரின் ஆதிக்கம் முடங்கியதைத் தவிர யாழ்ப்பாணத்து ஏழை ‘விவசாயிகளின் வருகையாலே ஏழை வன்னி மக்கள் பயப்பட்டது போல ஒன்றுமே நடந்து விடவில்லை.

யாழ்ப்பாணத்துக் கமக்காரர் வராட்டி இப்பவும் நாங்கள் கடா மாடுகளுக்குப் பின்னுக்குத் திரிய வேண்டியதுதான்'' ஞானக்குட்டி அர்த்த புஷ்டியுடன் தகப்பனைப் பார்த்துக் கிண்டல் செய்தான்.

*உழவு யந்திரத்தின் சில்லுகளில் மாட்டியிருந்த இரும்பு வளையங்கள் சேற்றைக் கலக்க வாரியிறைத்ததில் அந்த உழவு இயந்திரத்தைப் போலவே அவனும் சேற்றுச்சிலை போல ஆகி விட்டிருந்தான். கார்த்திகை மாத வெய்யில் மோசமாகக் கொளுத்திக் கொண்டிருந்தது. கோரைப் புற்கள் அழுகிய அந்தச் சேற்றின் வாசனையை அனுபவித்தபடியே உழவு யந்திரத்தின் வேகத்தைக் குறைத்தான் ஞானக்குட்டி.*

*“வா.. சாப்பிட்டிட்டு வெய்யில் தாண்டியதும் உழலாம்” ஞானக்குட்டியின் தகப்பன் பூசாரி சுப்பையர் வயலோரத்து அத்தி மர நிழலில் நின்றபடி மகனைப் பார்த்து கையை அசைத்தார்.*

*உழவு யந்திரத்தை அத்தி மரத்திற்கு அருகாக ஓரளவு நிழலில்*

நிறுத்திவிட்டு பக்கத்து வளவில் நிறைந்து கிடந்த தண்ணீரில் கையையும் காலையும் கழுவிக் கொண்டான் ஞானக்குட்டி.

"சின்னத்துரையைக் கண்டனான்."

கால்களில் கட்டி கட்டியாக காய்ந்து கிடந்த சேற்றை வயல் நீரில் கரைத்தபடியே தகப்பனை நிமிர்ந்து பார்த்தான் ஞானக்குட்டி. அவனை இனம் புரியாத கலவரம் பற்றிக்கொண்டது.

"இல்ல, நீ வேற வேல இருக்க றைக்ரரை உன் எண்ணத்துக்குக் கொண்டத்திட்டியாம்."

ஞானக்குட்டிக்கு இப்போது நிம்மதியாக இருந்தது. சின்னத்துரையரின் உழவு யந்திரத்தைத் தனது மூப்பில் கொண்டு வந்து தனது வயலை உழுவதால் எற்படக் கூடிய எந்த விளைவுகளையும் எதிர் நோக்க அவன் தயாராகவே இருந்தான். அவன் பயப்படுற மாதிரியான விஷயங்கள் ஒன்றும் அவன் பயப்படுற அளவுக்கு இன்னும் முற்றிவிடவில்லை.

"இண்டைக்குள்ள வேலையை முடிச்சுப் போடட்டாம்; தனக்கு வேற வேலை கிடக்காம்..."

பூசாரி சுப்பையரின் குரல் கடுகடுத்தது.

"உம்..."

"வேலை முடியாட்டி மாட்டால அடிச்சு விதைக்கட்டாம் இல்லாட்டி வேற றைக்ரரைப் பிடிக்கட்டாம்..."

ஞானக்குட்டி மௌனமாக அந்த அதிகம் உயரம் இல்லாமல் சடைத்துப் போயிருந்த அத்தி மரத்தின் நிழலில் வந்து சாப்பிட அமர்ந்தான்.

இந்த அத்தி மரம் இருக்கிறதே பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் ஞானக்குட்டி சின்னப் பையனாக இருந்த போதும் பெரிய நிழல் மரமாகவே நின்றது. அப்போதெல்லாம் மத்தியான வெய்யிலில் எருமைக்கடாக்களை அவிழ்த்து விட்டு இந்த அத்திமர நிழலில்தான் அவர்கள் சாப்பிடவும் தூங்கவும் செய்வார்கள். அவனது தந்தையார் ஓயாமல் அந்த அத்திமரத்தில் நார் கிழிப்பது உலர்த்துவது கயிறு பின்னுவது என்று ஏதாவது துரு துரு வென்று செய்து கொண்டிருப்பார்.

பத்துப் பதினொரு வயதிலேயே உழவு நடக்கும் போது ஞானக்குட்டியை நம்பி ஒரு சோடி எருமை மாடுகளையும் கலப்பையையும் கொடுத்துவிடுவார் பூசாரி சுப்பையர். ஞானக்குட்டி பெருமை பிடிபடாது துள்ளுவான். தன்னுடைய பிஞ்சு மகனின் கெட்டித்தனங்களை இட்டு பூசாரி சுப்பையருக்கும் பெருமை இருக்காதா என்ன?

நான்காம் வகுப்பிற்குப் பின்னர் ஒருநாள் அந்த வன்னிப் பள்ளிக்கூடத்தில் கடமை யாற்றிய யாழ்ப்பாணத்து ஆசிரியருடன் தகராறு பட்டுக் கொண்டு வீட்டில் வந்து நின்றான் ஞானக்குட்டி, அதன் பின்னர் அவனை யாருமே பாடசாலைக்குப் போ என்று விரட்டவில்லை...

யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் அந்த வன்னி பாடசாலைப் பக்கம் தலைகாட்டுவது அந்த அந்த மாதங்களுக்குரிய தினவரவுப் புத்தகங்களை நிரப்புவதற்கும் சம்பளம் சம்பந்தமான கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் மாணவர்களிடம் நெய், தேன், இறைச்சி, வத்தல் என்று கப்பம் வாங்குவதற்குத்தான் என்பதை எல்லாப் பெற்றோர்களைப் போலவே அவனது பெற்றோர்களும் அனுபவரீதியாக அறிந்திருந்தார்கள், இவற்றை விடவும் அந்த ஆசிரியர்கள் செய்யும்பணிகள் சிலவும் உண்டு. வன்னியான் வன்னியான் என்று அவர்களைக் குத்திப் பேசி தாழ்வு மனச்சிக்கலுக்கு அந்தப் பிஞ்சு வயதிலேயே ஆளாக்கினார்கள் அவர்கள்.

"யாழ்ப்பாணத்தான் எப்பவும் எங்களிட்ட ஏதும் புடுங்கிக்கொண்டு போகத்தான் வாறது"

இந்த நியாயமான அபிப்பிராயம் காலம் காலமாகவே வன்னிப்பகுதிகளில் வேரூன்றிப் போயிருந்தது.

அவன் பள்ளிக்கூடம் போகாமல் விட்டது ஒருவரது கவனத்தையும் கவரவில்லை; அதன் பின்னர் பிஞ்சு வயதிலேயே அணிஞ்சியன் குளக்கிராமத்தின் தலைவிதியை நிர்ணயிப்பவர்களில் அவனும் ஒருவனாகி விட்டான்.

**“யோக**புரம் மகா வித்தியாலயத்துக்குப் புதுசா வந்திருக்கிற தலைமை வாத்தியைச் கண்டினீங்களே” சாப்பிட்டபடியே கேட்டான் ஞானக்குட்டி.

“ஆராள் வந்திருக்கிறது”

“கந்தசாமி எண்டு ஒரு கறுவல் சுள்ளித்தடி மாதிரி முந்தி அணிஞ்சியன் குளத்தில் எனக்குப் படிப்பிச்சது...”

“இருக்கும்...” சுப்பையருக்கு இப்படியான விசயங்களில் அதிகம் ஈடுபாடில்லை.

நெல்லை நனையப் போட்டிட்டான். நாலாம் நாள் முளை கட்டிடும்... கீடா மாடுகளும் காடு கரம்பையோட..... கண்ணகித்தாயே ஆற்றையும் றைக்ரர் சந்திக்காட்டி என்ன செய்வன்...”

கைகளை விரித்து வானத்தைப் பார்த்தபடி அங்கலாய்த்தார் பூசாரி சுப்பையர். அவருக்குத்தான் கவலையுடன் சுற்றிச் சுற்றி வரும் வழமையான பிரச்சனைப் பிரதேசங்களுக்கு வெளியே அபிவிருத்தியடையும் எந்தப் புதிய பகுதிகளிலும் கிஞ்சித்தும் கவனம் செல்வதில்லை.

பதினைந்து வருடங்களுக்குப் பின்னர் கந்தசாமி வாத்தியார் யோகபுரம் மகா வித்தியாலயத்துக்கு தலைமையாசிரியராக வந்திருக் கிறார் என்ற விசயத்தைச் சில நாட்களின் முன்னர் தான் ஞானக்குட்டி கேள்விப்பட்டி ருந்தான்.

அவரை நினைக்கிறபோது அவரை நேருக்கு நேரே சந்தித்து ஒரு பேச்சும் மூச்சுமில்லாமல் அவரது முகத்தில் ஒரு குத்துவிட வேண்டும் போல அவனது அந்தராத்மா அந்தரித்தது.



காலையில் உழவு யந்திரத்தை வயலுக்குச் செலுத்தி வந்தபோது கந்தசாமி வாத்தியார் தெருவில் போய்க்கொண்டிருந்தார். அவரைச் கண்டதும் உழவு யந்திரத்தின் வேகத்தை திடீரென அதிகரித்தான் ஞானக்குட்டி, மேலதிகமாக சில்லுகளில் மாட்டியிருந்த சேறோடும் இரும்பு வளையங்களும் கலப்பையுமாக அந்த உழவு யந்திரம் ஒரு புல்டோசரைப் போலவே கம்பீரமாக முன்னோங்கியது. கந்தசாமி வாத்தியாரைத் தாண்டிச் செல்லும் போது உழவு யந்திரத்தைத் திடீரென மடக்கி வெட்டித் தெருவின் நடுப்பகுதிக்குத் திருப்பி ஏககாலத்தில் கிளச்சையும் பிறேக்கையும் அமுக்கிக் கியரை நடுநிலைக்குத் தட்டி விட்டு நச்சுச் சிரிப்புச் சிரித்தான் ஞானக் குட்டி.

கந்தசாமி வாத்தியாருக்கு தன்னைச் சுதா கரித்துக் கொள்ள சில வினாடிகள் எடுத்தது. அவரது முகத்தைப் பார்க்க ஞானக்குட்டிக்கே பரிதாபமாக இருந்தது. கந்தசாமி வாத்தியாரின் தலைமயிர் ‘ ஐதாகி நரைத்துப் போய் இருந்தது, கறுப்புச் சட்டம் போட்ட கண்ணாடி வேறு அணிந்திருந்தார். மற்றப் படி கறுத்த அதே சுள்ளல் உடம்பு தான், என்றாலும் அதுவும் உள்ளார ஈடாடிப் போயிருந்தது.

“வாத்தியாருக்கு என்னைத் தெரியவில்லையோ?! நான் தான் ஞானக்குட்டி. அணிஞ்சியன் குளத்தில் உங்களிட்டப் படித்தனான்.”

கந்தசாமி வாத்தியாருக்கு முகம் சற்று மலர்ந்தது. அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டுக் கண்ணாடியைக் கழட்டி புருவங்களை மேலே தள்ளியபடி தலையைச் சொறிந்தார். பின்னர் வியப்புத் தாளாமல் அந்த உழவு யந்திரத்தைப் பார்த்தார். கந்தசாமி வாத்தியார், “துவாய்த்துண்டு கட்டியபடி குடுமி முடித்துக்கொண்டு தனக்கு முன் கைகட்டியபடி நடு நடுங்கிய வன்னிச் சிறுவர்களில் ஒருவனாக இருந்தவனா இவன்? அதுவும் றைக்ரரில் வாட்ட சாட்டமாகவா...?

கந்தசாமி வாத்தியார் எம்போதுமே வேக மில்லாத மனிதர், சமூகங்கள் வேகமாக வளர்ச்சி அடைந்து வருவதில் தான் பின்னுக்குத் தள்ளப்படுவதாக அவருக்கு எப்போதுமே ஒரு ஆற்றாமை.

“காலம் கெட்டுப்போச்சு” மெதுவாக அவரது உதடுகள் முணுமுணுத்தன.

“ஆள் ஆரெண்டு ஒண்டுமே பிடிபடவில்லை...”

“அதுதான் வாத்தியார் பண்டிக்கருக்கல் கொண்டு வராததுக்கு நாளைக்குக் கடாமாடு மேய்க்கின்ற உனக்கு பள்ளிக்கூடம் ஏதுக்கெண்டு கலைச்சுட்டியள்” “ஞானக்குட்டி...”

கந்தசாமி வாத்தியாருக்கு முகம் வெளுத்துப் போனது, ஒருவாறு சிரித்து நிலமையைச் சீராக்க முனைந்தார். அவர் சிரிப்பும் பரிதாபமாகவே வெளிப்பட்டது.

“ஓ.. எங்கட பூசாரி சுப்பையற்ற மகனல்லே, இப்ப எல்லாரும் எப்படி, நீ என்ன தம்பி

செய்யிறாய்....?”

“பார்க்கத் தெரியவில்லையா”. என்றபடி உழவுயந்திரத்தைப் பெருமிதத்துடன் காட்டினான் ஞானக்குட்டி

“ஓ... நல்லது... சொன்னாப் போல டி. ஆர். ஓ எங்கட பெடியன் தான் தம்பி, ஏதும் அலுவல் பார்க்க வேணுமெண்டால் சொல்லு”' கந்தசாமி வாத்தியார் சற்று நிமிர்ந்தார்.

“டி. ஆர். ஓவா. அவருக்கும் எங்கட விவசாயிகள் முன்னணிக்கும் இழுபறி இருந்தது, இப்ப அவர் மாற்றம் கேட்டிருக்கிறார் போல” கந்தசாமி

வாத்தியார் எச்சிலை மிண்டி விழுங்குகிறார்.

“தம்பி எங்கட முத்தமிழ் பாதுகாப்பு கழகத்தில நீயும் சேரேன்! யாழ்ப்பாணத்துக்கு எல்லாம் வந்து கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். தமிழர் ஒற்றுமைப்பட வேண்டும்”

வெற்றிப் பெருமிதத்துடன் கந்தசாமி வாத்தியார் ஞானக்குட்டியை ஏறிட்டுப் பார்த்தார்.

“எங்களின்ர முத்தமிழ் வேற வாத்தியாயர், நாங்கள் கையடிச்சுச் சீவிக்கிற நாங்க. அதுக்கும் எங்களை மிதிக்கின்ற உங்களின்ர முத்தமிழுக்கும் ஒத்துவராது...”

ஞானக்குட்டி பற்களை நறுமியபடி கியரை மாற்றி வேகத்தை அதிகரித்து கிளச்சில் இருந்தகாலை திடுப்பெனத் தூக்கினான், இவன் மனதை உணர்ந்து கொண்டது போல உழவு யந்திரமும் ஒரு உறுமல் உறுமிய படி முன்னோக்கிப் பாய்ந்து பின்புறத்தை ஆட்டி கத்தசாமி வாத்தியாருக்கு அழகு காட்டிவிட்டுச் சீராக முன்னோக்கி ஓடிமறைந்தது.

**வெ**ய்யில் இன்னும் தணியவில்லை, சிறகைகளும் கொக்குகளும் அங்குமிங்குமாக உழுது சேறாடப்பட்ட பாத்திகளுள் சுறுசுறுப்பாகக் காணப்பட்டன. பருந்து ஒன்று சேற்றில் மோதி வயல் கோவியன் பாம்பு ஒன்றை வாரி எடுத்துச் சென்றது.



பூசாரி சுப்பையர் ஞானக்குட்டியைப் பார்த்துத் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். அதுவரை அந்த சேறாடப் பட்ட மண்ணின் வாசனையை அனுபவித்துக் கொண்டு கண் மூடிக்கிடந்த ஞானக்குட்டி கண்களைத் திறந்தான்.

“பார் யாழ்ப்பாணி, யாழ்ப்பாணிதான்... ‘’ பூசாரி சுப்பையர் கனல் கக்கினார், ஏணை...!”

“பார் நீ இராப் பகல் பாராமல் அடிச்சுக் குடுக்காட்டிச் சின்னத்துரையர் றைக்ரருக்குக் கட்டுக்காசு ஒழுங்காகக் கட்டுவாரோ?... துரைச்சாமியின்ர றைக்ரரைப் பறிச்சது போல பறிச்சுச் கொண்டல்லே போயிருப்பாங்கள். அவருக்கு வேறு வழியில் வரும்படியள் இருக்ககோ?

“விளைப்புக்கு றைக்ரர் தானே நான் கொண்டு வாறன் சும்மா ஏன் நீ யாழ்ப்பாணத் தாரைத் திட்டுறாய்”

“நீ என்ன சொன்னாலும் அவங்கள் அவங்கள் தான்”

“பேசாம இரன்‘’ ஞானக்குட்டிக்கு எரிச்சல் எரிச்சலாக இருந்தது.

“உங்கட காலத்தில் நாங்கள் கண்ட யாழ்ப்பாணத்தார் வேற. அவங்கள், பெரிய இடத்து யாழ்பாணியள். அவங்கள் எல்லோரும் உத்தியோக தோரணையிலே எங்கடை உழைப்பை தவிச்சமுயல் அடிக்கற மாதிரி தட்டிக் கொண்டு போகவே வந்தவங்கள்... இப்ப குடியேறி கமஞ் செய்ய வந்திருக்கிற யாழ்ப்பாணத்தார் எங்களைப்போல சாதாரண மனிதர், ஏழை எளியதுகள்“

பூசாரி சுப்பையருக்கு மகன் சொல்வதிலும் நியாயம் இருப்பதாகவே பட்டது. வவுனிக்கு குளம் கட்டி முடிந்து யாழ்ப்பாணத்தவர்கள் ஆயிரக் கணக்கில் அந்தப் பிரதேசத்தில் குடிவந்தபோது பூசாரி சுப்பையருக்கு மட்டுமல்ல எல்லா வன்னி மக்களுக்குமே வாழ்க்கை அஸ்தமித்துப் போய்விட்டது போலத்தான் இருந்தது. குறிப்பாக துணுக்காயைச் சேர்ந்த நிலக்கிழார்கள் பதறிப்போய் விட்டார்கள்.

“யாழ்பாணியள் வந்து எங்களைத் துலைச்சுப்போடப் போறாங்கள்” நிலக்கிழார்கள் சாக்குருவிச் சோதிடம் சொன்னார்கள். அதுவரை எழை வன்னி விவசாயிகளின் வீட்டு முற்றதிற்குக் கூட வந்திராத பெரும் பெரும் காணிக்கார வன்னியரெல்லாம் அடிக்கடி அவர்கள் வீடுகளுக்கு வந்து யாழ்ப்பாணத்தாரை அகற்றச் சங்கம் கூட்டினார்களாம்.

நிலக்கிழாரின் ஆதிக்கம் முடங்கியதைத் தவிர யாழ்ப்பாணத்து ஏழை ‘விவசாயிகளின் வருகையாலே ஏழை வன்னி மக்கள் பயப்பட்டது போல ஒன்றுமே நடந்து விடவில்லை.

யாழ்ப்பாணத்துக் கமக்காரர் வராட்டி இப்பவும் நாங்கள் கடா மாடுகளுக்குப் பின்னுக்குத் திரிய வேண்டியதுதான்‘’ ஞானக்குட்டி அர்த்த புஷ்டியுடன் தகப்பனைப் பார்த்துக் கிண்டல் செய்தான்.

ஞானக்குட்டிக்குச் சண்முகநாதனின் ஞாபகம் வந்தது. நில அபிவிருத்தித் திணைக்களத்தில் உழவு எந்திர சாரதியாகப் பணிபுரிந்த யாழ்ப்பாணத்தவன் அவன், அவன்தான் மேலதிகாரிகளுக்குத் தெரியாமல் ஞானக்குட்டிக்கு உழவு யந்திரம் செலுத்தக் கற்றுத்தந்தவன்.

மெல்ல எழுந்த ஞானக்குட்டி வெய்யிலை அளப்பவன் போல நோட்டம் விட்ட படி உழவு யந்திரத்தை நோக்கி நடத்தான். இப்போது வானத்தில் முகில்கள் கறுத்திருந்தன.

ஒரே பாணியில் அரசாங்கத்தால் கட்டிக் கொடுக்கப்பட்ட சிறுசிறு கல் வீடுகள் நிறைந்தது

யோகபுரம் குடியேற்றத் திட்டக் கிராமம். இருமருங்கும் வேலிகளில் பாவட்டைச் செடிகளும், கிழுவை மரங்களும் செழித்திருந்த ஒழுங்கையால் உழவு யந்திரத்தைச் செலுத்தி ஓட்டி வந்த ஞானக்குட்டி சின்னத்துரையரின் வளவுக்குள் வீட்டுக்கு முன்பாகச் சற்றுத் தள்ளிப் போடப்பட்டிருந்த கொட்டிலுள் உழவு யந்திரத்தை லாவகமாகச் செலுத்தி நிறுத்தினான்.

பின்புறமாகத் தோட்டத்தில் ஏதோ பிரயாசத்தில் ஈடுபட்டிருந்த சின்னத்துரை உழவு யந்திரச் சத்தம் கேட்டு முற்றத்துக்கு வந்து சேர்ந்தார். சேற்றில் வேலை செய்த அடையாளமே தெரியாமல் உழவு யத்திரம் துப்பரவாகக் கழுவப்பட்டதில் அவரது கடுகடுப்பெல்லாம் தணிந்தது. சற்று மலர்ந்த முகத்துடன் ஞானக்குட்டியைப் பார்த்தார் சின்னத்துரையர்.

“என்ன, முழுக்காணியையும் கலக்கி உழுதிட்டியா ?”

உங்கட விதைப்புக்கு றைக்ரர் தோதுபட்டு வராது”

“நான் உங்கள நம்பி நெல்லை நனையப் போட்டிட்டன் நாலாம் நாள் விதைக்க வேணுமே ...” ஞானக்குட்டியின் குரலில் கடுகடுப்பிருந்தது.

“அப்பா...” இனிமையான, மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும் அந்த குரல் வந்த திசைக்கு ஞானக்குட்டியும் சின்னத்துரையரும் தலையைத் திருப்பினார்கள். பால் தேநீர் நிரம்பிய பெரிய கிளாஸ் ஒன்றுடன் பரத நாட்டிய அலாரிப்பு ஆடும் நர்த்தகியின் பாணியில் பணிவுடன் மெல்ல மெல்ல அடிவைத்து இறங்கி வந்தாள் யசோதா. திரும்பி நடந்து யசோதாவிடம் தேநீர் பாத்திரத்தை வாங்கி வந்து ஞானக்குட்டியிடம் நீட்டினார் சின்னத்துரையர்.

“றைக்ரர் வாங்கிய விதத்தில் கொம்பனிக்கு இருபதினாயிரம் ரூபாவுக்கு அதிகமாகக் கடன் கட்ட வேணும். ஊரிலும் எனக்கு எக்கச்சக்கமாகக் கடன்” சின்னத்துரையர் பொய் பேசவில்லை என்பதை ஞானக்குட்டி அறிவான். எங்காவது உடன் காசு வரக்கூடிய வேலை செய்தால்தான் அவரால் நிலமையைச் சமாளிக்க முடியும் தனது நிலைமைக்கு மிஞ்சி அகலக்கால் வைத்து விட்டதாக சின்னத்துரையர் அடிக்கடி மனச் சங்கடப்பட்டும் கொண்டார், ஞானக்குட்டியைப்போல பொறுப்பும் திறமையுமுள்ள சாரதியும் கிடைத்திருக்கா விட்டால் அவர் பெரிய நெருக்கடிக்குள் மாட்டிக் கொண்டிருப்பார்.

“விதைப்புக்குக் கட்டாயம் றைக்ரர் வேணும்“ ஞானக்குட்டியின் குரலில் அழுத்தம் தொனித்தது.

“என்னத்தையெண்டாலும் செய்...” திரும்பி நடந்த சின்னத்துரையர் சற்று நிதானித்து

“சாப்பிட்டுவிட்டுப் போ” என்றபடி பின்புறமாக இருந்த தோட்டத்துக்குள் மறைந்தார்.

வீட்டு வராந்தாவில் காலடிச் சத்தம் கேட்டது,

“சாப்பாடு போட்டிருக்கு ...”

தந்தையார் தோட்டத்துக்குப் போய்விட்ட துணிவில் மிடுக்காக முற்றத்தில் நடந்து வந்த யசோதா சுதந்திரமாகவே ஞானக்குட்டியைப் பார்த்துப் பேசினாள்.

“நான் வீட்டில சாப்பிடுறன்...”

“இதுவும் வீடுதான் சாப்பாடு போட்டாச்சு ...”

இருவராலும் கண்டிப்பைத் தொடர்ந்து பராமரிக்க முடியாமல் போய்விட இருவருமே ஏக காலத்தில் கல கல வென்று வாய்விட்டுச் சிரித்தார்கள்.

ஞானக்குட்டி சாப்பிடும் போது யசோதா மேசை ஓரமாக அவனுக்குப் பக்கத்தில் வந்து நின்றாள்.

“அப்பா றைக்ரரை விக்கப் போறார்...”

யசோதாவின் குரலில் துக்கம் நிறைந்திருந்தது.

ஞானக்குட்டி வியப்புடன் கண்களை அகட்டி அவளை நேருக்கு நேராகப் பார்த்தான், பின்னர் என்ன நினைத்தானோ சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விடாமல் எச்சில் கையால் யசோதாவை ஆதரவுடன் அணைத்துக் கொண்டான்!

ஞானக்குட்டி வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக அவனது தந்தையார் அதுவரை பொறுமையிழந்து அவனது வரவுக்காகக் காத்துக்கொண்டிருந்தவர் போல் வாய் திறத்தார்.

“என்ன விதைப்புக்கு றைக்ரர் வருமே? இல்லையெண்டா அந்த யாழ்ப்பாணியனிட்ட நீ வேலை செய்ய வேண்டாம்,

“சும்மா கிடவெணை விதைப்புக்கு றைக்ரர் வராதெண்டு ஆர் சொன்னது.”

பூசாரி சுப்பையர் தமது மகனை ஏற இறங்க பார்த்தார், அவன் உருண்டு திரண்டு ஒரு ஆணழகனைப் போலவே இருந்தான். வன்னி இளைஞன் ஒருவனையும் யாழ்ப்பாணத்து குமரிப் பெண் ஒருத்தியையும் இணைத்து மிகச் சாதாரணமாகப் பேசக் கூடிய காலமொன்று தங்களது நாட்களிலேயே ஏற்பட்டிருந்தது அவருக்கு அவ்வளவு சீரணிக்க முடியாத விசயமாகவே இருந்தது.

“உண்மைதான் அப்ப நாங்கள் கண்ட பெரிய இடத்து யாழ்ப்பாணியர் வேற. இப்ப கமம் செய்ய வந்த யாழ்ப்பாணியள் வேறதான் போல கிடக்கு.”

பூசாரியரது அகன்ற மார்புள்ளிருந்து நம்பிக்கையுடனும் திருப்தியுடனும் ஆறுதல் பெரு மூச்சொன்று மெல்லக் கழிந்தது.

(யாழ்பாண மக்கள் அலையலையாக தமது நிலையான வாழ்வுக்காக வன்னிக்குப் பெயர்ந்த 1950-1970கள் காலக்கட்டத்தை பிரதிபலிக்கும் சிறுகதை. இதனைப் பிரசுரித்த சஞ்சிகை: தேன்கூடு, 1979, நவம்-டிசம்பர், இலங்கை)

குஞ்சரம் 5

# கறுப்பின ஒடுக்குமுறைக்கு எதிரான எழுச்சியில் இங்கிலாந்தில் பங்கேற்ற புலம்பெயர் அடுத்த தலைமுறை சிறார்கள்

அண்மைய அமெரிக்க காவல்துறையின் கறுப்பின ஒடுக்குமுறைக்கு எதிரான எழுச்சிக்கு ஆதரவாக புலம் பெயர் தமிழர்களின் இளைய அல்லது இரண்டாம் தலைமுறையினர் மத்தியில் பரவலான ஆதரவும் விழிப்புணர்வும் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. பொதுவாக யாழ் குடாவைத் தாண்டியும் உலகம் விரிவதனை மறுக்கும் யாழ் மத்தியதர வர்க்க பொது மனோபாவம் புலம் பெயர் தேசங்களிலும் தாம் குடியேறிய முதல் தலைமுறையினரூடாக ஆப்பிரிக்க மற்றும் கரீபியன் தீவுகளைச் சேர்ந்த மக்களை இழிவாகக் கருதும் எண்ணப்பாடுகளையே வளர்த்து விட்டிருந்தது. ஆனால் ஒடுக்கப்படும் தேசங்கள் ஒன்றுபட வேண்டும் என்ற சர்வதேசிய வாதத்தை நிராகரிக்கவும் ஆளுங்கும்பல்களுக்கு அடிபணிந்து சேவகம் செய்து வாழும் இழிவையும் இங்கு கல்விகற்று வளரும் நம் இளந் தலைமுறையினர் நிராகரிக்கின்றனர். இதனை அண்மையில் ‘கறுப்பர் ஒடுக்குமுறை’க்கு எதிரான உலகம் முழுவதும் திரட்சியான எழுச்சியில் பங்கேற்ற நம் அடுத்த தலைமுறைச் சிறார்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர். இதில் தெறித்த சில கீற்றுகள்.




இங்கிலாந்தில் பிறந்து வசிக்கும் இரண்டாவது தலைமுறைப் பெண் மகிழ் (வயது 12) வரைந்த ஓவியம் 04 யூன் 2020

**1. காவல் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி ஏழைகளின் கழுத்தை நெரிக்கவே உதவுகின்றது. மாறாக இந்த நிதி ஒதுக்கீடுகளை குற்றம் இழைப்பவர்களைக் குறைக்கும் சமூக நலத் திட்டங்களை உருவாக்கப் பயன்படுத்துங்கள் என்று கோரியுள்ளனர்.**

**2. பொது இடங்களில் சிறுபான்மையினரை விளிக்கும் போது இழி சொற்களைத் தவிர்க்கும்படி தங்கள் ஆசிரியர்களையும் பள்ளி மற்றும் கல்லூரி நிர்வாகங்களையும் கேட்டுக் கொண்டனர்.**

**3. மக்களின் பொது உணர்வை குறிப்பாக** George Floyd **சம்பவத்தில் ஐக்கிய இராச்சிய பொதுமக்கள் அமெரிக்க அதிபரின் நடத்தையைக் கண்டிக்கும் பட்சத்தில் மக்களின் சார்பில் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் அந்த கண்டனங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டியது அவரின் கடமையாகும் என வலியுறுத்தினர்.**

மாணவர் மத்தியில் செல்வாக்கு பெறும் இச்செயல்களை அனுசரித்து சீர்திருத்தங்களை மேற்கொள்வோம் என்ற உறுதி மொழிகளை பள்ளி, கல்லூரி நிர்வாகங்கள் வழங்கி வருகின்றன. இளைய தலைமுறையினர் மத்தியில் உலகமயமாகிய முதலாளித்துவ உற்பத்தி உறவு முறை ஒழிக்கப்படும் வரை இச்சீர்திருத்தங்கள் வெறும் கண்துடைப்பாகவே அமையும். ஆயினும் பொது அமைப்பு முறைக்குள்ளிருந்தே தொடர்ந்து போராட வேண்டும் என்ற நிலைப்பாட்டை அவதானிக்க முடிகிறது..

இவ்வாறாக நம் இரண்டாவது தலைமுறையினர் தாம் வாழும் புலம் பெயர் தேசங்களின் ஒடுக்கப்படும் மக்களின் விடியலுக்கான எழுச்சிப் போராட்டத்தில் தன்னியல்பாக இணைந்ததானது ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றாகவே பளிச்சிடுகிறது.

தொகுப்பு: க. முகுந்தன்

நூல் திறனாய்வு

இரா. காமராசு

# மனக்கிணற்றில் வாரப்படும் தூர்

‘சுயம்’ பற்றி நிறைய சிந்தனைகள் வந்தாயிற்று. இன்று ‘தனித்திரு’ எனும் சொல் வாழ்வாகி நிற்கிறது. ஒன்றுக்கு மாற்றாக பல, தனிக்குப் பதிலாகக் கூட்டம். மனம் கூட்டு மனம். எதிரிணைகள் சமூகப்புரிதலைச் சாத்தியப்படுத்தும். சுயம், சுயநலமாகி பொருள் குவிப்புச் சிந்தைப் பெருகி மானுடம் காயப்பட்டு நிற்கிறது. கூட்டுழைப்பு, பகிர்வு, சமஈவு வழி கிடைக்கும் சந்தோஷம் கேலிக்குரியதாகி வருகிறது. மனிதன் பொருள் அடிமையாகி, உறவுகளில் அறுபட்டு தன்னில் அந்நியமாகி நிற்கிறான். கார்ப்பரேட் சந்தை மனித வாழ்வைப் பண்டமாக்கி வேடிக்கைப் பார்க்கிறது. கடவுளும் செத்துப்போன இக்காலத்தில், மனித உணர்வு மீட்டலை எழுத்தும் இலக்கியங்களுமே செய்ய முனைகின்றன.

எழுத்தாளர் அகிலா கிருஷ்ணமூர்த்தி கவிதை, சிறுகதை, ஆய்வு, மேடைப்பேச்சு எனஇயங்கி வருபவர். அவரின் அன்மைப் படைப்பு ‘தூர்’. பத்துச் சிறுகதைகள். தான் கண்டு, கேட்டு, உணர்ந்த வாழ்வுத் துளிகளை எழுத்துக்களாகத் தருகிறார். இவரின் வாழ்க்கைக் கண்ணோட்டம் சமூகக் கரிசனமாகக் கதைகளில் வெளிப்படுகின்றன.




இவரின் இலக்கியக் கல்வியும், வாசிப்பும், படைப்பு முயற்சியும் இவருக்கேயான மொழிதல்முறையை சாத்தியமாக்கியிருக்கின்றன. மரபுக்கும் நவீனத்துக்குமிடையே சிக்கித் தவிக்கும் நடுத்தரத் தனிமனதின் வெளிப்பாடாக இவர் கதைகள். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், பலமாகவோ, பலவீனமாகவோ தொட்டுத் தொடரும் ‘குடும்பம்’ வழியே இவர் உரையாடுகிறார். ஆண், பெண் உறவு, சொத்துரிமை, பாசம், அன்பு, பாலினச் சமத்துவம், நவீன வாழ்க்கைமுறை என நிகழ் வாழ்வின் முகவெளி தரிசனங்களாக இவரின் கதைகள் அமைகின்றன.

ஒரு இரயில் பயணத்தில் சந்திக்கும் இளைஞன். அவன் செயல்களால் வித்தியாசப்படுகிறான். அவனுடனான உரையாடலாக விரிவதென்னமோ காவிரிச் சிக்கல், வேளாண் வாழ்க்கை, அரசதிகார அத்துமீறல்கள், என தகிக்கும் சமகாலச்சிக்கல்கள். நடனம், மழை, ஓடும் இரயில் எனும் சூழலுக்குள் சமூக மனம், வாழ்க்கை, இருப்பு குறித்த விவாதத்தை நடத்துகிறார். இயற்கை இயைபுக்கு மாறுபட்டு சூழலை நஞ்சாக்கும மனக்குரளி ருத்திரனாகவும் பயணியாகவும் கண்முன் வருகிறார்கள். காக்கும் கடவுள் ‘கடத்துபவன் கடவுள்’ ஆகிறார்.

காதலித்து, பெற்றோரை எதிர்த்து திருமணம் செய்து கணவனாக வாய்த்தவனின் பொய், ஏமாற்றுகளைச் சகித்து, வேலைக்குப் போய் சம்பாதித்து வாழமுயலும் பெண். ஊர் முழுக்க கடன் வாங்கி தன் தலையில் வைத்துவிட்டு, வெளிநாடு சென்று அங்கும் உல்லாசியாகத் திரியும் ‘காதல்’ கணவனை உணரத் தலைப்படும் போது, வயது வந்த மகள் துளிர்க்கிறாள். அம்மாவின் வலிகளை உணர்ந்து அப்பாவின் துரோகத்தை, ஆண் அகந்தையை கண நேரத்தில் கேள்விக்குட்படுத்துகிறாள்.

‘தாய்பாசம்’ காவியத்தன்மை வாய்ந்தது. மகன்களின் தாய்க்கும், மகள்களின் தாய்க்கும் வேறுபாடு உண்டுதானே. ஒரு பெண் தன் தாயிடமிருந்தே தன்னைத் தகவமைத்துக் கொள்கிறாள். முறைசாராமல் கற்கும் ஆசிரியை தாய்தானே. அப்பா அறியாத அம்மாவின் இரகசிய வெளிகளை அறிந்தவர்களும் மகள்களே. அப்படியான தாய் மகள்கள் உறவைச் சுட்டுகிறது ஒரு கதை. இங்கே அம்மாவின் மீதான அதீத நேசத்தால் மகளே தாயாகி நிற்கிறாள். அம்மா வாசம் ‘நிலா வாசமாகிறது’. காலம்காலமான உறவுக்கண்ணி வசமாகிறது.

நவீன வாழ்வின் பெரும் உளைச்சல் ‘பிள்ளை வளர்ப்பு’. இரண்டு பேரும் பொருள்தேடி வேலைக்குச் செல்லும் சூழல். வாழ்வில் தங்களை நிலைநிறுத்திக்கொள்ள காலில் சக்கரம் கட்டி, இரவைப்பகலாக்கி,

டாலர்கள் குவிக்கப்படாதபாடு. பிறந்த சில மாதங்களில் காப்பகத்தில் விடப்படும் குழந்தை. பொருள்களை, திண்பண்டங்களை வாங்கிக் குவித்துப் 'பாசம்' கொட்டும் பெற்றோர். முதல் பிறந்தநாளை ஸ்டார் ஓட்டலில் கோலாகலமாகக் கொண்டாட, குழந்தையின் மனசோ காப்பகம், ஆயா, சக எளிய பிள்ளைகள் சிநேகம் என நிலை கொள்கிறது. 'குழந்தைமை' உணர்வை சரியான தருணத்தில் கண்டுணரும் பெற்றோர் தம்மில் ஒருவர் வேலையை விடத்தீர்மானிக்கும் 'ஹேப்பி பர்த்டேவும் பிறந்தநாள் விழாவும்'.

சமயங்களில் அன்பே பெரும் வன்முறை ஆகிவிடுகிறது. காதலில், மண வாழ்வில் சில இடங்களில் பெண்கள், சில இடங்களில் ஆண்கள். நாமே குழந்தைகள் நமக்கேன் குழந்தைகள் என வாழும் தம்பதி. கணவன் பேராசிரியர். மனைவி மீது அன்புமழை பொழிபவன். அவளும் படித்தவள். ஆசிரியை வேலைக்குச் செல்ல விரும்புகிறாள். அவனோ பி.ஹெச்.டி., படிக்க வலியுறுத்தி ஏற்பாடு செய்கிறான். அவளுக்கு மேய்ச்சலுக்கு கட்டிப்போட்ட மாட்டின் கயிற்று நீளமே வாழ்வுவெளி. தாய்வீட்டுக்கு கூட தனியே செல்ல முடியாத நிலை. வன்முறை என்றால் திட்டு, அடி எல்லாம் இல்லை. உருகி, அழுது... அவள் அன்பில் களைத்துப் போகிறாள். ஆழ்மனம் விழிப்பு காண்கிறது. முதல் முறையாக தன் தாய் வீட்டிற்கு அவனை மீறி, விலகி, ஆட்டோவில் பயணிக்கிறாள். 'அன்பெனப்படுவது' அடிமைத் தனம் இல்லை எனச் சுட்டுகிறது கதை.

வாழ்வது வீடா? விடுதியா? என்ற ஐயம் அகத்திலும் புறத்திலும் ஏற்படுவது இன்றைய நவீன வாழ்வுக்கொடை. நெருக்கடியான, மழைக்கு ஒழுகும் தன்மையுள்ள பழைய வீடு. கண்காணிப்பு கேமரா, பால்கனி, பிரம்மாண்ட தனி அறைகள், நவீன வசதிகள் கொண்ட புதிய வீடு. பழைய வீட்டின் சில்லுகள் பெயர்ந்த சுவர்களில் பிள்ளைகள் வரைந்த சித்திரங்கள் காணாமல் போயிருந்தன. புதிய வீட்டின் ஒழுங்கும் நேர்த்தியும் உயர்தரமும் 'தனித்தனிகளும்'. பழைய வீட்டில் பிள்ளைகள் வரைந்த அழகான ஓவிய அட்டைத்தாள்கள் புதிய வீட்டின் ஓர் அறையின் கட்டிலுக்கு அடியில். புதிய வீட்டிற்கு வரும் பழைய தோழியின் ஊடாக வெளிப்படும் 'பழையவீடு'.

கைக்குழந்தையாக இருக்கும் போது தாய் மரணம். தனித்துவிடப்பட்டத் தர்மலிங்கத்தைக் கைபிடித்து குழந்தையை வளர்க்கும் அல்லியம்மா. குழந்தையை வேறுபாடில்லாமல் வளர்ப்பதற்காக தான் குழந்தை பெற்றுக்கொள்ளாமல் அறுவை சிகிச்சை செய்துகொள்கிறாள். காலப்போக்கில் கணவனும் இறந்துவிட, பிள்ளையை வளர்த்து ஆளாக்குகிறாள். வளர்ந்த மகன் திருமணம் செய்து மாநகரில் வாழ, தாயோ கிராமத்தில். பிள்ளைப் பெருமைகள் பேசி காலம் கழிக்கிறாள். முதுமை. மகன் தாயை வலியுறுத்தி தன்னோடு அழைத்துச் செல்கிறான். தாய்மகன் பாசம் கண்டு, வெகுண்ட மனைவி சச்சரவு செய்ய, தாய் மீண்டும் ஊர் திரும்புகிறாள். பாசக்கார மகனோ திகைக்கிறான். அவமான உணர்வில் அரளிவிதை அரைத்து உயிர் மாய்க்க நினைக்கிறாள். ஒருவேளை நாம் செத்துப்போனால் அந்தப்பழி மகன் மீது விழும் எனத்துடித்து முடிவைக் கைவிடுவது 'அல்லியம்மா அரச்சமருந்து'.

'கோப்பிரியா'. இதுவும் நவீன வாழ்வு நெருக்கடியைச் சுட்டும் கதைதான். காதலித்த கணவன், மனைவி இடையே மன உரசல் ஏற்படுகிறது. மனைவி அவள் தாயோடு. கணவன் கைக்குழந்தையோடு அவன் பெற்றோர் வீட்டில். தங்களை 'உணர்ந்து' ஒன்று சேர்கிறார்கள். இன்று ஏராளம் மணவிலக்குகள். குறிப்பாக தொழில் நுட்பப்பணிகளில் இருப்போரிடம். சிறு வருத்தம், ஏமாற்றம் கூட பெரு விரிசலாகி மணவிலக்கில் முடிந்து விடுகின்றன. இதற்குள் பல சிக்கல்கள். திருமணமான ஆண், பெண் சேர்ந்து சுயமாக வாழ அனுமதிப்பதில்லை. ஆண் பெற்றோர் அல்லது பெண் பெற்றோர் ஆதிக்கம். பிள்ளைகளைப் 'பணம் காய்ச்சி மரங்களாக' கருதுவது. ஒரு காலத்தில் குடும்பம் சிதையாமல் பெரியவர்களே காத்தனர். தற்போதோ அவர்களே கோடரிகளாய். பேசத்தான் வேண்டும். 'கோப்பிரியா' ஓர் எளிய தூண்டல்.

குழந்தை வளர்ப்பின் உச்சத் தொல்லை கல்வி. பெற்றோர்கள் தங்கள் கனவுக் குதிரைகளில் ஏற்றி காற்றில் பறக்கவிடுகிறார்கள் பிள்ளைகளை. ஏறக்குறைய பதின்ம வயதின் மன நெருக்கடிகளே பின் வாழ்வின் பண்பு முரண்களாய்ப் பரிணமிக்கின்றன. மனிதச் சிறுமைப் பெருக்கமும் மனச்சிதைவின் தொடக்கமும் இங்குதான் முகிழ்க்கின்றன. குழந்தைகள் மனநோயாளிகளாகி விடுவதை 'பறத்தலின் சப்தம்' உணர்த்தி நிற்கிறது. மருத்துவம், நீட் தேர்வு என்றெல்லாம் விவாதித்தாலும் அந்த மல்லிப்பூவும் வசுமதியும் பேசிக் கொள்வது அழகிய கவிதை. இதில் துளிர்க்கிறது படைப்புமனம்.

அம்மா வாசம் பேசியவர் அப்பா பாசத்தையும் பொழிகிறார். அரசு ஊதியம் பார்த்து குடும்பம் காத்தவர். இயற்கை நேசர். மரங்களின் மீது தீராத மோகம். மரங்களை 'தலவிருட்ச' அடையாளப் படுத்தி அதன் வழி காக்க நினைத்தவர். பணி ஓய்வு. மகன் வீட்டில். பெண்கள் அழைத்தும் செல்லாத மனம் அவருடையது. மகன் அம்மாவின் பெயரில் இருந்த சொத்தைத் தன் சகோதரிகள் கேட்டும், மறுத்து விட்டு விற்றுத் தானே அடைக்கிறான். இந்த மன நெருக்கடி அப்பாவை வாட்டுகிறது. மகன் மகள்களை தூர ஒதுக்க துடிக்கும் அப்பா, மகள்களுடன் கிளம்பி விடுகிறார். 'பெண்கள் மூட்டும் சவத்தீயும் பற்றி எரியும்' என முடிகிறது 'தூர்'. ஆணாதிக்க மனக்கேணியில் எடுக்கப்படும் 'தூர்'.

அகிலாவின் கதைகள் யதார்த்தத்தில் காலூன்றி நிற்கின்றன. இன்றைய வாழ்வின் சிடுக்குகளை தன் எழுத்தின் வழியே அவிழ்த்துப் பார்க்க முற்படுகிறார். கதைக்குள் கருத்துக்குள் தம்மை நிலைநிறுத்தி வாசக மனங்களைப் பதம் பார்க்கவேண்டும். இவரின் சமூகச் சார்பும் அக்கறையும் இவரது கதைகளில் வெளிப்படுகின்றன. தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் இவரும் கவனப்படுவார் என நம்பிக்கை தரும் தொகுப்பு.

தூர் (சிறுகதைகள்) / அகிலா கிருஷ்ணமூர்த்தி / முடிவிலி வெளியீடு / செல்: 63818 98202

பத்தி

■ வேணு மாதவன்
venumadhavan2020@gmail.com




“வெள்ளை எதிர்ப்பின்
மனிதம் புரியக்
கறுப்பனாய் இருந்துபார்
ஆதிக்கமொழி எதிர்ப்பின்
வரலாறு தெரியத்
தமிழனாய் இருந்துபார்
பார்ப்பன எதிர்ப்பின்
தன்மானம் உணரப்
பறையனாய் இருந்துபார்
வல்லாங்கு செய்யப்பட்ட
பெண்ணாய் இருந்துபார்
வன்முறை ஏன் என்ற
காரணம் புரியும்”

-இன்குலாப்

**எ**ழுபதுகளில் ஜெயகாந்தன் ‘குமுதம்’ இதழில் வாரந்தோறும் ஒரு பக்கக் கட்டுரைகளை எழுதி வந்தார். அவற்றுள் ‘தைலி நீ மாறவே இல்லை’ என்னும் கட்டுரை இன்னும் என் நெஞ்சை விட்டு நீங்கவில்லை. அதற்கான காரணம் சுவாரஸ்யமானது.

ஜெயகாந்தன் தன் சொந்த ஊர் நீங்கி சென்னை வந்து நீண்ட ஆண்டுகளுக்குப் பின் ஊருக்குச் சென்ற அனுபவத்தை அந்தக் கட்டுரையில் நெஞ்சைத்தொடும் வகையில் விவரித்திருந்தார்.

தைலி என்ற பெயர்கொண்ட தயிர் விற்கும் பெண்மணி மாற்றுப்புடவை இல்லாததால், குளிக்கும்போது கட்டியிருந்த சேலையை ஆற்றுநீரில் அலசி, குளித்துக் கரையேறிய பின்னர் அந்தச் சேலையின் ஒரு நுனியை மரம் ஒன்றில் முடிந்து, வெயிலில் ஒருவாறு உலரவிட்டு, அப்படியே உடலில் சுற்றிக்கொண்டு போவாராம். அந்த வறுமைச் சித்திரம் ஜெயகாந்தனின் மனதில் அச்சாகப் பதிந்து விட்டது.

பின்னர் சென்னை வந்த ஜெயகாந்தனின் வாழ்வில் என்னென்னவோ மாற்றங்கள்...

மீண்டும் தன் ஊருக்குச் சென்ற அவர் அதே ஆற்றங்கரையில், அதே தைலியைப் பார்க்க நேரிடுகிறது அதேபோல் கட்டியிருந்த ஈரப்புடவையின் ஒரு நுனியைப் பிடித்தவாறு... ‘தைலி நீ மாறவே இல்லை’ என்று மனதுக்குள் சொல்லிக்கொள்கிறார். அதுதான் அந்தக் கட்டுரையின் சாரம்.

இது ஒருபுறமிருக்க, அப்போது பிரபலமான நடிகையாக இருந்த ஜெயலலிதா, தன் வீட்டு அலமாரியில் விலைக்கு வாங்கியவை பாதி, அன்பளிப்பாக வந்தவை மீதி என நூற்றுக்கணக்கான பட்டுப் புடவைகள் சேர்ந்திருப்பதாகவும், அவற்றில் பல புடவைகள் ஒருமுறைகூடக் கட்டிப் பார்க்காமல் மக்கி வருவதாகவும் சொன்னசெய்தி, அதே இதழின் வேறொரு பக்கத்தில் துணுக்கு வடிவில் இடம்பெற்றிருந்தது.

எங்கள் வீட்டில் என் தம்பி வாசித்த பின்னர், ‘குமுதம்’ என் கைக்கு வந்தபோது அவன் அந்தத் துணுக்குக்கு மேலே ‘அவை தைலியின் புடவைகள்’ என்று எழுதிவைத்திருந்தான். அவனுடைய ரசனையும் சமூகப்பார்வையும் என்னைக் கவர்ந்தன.

இன்று ‘ஜேகே’ இல்லை, ஜெயலலிதா இல்லை, தைலியும் இருக்க வாய்ப்பில்லை என்றே நினைக்கிறேன். ஆயினும், மாற்றுச்சேலை இல்லாத தைலியும் மக்கிப்போன பட்டுப்புடவைகளும் ‘மாண்டேஜ்’களாக என் மனக்கண்ணில் இன்றும் வந்துவந்து போகின்றன.

■

**ந**மது அரசியலமைப்புச் சாசனத்தின்படிக் குடியரசுத்தலைவர் நாட்டின் முதல் குடிமகன்; அவரது துணைவியார் இரண்டாவது குடிமகள். இருந்தும் அவ்விருவரும் கோயில் ஒன்றுக்குச் சென்றபோது, அவர்களைக் கருவறைக்குள் செல்லவிடாமல் வாசலிலேயே தடுத்து நிறுத்திவிட்டதாகத் தொல். திருமாவளவன் நேரலை ஒன்றில் தமது வருத்தத்தைப் பதிவு செய்திருந்தார். காரணம், உங்களுக்கெல்லாம் தெரிந்ததுதான்.

அதைக் கேட்டதும், பழைய நிகழ்வு ஒன்று நினைவுக்கு வந்தது. இந்தியாவின் பாதுகாப்புத்துறை அமைச்சர், துணைப்பிரதமர் ஆகிய உயர் பதவிகளை வகித்த ஜெகஜீவன்ராம் இதே காரணத்திற்காக அவமானப்படுத்தப்பட்டார். அவர் திறந்து வைத்தார் என்பதற்காக, அவர் அங்கிருந்து நகர்ந்தவுடன், புரோகிதர் கூட்டம் சிலையைக் கழுவித் ‘தீட்டு’ கழித்தது.

“தீண்டாமை ஒரு பாவச்செயல்

தீண்டாமை ஒரு பெருங்குற்றம்

தீண்டாமை ஒரு மனிதத்தன்மையற்ற செயல்”

என்ற வாசகங்களை, வெளிஉலகத்தின் யதார்த்தமுகம் மிகவும் கோரமானது என்பது அறியமாட்டாமல், நமதுபிள்ளைகள் பாவம், பள்ளியின் காலைவணக்கத்தில் தினமும சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

■

**ஜா**ர்ஜ் ஃப்ளாய்ட் என்னும் கறுப்பினத்தவரை அமெரிக்க நகரம் ஒன்றில் வெள்ளைக்கார

போலீஸ்காரன் ஒருவன் கைவிலங்கிட்டு, தெருவில் கிடத்தி, முழங்கால் மடக்கி, எட்டு நிமிடங்களுக்கும் மேலாகக் கழுத்தை நசுக்கிப் படுகொலை செய்தான் என்கிற செய்தியைப் படித்திருப்பீர்கள்; அந்தக் கொடூரக் காட்சியைத் தொலைக்காட்சிகளிலும் பார்த்திருப்பீர்கள்.

பல்பொருள் அங்காடி ஒன்றில் பொருட்களை வாங்கிவிட்டுக் கள்ள நோட்டைக் கொடுத்தார் என்ற நிரூபிக்கப்படாத குற்றத்தின் பேரில் 46 வயதான ஜார்ஜ் ஃப்ளாய்ட் கொடூரமான முறையில் கொல்லப்பட்டுள்ளார். அவர் கறுப்பினத்தவர் என்பதால் விசாரணை தேவைப்படவில்லை. நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்று நிரூபிக்க வேண்டிய அவசியமும் இல்லாமல் போயிற்று. இந்த நிகழ்வு அப்பட்டமான நிறவெறியின், இனவெறுப்பின் வெளிப்பாடு.

கொல்லப்பட்ட ஜார்ஜ் ஃப்ளாய்ட் ஒரு 'ஹிப்ஹாப்' கலைஞர், கால்பந்து, கூடைப்பந்து ஆட்டக்காரரும்கூட. ஆறடி உயரமும் 110 கிலோ எடையும் கொண்டவர். பல குற்ற வழக்குகளில் சிக்கி இதற்கு முன்னரும் அவர் தண்டனை பெற்றவர் எனச் சொல்லப்படுகிறது. கொரோனா நோய்ப் பாதிப்பிலிருந்து மீண்டு,வேலை இழந்து தவித்த நிலையில் அவருக்கு இவ்வாறு நேர்ந்துள்ளது. போலீஸ்காரன் குரல்வளையை நசுக்கிக் கொன்றபோது 'எனக்கு மூச்சு முட்டுகிறது; கொல்லாதீர்கள்' என்று கெஞ்சியபடியே உயிர்விட்டிருக்கிறார், பிள்ளைகள், பேரன் பேத்திகள் கொண்ட அவர்.

அவரது படுகொலையைக் கண்டித்து, அமெரிக்க நகரங்களில் மட்டுமல்ல, அகிலமெங்கும் ஆர்ப்பாட்டங்கள், கண்டனப் பேரணிகள் நடந்தேறின. அந்த நிறவெறியைக் கண்டித்துக் கறுப்பர்கள் மட்டும் அல்ல, மனச்சாட்சி உள்ள மனிதர்கள் அனைவரும் உரத்துக் குரல் எழுப்பினர். அவ்வாறு உரத்து முழங்கிய இசைப்பாடல் ஒன்றினை மலையாளத்திலிருந்து தமிழாக்கம் செய்திருக்கிறேன்; படித்துப் பயன்கொள்க.

## கறுப்புக் கர்ஜனை

எனது கழுத்தை அழுத்தும் விசையில்
எனக்கு மூச்சு முட்டுது.

எனது நிறத்தை வெறுக்கும் நாட்டில்
எனக்கு மூச்சு முட்டுது.

என் வயிற்றுப்பசி தீயாய்க் கனல்கையில்
எனக்கு மூச்சு முட்டுது.

எனது படுக்கையாய்த் தெரு ஆகுகையில்
எனக்கு மூச்சு முட்டுது.

எனது உயர்வுக்கு எல்லை வகுக்கையில்
எனக்கு மூச்சு முட்டுது.

எனது வியர்வைக்கு விலை குறைகையில்
எனக்கு மூச்சு முட்டுது.

எனது நிலத்தின் விலை சரிகையில்
எனக்கு மூச்சு முட்டுது.

எனது ஓட்டுக்கு விலை பேசுகையில்
எனக்கு மூச்சு முட்டுது.

எனது குழந்தைக்குக் கூட்டாளி குறைந்தால்
எனக்கு மூச்சு முட்டுது.

எனது இரைப்பு ஓயாவிட்டால்
எனக்கு மூச்சு முட்டுது.

எனது எதிர்ப்பின் வலிமை குலைந்தால்
எனக்கு மூச்சு முட்டுது.

எனக்கு நேராய் நீளும் விரலால்
எனக்கு மூச்சு முட்டுது.

என்னை ஒடுக்கச் சட்டம் தீட்டினால்
எனக்கு மூச்சு முட்டுது.

என் கை அள்ள குவியும் கழிவால்
எனக்கு மூச்சு முட்டுது.

என்னை இறக்கிடும் யுத்தச் சூளையில்
எனக்கு மூச்சு முட்டுது.

என் உயிருக்கான காலக்கெடுவாய்
எனக்கு மூச்சு முட்டுது.

என்னை விழுங்கும் காதல் சுழலில்
எனக்கு மூச்சு முட்டுது.

எனக்கு மேடையில் வேடம் சிறிதெனில்
எனக்கு மூச்சு முட்டுது.

எனக்குக் கிடைக்கும் புகழைத் தடுத்தால்
எனக்கு மூச்சு முட்டுது.

என்னை வெறுக்க வார்த்தைகள் கோர்த்தால்
எனக்கு மூச்சு முட்டுது.

எனக்கு வேண்டும் வண்ணச் சிறகுகள்
எனக்கு மூச்சு முட்டுது.

எனக்கு வேண்டும் ஏணிப்படிகள்
எனக்கு மூச்சு முட்டுது.

எனக்கு வேண்டும் நீதிப்பாதைகள்
எனக்கு மூச்சு முட்டுது.

எனக்கு வேண்டும் நீளும் கனவுகள்
எனக்கு மூச்சு முட்டுது.

எனது எரியும் தமனியில் ஏறும்
எனது குருதித்துளிகளை நோக்கி
எனது நிறத்தைத் தேடும் கண்ணால்
என்னைச் சமமாய் நடத்தும் நாட்டில்தான்
எனக்கு மூச்சு சீராய்க் கிடைக்கும்.

*(மேற்கண்ட இசைப்பாடலை இயற்றியவர் ஸோஹன் ரோய். இசை அமைத்துப் பாடியிருப்பவர் பி.ஆர். பிஜுராம். இந்தப் பாடலின் கம்பீரம் கேட்க www.sohanroy.com என்னும் வலைத்தளத்தை அணுகவும்.)*



கட்டுரை

■ அமரந்த்தா

# சேகுவாரா: மருத்துவ சர்வதேசியத்தின் ஊற்றுக்கண்

“உலகிலுள்ள ஆகப்பெரும் செல்வந்தரின் அனைத்து செல்வங்களையும்விட ஒரு மனிதனின் உயிர் பெருமதி மிக்கது... அதிக சம்பளம் பெறுவதைக் காட்டிலும் பெருமிதம் அளிப்பது அருகாமையில் உள்ள ஒருவருக்கு சேவை செய்வது. பொன்னைக் குவித்து வைப்பதைக் காட்டிலும் சேவையின் மூலம் மக்களின் நன்றியுணர்வைப் பெறுவதில் நிச்சயத்தன்மை உள்ளது, அது நீடிக்கவல்லது.” என்றார் சேகுவாரா.

சேகுவாராவின் இந்த வாசகத்தை வட அமெரிக்க முதன்மைச் செயலர் ஹென்றி கிஸிஞ்சர் கேலி செய்தார்: “கியூபாவினர் வெல்லற்கரியவர்கள் என்ற கேலிக்குரிய பழங்கதையை நிராகரிக்கும் நேரம் வந்து விட்டது. உலகளவில் முக்கியத்துவம் வாய்ந்த “கியூபா வின் அயலுறவுக் கொள்கை” என ஒன்று இருப்பதாக கேள்விப்பட்டதுண்டா ?”

ஆனால் இன்று கொரோனா கிருமித் தொற்று உலகை உலுக்கி வரும் நிலையில், சேகுவாரா கூறியது எந்தளவு உண்மை என்பதை அறுபதாண்டுகளின் பின்னர் கண்ணாறக் காண்கிறோம். மருத்துவ சேவை என்பது ஒவ்வொரு மனிதருக்கும் அடிப்படை உரிமையாக இருக்க வேண்டும் என்பது சேகுவாராவின் கனவு. எனவேதான் மருத்துவ சேவையைப் பொறுத்தவரை கியூபா எங்கெங்கு உதவி தேவையோ அங்கங்கு மருத்துவக் குழுவை அனுப்பி இலவசமாக சேவையாற்றி வருகிறது. எத்தகைய நெருக்கடியையும் எதிர் கொண்டு சோசலிச கொள்கைகளைக் கைவிடாத கியூபா, மருத்துவத்திலும் பேரிடர்கால மீட்புச் சேவையிலும் பாரபட்சம் காட்டுவதில்லை. அதனால்தான் *2005* ஆம் ஆண்டு பாகிஸ்தானில் (காஷ்மீர் பகுதி) நிலநடுக்கம் ஏற்பட்ட போது 2000 பேர் கொண்ட கியூப மருத்துவக் குழு அங்கு சென்று, பல



ஆண்டுகள் தங்கி மீட்புப் பணியில் ஈடுபட்டது.

இத்தாலியில் கூட்டங்கூட்டமாக செத்து மடிந்த மக்களைக் காக்க கியூப மருத்துவர்களை அந்த நாடு இருகரம் நீட்டி வரவேற்றது நம் காலத்தில் நிகழ்ந்திருக்கும் ஓர் அதிசயம். இதற்கு நேர்மாறாக, முந்தைய அதிபர் கேட்டுக் கொண்டதன் பேரில் பிரேசில் மக்களிடையே பணியாற்றி வந்த கியூப மருத்துவக் குழுவை "கம்யூனிஸ்டுகள்" என்று கூறி நாட்டைவிட்டு வெளியேற்றிய இன்றைய அதிபர், கொரோனா பரவலில் உயிரிழப்பு அதிகரித்தபின் இப்போது கையைப் பிசைந்து கொண்டு வருந்துவதையும் நாம் காண்கிறோம். இதுவரை கியூப மருத்துவக் குழுவினர் 59 நாடுகளில் 1, 09, 211 பேரை கொரோனா தொற்றிலிருந்து குணப் படுத்தியுள்ளனர் என்று கியூப வெளி விவகார அமைச்சர் புள்ளி விவரங்களை அளித்துள்ளார்.

கியூபாவின் மருத்துவ சேவை என்பது மனிதாபிமான அடிப்படையிலானது. மருத்துவ சேவையும் டன் கணக்கிலான மருந்துகளும் முற்றிலும் இலவசமாகவே வழங்கப் படுகின்றன. "மனித குலமே தாய்நாடு" என்ற கியூபப் புரட்சியின் தந்தை ஹொசேமார்த்தியின் கருத்து தான் இவ்வாறு துயர் கொண்ட உலக மக்கள் சேவையாக நிலைபெற்றுள்ளது. புரட்சிகர அரசு பதவியேற்ற மறுஆண்டே (1960) சிலேயில் ஏற் பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தினால் நோயுற்ற மக்களையும் நிலைகுலைந்த நாட்டையும் இடர்ப் பாடுகளிலிருந்து மீட்க கியூபா தனது நிபுணர்களை அனுப்பி வைத்தது. 1963 ஆம் ஆண்டு பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்த அல்ஜீரியாவில் மருத்துவப் பணியாற்ற கியூப மருத்துவர்களும், அவர்களுக்கு உதவ மருத்துவப் பணியாளர்களும் சேவைசெய்யச் சென்றனர்.

40,000 ஆப்பிரிக்க மாணவர்கள் கியூபாவில் மருத்துவம் பயின்றுள்ளனர். 3,000 பேர் மருத்துவ உயர்கல்வி பயின்றுள்ளனர். 2014 ஆம் ஆண்டு மேற்கு ஆப்பிரிக்காவில் எபோலா வைரஸ் தாக்குதல் ஏற்பட்டபோது அதனைக் கட்டுப் படுத்தும் வழி ஒருவருக்கும் தெரியவில்லை. வட அமெரிக்கா "ராணுவ உதவி" செய்வதாகக் கூறியது. பிற நாடுகள் "பணஉதவி" செய்வதாக வாக்களித்தன. அப்போது கியூபாவிலிருந்து 62 மருத்துவர்களும், 103 செவிலியர்களும் உடனடியாக சியர்ரா லியோன் சென்று பாதிக்கப்பட்ட மக்களுடன் தங்கி சிகிச்சை அளித்தனர். எபோலா வைரஸ் கட்டுப்பாட்டுக்குள் வந்தபின் நாடு திரும்பிய இக்குழுவினர், ஹவானாவிலுள்ள மெத்ரோ கோருவி மருத்துவ மையத்தில் 13,000 ஆப்பிரிக்கர்களுக்கும், 66,000 லத்தீன் அமெரிக்கர் களுக்கும், 620 கரீபிய மக்களுக்கும் எபோலா எதிர்ப்பு மருத்துவப் பயிற்சி அளித்தனர்.

கல்வியும் மருத்துவ சேவையும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் ஏழை நாடான புரட்சி கர கியூபாவில், மருத்துவர்கள் உருவாக்கப்படும் முறையே வித்தியாசமானது. முதல் இரண்டு ஆண்டுகள் பல்கலைக்கழக வளாகத்தில் பயிற்று விக்கப்படும் மருத்துவ மாணவர்கள், அடுத்த மூன்று ஆண்டுகள் வெவ்வேறு பாடங்களை வெவ்வேறு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு சேவையாற்றும் நேரடி அனுபவம் வழியே கற்கின்றனர். அதனால்தான் பல்வேறு நாடுகளில் சேவை செய்யும் கியூப மருத்துவக் குழுவினர், சற்றும் தயக்கமின்றி பாதிக்கப்பட்ட மக்களுடன் தங்கி, அவர்களோடு உண்டு உறங்கி சேவையாற்றி வருகின்றனர்.

கியூபா நாட்டினுள் மக்களிடையே பணியாற்ற தற்போது 89,000 மருத்துவர்களும், 84,000 செவிலி யர்களும், 9,000 இறுதியாண்டு மருத்துவ மாண வர்களும் உள்ளனர் (மக்கள்தொகை 1,10,40,000). வறுமையும் நோயும் மலிந்த ஏழை மக்கள் நிறைந்த நாடுகளுக்கு கியூபா "ஹென்றி ரீவ்ஸ் மருத்துவ பிரிகேட்" என்றழைக்கப்படும் தனது மருத்துவ நிபுணர்களை அனுப்பி வைக்கிறது. (கியூபாவின் முதல் விடுதலைப் போரில் உயிரிழந்த வட அமெரிக்கரின் பெயர்) "முன்னேறிய நாடுகள்" அனுப்பும் பேரிடர் துடைப்புக் குழுவினரோ நட்சத்திர ஓட்டல்களில் தங்கி சிறிதளவு மருந்துகளை மட்டும் கொடுக்கின்றனர்.

1999ஆம் ஆண்டு ஹவானாவின் புறநகர்ப் பகுதியில் உலகின் ஆகப்பெரிய மருத்துவப் பள்ளியான "லத்தீன் அமெரிக்க மருத்துவப் பள்ளி" உருவாக்கப்பட்டது. லத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகிய முக்கண்டங்களில் உள்ள நாடுகளின் ஏழை மாணவர்கள் இலவசமாக ஆறு ஆண்டு மருத்துவப் படிப்பை இப்பள்ளியில் படிக்கிறார்கள். வட அமெரிக்காவிலிருந்தும் டஜன் கணக்கில் ஏழை சிறுபான்மையின மாண வர்கள் இங்கு படிக்கிறார்கள். எளியதோர் நுழைவுத் தேர்வு மூலம் இப்பள்ளியில் படிக்க தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள், படிப்பு முடிந்தபின் தத்தமது நாடு திரும்பி, ஏழை மக்களுக்கு சேவை செய்வோம் என்று உறுதிமொழி ஏற்கிறார்கள்.

ஆண்டுக்கு சுமார் நான்காயிரம் மாணவர்கள் இப்பள்ளியில் சேர்ந்து பயில்கிறார்கள். 2014 ஆம் ஆண்டு உலகிலேயே மிகப் பெரிதான லத்தீன் அமெரிக்க மருத்துவப் பள்ளியைப் பார்வையிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான்கிமூன், "அறிவார்ந்த பங்களிப்பிற்காகவும், தெற்கு நாடுகளுக்கிடையே கூட்டுறவை வலுவாக் கும் தலைமைக்காகவும், சர்வதேச அளவில் நல் வாழ்வை அளிப்பதில் முன்னணியில் இருப்பதற் காகவும்" இப்பள்ளியைப் பாராட்டினார். "உலகிலேயே உயர்தரமான மருத்துவப் பள்ளி இதுதான்" என்றும் சான்றளித்தார்.

வெனிசுவேலாவில் ஊகோ சாவேஸ் அரசு ஆட்சிக்கு வந்தபின் கியூப மருத்துவத்தின் அடிப்படைகளை மாதிரியாகக் கொண்ட தேசிய மருத்துவக் கொள்கை உருவாக்கப்பட்டது. அதனால்தான் அந்நாட்டில் கொரோனா தொற்று



● கியூபாவுக்கு இவ்வுலகம் நன்றி சொல்கிறது.

ஆகக் குறைவாக இருந்தது. வெனிசுவேலாவில் மட்டுமே 30,000 கியூப மருத்துவப் பணியாளர்கள் சேவையாற்றி வருகின்றனர். “தி அசோசியேட் பிரஸ்” அளித்துள்ள செய்தியின்படி, கொரோனா தொற்று மருத்துவத்திற்காக 67 நாடுகளில் 37,000 கியூப மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர். பல ஆப்பிரிக்க நாடுகளில் கியூப மருத்துவர்கள் மக்களோடு தங்கி பல்லாண்டுகளாக சேவை செய்து வருகிறார்கள்.

அர்ஜென்டினாவில் பிறந்த மருத்துவ மாணவரான சே, லத்தீன் அமெரிக்கா முழுவதும் பயணித்தார். மக்களிடையே அறியாமையும் வறுமையும் நோயும் விரும்பியவாறு வாழ்வை அமைத்துக்கொள்ள விடாமல் செய்வதைக் கண்டறிந்தார். இடதுசாரி அரசுகள் வட அமெரிக்க சதியால் கவிழ்க்கப்படுவதைக் கண்டு மனம் வெதும்பினார். மெக்சிகோ சென்றடைந்த சேகுவாரா, கியூபப் புரட்சியில் ஃபிடல் காஸ்ட்ரோவுடன் இணைந்தார். கியூபாவில் புரட்சிகர அரசு காலூன்றிய பின், ஆப்பிரிக்க நாடுகளில் பயணித்து விட்டு, இறுதியாக புரட்சிக்குத் தயாராக இருப்பதாக அவர் கருதிய பொலிவியா வந்து சேர்ந்தார். பத்து மாதங்கள் பொலிவிய மலைக் காடுகளில் பல நாடுகளின் உறுப்பினர்களைக் கொண்ட தனது சிறிய படையுடன் செயல்பட்டு வந்தார். 1967 அக்டோபர் 8 ஆம் தேதி, இகெரா தெல் யூரோ என்ற இடத்தில் நடந்த பொலிவிய ராணுவத்துடனான சண்டையில் காலில் காயமுற்ற அவர், தோட்டாக்கள் தீர்ந்து போன துப்பாக்கியுடன் கைதானார். மறுநாள் காலை காயமுற்ற போர்க் கைதியான அவர், வட அமெரிக்க சி.ஐ.ஏ. வழிகாட்டலின்படி சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆனால் அவர் கனவு கண்ட மருத்துவ சர்வதேசியம் சற்றும் பின்னடையாமல் கடந்த அறுபது ஆண்டுகளாக பல இடர்ப்பாடு களைக் கடந்து இன்று கியூபாவில் தழைத்தோங்கி வளர்ந்துள்ளது. கடந்த 60 ஆண்டுகளாக வர்த்தக பொருளாதார தடைகளினால் கியூபாவின் கழுத்தை நெறித்து வரும் வட அமெரிக்க அரசு கியூபாவிடமிருந்து மருந்துகளை வாங்க வெட்கப்பட்டு, ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்களை சாகவிட்டுள்ளது.

வட அமெரிக்காவின் மினசோட்டா மாநிலத்தின் சட்டசபையில் கொரோனத் தொற்றை எதிர்கொள்ள கியூப நாட்டுடன் அறிவியல், மருத்துவத் துறைகளில் இணைந்து செயல்பட வேண்டுமென வலியுறுத்தும் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. ஒப்புதலுக்காக மாநில ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றை ஒழிப்பதில் வெற்றி கண்டுள்ள கியூப நாட்டின் அனுபவங்களை அறிந்து பயன்படுத்த உதவும் வகையில், அந்நாட்டின் மீதுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்குமாறு அதிபர் டிரம்ப்பை இத்தீர்மானம் கேட்டுக் கொள்கிறது. தடை நீங்கினால்தான் கியூபா தொற்றைப் போக்கப் பயன்படுத்திய “இன்டெர்பெரான் ஆல்ஃபா 2பி” போன்ற மருந்துகளை இறக்குமதி செய்ய முடியும்.

1981 ஆம் ஆண்டே கியூபா ஆல்பா , காமா இண்டர்பெரான் மருந்துகளின் உற்பத்தியைத் தொடங்கி, இம்மருந்துகளை டெங்கு போன்ற தொற்று நோய்களைப் பரவாமல் தடுக்க வெற்றிகரமாகப் பயன்படுத்தி வருகிறது. ஆல்பா, காமா மருந்துகளின் இணைப்பில் உருவான ஹீபெர்பெரான் (Heberferon) தோல் புற்று நோய்க்கு சிறந்த மருந்தாகியது. தற்போது ஹீபெர்பெரான் கொரோனா தொற்றை முற்றிலுமாக நீக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மருத்துவமனையில் நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்டு ஆய்வு செய்ததில், இதன் பயன்பாடு மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. வாரத்திற்கு இருமுறை என இரண்டு வாரங்கள் ஹீபெர்பெரான் தரப்பட்ட நோயாளிகள், தொற்றிலிருந்து 100 விழுக்காடு குணமடைந்துள்ளதாக கியூப மருத்துவர் பெல்லோ அறிவித்துள்ளார்.

மினசோட்டா மாநிலம், வட அமெரிக்காவின் மற்ற மாநிலங் களையும் கியூப நாட்டுடன் இணைந்து செயல்பட உதவும் தீர் மானத்தை இயற்றக் கோரியுள்ளது. இதேபோல் இங்கிலாந்து அரசை கொரோனாவிற்கு எதிரான போரில், கியூப நாட்டுடன் இணைந்து செயல்பட வலியுறுத்தி இடதுசாரி இயக்கங்கள் அங்கு போராடி வருகின்றன. கொரோனாவின் பிடியில் சிக்கித் தடுமாறும் தமிழக அரசும் கொரோனா தொற்றை வெல்ல கியூபா பயன்படுத்திய மருந்துகளை இறக்குமதி செய்து தொற்றை நீக்க வேண்டும்.

தமிழகத்தின் மக்கள் இயக்கங்கள் மாநில அரசை, மைய அரசை கொரோனா எதிர்ப்புப் போரில் கியூப நாட்டுடன் இணைந்து செயல்பட வலியுறுத்த வேண்டும். ●

● கொரோனாவை குணப்படுத்தும் கியூப மருந்து



தோழர் வி. முத்தையாவின் டைரிக் குறிப்பிலிருந்து...

# அதிகாரமிக்கவர்களின் வேட்டைக்காடாக மாறிவரும் டியுசிஎஸ் நிறுவனம்

## தோழர்களே...

கன்னியாகுமரி மாவட்டம் வீரமார்த்தாண்டன் புதூரில் பிறந்த நான், வேலை தேடி சென்னைக்கு 1973இல் வந்து சேர்ந்தேன். பல்வேறு இடங்களில் வேலைக்கு அலைந்து கடைசியாக 1975 ஆம் ஆண்டு திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கத்தில் (டியுசிஎஸ்) கணக்கராக பணியில் சேர்ந்தேன். டியுசிஎஸ் நிறுவனம், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மத்தியில் பேர் பெற்ற நிறுவனமாக அப்போதே விளங்கி வந்தது. 9.4.1904 ஆம் ஆண்டு 310 ரூபாயை மட்டுமே மூலதனமாகக் கொண்டு தொடங்கப்பட்ட பழமையான நிறுவனம் அது. அக்காலத்தில் பெரும் புகழ்பெற்ற வெள்ளி நாக்கு திரு.வி.எஸ். சீனிவாச சாஸ்திரி அவர்களின் தலைமையில் சென்னை மாகாணத்தில் புகழ்பெற்ற மனிதநேய முன்னோடிகளான ராவ் பகதூர் கே.பி. ராமநாத அய்யர், ராவ் சாகிப் டி.கே.அனுமந்தராவ், டாக்டர் சி.வி. கிருஷ்ணசாமி அய்யர், திவான் பகதூர் எம். ராமசாமி நாயுடு, டி.எஸ். சுந்தரம் அய்யர், வி. ராமசாமி தீட்சிதர், எஸ். குப்புசாமி அய்யர், மகாமகோபாத்யாய உ.வே. சாமிநாத அய்யர், பண்டிட் எஸ்.எம். நடேச சாஸ்திரியார், எஸ். வெங்கட்ராம் அய்யர், சி.வி. கங்காதர சாஸ்திரியார், ராவ் சாகிப் டி.எஸ். சுப்பிரமணி அய்யர், சிங்காரவேலு செட்டியார் உள்ளிட்ட 14 பேர் தான் இந்தச் சங்கத்தின் நிறுவனர்கள். இவர்களின் தன்னலமற்ற உழைப்பும் சேவையும் பொதுமக்கள் மத்தியில் இந்தச் சங்கத்தின் மீது பெரிய மதிப்பை உண்டாக்கியது. மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து உறுப்பினரானார்கள். இதன் காரணமாக திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், எழும்பூர் பகுதிகளில் புதிய கிளைகள் திறக்கப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் சொந்தமாக இடம் வாங்கி புதிய புதிய கிளைகள் திறக்கப்பட்டுக் கொண்டே இருந்தன.

1942 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற போது அப்போதிருந்த அரசு பொது மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை விநியோகம் செய்ய டியுசிஎஸ் நிறுவனத்தையே தேர்ந்தெடுத்தது. அதன்படி 1942 முதல் 1945 வரை சென்னை மாநகர மக்களுக்குத் தேவையான அனைத்து உணவுப் பொருட்களையும் விநியோகம் செய்து தன்னலமற்ற சேவை ஆற்றியது. எனவே, அப்போதைய மாநில அரசு, உணவுப் பொருட்களை அரசு சார்பில் விநியோகம் செய்த வகையில் கிடைத்த இலாபத்தில் 50 விழுக்காட்டினை டியுசிஎஸ். நிறுவனத்திற்கு அன்பளிப்பாக வழங்கியது. அந்தத்தொகையின் மதிப்பு ரூ. 1.87 இலட்சமாகும். அரசு அளித்த அந்த நிதியைக் கொண்டு மொத்தம் ரூ.

3.25 இலட்சம் மதிப்பீட்டில் திருவல்லிக்கேணியில் டியுசிஎஸ் நிறுவனத்திற்கு இடம் வாங்கி 1953இல் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டது. அதுதான் திருவல்லிக்கேணி பெரிய தெருவில் தற்போதும் பொலிவுடன் காட்சி அளிக்கும் டியுசிஎஸ் தலைமை அலுவலகம்.

மக்களுக்குத் தேவையான தரமான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யுமிடங்களிலிருந்தே குறைந்த விலைக்கு கொள்முதல் செய்து நியாயமான லாபத்தை நிர்ணயம் செய்து மக்களுக்கு மலிவு விலையில் வழங்கி வந்தது. அதன்மூலம் சங்கமும் நல்ல வளர்ச்சி கண்டது. மக்களும் குறைந்த விலையில் தரமான பொருட்களைப் பெற்றுப் பயனடைந்தனர்.

ஒவ்வொரு கிளையின் வாசலிலும் வாடிக்கையாளர்கள் அமர்ந்து படிக்கின்ற வகையில் தமிழ், ஆங்கில நாளேடுகள் வாங்கிப் போடப்பட்டன. ஒரு வாசக சாலைக்கு வருகை தருவதைப்போல வருகை தந்து வாடிக்கையாளர்கள் வசதியாக அமர்ந்து நாளிதழ்களைப் படிப்பர். படித்து முடித்துவிட்டு குடும்பத்துக்குத் தேவையான நுகர்பொருட்களை வாங்கிச் செல்வர்.

சொந்தமாக நல்லெண்ணெய் உற்பத்தி செய்ய மரச்செக்கு ஆலை இந்தச் சங்கத்துக்கு இருந்தது. ஒவ்வொரு நாளும் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் தகர டின்னில் சீலிட்டு கடைகளுக்கு விற்பனைக்கு வரும். அதில் கிடைக்கும் புண்ணாக்கை சென்னை பால் மாடு வளர்ப்போர்கள் விரும்பி வாங்கிச் செல்வார்கள். புண்ணாக்கு கிடைக்காத நாட்களில் தனது மாடுகள் குறைந்த அளவே பால் கொடுத்தாக ஊழியர்களிடம் சண்டையிடுவார்கள். அப்படி ஒரு ஒட்டுறவு சங்கத்துக்கும் மக்களுக்கும் இருந்தது. சென்னைத் துறைமுகத்திலிருந்து இரவு பகலாக டியுசிஎஸ் நிறுவனத்தில் சரக்குகள் இறங்கிக் கொண்டே இருக்கும். அரிசி, பருப்பு போன்றவை மூட்டைகளில் இருக்க வேண்டிய அளவை விடவும் ஒருபடி, இரண்டு படிகள் அளவு அதிகமாகவே இருக்கும். இதனால் தொழிலாளிகள் பயமில்லாமல் பணிகளைச் செய்வர். இதன் காரணமாக வாடிக்கையாளர்கள் தரமான பொருட்களை சரியான விலையிலும் எடையிலும் பெற்று வந்தனர்.

அப்படி பெயர் பெற்று வளர்ந்து நின்ற டியுசிஎஸ். நிறுவனம், இன்று பேராசைக்காரர்களின் கொள்ளைக்காடாக மாறிக் கிடக்கிறது. இதன் காரணமாக பல லட்சம் ரூபாய் தொடர் நட்டத்திலும் தள்ளாடிக் கொண்டிருக்கின்றது. கேள்வி கேட்கின்ற தொழிற்சங்கங்களை பலவீனப்படுத்தி பழி வாங்கி தங்களுக்கு வேண்டிய தொழிற்சங்கங்களை உருவாக்கி வைத்துக் கொண்டு செயல்படும் நிர்வாகத்தால், நிறுவன நலனும் ஊழியர் நலனும் பறிபோய்க் கொண்டிருக்கிறது. இதனால் 20 சதவீத ஊழியர்கள் சுகபோகமாகவும் 80 சதவீத ஊழியர்கள் வாழ்க்கைப் போராட்டத்திலும் வாழ்ந்து வருகின்றனர்.

வியாபாரத்தை அதிகரிக்க தகுந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. நடக்கும் வியாபாரத்தில் கிடைக்கும் இலாபத் தொகையையும் தேவையில்லாமல் செலவு செய்வதால் நாளுக்கு நாள் நடைமுறை மூலதனம் குறைந்து கொண்டே வருகிறது. இதையே காரணமாகக் கொண்டு சம்பள உயர்வு கொடுக்கும்போது நட்டத்தைச் சுட்டிக்காட்டி, உயர்வு மறுக்கப்படுகிறது. அல்லது சொற்ப உயர்வு கொடுத்து சரிக்கட்டப்படுகிறது.

முப்பத்தைந்து ஆண்டுகள் பணிமுடித்து பத்து ஆண்டுகளுக்கு முன்னால் நான் ஓய்வு பெற்றபோது எனக்குக் கடைசியாகக் கிடைத்த சம்பளம் பதின்மூன்றாயிரம் ரூபாய். ஆனால் இதே போன்று அரசு ரேசன் கடைகளில் வேலை செய்த தொழிலாளி பெற்ற சம்பளம் மாதம் நாற்பதாயிரம் ரூபாய். ஒரே பணியைச் செய்கிற இரண்டு தொழிலாளிகளுக்கு எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்.

ஆனாலும் அந்த டியுசிஎஸ் நிறுவனத்தால்தான் என்னைப் போன்ற ஆயிரக் கணக்கான தொழிலாளிகளின் குடும்பங்கள் முனனேற்றமடைந்தன. நன்கு படித்த குடும்பங்களாக மாறின. அந்த நிறுவனம் இப்படி அதிகாரமிக்கவர்களின் வேட்டைக்காடாக மாறிக்கிடப்பதைக் கண்டு மனம் பதைபதைக்கிறது. கூட்டுறவில் ஆலமரமாய்த் தழைத்துவந்த இந்த நிறுவனம், சீரழிந்து வருவதைப் பற்றி அங்கு பணி செய்கிற தொழிலாளர்களோ, அல்லது அந்தச் சங்கத்தில் உறுப்பினராய் இருக்கிற மக்களோ யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த சங்கத்தில் கிடைத்த சொற்ப வருமானத்தைக் கொண்டே எங்களை மகிழ்ச்சியாக வைத்திருந்த எனது வாழ்க்கைத் துணைவியாரை இந்த மூன்றாம் ஆண்டின் நினைவுநாளில் நினைக்கையிலும் கண்கள் பனிக்கின்றன.

## மடல் திறப்பு

**“கா**க்கை” ஜூன், 2020 இதழை இணையவழி படித்தேன். சோ. தர்மன் அவர்களின் “பதிமூணாவது மையவாடி” நாவலை இன்னும் நான் படிக்கவில்லை. விரைவில் படிப்பேன். எனினும், இந்நாவல் குறித்து முனைவர் ஜே. ஜெகத்ரட்சகன் எழுதிய விமரிசனக் கட்டுரையில் சொல்லப்பட்டுள்ள பல செய்திகளைப் படிக்கும்போது, விருதுபெற்ற நாவலாசிரியர் சோ. தர்மன் பார்வை பழுதுபட்டவராகவே தெரிகிறார். விடுதலைக்கு முற்பட்ட காலத்தில், இந்தியாவிற்கு வந்த மேயோ என்ற பெண் எழுத்தாளர், கல்கத்தாவின் அழுக்குகளும், பிற அவலங்களும் நிறைந்த சில தெருக்களைப் பார்த்துவிட்டு, இந்தியா முழுமையும் அப்படித்தான் இருக்கிறது என்று எழுதினார். தன்னுடைய மிகக்குறுகிய பார்வையின் மூலம் அனைவரது வெறுப்புக்களையும் தேடிக்கொண்டார். காந்தி அடிகள் அவர் எழுதியதை, “சானிடரி இன்ஸ்பெக்டர்ஸ் ரிபோர்ட்” என்று சொல்லுமளவிற்கு கேவலப்பட்டுப் போனார். சோ. தர்மன் அவர்களது நாவலும், இதையொத்துதான் இருக்கும் என்று நினைக்கிறேன். கிறித்துவ மதக்கோட் பாடுகளோடு நான் எப்போதும் இசைவு கொண்டதில்லை. நான் மதமறுப்பாளன் என்ற “நற்செய்தியை” என்னால் கர்வத்துடன் கூறமுடியும். ஆனால், அதற்காக, கல்வி தமிழகத்து ஊர் அனைத்தும் விதைக்கப்பட்டு, விருட்சங்களாய் நிற்பதற்கு, கிறித்துவ மதத்தினர் ஆற்றியுள்ள தொண்டையும், பங்களிப்பையும் மறந்து விடமுடியுமா? கிறித்துவ மதத்தில், பாராட்டுவதற்கு பல செய்திகள் இருக்கின்றன. நாகரிகமான முறையில் கண்டனம் தெரிவிப்பதற்கும், இன்னும் அதிகமான செய்திகள் இருக்கின்றன. இறுதியாக எனக்கோர் ஐயம். விமரிசகர் ஜே. ஜெகத்ரட்சகன் குறிப்பிட்டதுபோல், யாருக்காகவாவது எதற்காகவேணும் நன்றி பாராட்டும் முகத்தான், தருமன் அவர்கள் தமது இந்த நான்காவது நாவலான, “பதிமூணாவது மைய வாடி”யைப் படைத்திருப்பாரோ?

**– ஜோசப் குமார், திருச்சி**




**ஜூ**ன் 2020 ‘காக்கை’யில், ஊர்ச்சுற்றிக் காக்கையார் ஓர் அறிவியல் கட்டுரையைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார். அதுவும் 50 ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் எழுதப்பட்ட இயற்பியல் கட்டுரை.. கட்டுரையை முழுமையாக வாசித்தபோது மிகவும் பிரமிப்பாக இருந்தது. காரணம், அறிவியல் என்றால் அது ஆங்கிலத்தில் மட்டுமே சாத்தியம் என்று நம்பிக்கொண்டிருந்த காலகட்டத்தில். சர் சி.வி. இராமன் நோபல் பரிசு பெறுவதற்குக் காரணமான ‘இராமன் விளைவு’ பற்றிய அக்கட்டுரை தமிழில் வெளிவந்துள்ளது. வரலாற்றுச் செய்திகளை மட்டுமல்லாமல், இராமன் விளைவிற்கான குவாண்டம் கொள்கையின் அடிப்படையிலான கொள்கை விளக்கத்தையும் தமிழில் எழுதியிருப்பது மிகவும் வியப்பாக இருந்தது. நான் M.Sc இயற்பியல் படித்தபோது,(1969 - 71) இராமன் விளைவு சோதனைக்கான ‘நிறமாலை வரைவி’ (Spectrograph) மதுரைக் கல்லூரி இயற்பியல் ஆய்வுக்கூடத்தில் இருந்தது. அதனைப் பயன்படுத்தி, இராமன் விளைவுக்கான நிறமாலையைப் பதிவுசெய்து, கணக்கீடுகளும் செய்திருக்கிறேன். 1972இல் அரசுக்கல்லூரியில் நான் பணியில் சேர்ந்தபோது, அப்போது இருந்த இயற்பியல் பேராசிரியர்கள் தமிழில் பாடம் நடத்த மிகவும் சலித்துக்கொள்வார்கள். அவர்களுடைய வெறுப்புற்ற மனநிலையை அறிந்தவன் என்பதனால், நான் அக்கட்டுரையை வியந்து பார்க்கிறேன். மாத்திரமல்ல, அரசியல்வாதியாக மட்டுமே அறியப்பட்ட இராஜாஜியும், ஒளி அடிப்படையிலான இராமன் விளைவை, ஒலிப்பரவலைக்கொண்டு விளக்கியதைப் பதிவுசெய்திருப்பது, இராஜாஜியின் மற்றொரு பக்கமான அறிவியல் சார்ந்த அறிவை நமக்குக் காட்டுகிறது. தமிழகத்தில், கல்லூரிகளில் அறிவியல் பாடங்களைத் தமிழில் நடத்தத் தயங்கிக்கொண்டிருந்த காலகட்டத்தில், ஈழத்தில் அறிவியலுக்கென்று ‘அறிவொளி’ என்று ஒரு இதழ் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டிருக்கிறது என்னும் செய்தியும் நம்மை வியக்கவைக்கிறது. 1964இல் ஆரம்பிக்கப்பட்ட ‘அறிவொளி’ இதழின் 1967ஆம் ஆண்டு கருத்தரங்க சிறப்பு மலரில்தான் இ. பத்மநாப அய்யர் அக்கட்டுரையை எழுதியிருக்கிறா். நான் வாசித்த சில நூல்களிலிருந்து ஓர் இலக்கிய ஆர்வலராக மட்டுமே அவரை நான் அறிந்துவைத்திருந்தேன். ஆனால், அறிவியல் கட்டுரைகள் எழுதுவதில் அவர் ஒரு முன்னத்தி ஏராக இருந்திருப்பது அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். காக்கைக்கும், ஊர்ச்சுற்றிக்காக்கையாருக்கும் பாராட்டுகளும், நன்றியும். என்னை ஈர்த்த மற்றொரு கட்டுரை, சோ.தர்மனின் ‘பதிமூணாவது மையவாடி’ நாவலை முன்வைத்து, முனைவர் ஜே,ஜெகத்ரட்சகன் எழுதியிருக்கும் ‘காலவோட்டத்தில் கரையும் படைப்பாளி’ . மிகவும் ஆழமாக வாசித்து, உள்வாங்கி, அறச்சீற்றத்துடன் எழுதியிருக்கும் நூல்மதிப்புரை. “யாருடைய குரலையோ ஒலிக்குமாறு செய்துள்ளார் சோ.தர்மன்” என்றும் “ஓலைச்சிலுவை” எழுதிய ஜெயமோகன் சோ.தர்மனைப் பாராட்டியுள்ளது வியப்பில்லை’ என்றும் கூர்மையான விமர்சனங்களை வைத்துள்ளார். “சமூக அவலங்களை ஏதோ ஒருவகையில் அனைவரது பார்வையில் கொணர்ந்து, உரையாடல் நிகழ்த்துவதைப் படைப்பாளிகளே முன் நின்று துவங்கினர். ஆனால், அவர்கள் சார்பு நிலையில் குழைந்து, தங்களின் சுயமற்று, எவரையோ மகிழ்விக்கவும், ஆதாயம்கருதியும் படைக்கையில், உண்மை பிறழ்ந்து படைப்பும் படைப்பாளியும் கூர்மங்கி தொலைந்தே போவார்கள்” என்று காத்திரமாகக் கட்டுரையை முடிக்கிறார்.. காக்கையில் அவரது பங்களிப்புத் தொடர வாழ்த்துகள்.

**– சு.இராமசுப்பிரமணியன், தோவாளை**

**சோனியா ஷா**
அமெரிக்க எழுத்தாளர்,
புலனாய்வு ஊடகவியலாளர்

# கொரோனா தொற்றுக்கான மூலகாரணி அசாதாரண மிருகங்களா?

தமிழில்:
ரூபன் சிவராஜா

இன்று எம் தலைகளுக்கு மேல் ஒரு பெருந்தொற்று நிழல் தொங்கிக் கொண்டிருக்கின்றது. இதற்கு புதிய கொரோனா வைரஸ் பரம்பல் மட்டும் காரணமல்ல. டொனால்ட் டிரம்ப் நிர்வாகத்தின் அகழ்வு-உற்பத்தித் தொழிற்சாலைகளின் கட்டுப்பாடற்ற கார்பன் வெளியேற்றம், சூழலியல் பாதுகாப்பு சார்ந்த அக்கறையற்ற அனைத்து உற்பத்தித் தொழிற்துறை அபிவிருத்திகள், 'வாழிட அழிப்பு' நடவடிக்கைகளை இன்னும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மிருகங்களின் நுண்ணுயிரிகள் இலகுவாக மனித உடல்களுக்கு கடத்தப்பட ஏதுவான சூழலை இந்நடவடிக்கைகள் ஏற்படுத்துகின்றன.

து பாங்கோலின் அல்லது வௌவால் அல்லது நிராகரிக்கப்பட்ட முன்னைய ஊகமாக பாம்பிலிருந்து எனும் தகவல்கள் என தொற்றுக் கான மூலங்களாக இருக்கக்கூடும். கொரோனா வைரஸ் (கோவிட் 19) தொற்றின் தோற்றத்திற்கான மூலகாரணி எதுவென அடையாளம் காணுகின்ற அஞ்சலோட்டத்திற்கு மத்தியில், சீனாவில் மில்லியன் கணக்கான மக்கள் தனிமைப் படுத்தலிலும், பல நூறாயிரக்கணக்கானவர்கள் தொற்றுநோய்க்கு ஆளாகியும், பல்லாயிரக் கணக்கானவர்கள் உயிரிழக்கவும் நேர்ந்துள்ளது. ஏனைய நாடுகளில் தொற்றுப் பரவிக்கொண்டி ருக்கின்றது. வைரசின் தோற்றமூலம் தீர்வுகாண முடியாத ஒரு பெரும் புதிர். ஆனால் எந்தக் காட்டுமிருகம் இந்த வைரசைக் கடத்தியது என்ற கற்பனைகள் பெருந்தொற்றுக்களுக்கு அடிப் படையான மூலங்களாக விளங்கும் பாரிய பாதிப்புகளை மறைக்கின்றது. இதற்கான அடிப் படை விலங்கினங்களின் வாழிடங்கள் (Habitat) துரித கதியில் இழக்கப்பட்டு வருவதாகும்.

(**மொழிபெயர்ப்பாளர் குறிப்பு:** வாழிடம் - Habitat என்பது வெறுமனே வாழ்வதற்கான ஒரு இடம் என்ற பொருளிலானது மட்டும் அல்ல. (மிருக) உயிரினங்களின் நீண்டகால இருத்தலி யலுக்கும் பெருக்கத்திற்கும் இயைவான இயற்கை, சூழலியல் அமைவினைக் குறிக்கும் சொல்.)

1940களிலிருந்து நூற்றுக்கணக்கான நோய்த் தொற்று நுண்ணுயிரிகள் முன்னர் ஒருபோதும் கண்டிராத புதிய இடங்களில் புதிதாக உருவாகியும் மீள்தோன்றியும் உள்ளன. மேற்கு ஆபிரிக்காவில் எச்.ஐ.வி மற்றும் எபோலா, இலத்தீன் அமெரிக் காவில் சீக்கா (Zika) மற்றும் கொரோனா வகையைச் சேர்ந்த பெருமளவிலான பல்வேறு தொற்றுக்கள் அவற்றுள் அடங்குகின்றன. அவற்றில் பெரும்பான்மையானவை குறிப்பாக 60 வீதமான தொற்றுக்களுக்கான மூலம் விலங்கு களாகும். இவற்றுள் சில வீட்டு மற்றும் செல்லப் பிராணிகளிலிருந்து தொற்றியவை. பெரும்பான்மை – அதாவது மூன்றில் இரண்டு பகுதி காட்டு விலங்குகளிலிருந்து உருவாகியவையாகும்.

ஆனால் அது காட்டு மிருகங்களின் தவறல்ல. மரணங்களை ஏற்படுத்தும் நோய்த்தொற்று களுக்கான மூலகாரணி மிருகங்களென 'படங் களுடனான' சித்தரிப்புகள் வெளிவருகின்றபோதும், உண்மையில் எம்மை அச்சுறுத்தும் தொற்றுப் பரம்பலின் நுண்ணுயிர்களை மிருகங்கள் அதிக மாகக் கொண்டிருக்கவில்லை. பெரும்பாலான நுண்ணுயிரிகள் மிருகங்களின் உடல்களில் அமைதியாக வாழ்ந்துவிட்டுப் போகின்றன. ஆனால் பிரச்சினை என்னவெனில், காடழிப்பு, நகர கட்டுமான விரிவுபடுத்தல்கள், உற்பத்தித் தொழிற்துறைச் செயற்பாடுகள் மனித உடலில் இந்த நுண்ணுயிரிகள் உட்புகுந்து தங்குவதற்கு இசைவான சூழமைவுகளை உண்டுபண்ணுகின்றன.

**வாழிடங்களின் அழிப்பு** (Habitat Destruction)

'வாழிட அழிப்பு' என்பது பாரிய அளவிலான காட்டு மிருக இனங்களை அருகிவரும் நிலைக்கு இட்டுச் செல்கின்றன. மருந்துவகைகளைத் தயாரிப்பதற்கு வரலாற்றுரீதியாக நாம் தங்கியிருந்த மூலிகைகள் மற்றும் விலங்குகினங்களும் இவ்வழிவிற்குள் அடங்குகின்றன. இவ்வாறான வாழிட அழிப்பிலிருந்து உயிர்பிழைப்பதற்காக காட்டு மிருகங்கள் மீதமிருக்கும் குறுகிய துண்டு வாழிடங்களுக்குள் தம்மைச் சுருக்கிக் கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இது விலங்குகளின் சொந்த வாழ்விடங்களைச் சுவீகரித்து குடியிருப்பு களை அமைத்த மனிதர்களுக்குச் சமீபமாக விலங்குகள் செல்ல வேண்டிய சூழலை ஏற்படுத்து கின்றது. இந்த வகையான புறநிலை, நெருக்கம் விலங்குகளின் உடலில் வாழும் தீங்கற்ற மிருக நுண்ணுயிரிகள் மனிதர்களின் உடலுக்குப் பரவி அழிவை ஏற்படுத்தும் தொற்றுக்கிருமிகளாக மாறுவதற்குரிய நிலையைத் தோற்றுவிக்கின்றன.

எபோலாவை எடுத்துக் கொள்வோம். 2017இல் வெளிவந்த ஒரு ஆய்வின்படி எபோலா பரம்பல் பல்வேறு வகையான வௌவால்களுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்ததோடு மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்காவில் காடழிப்பு இடம்பெற்ற இடங்களில் பரவியிருந்தது. வௌவால்கள் வாழும் காடுகளை அழிக்கும் போது அவை தோட்டங்கள் மற்றும் குடியிருப்புகளிலுள்ள மரங்களில் தஞ்சம்கோர நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இது மனிதர்கள் வௌவாலின் எச்சில் பட்ட ஒரு பழத்தினை பறிப்பதற்கோ அல்லது உள்ளூரிலிருந்து ஒரு வௌவ்வாலை வேட்டையாடவோ நேரிடுகின்றபோது, வௌவாலின் கலங்களில் உள்ள நுண்கிருமிகள் மனிதர்களுக்குத் தொற்று கின்ற நிலையை ஏற்படுத்துகின்றது. இத்தகைய மோதுகைகள் காவிகளாக வௌவால் இருக்கின்ற பெருமளவிலான கிருமிகளை மனிதர்கள் மத்தியில் பரப்புகின்றன. எபோலா, நிபா, மார்பொர்க் (Ebola, Nipah, Marburg) போன்ற வைரசுகள் அதற்கான சில உதாரணங்கள். இத்தகைய ஊடு கடத்துதல்கள் அடிக்கடி நிகழும் போது மிருகநுண் ணுயிரிகள் மனித உடல்களில் வாழக்கூடிய இசைவாக்கத்தை அடைகின்றன. மனிதர்களுக்கு நோயை உருவாக்கக்கூடிய கிருமிகளாக விருத்தி யடைகின்றன.

நுளம்பிலிருந்து பரவும் தொற்றுநோய்களும் இதேபோன்று காடழிப்புடன் தொடர்புபட்டிருக் கின்றன. ஆனால் அது வாழிடங்கள் இல்லாமற் செய்யப்பட்டமையால் அல்ல. ஆனால் காடும் காடுசார்ந்த இடமும் மாறுதல்களுக்கு உட்படுத்தப் படுகின்றமையோடு தொடர்புபடுகின்றது. மரங்களின் இலைகளும், வேர்களும் இல்லாமற் போகும்போது வெற்றுக் காட்டுத்தரையிலிருந்து நீரும் வண்டலும் இலகுவில் வடிந்தோடுகின்றன. மலேரியாக் கிருமிகளைக் காவுகின்ற நுளம்புகள் சூரியஒளி படும் நீர்த்தேக்கங்களில் உருவா கின்றன. மனிதர்களுக்கு நோய்க்கிருமிகளைத் தொற்றச்செய்யும் நுளம்புவகைகள் அழிக்காமல் பேணப்பட்ட காடுகளைக் கொண்டுள்ள பகுதிகளை விட காடழிப்பிற்கு உள்ளான பகுதிகளில் இரட்டிப்பு விகிதம் என 12 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது.

**ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு பரவல்**

வாழிடங்களின் அழிவு என்பது, வெவ்வேறு உயிரினங்களின் இனத்தொகை அளவுகளில் மாற்றங்களையும் கலப்புகளையும் ஏற்படுத்து கின்றது. தொற்றுக்கிருமிகளின் பரம்பல் அதிகரிப் பிற்கு இதுவும் காரணமாய் அமைகின்றது. 'West Nile virus' வலசைப் பறவைகளில் உள்ள ஒருவகைக் கிருமி இதற்கு உதாரணம். வாழிட அழிப்பு மற்றும் இன்னபிற புறக்காரணிகளால் பறவை யினங்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளன. இறுதி ஐம்பது ஆண்டுகளில் வடஅமெரிக்காவின் பறவையினங்கள் இருபத்தைந்து வீதத்திற்கும் அதிகமாகக் குறைவடைந்துள்ளது. மிருகங்கள், பறவைகளின் இனவிருத்தியை மீளவும் சம நிலைக்குக் கொண்டுவருதல் சாத்தியமற்றது.

மரங்கொத்திகள், காணான்கோழிப் பறவைகள் காகங்கள் மற்றும் ஐரோப்பிய ரொபின் வகைப் பறவைகளை விட அதிக அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளன. இந்நிலை அமெரிக்காவில் பறவையினங்கள் மத்தியில் 'West Nile ' வைரஸ் பரம்பலை அதிகரித்துள்ளது. ஏனெனில் மரங்கொத்திகளும் காணான்கோழிப் பறவைகளும் பலவீனமான கிருமிக்காவிகளாக இருக்கையில் காகங்களும் ஐரோப்பிய ரொபின்களும் பலமான கிருமிக்காவிகளாக உள்ளன.

கிருமித்தொற்றுள்ள ஒரு பறவையைக் குத்திய உள்ளூர் நுளம்பு மனிதனைக் குத்துவதற்குரிய சாத்தியங்களை இது அதிகமாகக் கொண்டுள்ளது. இதைப்போலவே கரையோரங்களை அண்டிய காடுகளை அழித்து புறநகர்ப்பகுதிகள் விருத்தி செய்யப்படுகையில் உண்ணிகள் மூலம் காவப்படும் தொற்றுநோய்கள் அமெரிக்காவில் அதிகரிக் கின்றன. உண்ணி இனங்களைக் கட்டுப்படுத்துகின்ற 'ஒப்போசம் எலிகள்' போன்ற உயிரினங்கள் நகர அபிவிருத்திக்கான காடழிப்பினால் அகற்றப் படுகின்றன. அதேவேளை வெள்ளைக்கால் எலிமான்கள் மற்றும் Roe deer ஆகியனவற்றுக்கான வாழிட சூழமைவு மேம்படுகின்றது.

Lyme Desease எனப்படும் உண்ணிகாவி நோய் அமெரிக்காவில் முதன்முதலில் 1975இல் ஏற்பட்டது. இறுதி இருபது ஆண்டுகளில் ஏழு வகையான இத்தகைய உண்ணிகாவித் தொற்றுநோய்கள் ஏற்பட்டன. வாழிட அழிப்பு மட்டும் புதிய நோய்த்தொற்றுக்களை அதிகரிக்கும் காரணி என்பது உண்மையல்ல. அழிக்கப்படும் காட்டு வாழிடப் பகுதிகள் எவற்றால்

நிரப்பப்படுகின்றன என்பதிலும் தங்கியிருக்கின்றது. முழுஉலகின் மனித சமூகத்திற்கான இறைச்சித் தேவைகளை நிவர்த்திசெய்வதற்கான விலங்கு வளர்ப்பிற்காக முழு ஆபிரிக்கக் கண்டத்தின் பரப்பளவுக்கு நிகரான காடுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த விலங்குகளில் குறிப்பிட்ட எண்ணிக்கை காட்டுமிருகங்களோடு சேர்த்து சட்டத்திற்குப் புறம்பான வணிக முறையில் அல்லது இறைச்சி – மீன் சந்தைகளில் விற்கப்படுகின்றன. இப்படியான இடங்களில் இயல்பாக ஒன்றோடொன்று அரிதாகச் சந்தித்துக்கொள்கின்ற அல்லது ஒரு போதும் சந்திக்க நேராத காட்டு மிருகங்களும் ஏனைய இறைச்சிக்காக வளர்க்கப்பட்ட மிருகங்களும் அருகருகாக வைக்கப்படுகின்றன. இந்நிலையில் நுண்ணுயிரிகள் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு பாய்வதற்கான சூழல் அமைகின்றது. இதுவே 2002-2003 கொரோனா வைரசின் தோற்றக் காரணியாக அறியப்பட்டது. இன்றைய கோவிட் 19 இன் தோற்றக்காரணியாகவும் இது இருப்பதற்குரிய வாய்ப்புகள் உள்ளன.

பெருமெண்ணிக்கையிலான மிருகங்கள் உற்பத்தித் தொழிற்பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன. அங்கு இறைச்சிக்காக அறுக்கப்படவிருக்கும் நூறாயிரக்கணக்கான மிருகங்கள் ஒன்றாக நெருக்கமாக அடைக்கப்படுகின்றன. இது உயிராபத்துமிக்க தொற்றுக்கிருமிகளாக மாறுவதற்குரிய மகத்தான வாய்ப்பினை நுண்ணுயிரிகளுக்குக் கொடுக்கின்றது. பறவைக்காய்ச்சலை உதாரணமாக எடுத்துக்கொண்டால் அதன் தொற்றுமூலம் கடற்பறவைகள். அவை கோழிக்குஞ்சுகள் அடர்த்தியாகவுள்ள தொழிற்பண்ணைகளில் தீவிரமாகப் படவக்கூடியன. அங்கு வைரசுகள் மாற்றங்களுக்குள்ளாகி ஆக்ரோசமடைந்து பரவுகின்றன. பரிசோதனைக்கூடத்தில் மீள்உருவாக்கக்கூடிய வகையில் மாற்றங்களுக்கு உட்படுகின்றன. 'H5N1' என அழைக்கப்படும் அதன் ஒரு வகைமை தொற்றுக்குள்ளாவோரில் அரைவாசிப்பேரின் உயிரைக் காவுகொள்ளக்கூடியது. இதன் இன்னொரு கூறு 2014இல் வடஅமெரிக்காவில் கண்டறியப்பட்ட பின்னர் பத்து பில்லியன் கோழியினப் பறவைகள் (Poultry) அழிக்க நேரிட்டது.

## வீட்டு மிருகங்களிலிருந்து தொற்றுதல்

எமது வீட்டு மிருகங்களிலிருந்து வெளியேறும் பெருந்தொகையான கழிவுகள் மிருக நுண்ணுயிரிகள் மனிதர்களுக்குத் தொற்றுவதற்குரிய புறநிலைகளை அதிகம் கொண்டிருக்கின்றன. ஏனெனில் நிலபுலங்கள் உறிஞ்சக்கூடிய பசளைகளிலும் பார்க்க அதிகப்படியான கழிவுகள் வீட்டு மிருகங்களிலிருந்து வெளியேறுகின்றன. பல இடங்களில் திறந்த பசளைத்தாங்கிக் கிடங்குகளில் நிரப்பப்பட்டு அவை சேகரிக்கப்படுகின்றன. Escherichia Coli வகை பாக்டீரியாக்கள் (ஈ.கோலி என அழைக்கப்படுகின்ற) அமெரிக்காவிலுள்ள அரைவாசி மாடுகளின் வயிற்றுக்குள் தீங்குவிளைவிக்காமல் வாழ்கின்றன. இத்தகைய பசளைக் கிடங்குகளுக்குள் இவையும் சென்றடைகின்றன. மனிதர்கள் மத்தியில் ஈ.கோலி மோசமான வயிற்றுப்போக்கு, காய்ச்சல், மற்றும் கடுமையான நுரையீரல் பாதிப்பினையும் ஏற்படுத்தக்கூடியது. ஏனெனில் மாடுகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் உணவு மற்றும் குடிநீருக்குள் தெறிக்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இதனால் வருடாந்தம் 90 000 வரையான அமெரிக்கர்கள் ஈ.கோலி தொற்றுக்கு உள்ளாகுகின்றனர்.

## நீண்ட வரலாறு

மிருகங்களிலுள்ள நுண்ணுயிரிகள் மனிதர்களுக்கு நோயைத் தொற்றவைக்கும் கிருமிகளாக மாற்றமடையும் செயற்பாடு நிகழ்வதென்பது புதிய விடயமல்ல. இது 'Neolithic Revolution' - புதிய கற்காலப் புரட்சியில் (கற்கால இறுதி), மனிதர்கள் பயிர்ச்செய்கைக்காகக் காட்டு மிருகங்களின் வாழிடங்களை அழித்தபோதும், மனிதர்களுக்குச் சேவை செய்வதற்காக காட்டு மிருகங்களை அடக்கியபோதும் தொடங்கியதாகும்.

எமது 'மிருக நண்பர்களிடமிருந்து' நாம் பெற்ற 'கொடிய பரிசுகள்' என Jared Diamond (அமெரிக்கர், புவியியலாளர், வரலாற்றாசிரியர், மானிடவியலாளர்) இந்நிலை தொடர்பாகக் குறிப்பிட்டிருக்கிறார். மாடுகளிலிருந்து வந்த அம்மைநோய், காசநோய் பன்றியிலிருந்து வந்த கக்குவான் இருமல்(Whooping cough), மற்றும் வாத்துகளிலிருந்து வந்த இன்புலுவன்சா (காய்ச்சல்) ஆகியனவும் இதில் உள்ளடங்குகின்றன. இது கொலனித்துவ விஸ்தரிப்புக் காலங்களிலும் தொடர்ந்தது. பெல்ஜிய கொலனித்துவ ஆட்சியாளர்கள் கொங்கோவில் தொடருந்துப் பாதைகள் மற்றும் நகரங்களைக் கட்டமைத்தபோது Lentivirus எனும் வைரஸ் அங்குள்ள Macaques குரங்குகள் ஊடாக மனித உடல்களுக்குள் இசைவடையத் தொடங்கின.

பிரித்தானியக் கொலனித்துவ ஆட்சியாளர்கள் நெல்வயல்களை உருவாக்குவதற்காக வங்க தேசத்தின் சுந்தர்பான் (Sundarbans சுந்தரவனங்கள்) நீர்த்தடக் காடுகளை அழித்தனர். இது நீர்த்தடங்களின் உவர்நீரிலிருந்து பரவும் பாக்டீரியாக்கள் மனிதர்கள் மத்தியில் வெளிப்பட காரணியானது. கொலனியாதிக்கக் காலங்களின் தலையீடுகள் ஏற்படுத்திய இந்தகைய பெருந்தொற்றுக்கள் இன்றுவரை எம்மை வேட்டையாடுகின்றன.

Macaques குரங்குகளின் Lentivirus எச்.ஐ.வி ஆக விருத்தியடைந்தது. சுந்தர்பான்ஸ் ஈரநிலங்களின் நீரினால் பரவும் பக்ரீரியாக்கள் இன்றைய காலத்தில் காலராவாக அறியப்பட்டவை. காலரா இதுவரையும் ஏழு பெருந்தொற்றுக்களை ஏற்படுத்தியிருக்கிறது. அவற்றில் 2020-2011 ஹைத்தி மற்றும் 2017 ஜெமென் ஆகிய நாடுகளில் பாரிய அளவில் பரவியிருந்தது.

### உலகளாவிய மாற்றத்தின் அவசியம்

விலங்குகளிலுள்ள நுண்ணுயிரிகள் எமது உடலை ஆக்கிரமிக்கும் போது மனிதர்களாகிய நாம் மந்தநிலையில் இருப்பதில்லை. தீங்கற்ற மிருக நுண்ணுயிரிகளை பெருந்தொற்றுப் பரம்பலுக்கு காரணமான கிருமிகளாக மாற்றுகின்ற சக்திவாய்ந்த தரப்பாக நாம் இருக்கிறோம். இருப்பினும் இந்த நோயுருவாக்கி நுண்ணுயிரிகள் தோன்றும் அபாயத்தைக் குறைப்பதற்கு எம்மால் நிறையக் காரியங்களைச் செய்யமுடியும் என்பது இதிலுள்ள மகிழ்ச்சியான செய்தியாகும்.

காட்டு விலங்குகளின் வாழிடங்களை எம்மால் பாதுகாக்க முடியும். அதன் மூலம் விலங்குகளின் நுண்ணுயிரிகள் விலங்குகளுக்குள் தங்குவதையும் மனிதர்களுக்கு கடத்தப்படா திருப்பதையும் உறுதிப்படுத்தமுடியும். மிருக உடலின் நுண்ணுயிரிகள் மனிதர்கள் மத்தியில் தொற்றுக்கிருமிகளாக மாற்றமடையக்கூடிய சாத்தியக்கூறுகள் நிலவும் இடங்களில் கண் காணிப்புப் பொறிமுறைகளைத் தீவிரப்படுத்தமுடியும். மனித உடல்களில் இசைவாக்க மடையக்கூடிய நுண்ணுயிரிகளைக் கண்டறிந்து, அவை தொற்றுப்பரம்பலை ஏற்படுத்துவதற்கு முன்னர் தடுக்க முடியும். கடந்த பத்து ஆண்டுகளாக சர்வதேச அபிவிருத்திகளுக்கான அமெரிக்க USAID நிறுவனத்தின் Program Predict திட்டத்தின் அனுசரணையுடன் ஆய்வாளர்கள் இதனைச் செய்து வந்துள்ளனர்.

மொழிபெயர்ப்பாளர் குறிப்பு: (USIAD Program Predict - An epidemiological research program funded by United States Agency for International Development – சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் இடம்பெறும் ஒரு தொற்றுநோயியல் ஆய்வுத்திட்டம் )

மனிதனின் காற்தடம் முழுப் பூமிப்பந்திலும் விரிவாக்கமடைந்து வருவதன் விளைவாக, 900 புதிய வைரசுகள் உலகெங்கிலும் உருவாகியுள்ளதாக Predictஇன் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இவற்றில் ‘சார்ஸ் - SARS’ வைரசினை ஒத்த தன்மைகளையுடைய புதிய வகை கொரோனா வைரசுகளும் உள்ளடங்குகின்றன.

இன்று எம் தலைகளுக்கு மேல் ஒரு பெருந்தொற்று நிழல் தொங்கிக்கொண்டிருக்கின்றது. இதற்கு புதிய கொரோனா வைரஸ் பரம்பல் மட்டும் காரணமல்ல. டொனால்ட் டிரம்ப் நிர்வாகத்தின் அகழ்வுஉற்பத்தித் தொழிற்சாலைகளின் கட்டுப்பாடற்ற கார்பன் வெளியேற்றம், சூழலியல் பாதுகாப்பு சார்ந்த அக்கறையற்ற அனைத்து உற்பத்தித் தொழிற்துறை அபிவிருத்திகள், ‘வாழிட அழிப்பு’ நடவடிக்கைகளை இன்னும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மிருகங்களின் நுண்ணுயிரிகள் இலகுவாக மனித உடல்களுக்கு கடத்தப்பட ஏதுவான சூழலை இந்நடவடிக்கைகள் ஏற்படுத்துகின்றன.

அது மட்டுமல்லாமல் அடுத்ததாக எந்தவகை நுண்ணுயிரிகள் மனிதர்களுக்குத் தொற்றக்கூடும் என்று எடுத்துச்சொல்வதற்கும், தொற்றுப் பரம்பல் தொடங்கும்போது அதனைக் கட்டுப்படுத்துவதற்குமான எமது திறனையும் ஜனாதிபதி நிர்வாகம் மட்டுப்படுத்துகின்றது. ஏனெனில் எதிர்வரும் ஒக்ரோபரிலிருந்து Predict- ஆய்வுத்திட்டத்தினை நிறுத்துவதற்கான முடிவினை டிறம்ப் நிர்வாகம் எடுத்துள்ளது. அரசாங்க அதிகாரிகள் ‘மரபை மீறும் ஆய்வுகளுக்கு நிதியுதவி வழங்குவதை அசௌகரியமாக’ உணர்கின்றனர் போலும்.

மேலும் உலக சுகாதார நிறுவனத்திற்கு வழங்கிவந்த நிதியை 53 வீதத்தால் குறைக்கப்போவதாக ஜனாதிபதி நிர்வாகம் பரிந் துரைத்திருந்தது. தொற்றுநோய் நிபுணர் Larry Brilliant ஒருமுறை கூறியிருந்தார்: ‘பரம்பல் தவிர்க்கமுடியாதது. ஆனால் பெருந் தொற்றுக்கள் (Pandemic) கட்டுப்படுத்தக்கூடியவை’. நாம் அரசியல் அணுகுமுறையை மாற்றுவதற்குரிய விருப்பினைக் கொண்டிருப்போமானால் பெருந்தொற்றுகள் கட்டுப்படுத்தக் கூடியவை. இயற்கையை மாற்றியமைத்து, காட்டு மிருகங்களைத் தாக்கியழிப்பது போல் இதுவும் சுலபமானது.

இறுதியும் அறுதியுமாகச் சொல்வதானால் எந்தவகைப் பெருந்தொற்றுக்கு எந்தவகை மிருகம் மூலகாரணி என்பது உண்மையில் புதிரானது அல்ல. அது கூரான முட்களைக் கொண்ட பாங்கோலினோ அல்லது மயிர்கள் செறிந்த வெளவாலோ அல்ல. இதற்கான மூலகாரணி சூடான இரத்தம் கொண்ட விலங்குக்கூட்டம்:

உண்மையான தொற்றுமூலம் மனிதர்களாகிய நாம்! ●

**சோனியா ஷா:** இந்தியப் பின்னணியைக் கொண்ட அமெரிக்காவில் வாழும் எழுத்தாளரும் உலகளாவிய பெருந்தொற்றுக்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு வருபவருமாவார். Pandemic: Tracking Contagions, from Cholera to Ebola and Beyond என்பது 2016இல் வெளிவந்த இவரது புத்தகம். ‘The Next Great Migration: The Beauty and Terror of Life on the Move’ எனும் தலைப்பில் 5ஆவது புத்தகம், ஜூன் 2020இல் வெளிவரவிருக்கின்றது.

# படைப்புத்துறைக்கு கொரோனா சொல்லும் பாடம்

■ டிராட்ஸ்கி மருது

**ஓவியம், சிற்பம், இலக்கியம் சினிமா என்று படைப்புத் துறை எப்படி இயங்கும்? எதைப் பேசும்? மனிதத்தைத்தான் என்றால் எப்படிப் பேசும்; பேசும் முறை எது? எதற்கு முதலிடம்?**

*கொரோனா பாதிப்பில் உலகமே நிலைதடுமாறி இருக்கும் சூழலில் அது பல்வேறு செய்திகளைச் சொல்லிக் கொண்டே இருக்கிறது. குணப்படுத்தும் முழுமையான மருந்து இன்னும் கண்டடையாத நிலையும், ஊரடங்கும், சந்தர்ப்பவாத அரசியல் கோரிக்கைகளும் நடந்து கொண்டே இருக்கின்றன. வாழ்வா? சாவா? என்று வழி தெரியாமல் உலகம் முழுவதும் உறைந்த நிலையில் நோய் தணிந்து எப்போது பீதியில்லாமல் முழுமையாக இயல்பு நிலைக்குத் திரும்புவோம் என்று செய்வதறியாது ஆனாலும் இயங்காமல் இருக்க முடியாத மனம் கொண்டு மக்கள் நிலைத்த இடத்திலேயே நிமிர்ந்திட இயங்குவதும் அறிய முடிகிறது. கடந்த மாதங்களிலிருந்து உலகம் முழுவதும் இருந்து வருகிற செய்திகள் நடப்பு அனைத்தையும் கவனிக்கும்போது இரண்டாவது அடி கூட கண்ணுக்குப் புலப்படாத பனிமூட்டத்திற்குள் நடப்பது போன்றே இருக்கிறது. அனைத்துத் துறைகளும் முடங்கிவிட்டன. கடந்த மாதம் நியூயார்க் நகரின் முக்கிய வீதிகளில் இருந்த காவலர்கள் இடம்பெயர்ந்து வெளியில் சென்று விட்டதாக எனது நண்பர் தொலைபேசியில் சொன்னார். விலையுயர்ந்த கலைப் பொருட்கள் அவர்கள் கையில் இருந்தாலும் யார் வாங்குவார்? இனிமேல் அதன் பெறுமதி என்ன? இப்போது அவர்கள் கையில் புழக்கத்திற்கு ஆன பணம் இல்லாதபோது வெளியேறித்தானே ஆக வேண்டும் என்றார். கூட அருங்காட்சியக வேலையாட்களைப் பாதிக்குக் குறைத்து விட்டார்கள் என்றும் கூறினார். அவர் தொடர்ந்து இத்துறை சார் விவரங்களை கவலையுடன் அடுக்கியபோது எனக்கும் பல கேள்விகள் வந்து சென்றன.*

*கடந்த வருடம் கடைசியில் நான் சென்று வந்த நாடுகளான, கம்போடியா ஆஸ்திரேலியா, இத்தாலி, கனடா வீதிகள் டூரோன் உதவியுடன் வானில் பறக்கும் காமிரா மூலம் படம் பிடிக்கப் பட்ட வெற்று நகரக் காட்சிகள், குறிப்பாக உலகச்சுற்றுலாக் கூட்டம் கட்டுக்கடங்காமல் லட்சக்கணக்கில் இடைவிடாது நகரும் ப்ளோரன்ஸ், ரோம் நகர வீதிகளையும் கம்போடிய*

'அங்குவாட்'டையும் அப்படி வெறுமையுடன் பார்க்க இனி எப்போதும் முடியாதா? அல்லது இப்போது பார்க்கும் வெறுமையுடன்தான் எப்போதும் பார்ப்போமா? இதிலும் உல்லாசப் பயணம் வரும் மக்களை நம்பியே கம்போடிய நாடு இருப்பதையும் கடந்த வருடங்களிலேயே பாதிக்கு மேல் பயணிகள் குறைந்து விட்டதாக என்னிடம் சொன்ன அந்த நாட்டு முகங்களும் இப்போது வெறுமையாக இருக்கிற நிலக்காட்சியுடன் வந்து செல்வதும் மேலும் கவலை அளிக்கிறது.

பொருளாதாரம் இயல்புநிலைக்கு வர ஒன்றரை ஆண்டுகள் ஆகும். மிகச் சரியாகச் சொன்னால் 4 ஆண்டுகள் ஆகும். வேலை இழப்பு, வறுமைக் கோட்டுக்கு கீழே பலரைத் தள்ளும் என்றும் விடுதி, ஹோட்டல், சினிமாக் கொட்டகை வணிக வளாக மால்கள், போன்றவற்றின் நிலை பற்றியும் கேள்வி எழுப்பும் பல கட்டுரைகளையும் கடந்த போது நாம் இயங்குகிற துறை சார்ந்த கேள்விகளும் வந்தது...




குறிப்பாக ஓவியம், சிற்பம், இலக்கியம் சினிமா என்று படைப்புத் துறை எப்படி இயங்கும்? எதைப் பேசும்? மனிதத்தைத்தான் என்றால் எப்படிப் பேசும்; பேசும் முறை எது? எதற்கு முதலிடம்? இதற்கு நடுவில் 1400 கி.மீட்டர் நடக்கும் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், தன் உறவின் பிணத்திற்கு பக்கத்தில் போகக்கூட அனுமதிக்கப்படாமல் விலகி இருந்து அழும் குடும்பத்தார்– இப்படி பல காட்சிகள் இருக்கின்றன.

இக் கடுமையான சூழல் நம்மை உறங்கி இருக்கும் நிலையிலிருந்து பிடித்துத் தள்ளி நடக்க வைக்கிறது. எல்லோரையும் நடக்க வைக்கிறது என்றும் நம்புகிறேன். ஒரு ஓவியராகத் தொடர்ந்து திரைப்படத்துறையிலும் கலந்து 35 ஆண்டுகள் புதியனவற்றைத் தேட நடந்து நடந்து செல்லுகிற வழியில் காலம் ஒரு இடத்தில் அவசியம் கருதி எல்லாவற்றையும் இணைக்கிறது.

சட்டகத்தின் உள்ளே உள்ள ஒவ்வொரு 'pixel' ஐயும் எப்போதும் தன் வயப்படுத்திக் கட்டுப்படுத்துவதுடன் தான் ஒரு மாபெரும் சக்தியைக் கொண்டவனாக சமகாலத்துக் கலைஞன் இருப்பான் என்றும், Digital புரட்சியும் கணினியும் அதைக் கொடுக்கும் என்றும் கடந்த 30 வருடங்களாகச் சொல்லி வருகிறேன். இதன் சாத்தியங்களை உணர்ந்து செயல்பட்டதால், இன்றைய வளர்ச்சியான VR (Virtual Reality) வரை வந்து விட்டதோடு இந்த வளர்ச்சியை உள்வாங்கிக் கொள்ள நமது சூழல் பிடரியைப் பிடித்துத் தள்ளுகிறது. VR தொழில்நுட்பக் கல்வி, மருத்துவம், பொழுதுபோக்கு என்று அனைத்து துறைகளையும்

கைக் கொள்ளத்தக்கது. பரவலான பொது வெளியில் அத்துறை சார்ந்த நகர்வு, தெளிவு நமக்குக்குறைவுதான். நாம் தயார் நிலையில் இல்லைதான். ஆனால், இப்போது கொரோனா உங்களைத் தள்ளுகிறது.

பதினோரு ஆண்டுகளுக்கு முன் இயக்குநர் மணிரத்னம் என்னோடு பேச விரும்புகிறார் என்று அவரிடம் உதவி இயக்குநராக இருந்த நண்பர் அழகம்பெருமாள் அழைத்ததின் பேரில் சந்திக்கச் சென்றேன். அப்போது அவர்கள் தீவிரமாக பொன்னியின் செல்வனைத் திரைப் படமாக்கும் முயற்சியில் இருந்தார்கள். நான் அவர்கள் அலுவலகத்திற்குச் சென்றபோது மணி ரத்தினம் என்னை வரவேற்று அவரது அறைக்குள் அழைத்துச் சென்றார். இருவரும் அமர்ந்த உடனேயே எனது நூலான "வாளோர் ஆடும் அமலை"யை மேசையின் மீது எடுத்து வைத்தார். நான் மகிழ்ந்து அடுத்த சந்திப்பில் உங்களுக்குக் கொடுக்கலாம் என்றிருந்தேன்; எனக்கு முன்பே இந்நூல் இங்கு வந்து விட்டதில் மகிழ்ச்சி என்றேன். ஆனந்த விகடன் மதிப்புரை கண்டு வாங்கிவர வைத்தேன் என்றார். உடன் மணி ரத்தினம் தனக்கு கதை எழுதும் எழுத்தாளர் பெயரைச் சொல்லி அவர் 90% எழுதி விட்டார். ஆனால் எப்படிப் படமாக்கப் போகிறோம் என்பதை நினைத்தால்தான் தனக்குத் தூக்கம் வரவில்லை என்றும் உங்கள் புத்தகம் பார்த்தவுடன் எனக்குப் பெரும் மகிழ்ச்சி என்றும் கூறிய அவர், சித்திரங்கள் cinimatic ஆக இருப்பதாகவும் பாராட்டினார். உடனே நான், இவர் என்ன எழுதுவது! எல்லாமே கல்கி எழுதி விட்டார்தானே. இனிமேல் சமகாலத்தில் நீங்கள் Visualise தான் செய்ய வேண்டும் என்றும் என் VFX துறையின் பணி பற்றியும் பேசிவிட்டு விடைபெற்றேன். கடைசியாக என்னை Consultant ஆக இப்படத்திற்கு பணிபுரியக்கேட்டார். நானும் சம்மதித்தேன்.

ஆனால் அந்தத் திரைப்பட ஆக்கம் ஏதோ காரணங்களால் நின்று போய்விட்டது. 10 ஆண்டு களுக்குப் பின் இப்போது பாதித் தயாரிப்பில் உள்ள மிகப்பெரிய பொருட் செலவில் தயாரிக்கப்படும் அந்தப் படம் கொரோனா காலத்தில் தயாரிப்புச் சுமையைக் கூட்டியதுடன் நவீன வசதிகளை நோக்கி நகர்ந்தே ஆக வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளிவிட்டிருக்கிறது. இனி வரும் காலங்களில் AR -VR இணைந்த தொழில் நுட்பத்தளமே ஒரு செய்தியை, கதையை அல்லது கல்வியைப் புகட்ட சரியான சாதனமாய் இருக்கும் என்பதை நோக்கி கவனம் குவிக்கப்பட வேண்டும்.

ஆயிரக்கணக்கானவர், படைத்தளம், சாத்தியப் படாத பின்புலம், கற்பனைக்கெட்டாத பின்புலம், வார்த்தைகளால் விளக்க முடியாத கல்வி, காட்சிப்படுத்தப்பட்ட Animation போன்ற வளர்ச்சியை நோக்கிச் சேர்த்துக் கொள்ள வேண்டி கொரோனா சொல்கிறது.

– தொடர்ந்து பேசுவோம்


காக்கைச் சிறகினிலே

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| தனி இதழ் விலை | ரூ. | 25 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 275 |
| இரண்டு ஆண்டுக் கட்டணம் | ரூ. | 500 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ. | 1250 |
| மாணவர் சந்தா | ரூ. | 200 |

(மாணவர்கள், கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றுபெற்று விண்ணப்பிக்க வேண்டும்)

### வெளிநாட்டு சந்தா

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் (வெளிநாடு) | $ | 30 |

## விளம்பரக் கட்டண விவரம்

**அட்டை (வண்ணப் பக்கம்)**

| | | |
|---|---|---|
| பின்அட்டை (வண்ணம்) | ரூ. | 10,000 |
| உள் அட்டை (வண்ணம்) | ரூ. | 7,500 |

**உள் பக்கம் (கருப்பு வெள்ளை)**

| | | |
|---|---|---|
| முழுப் பக்கம் | ரூ. | 2,000 |

காசோலைகள், வங்கி வரைவோலைகள் அனைத்தும் KAAKKAI, (A/c No. 60111010005660, SYNDICATE BANK, Triplicane, Chennai - 5. IFSC: Synb0006011) என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

பணவிடை (மணியார்டர்) மூலமும் சந்தா செலுத்தலாம்.

தொடர்பு முகவரி:

**காக்கை**

288, டாக்டர் நடேசன் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

செல்பேசி: 9841457503, தொலைபேசி : 044-28471890, மின்னஞ்சல்: kaakkaicirakinile@gmail.com

கட்டுரை

■மோ. செந்தில்குமார்

# மிகையுணர்ச்சி ஊட்டப்பட்ட ஒரு வாசகப் பிரதி சிறந்த மொழிபெயர்ப்பாகுமா?

மொழிபெயர்க்கப்பட்ட பிரதி, மூலத்துக்கு நெருக்கமாக உள்ளதா, செம்மையான மொழிபெயர்ப்பா, மொழிபெயர்ப்பு அறம் காக்கப்பட்டுள்ளதா என்பன குறித்தெல்லாம் ஆராய்வதும் விமர்சிப்பதும் மிகத்தவறான எதிர்ச்செயலாகிவிடும். இத்தகைய வணிக உற்பத்திச் சூழலில், ஒரு சிறுகதை மொழிபெயர்ப்பின் தரம் எத்தகையதாக உள்ளது என்பதை ஆராய்கிறது இக்கட்டுரை.



படைப்புகளும் மொழிபெயர்ப்புகளும் உற்பத்தி செய்யப்படும் காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். உற்பத்தி வணிகம் நுகர்வு என்ற முதலாளியச் சந்தைச் சமூகத்தில் நுகர்வு உடல்களாக ஆக்கப்பட்ட மக்களைப் போன்றே இலக்கிய உலகிலும் வாசகர் நுகர்வுடலாக ஆக்கப்பட்டுள்ளார். எப்போதும் முட்டையிட்டுக்கொண்டே இருந்தால்தான் அது கோழி என்பதாக இலக்கியப் புலத்திலும் உற்பத்தியும் வணிகமும் இடையறாது நடந்தேறி வருகின்றன. படைப்பு உற்பத்தியோடு மொழிபெயர்ப்பு உற்பத்தியும் இதே வணிகத்தன்மையுடன் இணைந்து கொண்டுள்ளது. ஒரு குளியல் சோப்புக்கு அகப்பட்டுக்கொண்டு அதை மாற்றிக்கொள்ள முடியாமல் அதற்கே அடிமையாகிப்போவது போன்று சில உற்பத்தியாளர்களுக்கே அடிமையாகிப்போன நுகர்வடிமைகளையும் இந்த இலக்கியச் சந்தை உருவாக்கி வருகின்றது. விமர்சனம் என்பது எதிர்க்குழு நடவடிக்கை என்ற பொதுப்புத்தியை உற்பத்தி செய்துவிட்டமையால், சீர்தூக்கிப் பார்த்துச் செம்மைப்பட வழிகாட்டும் விமர்சனத் தளத்தை இல்லாமலாக்கிவிட்டனர். இந்த உற்பத்திச் சந்தைக்குள் தன்னடையாளத்தோடு வெளிவரும் படைப்புகளையும் உற்பத்திப் பண்டத்தையும் பிரித்தறிய முடியாது தவிப்பில் நிற்கும் வாசகருக்கு வழிகாட்ட விமர்சகர் அருகிப்போனது பெருங்குறை.

படைப்பின் உட்சரடுகளைக் கண்டு அதன் பிரிமுறுக்குக் களையாது, தொடுப்புகள் அறுந்துபோகாது ஒவ்வொரு சொல்லுக்குள்ளும் தேங்கி நிற்கும் பொருளின் மர்மங்களோடு திரும்ப ஒருமுறை எழுதும் முயற்சியே மொழிபெயர்ப்பு. சில நேரங்களில் சில சொற்களும் தொடர்களும் மொழிமாற்றம் செய்யவிடாமல் அலைக்கழிக்கச் செய்வதும் அவற்றுக்கான மிகப்பொருத்தமான சொல்லோ தொடரோ கிடைத்துவிட்டால் பெரும் பூரிப்புக் கொள்வதுமாக வலியும் இன்பமும் கலந்தவொரு பயணம் அது. இந்தப் பயணத்தில் வென்றவர்களும் உண்டு தோற்றவர்களும் உண்டு. மொழி அத்தனை நுட்பமான அரசியல் செய்யக்கூடியது. ஆனால், மொழிபெயர்ப்புச் சந்தையில் மூலமொழிப் படைப்புக்கும் படைப்பாளருக்குமான மொழிகடந்த அங்கீகாரம் மொழிபெயர்ப்பதற்காக ஒரு படைப்பைத் தேர்ந்தெடுக்கப் போதுமானது. பண்ணை இயந்திரங்கள் அவற்றை வேகமாக மொழிமாற்றம் செய்து சந்தைச் சரக்காக மாற்றிவிடுகின்றன. மொழிபெயர்ப்புக்கான நோக்கம் ஒருசாராருக்கு வணிகம் என்றானபிறகு இயந்திரகதியிலான உற்பத்தி நடந்துகொண்டேதான் இருக்கும். இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்குப் புதுப்புதுப் பண்டங்களை நுகர்வுச் சந்தைக்குள்

கொண்டுவந்துகொண்டே இருக்கவேண்டும். மொழி பெயர்க்கப்பட்ட பிரதி, மூலத்துக்கு நெருக்கமாக உள்ளதா, செம்மையான மொழிபெயர்ப்பா, மொழி பெயர்ப்பு அறம் காக்கப்பட்டுள்ளதா என்பன குறித்தெல்லாம் ஆராய்வதும் விமர்சிப்பதும் மிகத்தவறான எதிர்ச்செயலாகிவிடும். இத்தகைய வணிக உற்பத்திச் சூழலில், ஒரு சிறுகதை மொழிபெயர்ப்பின் தரம் எத்தகையதாக உள்ளது என்பதை ஆராய்கிறது இக்கட்டுரை.

மலையாளத்தின் ஆகச்சிறந்த படைப்பாளிகளின் புதினங்களையும் சிறுகதைகளையும் மொழிபெயர்த் தவர் கே.வி. ஷைலஜா. அவரது மொழிபெயர்ப்பில் வெளிவந்த கல்பெட்டா நாராயணனின் 'இத்தரமாத்ரம்' புதினத்தைத் தமிழில் 'சுமித்ரா' என்ற முதன்மைக் கதைப்பாத்திரத்தின் பெயரில் வாசித்த அனுபவத்தோடு கெ.ஆர். மீராவின் 'சூர்ப்பணகை' சிறுகதை மொழிபெயர்ப்பை வாசிக்கும் அனுபவம் வாய்த்தது.

'சூர்ப்பணகை' சிறுகதை, சமூக, குடும்பச் சிக்கல்களின் ஊடாக ஒரு பெண்ணியவாதி எதிர் கொள்ளும் வாழ்க்கையை பி.பி. அனகா என்ற கதாபாத்திரத்தின் வழியாக மிக நுட்பமாக உரை யாடுகின்றது. கெ.ஆர். மீராவின் எட்டுச் சிறு கதைகள் கே.வி. ஷைலஜாவின் மொழிபெயர்ப்பில் 'சூர்ப்பனகை' (னகரம் மொழிபெயர்ப்பில்) என்ற தலைப்பில் தொகுப்பாக வெளிவந்துள்ளன. 'சூர்ப்பணகை' சிறுகதையின் பெயரையே நூலுக்குத் தலைப்பாக்கியதில் அக்கதைக்கு மொழி பெயர்ப்பாளர் கொடுத்த முக்கியத்துவத்தை உணர லாம்.

இத்தொகுப்பின் முன்னுரையின் இறுதியில், "இனி உங்கள் பார்வைக்கும் விமர்சனத்திற்கும்" என்று முடித்து, மொழிபெயர்ப்பாளர் விமர்சனக் கதவைத் திறந்து வைத்திருப்பதால் சூர்ப்பணகை சிறுகதை மலையாள மூலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. மொழிபெயர்ப்பு, மூலக்கதையில் இல்லாத தன் சொந்தச் சொற்களால்/மொழியால் கதையை மேலும் விவரணை செய்யப்பட்டிருந்தது. மூலப் படைப்பில் உள்ள கருத்துக்கள் நீக்கப்பட்டி ருந்தன. சில திரிக்கவும் செய்யப்பட்டிருந்தன. மொழிபெயர்ப்பு ஓர் ஒற்றை வாசகப் பிரதியாக இருப்பது தெரிந்தது. மொழிபெயர்ப்பதற்கான இத்தகைய உரிமை குறித்த கேள்வியே இக் கட்டுரையின் அடிப்படை.

## 1. கதைசொல்லி

சூர்ப்பணகை சிறுகதையின் மொழிபெயர்ப்பை ஆராய்வதற்கும் கதைசொல்லி குறித்த புரிதலுக்கும் உறவு உள்ளது என்பதால் அது குறித்துச் சில அடிப்படைகள் சுட்டப்படுகின்றன. ஒரு கதையை எடுத்துரைப்பதில் கதைசொல்லியின் (narrator) பார்வைக்கோணம் மிக முக்கியமானது. ஒவ்வொரு கதைக்கும் அக்கதை எடுத்துரைப்பு முறைசார்ந்து கதைசொல்லியும், கதைசொல்லியின் தன்மைகளும் பார்வைகளும் மாறுபடும். வாசகர் கதைசொல்லியின் வழியாகவே கதைக்குள் நுழைகிறார். மொழி பெயர்ப்பதற்குத் தெரிவு செய்யும் ஒரு படைப்பில் இந்தக் கதைசொல்லியை அடையாளம் காண்பது மொழிபெயர்ப்பாளரின் முதன்மையான பணி. கதைசொல்லியின் கருத்தியல், சொல்லல் முறையில் கையாளும் உத்திகள் ஆகியன குறித்த அடிப்படைப் புரிதலைப் பெறும்போதுதான் எடுத்துரைப்பு முறை மாறாது ஒரு கதையை இன்னொரு மொழிக்கு மொழிபெயர்க்க இயலும்.

ஒரு கருத்தையோ நிகழ்வையோ முழுமையாக விவரித்துக்கொண்டிருக்காமல் சிலவற்றை மட்டும் சொல்லி நகர்ந்துவிடுவதில் படைப்பாளரின் தனித்துவம் மிளிர்கிறது. எதைத் தான் சொல்ல வேண்டும் எதையெல்லாம் வாசகர் இட்டு நிறைத்துக்கொள்ள வேண்டும் என்ற கதைசெய்தல் பக்குவம் பெற்ற படைப்பாளர்கள் வெற்றியாளர் களாகின்றனர். ஒரு கதை மிகுந்த ஈர்ப்பைத் தருவதற்குக் காரணம் அது எடுத்துக்கொண்ட கதைக்கரு மட்டுமன்று, இத்தகைய எடுத்துரைப்பு முறையும் ஆகும். சிறந்த ஒரு கதைக்கருவைக் கொண்டிருந்தாலும், ஒத்திப்போடல்களும், புதிர்த்தன்மைகளும், சொல்லப்படாமல் விடுபட்ட மௌனங்களும் இன்றி, ஒன்றுவிடாமல் எல்லா வற்றையும் விவரணை செய்து தட்டையாக எடுத்துரைக்கப்படுமானால், அந்தக் கதைக்குள் வாசகரால் அதிக நேரம் இருக்க முடியாது. அவராக இட்டு நிறைத்துக்கொள்வதற்கான இடமென்று அக்கதையில் எதுவும் இல்லை. பங்களிப்பு இல்லாத கதைக்குள் வாசகரால் உலவ இயலாது. ஆகவே, கதைசொல்லல் நடை (Narrating style) என்பது கதை உருவாக்கத்தில் மிகமுக்கியமான ஒரு கூறாகும். ஒரு கதையை எவ்வாறு சொல்ல வேண்டும் என்பதைப் பொறுத்தும் அக்கதையை வாசகர் எவ்வாறு உள்வாங்கிக்கொள்ள வேண்டும் என்பதைச் சார்ந்தும் கதைசொல்லியைப் படைப் பாளர் தெரிவு செய்கிறார். ஆகவே, வாசகராக ஒரு கதைக்குள் நம்மை அழைத்துச் செல்லும் அந்தக் கதைசொல்லி மிக முக்கியமானவர்.

கெ.ஆர். மீரா, தன் கதைகளில் கதைசொல்லியை மிகச்சிறப்பாகக் கட்டமைக்கக்கூடியவர். சூர்ப் பணகை கதை மூன்றாம் நபர் கதைசொல்லியின் (Third person narrator) மூலம் சொல்லப்படுகிறது. எண்ணங்களை, உணர்வுகளை, கருத்தியல் பார்வைகளை ஒரேயொரு நபரைச் சார்ந்திருக்காது கதாபாத்திரங்களின் வழியாக வெளிப்படுத்துவதற்கு இவ்வகைக் கதைசொல்லல் முறை படைப்பாளருக்கு உகந்ததாக இருக்கிறது. சூர்ப்பணகை சிறுகதை, உரிய இடங்களில் கதாபாத்திரங்களின் உரை யாடலுக்கு அனுமதித்து, மிக நேர்த்தியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## 2. யார் கதைசொல்லி?

மொழிபெயர்ப்பில், மூலக் கதைசொல்லியை மீறி மொழிபெயர்ப்பாளர் என்ன செய்துவிடமுடியும்? தன்னை ஒரு கதைசொல்லியாகக் கருதிக்கொண்டு மொழிபெயர்ப்பாளர் என்ற எல்லையைக் கடந்து கதைக்குள் நுழைந்து எடுத்துரைப்பில் ஆறு

வகையான மீறல்களைச் செய்துள்ளார். அவை, 1. மூலக்கதையில் இல்லாத புதிய கருத்துக்களை உள்நுழைத்தல், 2. ஒத்திப்போடல்களைச் சிதைத்தல், 3. கதையில் உள்ள சொற்களை, தொடர்களை நீக்கிவிடுதல், 4. கதைசொல்லியின் கூற்றைப் பாத்திர உரையாடலாக மாற்றுதல், 5. மூன்றாம் நபரை முதல் நபராக்குதல், 6. மூலக்கதைக்கருத்தைத் திரித்தல் ஆகியனவாகும்.

*2.1.* **புதிய கருத்துக்களை உள்நுழைத்தல்:**

மூலக்கதையில் உள்ள குறைகளைச் சரிசெய்து முழுமையான கதைவடிவத்தை உருவாக்கும் கடமை தமக்கு இருப்பதாகவும் கருதிக்கொள்கிறார் எனத் தோன்றுகிறது. எனவேதான், மூலக்கதையில் சொல்லப்படாத புதிய கருத்துக்களைக் கதைக்குள் நுழைத்து சூர்ப்பணகை கதை மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

கதையின் முதல் பத்தி இதற்குச் சான்றாக அமைகின்றது. மூலத்தில், “கோழிக்கோடு ஐஸ்கிரீம் (தொழிலாளர்) வேலைநிறுத்தத்திற்கு இடையில்தான் பி.பி. அனகாவுக்கு வேலை கிடைத்தது. முதல் வகுப்பு. உள்ளே நுழையும்போது கரும் பலகையில் குறிக்கப்பட்டிருந்தது: ‘சூர்ப்பனகைக்கு வரவேற்பு’. பி.பி. அனகா திரும்பி நின்று கரும்பலகை துடைக்கும்போது காகித அம்புகள் அடுத்தடுத்து வந்தன. வகுப்புத் தொடங்கியபோது ஒரு பின்சீட்டுக்காரன் எழுந்தான்.” 1 (ப.72)

கட்டுரையாளரால் செய்யப்பட்டுள்ள இந்த மொழிபெயர்ப்பு மூலப்பிரதியில் உள்ள பத்தி அமைப்பு, வாக்கிய அமைப்புச் சிதைக்காது செய்யப்பட்டது. அடைப்புக்குள் இட்டுள்ள ‘தொழிலாளர்’ என்ற சொல் மட்டும் புரிதலுக்காகச் சேர்க்கப்பட்டது.

கே.வி. ஷைலஜாவின் மொழிபெயர்ப்புப் பின்வருமாறு அமைந்துள்ளது: “கோழிக்கோட்டில் ஐஸ்கிரீம் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் உச்சகட்டத்தில் இருந்தபோது தான் பி.பி. அனகாவிற்குக் கல்லூரி விரிவுரையாளராக வேலை கிடைத்தது.

முதல் நாள் வகுப்பறையில் நுழைந்தவுடனேயே கரும்பலகையில் எழுதியிருந்ததைப் பார்த்தாள்.

“சூர்ப்பனகையை வரவேற்கிறோம்”

பி.பி. அனகா திரும்பி நின்று கரும்பலகையை துடைக்கத் துவங்கினவுடன் காகித அம்புகள் மேலே வந்து விழுந்தன. அதனை அலட்சியப்படுத்தி தன் முதல் வகுப்பினை ஆரம்பிக்க நினைத்த தருணத்தில் கடைசி பெஞ்சில் உட்கார்ந்திருந்த மாணவன் மெதுவாக எழுந்தான்.” (ப.9)

மொழிபெயர்ப்பில் பத்தியமைப்பு எவ்வாறு சிதைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்துகொள்வதற்காக மொழிபெயர்ப்பு நூலில் உள்ளவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு படைப்பாளியும் எல்லாவற்றையும் விவரணை செய்வதில்லை. சொல்லப்பட்டவைகளிலிருந்து நிகழ்வுகளை வாசகரே தனக்குள் உருவாக்கிக்கொள்ள இடமளிக்க வேண்டும். இந்தக் கதையின் முதல் பத்தி, வகுப்பறை, மாணவர்கள், ஆசிரியர், கரும்பலகை, அதில் எழுதப்பட்ட வாசகம், ஆசிரியர் கரும்பலகையில் எழுதியதை அழித்தல், அவர்மீது காகித அம்புகளை எறிதல் என அமைந்துள்ளது. இவை, வாசகருக்குள் தொடர்ச்சியான ஒரு காட்சி அனுபவத்தை உண்டாக்குகின்றன. இந்தக் காட்சி அனுபவத்தில் வாசகரின் பங்களிப்பும் இருக்கிறது. காகித அம்புகளுக்கான ஆசிரியரின் எதிர்வினை குறித்துப் படைப்பில் எதுவும் சொல்லப்படவில்லை. வேலைக்குச் சேர்ந்த நாளில் தனது முதல் வகுப்பில் ஓர் ஆசிரியர் அனுபவிக்கும் நெருக்கடியை வாசகன் தன் அறிவினால் ஆன ஓர் அனுபவமாக மாற்றிக்கொள்ளக் கதை இடமளிக்கின்றது. ஆசிரியர் புதியவர் என்பதால் எதிர்வினையாற்றவில்லையோ? எதிர்வினையாற்றாததே மாணவர்களின் அச்செயலைத் துச்சமென மதிப்பதான கருத்தை உருவாக்கும் அறிவான செயல்பாடாக இருக்கலாம். இப்படிப் பலவாறாக வாசகனின் மனநிலைக்கேற்பக் காட்சி அனுபவத்தைத் தனக்கான ஒன்றாக உருவாக்கிக்கொள்ள படைப்பு இடம் தருகின்றது. ஆனால், இவ்விடத்தில் மொழிபெயர்ப்பாளர் கதைசொல்லியிடமிருந்து கதையைக் கைப்பற்றிக் கொண்டு தனது கருத்துக்களையும் சேர்த்து, அதாவது தன்னுடைய வாசகப் பிரதியை (Readers Text) உள்ளே சேர்த்து மொழிபெயர்ப்பை வாசிக்கும் வாசகருக்குக் காட்சி அனுபவத்தில் பங்கில்லாமல் செய்துவிட்டார்.



முதல் பத்தியில் மூலப் படைப்பில் இல்லாத நான்கு கருத்துக்கள் மொழிபெயர்ப்பில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அவை, 1. வேலை நிறுத்தம் உச்சகட்டத்தில் இருந்தபோது, 2. அதனை அலட்சியப்படுத்தி, 3. ஆரம்பிக்க நினைத்த தருணத்தில், 4. மாணவன் மெதுவாக எழுந்தான் ஆகியனவாகும்.

ஐஸ்கிரீம் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை மொழிபெயர்ப்பாளர் உச்சகட்டத்துக்குக் கொண்டு சென்றதற்கான தேவை என்ன? காகித அம்புகளை அலட்சியப்படுத்தினார், நினைத்த தருணத்தில், மாணவன் மெதுவாக எழுந்தான் ஆகிய கருத்துக்கள், கே.வி. ஷைலஜா என்ற வாசகர் தனக்காக உருவாக்கிக்கொண்ட வாசகப் பிரதிக்கு உரியவை. மூலப்பிரதி இந்த இடங்களை மௌனங்களால் நிறைத்துள்ளது. படைப்பின் மௌனங்களை இல்லாமல் ஆக்கிய வாசகப்பிரதி எப்படி மூலத்துக்கு விசுவாசமான மொழிபெயர்ப்புப் பிரதியாகும்?

மொழிபெயர்ப்பை வாசிக்கும் வாசகருக்குக் காட்சி அனுபவத்தின் மூலம் கிடைக்கும் இன்பத்தையும் பிரதிக்குள் உலவும் சுதந்திரத்தையும்

பறித்துவிடும் செயல் கதை முழுதும் செய்யப் பட்டுள்ளது. இந்தக் கதையில் எழுபத்தெட்டு இடங் களில் தேவையே இல்லாமல் கதைசொல்லியின்மீது ஏறி நடந்து கருத்துக்களைச் சொற்களாகவும், தொடர்களாகவும், குறிகளாகவும் பெய்து, மொழி பெயர்ப்புச் சாகசம் நிகழ்த்தப்பட்டுள்ளது.

### 2.2. ஒத்திப்போடல்களைச் சிதைத்தல்:

ஒரு கதையில் எதை எங்கே சொல்லவேண்டும் எங்கே சொல்லக்கூடாது என்பதைப் படைப்பாளர் அறிவார். ஒத்திப்போடல் என்பது கதைசொல்லலின் ஓர் உத்தி. தெளிவின்மையிலிருந்து தெளிவை நோக்கி வாசகரை நகர்த்தும் ஓர் உத்தி இது. அடுத்தடுத்த நிகழ்வுகளுக்கு வாசகரை எதிர்பார்ப் போடு அழைத்துச் செல்வதில் இந்த உத்தி பெரும்பங்காற்றுகின்றது.

சூர்ப்பணகை மொழிபெயர்ப்பில், கதையின் முதல் வாக்கியத்தில் 'கல்லூரி விரிவுரையாளராக' வேலை கிடைத்தது என்ற ஒரு கருத்து சேர்க்கப்பட்டுள்ளது. மூலக்கதையில் மாணவனுட னான உரையாடலுக்குப் பின்னர் வரும் இரண்டாவது பத்தியின் நடுப்பகுதியில் "கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டது" (ப.72) என்று சொல்லுமிடத்தில்தான் பி.பி. அனகா கல்லூரி ஆசிரியராகச் சேர்ந்துள்ளார் என்பது வாசகருக்குத் தெரிவிக்கப்படுகிறது. அதுவரை, பி.பி. அனகா வேலைக்குச் சேர்ந்தார். என்ன வேலை? ஓர் ஆசிரியர் வேலை. ஆசிரியர் வேலை என்றால் பள்ளி யிலா? கல்லூரியிலா? எல்லா இடங் களிலும்தான் மாணவர்கள் இப்படி நடந்துகொள்கிறார்கள். ஒரு மாணவன், 'பேன் த ப்ரா இயக்கம் குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்று ஆசிரியையிடம் கேட்கிறானென்றால் கல்லூரி மாணவனாகத்தான் இருக்கவேண்டும். இது போராட்டமாகவும் மாறி விட்டதா. அப்படியானால் கல்லூரிதான். அங்கேதான் எதற்கெடுத்தாலும் மாணவர்கள் போராட்டத்தில் இறங்கிவிடுவார்கள். இப்படியாக ஒரு வாசகர், கதையோட்டத்துக்குள் தன்னையும் இணைத்துக்கொண்டு அந்தக் கதையை ஒரு வாசகப் பிரதியாக மாற்றுகிறார். 'கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டது' என்ற வாசகத்தை வாசிக்கும் வரை வாசகருக்குள் தோன்றும் கல்லூரியா பள்ளியா என்ற இருநிலைத் தன்மை, கதைக்குள் தெளிவைத்தேடி வேகமாகப் பயணிக்கத் தூண்டும். புறச் சலனமற்ற இந்தப் பயணத்தை வாசகனுக்குள் உண்டாக்குவதன் மூலமாகவே ஒரு கதைக்குள் வாசகரை மூழ்கடிக்க முடியும். மர்மங்களும் எதிர்பார்ப்புகளும் முடிவறியாக் கிளர்ச்சியும் ஊட்டுவதால்தான் ரோலான் பார்த், பிரதி தரும் இன்பத்தைக் கலவி தரும் இன்பமாகப் பார்க்கிறார் (கோபிசந்த் நாரங், 2005, பக்.151-153). அந்த இன்பத்தை அனுபவிக்கவிடாது மொழிபெயர்ப்பாளர் தன் சொந்த விவரணையின் மூலம் பிரதியில் எல்லாவற்றையும் திறந்து வைத்துவிடுகிறார்.



ஐஸ்கிரீம் தொழிலாளர் வேலை நிறுத்தத்தோடு படைப்பாளர் ஏன் அனகாவின் வாழ்வை இணைக்க வேண்டும்? ஓர் எழுத்தாளருக்கு இவ்வாறு வாசகரைச் சுற்றவிட்டு வேடிக்கை பார்க்கும் சுதந்திரம் உண்டு. ஐஸ்கிரீம் தொழிலாளர் வேலை நிறுத்தத்துக்கும் அனகாவுக்கு வேலை கிடைத்ததற்கும் கதையில் நேரடித் தொடர்பு இல்லையென்றாலும் கதைக்குள் நுழையும் வாசகருக்கு ஒரு மேகமூட்டமான மனநிலையை உருவாக்கி, தெளிந்த வானத்தைத் தேடிச் செல்லவைப்பதற்கு இத்தகைய உத்திகளைப் படைப்பாளர்கள் பயன்படுத்துவது இயல்பு. ஆனால், 'வேலைநிறுத்தம் உச்சகட்டத்தில் இருந்தபோது' என்று ஏதோ நேரடித் தொடர்பு இருப்பதுபோன்ற பாவனையை மொழிபெயர்ப்பாளர் புதிதாக உற்பத்தி செய்வதன் தேவை என்ன என்பதைச் சிந்திக்கவேண்டும்.

### 2.3. கதையில் உள்ள சொற்களை, தொடர்களை நீக்கிவிடுதல்:

ஹோமரின் 'இலியாத்' காவியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அலெக்ஸாந்தர் போப், மூலப்பிரதியில் இருந்து இவையிவை இடம்பெற வேண்டும் இவையிவை இடம்பெறக்கூடாது என்று தேர்வு செய்திருந்தார். இத்தேர்வு காரணமாக அவர் மூலப்பிரதிக்கு விசுவாசமாக இருக்கவில்லை எனத் திறனாய்வாளர்கள் விமர்சித்தனர். மொழிபெயர்ப்பாளர்கள் அத்தகைய தேர்வுரிமைக்காக ஆவலாகக் காத்திருப்பதும் சரியல்ல. மூலப்பிரதியை மொழிபெயர்ப்பாளர்கள் நேர்மையோடும் மரியாதையோடும் கையாண்டு, பெறப்படும் மொழிபெயர்ப்பில் மூலத்தில் இருக்கும் விஷயங்கள் இல்லாமல் போய்விடாமல், இல்லாதது இணைக்கப்படாமல் பார்த்துக்கொள்வதே முறையான அணுகுமுறை. (அம்பிகா ஆனந்த், 2011, பக்.89-90) கே.வி. ஷைலஜாவிடமும் அத்தகைய சரியான அணுகுமுறை இருப்பதாக மூலக்கதைப் படைப்பாளரும் பெறுமொழி வாசகரும் நம்புவது இயல்பு.

சூர்ப்பணகை கதையில் மூலப்பிரதியில் மாணவனின் கேள்விக்குப் பிறகு தொடங்கும் இரண்டாவது பத்தி, "அப்பவெல்லாம் பெண்ணிய வாதினா உடனடியா பதில் கொடுக்கணும். அதனால் அனகா அப்பவே அவனை வெளி யேற்றினாள்"2 (ப.72) என்று தொடங்குகிறது. ஆனால் மொழிபெயர்ப்பாளர் முதல் வாக்கியத்தை மொழிபெயர்க்காது விட்டுவிட்டார். 'சூர்ப்பனகைக்கு வரவேற்பு' என்று கரும்பலகையில் எழுதியிருந்ததற்கும், மாணவன் எழுந்து, 'பேன் தி ப்ரா இயக்கத்தைக் குறித்த அபிப்ராயம் என்ன?' என்றுகேட்டதற்கும் காரணம் என்ன எனத் தேடும் வாசகருக்கு, 'அப்பவெல்லாம் பெண்ணியவாதினா உடனடியா பதில் கொடுக்கணும்' என்ற தொடர் தெளிவுண்டாக்குகின்றது. 'ஆசிரியராக வேலை

பார்க்கும் அனகா ஒரு பெண்ணியவாதி' என்ற கருத்தை வாசகர் உருவாக்கிக்கொள்கிறார். இந்த வரியிலிருந்துதான் கதை முழுவதுமான அனகாவின் வாழ்க்கைச் சித்திரம் பின்னோக்கியும் முன்னோக்கியும் எழுதப்படுகின்றது. அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வாக்கியத்தை விட்டுவிட்டது மட்டுமல்லாமல், "கோபத்தோடு அனகா அவனை வகுப்பிலிருந்து வெளியேறச் சொன்னாள்" (ப.9) என்று, சொல்லப்படாத கோபத்தைக் கொண்டுவந்து சேர்த்து ஒரு புதிய கருத்து மொழிபெயர்ப்பில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்த மொழிபெயர்ப்பில் பன்னிரண்டு இடங்களில் மூலக்கதையில் உள்ள சொற்கள், தொடர்கள் பலவும் நீக்கப்பட்டுள்ளன. அச்சொற்களும் தொடர்களும் மூலக்கதையில் மிக நேர்த்தியாகப் பொருந்தியிருந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றை மொழிபெயர்க்க இயலாது என்று சொல்லிவிட முடியாது.

### 2.4. கதைசொல்லியின் கூற்றைப் பாத்திர உரையாடலாக மாற்றுதல்:

ஒரு கதைக்குள் தான் நினைக்கும் கருத்துக்களை, சிந்தனைகளை, முரண்பாட்டுத் தன்மைகளை யார் யாருடைய கூற்றுகளின் வாயிலாக வாசகனுக்குக் கடத்தவேண்டும் என்பதில் படைப்பாளருக்குச் சுதந்திரமும் உரிமையும் உண்டு. கதையின் செய்நேர்த்தி இந்த எடுத்துரைப்பைச் சார்ந்தே உள்ளது.



மூலக்கதையில் யார் கூற்றாக அமைந்துள்ளதோ அதையே பெறுமொழியில் தருவது இயல்பான ஒரு மொழிபெயர்ப்புச் செயல்பாடு. ஆனால் கே.வி. ஷைலஜா கதைசொல்லியின் கூற்றைப் பாத்திரங்களின் உரையாடலாக மாற்றியுள்ளார். புற்றுநோய் காரணமாக பி.பி. அனகாவுக்கு இரண்டு மார்புகளையும் எடுக்கவுள்ள நிலையில், தன் மகள் சீதையோடு உரையாடும் நீண்ட நிகழ்வு மூலக் கதையில் கதைசொல்லியின் கூற்றாக அமைக்கப் பட்டுள்ளது. ஆனால், மொழிபெயர்ப்பில் கதை சொல்லியின் கூற்றாக இல்லாமல் பி.பி. அனகாவும் சீதையும் உரையாடிக்கொள்வதாக அமைத்துள்ளார். சான்றாக, "உனக்கு வேண்டியதைச் சொல்லித் தொலையேன் என்று கடைசியில் கேட்கவேண்டி வந்தது"3 (ப. 76) என்று அனகாவின் கருத்தை மூலக்கதையில் கதைசொல்லிதான் வாசகருக்குச் சொல்கிறார். மொழிபெயர்ப்பில், "உனக்கு வேண்டியதை மட்டும் கேட்டுத்தொல" என்று கத்திவிட்டாள். (ப. 19) என்பதாக உள்ளது. மேற்கோள் இட்டு பாத்திரக் கூற்றாக மாற்றியதோடு 'என்று கத்திவிட்டாள்' எனத் தன்னுடைய கருத்தையும் மொழிபெயர்ப்பாளர் கதைசொல்லியின் கூற்றாகச் சேர்த்துவிட்டார். 'என்று கடைசியில் சொல்லவேண்டி வந்தது' என்ற மூலக்கதையின் கதைசொல்லியின் கூற்று நீக்கப்பட்டுள்ளது.

கருத்தியல் இடைவெளியுடைய தாய்க்கும் மகளுக்குமான கருத்துப் பகிர்வை, கதைசொல்லியின் கூற்றாக வாசகனுக்குக் கடத்தும்போது மிகை யுணர்ச்சி தவிர்க்கப்படுகின்றது. ஆனால், பாத்திரக் கூற்றாகச் செய்யப்பட்ட இந்த மொழிபெயர்ப்பு வாசகனுக்குள் மிகையுணர்ச்சியைத் தூண்டுகின்றது. ஒருவர் கருத்தை மூன்றாம் நபர் வாயிலாகக் கேட்பதற்கும் அவரிடமிருந்தே கேட்பதற்குமான உணர்வு நிலைகள் மாறுபடுவது இயல்பு. அந்த நுட்பத்தை மொழிபெயர்ப்பாளரும் அறிந்திருக்க வேண்டும்தானே.

### 2.5. மூன்றாம் நபரை முதல் நபராக்குதல்:

இரு நபர்களுக்கு இடையிலான இயல்பான உரையாடலில், ஒருவர் தன்னை மூன்றாம் நபராக வைத்து, 'நான்' என்று கூறவேண்டிய இடத்தில் தன் பெயரையோ அல்லது எதிரில் உரையாடும் நபருடனான உறவுமுறைச் சொல்லையோ இட்டு உரையாடுவது மொழிப் பண்பாட்டு வழக்காக உள்ளது. கெ.ஆர். மீரா இந்த மொழி வழக்கைத் தன் கதையில் கையாண்டுள்ளார்.

மார்புகளை நீக்குவதற்கான அறுவைச் சிகிச்சைக்கு முன்பு கணவர் வராததை அறிந்த மருத்துவர், அறுவைச்சிகிச்சைக்கு உரிய ஒப்புதல் பத்திரத்தில் யார் கையெழுத்திடுவார் என்று கேட்கிறார். தானே கையெழுத்திடுவதாகப் பதில் கூறும் பி.பி. அனகா, தன் உடலின்மீதான உரிமை தனக்கே உண்டு என்று கூறுவதாக அமையுமிடத்தில், "இது இரண்டுமில்லாத ஒருத்தனோட சம்மதம் அனகாவுக்கு எதுக்குவேண்டி டாக்டர்?"4 (ப. 76) என்று கேட்பதாக உள்ளது. ஆனால், "இது இரண்டுமில்லாத, இதன் வலி அறியாத ஒருத்தனின் சம்மதம் எனக்கெதற்கு டாக்டர்?" (ப. 18) என்று மொழிபெயர்த்துள்ளார் ஷைலஜா. 'அனகாவுக்கு' என்று மூன்றாம் நபராகத் தன்னை நிறுத்திப் பேசுமிடத்தில் 'எனக்கு' என்று முதல்நபராக ஆக்கிவிட்டார் மொழிபெயர்ப்பாளர். கூடவே 'இதன் வலியறியாத' என்ற கருத்தையும் நுழைத்து மிகையுணர்ச்சியை உண்டாக்கிவிட்டார். அதேபோன்று, சீதையோடு உரையாடும் அனகா, "நான் சர்ஜரிக்குப் போகிறேன். அம்மா உனக்கு ஏதாவது செஞ்சு தரவேண்டியிருக்கா?"5 (ப. 76) என்று கேட்கிறாள். 'அம்மா' என்ற உறவுமுறைச் சொற்பயன்பாடு, மரபுவழி கட்டமைத்த தாயின் நிலையை வெளிப்படுத்துவதாக உள்ளது. மொழிபெயர்ப்பில், "எனக்கு ஆபரேஷன் நடக்கப் போகிறது. உனக்கு ஏதாவது நான் செய்ய வேண்டி யிருந்தால் சொல்" (ப. 19) என்று 'நான்' என்பதை 'எனக்கு' எனவும் 'அம்மா' என்பதை 'நான்' எனவும் மாற்றியதோடு மகளிடம் பரிவோடு கேட்பதைத் தாயின் ஒட்டுறவின்றிப் பேசும் தொனிக்கு மாற்றப்பட்டுள்ளது. முதல் நபரை மூன்றாம் நப ராகப் படர்க்கை நிலையில் வைத்து உரையாடுவதன் அர்த்தச் செறிவை இந்தத் தொடர் இழந்துவிடுகிறது.

2. 6. **மூலக் கதைக்கருத்தைத் திரித்தல்:**

“ஒரு வார்த்தையைப் புரிந்துகொள்வதோ, கதையைப் புரிந்துகொள்வதோ மட்டும் இலக்கியம் அல்ல. சொல்லாடல், உள்வாங்கிக்கொள்ளும் மொழியின் அமைப்பு, தொனி இவற்றிலெல்லாம் என் முதன்மையான அக்கறை இருக்கும். வாக்கியங்களை உடைத்தாலும் அதன் தன்மை மாறாது என்றால் மட்டும் உடைத்துக்கொள்வேன். இல்லையென்றால், அதை அப்படியே மொழிபெயர்ப்பதுதான் சரி” (இந்து தமிழ்திசை பேட்டி, ஆகஸ்ட் 25, 2019, ப. 6) என்கிறார் மொழிபெயர்ப்பாளர் வெ. ஸ்ரீராம். ஒரு மொழி பெயர்ப்பாளருக்குத் தன் மொழிபெயர்ப்பின்மீது உள்ள ஈடுபாடும் அக்கறையும் சொல்லாடலை, வாக்கியத்தை, தொனியை அடையாளம் கண்டு பொருந்தப் பெயர்ப்பதில் இருக்கின்றது என்பதை இவரது கருத்து தெளிவுபடுத்துகின்றது.

கே.வி. ஷைலஜாவோ, ஆறு பக்கக் கதையில் முப்பத்தாறு இடங்களில் மூலச்சொற்களை, தொடர்களைத் தேவையே இல்லாமல் திரித்து மொழிபெயர்த்துள்ளார். மகள் சீதை குறித்துக் கணவன் ராம்மோகனுடனான உரையாடல் அனகாவின் நினைவாக அமைந்துள்ளது. அவ்வுரையாடலின் தொடக்கத்தில், “அன்று இரவே அனகா ராம்மோகனை போனில் கூப்பிட்டுச் சண்டையிட்டாள்”6 (ப.74) என்று மூலத்தில் உள்ளது. மொழிபெயர்ப்பில், “அன்று இரவே அனகா, ராம்மோகனைத் தொலைபேசியில் அழைத்தாள். பேச்சு ஆரம்பத்திலேயே உஷ்ணமானது” (ப.13) என்று உள்ளது. “வழக்கிட்டு” என்று மலையாளத்தில் உள்ள சொல்லுக்கு, வழக்கிட்டாள், சண்டையிட்டாள் என்று மொழிபெயர்ப்பது இயல்பு. ஆனால், ‘பேச்சு ஆரம்பத்திலேயே உஷ்ணமானது’ என்று எவ்வாறு மொழிபெயர்க்க முடியும்? மொழிபெயர்ப்பாளர் புதிதாகக் கற்பித்த உஷ்ணத்தை முடித்து வைக்கவும் செய்கின்றார். அனகா ராம்மோகன் உரையாடல் முடியும் இடத்தில், “உஷ்ண உரையாடல் அதோடு தற்காலிக மாக அணைந்தது” (ப.14) என்று சேர்த்துள்ளார். ஒரு கதை நிகழ்வுக்குத் தொடக்கத்திலும் இறுதியிலும் மிகையுணர்ச்சி தரும் சொற்றொடர்களை இட்டு நிறைத்து மொழிபெயர்ப்பாளர் மூலக்கதையின் அமைப்பையும் தொனியையும் சிதைத்தல் மொழிபெயர்ப்பு நெறியாகுமா என்ற கேள்வி எழுகிறது.

கல்லூரி நிகழ்வுக்குப் பிறகு மருத்துவமனை நிகழ்வில் தொடங்கி அங்கேயே முடியும் கதை, காலத்தால் பின்னோக்கிப் பல நிகழ்வுகளுக்கும் பயணித்துப் பின் அதே இடத்திற்கு வருகின்றது. கதையின் முன்பகுதியில், தாய் படுத்திருக்கும் மருத்துவமனை அறைக்குள் நுழையும் சீதை, சிவப்பு நிற டீ சர்ட் உடுத்தியிருந்தாள். ஆனால் மொழிபெயர்ப்பில் “சிவப்பு நிற டாப்ஸ்” (ப.11) என்று குறித்துள்ளார். திரும்பவும் அதே டீ சர்ட் குறித்துக் கதையின் இறுதிப் பகுதியில் வருமிடத்தில் ‘டீ சர்ட்’ (ப. 19) என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. சீதையின் ஆடை குறித்த இந்த இரண்டு சொற்களும் ஒரு நிகழ்வின் தொடர்ச்சி என்பதை அறுத்து, இரண்டு காலங்கள், இரண்டு நிகழ்வுகள் என்ற தவறான புரிதலை வாசகருக்குத் தந்து, கதையின் நிகழ்வுத் தொடர்ச்சியை, கதையோட்டத்தைப் புரிந்துகொள்ள முடியாத குழப்பத்திற்குத் தள்ளிவிடுகின்றன.

## 3. பிழைபடப் பெயர்த்தல்

இரண்டு பதிப்புகளைக் கண்டுள்ளபோதும் சூர்ப்பணகையில் ‘ண’கரத்துக்குப் பதிலாக ‘ன’கரத்தைப் பயன்படுத்தியுள்ளார் மொழிபெயர்ப்பாளர். மூலக்கதையில் மாணவர்கள் வகுப்பறையில் கரும்பலகையில் எழுதி வைத்ததில் ‘சூர்ப்பனகை’ என்றுள்ளது. மொழியாலும் அறிவாலும் முழுமை பெறாது, இட்டுக்கட்டப்பட்ட பொதுப்புத்திக்கு ஆட்பட்டுக் கிடக்கும் சமூகத்திற்கு அக்கதாபாத்திரம் குறித்தும் அதன் பெயரை உச்சரிப்பது குறித்தும் பிழையின்றி எழுதுவது குறித்தும் சுய அறிவு இல்லை என்பதை மிகச் சாதுரியமாக வாசகருக்குக் கடத்திவிடும் இந்தப் பிழையான எழுத்து. அதேபோல, கதை நாயகி அனகாவின் பத்து வயது மகளான சீதை கான்வெண்ட் ஆங்கிலத் தாக்கத்தால், சூர்ப்பணகை யார் என்று கேட்குமிடத்தில் ‘ஷூர்ப்பனகை’ என்று சொல்வதாக உள்ளது. மொழி விலகலும் பண்பாட்டு விலகலும் உடைய ஒரு குழந்தையால் சூர்ப்பணகையையும் அப்பெயர்ச்சொல்லுக்கான உச்சரிப்பையும் தெரிந்துகொண்டிருக்க முடியாது என்பதை இச்சொற்பயன்பாடு உணர்த்துகிறது. ஆனால், நூல் தலைப்பு, கதைத்தலைப்பு, கதைக்குள் வருமிடங்கள் என எல்லாவற்றிலும் ‘சூர்ப்பனகை’ என்று பிழையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. முறையாக மெய்ப்புத் திருத்தம் செய்யப்படாததால் லகரம் வரும் இடங்களிலெல்லாம் ஒரு கோடு (பாயல் பாலியல்) இருக்கிறது. அந்த இடத்தில் வாசகர் லகரத்தை இட்டு நிறைத்துச் சொல்லை உருவாக்கிக்கொள்ள வேண்டும். வெளியீட்டாளரான வம்சி புக்ஸ் பிழைகள் குறித்துக் கவனம் செலுத்துதல் வேண்டும்.

## 4. புனையப்பட்ட பின்அட்டைக் குறிப்பு

பொதுவாக மதிப்புரை, அணிந்துரை, பதிப்புரைகளில் இடம்பெற்றுள்ள தூக்கலான கருத்தைப் பின்னட்டையில் இடுவது மரபு. அது மற்றொருவரின் பார்வையில் அந்த நூலின்மீதான ஈர்ப்பை உண்டாக்கும் செயலாகும். இத்தொகுப்பின் பின் அட்டையில் மூலநூலாசிரியர், மொழி பெயர்ப்பாளர் குறித்த இரு குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. கே.வி. ஷைலஜாவைக் குறித்த குறிப்பில், “ஷைலஜாவின் விரல்களுக்கு வந்து சேர்ந்தது தான் படைப்பின் தீராத புதிர். ஷைலஜாவின் கவித்துவமிக்க, சுயம்புவான மொழி தரும் வாசிப்பு அப்படிப்பட்டது. அலாதியானது” என்றுள்ளது. இந்த மிகப்பிரம்மாண்டமான கருத்துப் புனைவு வாசகரை ஈர்ப்பதற்கான ஒன்று என்றாலும் அது வாசகரை மிரளச்செய்வதாகவும்

உள்ளது. ஆனால், இக்குறிப்பு யாருடைய கருத்து என்று நூலின் எந்தப் பக்கத்திலும் குறிப்பிடப்பட வில்லை. ஆகவே, அவர் தாமாக எழுதிக்கொண்டது என்று கருத இடம் தருகின்றது. ஆகவே, மொழிபெயர்ப்புக் குறித்து அவரது மொழியிலேயே கூறுவதானால், சூர்ப்பணகை கதை ‘ஷைலஜாவின் கவித்துவமிக்க, சுயம்புவான மொழி’யால் உருவாக்கப் பட்ட ஒற்றை வாசகப்பிரதி என்று கூறுவது பொருந்தும்.

## முடிவுரை

மொழிபெயர்ப்பில், (1) கூடுதலாகச் சேர்த்த சொற்கள், தொடர்கள், (2) ஒத்திபோடலைச் சிதைத்தல், (3) கதைசொல்லியின் கூற்றைப் பாத்திரக் கூற்றாக மாற்றுதல், (4) சொல்லப்பட்ட கருத்தைத் திரித்தல் (5) மூன்றாம் நபரை முதல்நபராக்குதல் ஆகிய மிகைச் செயல்பாடுகள் கதைக்கு மிகையுணர்ச்சி ஊட்டக்கூடியனவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. (6) மூலத்தில் இருந்தும் மொழிபெயர்ப்பில் நீக்கப்பட்ட சொற்களும் தொடர்களும் மொழிபெயர்ப்பாளரின் மிகை யுணர்ச்சியூட்டலுக்குத் தடையாக இருந்தவை என்று கருதத்தக்கன. இதனால், கெ.ஆர். மீரா கட்டமைத்திருந்த ‘பி.பி. அனகா’வும் கே.வி. ஷைலஜா கட்டமைத்திருக்கும் ‘பி.பி. அனகாவும்’ வேறு வேறு பண்புடைய இரண்டு கதாபாத்திரங்கள் ஆகிவிட்டனர். பி.பி. அனகா என்ற கதாபாத்திரத்தின்மீது வாசகருக்கு அதீத வெறுப்புத் தோன்றும்படியான பண்புக் கட்டமைப்பை மொழிபெயர்ப்பு உண்டாக்கிவிடுகிறது.

எல்லா மொழிபெயர்ப்புகளும் வாசகப் பிரதிகளே. இருந்தபோதிலும் அவை மூலப் படைப்புக்கு நெருக்கமானதாகவும் படைப்பாளியின் சொல்லல் முறையிலிருந்து வழுவாததாகவும் பார்வைக்கோணத்திலிருந்து விலகாததாகவும் அமைவது மொழிபெயர்ப்பு அறமாகும். பிற மொழிக்குடும்பங்களிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்படும்போது அந்நியமான மொழி, பண்பாடு முதலான காரணிகளால் மொழி பெயர்ப்பில் இடைவெளி ஏற்படுவது உண்டு. அவ் விடைவெளியைக்கூட இல்லாமலாக்கவேண்டும் என்பதே மொழிபெயர்ப்புக் குறித்த சிந்தனையாகும். ஒரே மொழிக்குடும்பத்தைச் சேர்ந்ததும் நெருங்கிய பண்பாட்டு உறவுடையதுமான மலையாள மொழி யிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கும்போது இடைவெளியற்ற மொழிபெயர்ப்பைத் தருவதில் சிரமம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், மொழிபெயர்ப்பு அறத்துக்கு மாறாக கதை முழுதும் பலவாறாகச் சிதைத்து உருவாக்கப்பட்ட ஒரு ஒற்றை வாசகப் பிரதியாக இந்த மொழிபெயர்ப்பு அமைந்துவிட்டது. நேர்த்தியாகச் செதுக்கப்பட்ட மூலப் படைப்பை அறியாத தமிழ் வாசகர் கெ.ஆர். மீராவை ஒரு மிகையுணர்ச்சிக் கதைசொல்லியாகக் காண்பர்.


தோழர்களே / நண்பர்களே,

படைப்பாளர்கள், எழுத்தாளர்கள் தங்களது படைப்புகளையும் எழுத்துகளையும் ஒவ்வொரு மாதமும் 20ஆம் தேதிக்குள் காக்கைக்குக் கிடைக்குமாறு அனுப்பி உதவுங்கள். UNICODE எழுத்துருவில் அனுப்பி வைப்பது மிகவும் முக்கியம்.

– ஆசிரியர்.


**ஒலிபெயர்க்கப்பட்ட மலையாள மூலம்**

1. கோழிக்கோடு ஐஸ்க்ரீம் ஸமரத்தினிடையிலாணு பி.பி. அனகய்க்கு ஜோலி கிட்டியது. ஆத்யத்தெ க்ளாஸ். கடன்னு செல்லும்போள் ப்ளாக் போர்டில் குறிச்சிட்டிருக்குந்நு: ‘சூர்ப்பனக’ய்க்கு ஸ்வாகதம். பி.பி. அனக திரிஞ்ஞுநிந்நு போர்டு துடய்க்கும்போள் கடலாஸம்புகள் துருதுரா வந்நு. க்ளாஸ் துடங்ஙியப்போள் ஒரு பின்ஸீற்றுகாரன் எழுந்நேற்று.
2. அந்நொக்கெ பெமினிஸ்ற்றாயால் பெட்டெந்நு பிரதிகரிக்கணம். அதுகொண்டு அனக அப்போள்த்தந்நெ அவனெ கெற்றவுட்டடிச்சு.
3. நினக்கு வேண்டத பறஞ்ஞுதுலச்சூடே எந்நொடுவில் சோதிக்கேண்டிவந்நு.
4. இது ரண்டுமில்லாத்த ஒராளுடெ ஸம்மதம் அனகய்க்கெந்தினாணு டோக்டர்?
5. ஞான் ஸர்ஜறிக்கு போகுகயாணு. அம்ம நினக்கு எந்தெங்கிலும் ஸாதிச்சு தரேண்டதாயுண்டோ?
6. அந்நு ராத்ரிதன்னெ அனக ராம்மோஹனெ போணில் விளிச்சு வழக்கிட்டு.

**பயன்பட்ட நூல்கள்**


1. அம்பிகா ஆனந்த். (2011). மொழிபெயர்ப்பு சில அம்சங்கள், அனுபவங்கள். (Dr.G. ஜெயராமன், லதா ராமகிருஷ்ணன், மொ.பெ.) மொழிபெயர்ப்பின் சவால்கள். சென்னை: சந்தியா பதிப்பகம்.
2. கோபிசந்த் நாரங். (2005). அமைப்புமையவாதம் பின் அமைப்பியல் மற்றும் கீழைக் காவிய இயல் (எஸ். பாலசுப்பிரமணியம். மொ.பெ.). புதுதில்லி: சாகித்திய அகாதெமி.
3. மீரா, கெ.ஆர். (2019). கதகள். கோட்டையம்: டி.சி. புக்ஸ்.
4. ………… (2013). சூர்ப்பனகை (கே.வி. ஷைலஜா. மொ.பெ.). திருவண்ணாமலை: வம்சி புக்ஸ்.

நூல் விமர்சனம்

■ சாவித்திரி கண்ணன்




# காந்தி படுகொலையில் மறைக்கப்பட்ட உண்மைகள்

படிக்கும் யாரையும் உலுக்கி எடுத்து, ''அடப்பாவிகளா?'' என்று நிம்மதி இழக்க வைக்கும் பதிவே இந்நூல்!

உலுக்கி எடுக்கும் என்றால், காந்தியை படுகொலை செய்ததற்காகவல்ல! அந்தக் கொலையில் தெள்ளென வெளிப்பட்ட உண்மைகளை எவ்வளவு கவனமாக மறைத்தனர் –அதுவும் அவரது பிரதான சீடர்களாக அறியப்பட்ட பெரிய மனிதர்களும்! முக்கிய பத்திரிகைகளும்! என்பதைத்தான் இந்த பதிவுகள் நமக்கு படம் பிடித்துக் காட்டுகின்றன!

காந்தி, இந்து–முஸ்லிம் ஒற்றுமைக்காக பாடு பட்டார்! ஆனால், அவர் முஸ்லீம்களுக்கு ஆதரவாக இருக்கிறார் என்ற குற்றச்சாட்டை இந்து வெறியர்களும், அவர்கள் சார்ந்த அமைப்புகளும் தொடர்ந்து சொல்லி வந்தன என்பது மட்டுமல்ல, அந்த காரணத்திற்காக அவர் மீது துவேஷபிரச்சாரங்களையும் செய்து வந்தனர்! ஆக, இதன் தொடர்ச்சியாக கொலை செய்ய பலமுறை முயன்று, அதில் வெற்றியும் பெற்றனர் என்பது தானே வரலாறு!

ஆனால், காந்தியின் படுகொலைக்கு இரங்கல் தெரிவித்து தலையங்கமும், கட்டுரைகளும் எழுதிய மிக முக்கிய பத்திரிகைகள் குறிப்பாக தி இந்து, ஆனந்தவிகடன், கல்கி உள்ளிட்ட பிரபல பத்திரிகைகள் காந்தியின் மீது வைக்கப்பட்ட மேற்படி குற்றச்சாட்டுகளை ஆதரிப்பது போல மவுனம் காத்தன! காந்தி கொல்லப்படுவதற்கு காரணமான இயக்கங்கள் குறித்த தங்கள் மதிப்பீட்டை பேச மறுத்தன என்பது மட்டுமல்ல, அந்த இயக்கத்தின் பெயரைக் கூட எழுத மறுத்தன. அதாவது எந்த ஆர்.எஸ்.எஸ்.இந்து மகாசபை அமைப்புகள் காந்தி உயிரோடு இருக்கக் கூடாது என்று பகிரங்கமாக பேசியும், எழுதியும் வந்தனவோ, அதன்படியே அவருக்கு முடிவைத் தந்தனரோ அவர்களைக் கண்டிக்கவில்லை என்பது மட்டுமல்ல, சொல்லியபடியே செய்துவிட்டனர் என்று பெயர் சொல்லி குறிப்பிடவும் இல்லை. மாறாக, தங்களது இரங்கல் கட்டுரைகளில் காந்தியின் பெருமைகளை, அவர் உலக அளவில் மதிக்கப்படுவதை, அவருக்கு மக்களிடம் உள்ள அபரிதமான செல்வாக்குகளை வியந்தும், போற்றியும், உருகியும் எழுதினார்கள்!

காந்தியைக் கொன்றவனின் நிலைபாட்டை கேள்விக்கு உள்ளாக்கவில்லை என்பது மாத்திரமல்ல, கனத்த மவுனம் சாதித்தன என்பதை அந்த பதிவுகளை படிப்பவர் எவரும் உணரமுடியும்!

அத்துடன், காந்தியைக் கொன்றது ஒரு இந்து வெறியன், ஆர்.எஸ்.எஸ் இயக்கம் மற்றும் இந்து மகாசபையில் நீண்ட காலம் செயல்பட்டும் பேசியும், எழுதியும் வந்தவன் என்பதையும் எந்த பத்திரிகையும் சுட்டிக் காட்டாமல் கவனமாக தவிர்த்து, மாறாக காந்தியை கடவுளுக்கு நிகராக புகழ்ந்து விஷயத்தை திசைதிருப்பும் வகையில் ஆன மட்டும் தங்கள் எழுத்தாற்றலை பயன்படுத்தியுள்ளதையும் இந்த பதிவுகள் அம்பலப்படுத்துகின்றன! அதாவது காந்திக்கு எதிராக வன்மமாக தொடர்ந்து பேசியும், எழுதியும் வந்தவர்களின் தவறுகளை கண்டிக்க மனமில்லாவிட்டாலும், அதை மறுக்ககூட மனமின்றி, காந்தி பஜனை பாடுகிறார்கள் என்பதைத்தான் கவனத்தில் கொள்ள வேண்டும் ராஜாஜியும், கல்கியும், எஸ்.எஸ்.வாசனும், இந்து கஸ்தூரி அய்யங்காரும் ஏன் மவுனித்தனர் என்பதிலுள்ள 'உள் அரசியலை' புரிந்து கொள்ள முடிந்தால், இன்று மதவாத அரசியல் மீண்டும் விஸ்வரூபம் எடுத்து ஆட்சியைப் பிடிப்பதற்கான நிலையின் பின்புலத்தில், அன்று மவுனசாட்சியாக அடித்தளம் போட்டுக் கொடுத்தவர்களின் கைங்கரியத்தை உணரமுடியும்!

காந்தியை கோட்சே கொல்வதற்கு பத்து நாட்கள் முன்பாக கொலை செய்யமுயன்று குறி தப்பி கைதான மதன்லால், ஒரு பத்திரிகை பேட்டியில், "சிறையில் என்னை வந்து சந்தித்த என் சகாக்கள், இன்னும் பத்து தினங்களில் காந்தி மரணமடைவார்'' என்று சொல்லிவிட்டுச் சென்றனர் என்று சொல்லியிருப்பதில் இருந்து, சிறைக்குள் வந்து உறுதியளித்து செல்லக்கூடிய அளவுக்கு காந்தியின் கொலை திட்டமிட்டு, வெளிப்படையாக நடந்துள்ளது எனத் தெரிய வருகிறது. அந்த அளவுக்கு பட்டேலின் கீழ் இருந்த உள்துறை அமைச்சகம் காந்திக்கான ஆபத்தை கையாண்டுள்ளது என்பது மட்டுமல்ல, கொலையாளிகளுக்கு அனுசரணையாகவும் இருந்துள்ளது என்பது விளங்குகிறது.

இந்தச் சூழலில் பெரியாரின் குடியரசு, அண்ணாவின் திராவிட நாடு, கலைஞரின் முரசொலி உள்ளிட்ட ஒரு சில திராவிட இதழ்களே காந்தி கொலையின் பின் இருந்த மதவெறியையும், அவை சார்ந்த அமைப்புகளையும் அம்பலப்படுத்தி, துணிந்து வன்மையாகக் கண்டித்து தலையங்கமும், கட்டுரைகளும் தீட்டியுள்ளன என்பதையும் காணமுடிகிறது அப்படி எழுதியதால், திராவிடர் இயக்கம் வகுப்புவாதத்தை தூண்டிவிடுகிறது, துவேஷ பிரச்சாரம் செய்கிறது என தடைசெய்யப்பட்டது. ஆனால், அதையும் எதிர்கொண்டு குடியரசு இதழ் இப்படி எழுதியது.

''காந்தியாரைக் கொன்றவன் பார்ப்பான் என்ற உண்மையை வெளியிட்டதற்காக பார்ப்பனீயம் இன்று நம் மீது பாய்கிறது. காரணம், எந்த மக்கள் அவர் பெயரைச் சொல்லி பல பதவிகளைப் பெற்று சுகவாழ்வு வாழ்ந்து வந்தார்களோ, எந்த மக்கள் அவர் பெயரைச் சொல்லிச் சுலபமாய் மக்களை ஏமாற்றி வந்தார்களோ - அதே இனத்தைச் சேர்ந்த ஒருவன் தான் காந்தியாரைக் கொன்றான் என்பதை வெளியிடும் போது அவர்கள் உண்மையாகவே வெட்கப்படுகிறார்கள். எங்கு மக்கள் தம்மீது பாய்ந்துவிடுவார்களோ என்று கவலைப்படுகிறார்கள். அதனால், அந்த உண்மையை வெளியிடும் நம்மை அழிக்கப் பார்க்கிறர்கள். பல இடங்களில் முஸ்லீம்கள் மிக, மிகக் கேவலமான முறையில் தாக்கப்பட்டு, அவர்கள் சொத்தும் அழிக்கப்பட்டு இருக்கிறது" என்பதையும் குடியரசு சுட்டிக் காட்டுகிறது.

காந்தி கொலையில் நேரடியாகச் சம்மந்தபட்ட கோட்சே உள்ளிட்ட ஆறுபேர் பிராமணர்கள் என்ற நிதர்சனத்தை நினைவில் வைத்து பார்த்தால், அந்தகாலத்தில் பெரியார், அண்ணா உள்ளிட்ட ஒரு சிலர் மட்டுமே 'கோட்சே ஒரு பார்ப்பனர்' என்று சொல்லமுடிந்த அரசியலை புரிந்து கொள்வதோடு, மற்ற பத்திரிகைகள் சொல்லமறுத்த உள் அரசியலையும் உணரலாம்! அதுவும் பெரியார் ஒருபடி மேலே சென்று, "வருங் காலத்தில் கோட்சேவை கடவுள் ஆக்கினாலும் ஆக்கிவிடுவர்'' என்று தீர்க்கதரிசனத்துடன் எழுதியுள்ளதையும் பார்த்தால் சிலிர்க்கிறது.

பெரியாரைப் போலவே, காந்தியவாதியும் சோசலிஸ்டுமான ஜெயப்பிரகாஷ் நாராயணனும் பேசியுள்ளதை அண்ணவின் கட்டுரையில் அறிய முடிகிறது." பல காலமாகவே இந்து மார்க்கத்தை கொண்ட சமுதாயத்திலே, முற்போக்கு சக்திக்கும், பிற்போக்கு சக்திக்கும் போர் நிகழ்ந்து வருகிறது. அதில் பிற்போக்குசக்திகள் காந்தியை மாய்த்துள்ளனர்'' என்ற ஜெயப்பிரகாசரின் பேச்சை அண்ணா மேற்கோள் காட்டியுள்ளார்.

இந்த பதிவை கொண்டுவந்த நண்பர் கடற்க ரையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்! இது விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஒரு வரலாற்றுக் கடமையாகும்! அந்த கடமைக்கு துணை நின்ற சந்தியா பதிப்பக நடராஜனையும் மனமார வாழ்த்துகிறேன்!

நூல்: காந்தி படுகொலை

ஆசிரியர்: கடற்கரை மத்தவிலாச அங்கதம்

வெளியீடு: சந்தியா பதிப்பகம், பக்கம்: 368,
விலை: 360 தொலைபேசி: 044-2489 6979

**–சாவித்திரி கண்ணன் எழுதிய முகநூல் பதிவிலிருந்து**

கட்டுரை

அப்பணசாமி
jeon08@gmail.com

*வரலாறு எழுதுதல், அறிவியல்-தொழில்நுட்பம்:*

# இந்தியாவுக்கான கருத்தியலை வடித்தெடுப்பதில் டி.டி.கோசம்பியின் வகிபாகம்



1949 வாக்கில் அமெரிக்கா சென்றிருந்த டி.டி.கோசம்பி, சார்பியல் கோட்பாட்டு அறிவியலாளர் மாமனிதன் ஐன்ஸ்டினைச் சந்தித்தார். ஒதுக்கிய நேரத்துக்கும் அதிகமாக மிக நீண்டநேரம் இருவரும் விவாதித்துக் கொண்டிருந்தனர். இச் சந்திப்பின் நிகழ்நேரத்தில் இருவரையும் அறிந்த சக அறிவியலாளர்கள், “சார்பியல் கோட்பாடு குறித்து யார், யாருக்கு வகுப்பெடுப்பர்? கோசம்பிக்கு ஐன்ஸ்டின் வகுப்பெடுப்பாரா? அல்லது ஐன்ஸ்டினுக்கு கோசம்பி வகுப்பெடுப்பாரா?’ என்று பகடி செய்து கொண்டனர்.

**டி.டி.கோசம்பி இன்று எதற்காக அறியப்படுகிறாரோ அது கோசம்பி நமக்களித்த கொடை. ஆமாம், இந்தியாவின் வரலாறு அரசர்கள் ஆண்ட காலங்களின் வரிசையாகவும் அதற்கு ஆதாரமாக புராணங்களும் இதிகாசங்களும் இலக்கிய மேற்கோள்களாகவும் இருந்ததை கோசம்பி மாற்றினார். இதற்காக நேரம் கிடைத்தபோதெல்லாம் உழைத்தார். தமது அறிவியல் பார்வை முழுவதையும் செலுத்தினார். ஹராப்பா நாகரிகம் அழிந்தது தொடங்கி மத்திய காலம் வரை வரலாற்றை மீட்டெடுத்தார்.**

பொதுவாகவே, இந்திய வரலாறு எழுதுதலில் அறிவியல் பார்வையை அறிமுகம் செய்ததற்காக வரலாற்றாசிரியர்களின் ஆசிரியர் என்பதாகவே டி.டி. கோசம்பி புகழப்படுகிறார். இது உண்மை எனினும் டி.டி. கோசம்பி எனும் ஆளுமையை வரலாறு எழுதுதல் எனும் ஒற்றைப் புலத்துக்குள் மட்டும் அடைத்துவிட முடியாது. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற அறிவியல் துறைகளான கணிதவியல், புள்ளியியல், மரபியல், நாணயவியல் மட்டுமல்ல இன்னும் பல நூற்றாண்டுகள் மனிதனை ஆட்டிப்படைக்க உள்ள இயற்பியல் உள்ளிட்ட பல துறைகளில் ஆய்வு மேற்கொண்ட அறிவியலாளர். ஒரே சமயத்தில் 18 துறைகளில் ஆய்வுகள் மேற்கொண்டு கண்டுபிடிப்புகள் நிகழ்த்தியவர். அதுமட்டுமல்ல, இந்திய கணினி அறிவியல் வளர்ச்சிக்கு வித்திட்டவர். இதெல்லாம் இன்று மேற்கூறிய துறைகளில் பயிலும் மாணவர்கள் எத்தனை பேருக்குத் தெரியும்? என்று கேட்டால் ஏன் தெரியாமல் மறைக்கப்பட்டுள்ளது என்பதில் பொதிந்துள்ளது தாமோதர் தர்மானந்தர் கோசம்பியின் கதை.

டி.டி.கோசம்பி தாமோதர் தர்மானந்தர் கோசம்பியின் கதையினை அவரது தந்தை தர்மானந்தர் குறித்து கூறாமல் தொடங்க முடியாது. கோவா சனாதன பார்ப்பன வகுப்பில் பிறந்திருந்தாலும் சிறுவயது முதலே சனாதனத்தை வெறுத்து, அதுவரை மறைக்கப்பட்டிருந்த பாலி மொழியையும் புத்த மதத்தையும் மீண்டும் இந்தியாவில் புத்துயிராக்கம் செய்தவர். பள்ளிக்கூடம் கூட செல்லாத தர்மானந்தரின் பாலி மொழி அறிவால் மூன்று தடவை அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தால் அழைக்கப்பட்டு அங்கு பாலி மொழித்துறையில் பணியாற்றினார். இதனால் தமது மூத்த மகள் மாணிக்தாய் மகன் தாமோதர் (டி. டி கோசம்பி) இருவருக்கும் ஹார்வர்டில் கல்வி கிடைத்தது. 1912 கால கட்டத்திலேயே இந்தியாவில் மார்க்ஸை

மார்க்சியத்தை அறிமுகம் செய்து உரைகள் நிகழ்த்தினார். புத்த மதம், மார்க்சியம் குறித்த கருத்துருவும் பின்னர் புத்த மதம் தழுவும் எண்ணமும் அண்ணல் பி.ஆர்.அம்பேத்கரிடம் உருவாக அண்ணல் மீதான தர்மானந்தரின் செல்வாக்கு ஒரு முக்கிய பங்களிப்புச் செய்துள்ளது எனலாம்.

தர்மானந்தரின் இரண்டாவது மகனாக தாமோதர் 1907 ஜூலை 31 அன்று பிறந்தார். மூத்த சகோதரி மானிக் தாய். இளைய சகோதரிகள் மனோரமா மற்றும் கமலா ஆகியோர் ஆவர். தாமோதர் பிறந்த சில மாதங்களில் ‘விசுத்திமக்க’ எனும் பாலி இலக்கிய நூல் மீட்டுருவாக்கத் திட்டத்தில் பணியாற்ற ஹார்வர்டு சென்றார் தர்மானந்தர். இக்காலகட்டத்தில் ஐந்து வயதுவரை தாமோதர் தனது தாயுடனும் தாய் மாமனிடமும் வளர்ந்தார்.

தர்மானந்தர் இரண்டாவது முறையாக ஹார்வர்டு சென்றபோது உடன் தாமோதரையும் மானிக் தாயையும் அழைத்துச் சென்றார். அப்போது தாமோதர் வயது 11; மாணிக்தாய் வயது 19. ஏற்கனவே கோவா ஆங்கிலப் பள்ளியில் தாமோதர் இரண்டு ஆண்டுகள் கற்ற நிலையில் ஹார்வர்டு தொழில் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

தாமோதர் இளயவதில் தந்தையைப் போன்றே உடல் மெலிந்தவராகவும் சோகையுடனும் காணப் மொழிகளில் எழுதப்பட்டதால் அம் மொழிகளை இலக்கன சுத்தமாகக் கற்றார். இலத்தின் மொழித் தேர்வில் ‘ஏ’ கிரேட் பெற்ற முதல் மாணவர் என ஹார்வர்டில் லத்தின் மொழி கற்பித்த பேராசிரியர் கோசம்பியைப் பாராட்டியுள்ளார். லத்தீனை தாய் மொழியாகக் கொண்டவர்கள்கூட ‘ஏ’ கிரேடு பெறுவதுகடினம் என்று அவர் கூறியது தாமோதரின் கற்றல் திறனுக்கு எடுத்துக் காட்டு. இன்னும் சொல்லப்போனால் கணித மாணவரான தாமோதர், அணுக்கருவியல் ஆராய்ச்சி மாணவருக்கே வகுப்பெடுக்கும் அளவுக்கு அணுக்கருவியல் அறிந்திருந்தார். காரணம் அப்போது அணுக்கருவியல் மொழிகள் ஜெர்மன் மொழியிலேயே எழுதப்பட்டன. தமோதர் ஜெர்மன் மொழியிலேயே வாசித்துப் புரிந்துகொண்டதால் மிக நுட்பமாக அதனை அலச முடிந்தது. கதை, காவியங்கள் குறித்து ஜெர்மன்மொழியிலேயே சிறப்பான விரிவுரை வழங்கும் ஆற்றல் கொண்டவர். ஒரு கட்டத்தில் ஒரேசமயத்தில் வெவ்வேறு துறைகளில் 18 தனித் தேர்வுகள் எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார். இந்த பல் துறை ஆர்வம்தான் அவரை டி. டி. கோசம்பி ஆக்கியது. அதே சமயம், கோசம்பியின் இந்த ஆர்வம்தான் அவர் கேம்பிரிட்ஜில் உயர் கல்வி தொடர்வதையும் தடுத்துள்ளது.

குறிப்பிட்ட துறை மாணவர்கள் அதே துறை சார்ந்தே தனது கவனத்தைக் குவிக்க வேண்டும்; பல துறைகளில் கவனம் செலுத்தினால் குறிப்பிட்ட

> **அ**ணுகுண்டு தயாரிப்பது மட்டுமல்ல அணுக்கதிரியக்கம் மூலம் மின்சாரம் தயாரிப்பதையும் எதிர்த்தார். பொதுவாக, அறிவியல் குறித்த மேலை நாடுகளின் பார்வையைப் பின்பற்றுவது ஆபத்தானது என்றார்.

பட்டார். இதனால் உடல் வலு தேவைப்பட்ட தொழிற்கல்வி அவருக்கு ஒத்துவரவில்லை. ஹார்வர்டு பருவ நிலையும் இட மாற்றமும் காரணம். இதனால் கேம்பிரிட்ஜ் இலக்கணப் பள்ளிக்கு மாற்றப்பட்டார். பள்ளியில் தன்னிகரற்ற மாணவர் எனப் பெயர் எடுத்தார். ஹார்வர்ட் பள்ளியில் ஒரு வழக்கம் உண்டு. ஒரு மாணவரின் அரிய திறன்கள் மற்றும் சாதனைகள் அம் மாணவரின் புகைப்படத்துடன் அப் பள்ளியின் ஆண்டுமலரில் வெளியிடுவது. வழக்கம். தாமோதர் குறித்து இவ்வாறு எழுதப்பட்டிருந்தது:

“பலர் பல காரணங்களால் வீழலாம். ஆனால், பாபா (தாமோதர்)வை எவராலும் திசை திருப்ப இயலாது” இதனால் ஹார்வர்டு பல்கலையில் சேர நுழைவுத் தேர்வு தேர்ச்சி பெற வேண்டும் என்ற கட்டுப்பாடு தாமோதருக்குத் தளர்த்தப்பட்டது. இளங்கலை கணிதம் பயின்றார். இந்த நான்கு ஆண்டுகளில் இரண்டாண்டுகள் அறையில் தங்கி பயின்றார்.

இக் காலகட்டம் கணிதம், இயற்பியல், மின்னணுவியல், புள்ளியியல், மரபியல் துறைகள் புதுப் பாய்ச்சல் கண்ட காலம். இதன் மூல நூல்கள் ஜெர்மன், லத்தீன், கிரேக்கம், பிரெஞ்சு போன்ற துறையில் உயர்கல்வி அல்லது ஆராய்ச்சியில் முழுக் கவனம் செல்லாது என்பதால் அந்த முயற்சிகள் ஊக்குவிக்கப்படுவதில்லை. இதைக் குறிப்பிட்டு அவரது பேராசிரியர் கணிதவியலறிஞர் பிர்க்காஃப் எச்சரித்தும் கோசம்பி பெரிதாக எடுத்துக் கொள்ள வில்லை. மேலும் பள்ளிக்கல்வி முடிந்ததும் கோசம்பி 2 ஆண்டுகள் இந்தியா திரும்பிவிட்டார். 1926இல் தர்மானந்தர் மீண்டும் ஹார்வர்டு வந்தபோதே அவருடன் வந்தார். இதனால் காலம் பிந்திவிட்டது.

ஆம், கோசம்பி இளங்கலை கணிதம் பட்டம் பெற்ற சமயத்தில் அமெரிக்காவை மாபெரும் பொருளாதார மந்தம் அச்சுறுத்தத் தொடங்கி விட்டது. மிகப் பெரும் பொருளாதாரச் சரிவை எதிர்கொள்ள மேற்கொண்ட நடவடிக்கைகளில் உயர்கல்விக்கான அரசு செலவுகள் வெகுவாகக் குறைக்கப்பட்டன. இவை யெல்லாவற்றையும்விட இன வாதம் அப்போது மீண்டும் தலை தூக்கியிருந்தது. கருப்பினத்தவர் மட்டுமல்ல, யூதர்கள், சீனர்கள், தெற்காசியாவினர் ஆகியோரை இரண்டாம் குடிமகனாகப் பாவித்தனர். இதுவே கோசம்பி உயர்கல்வி தொடர்வதைத் தடுத்தது. தாமோதரின் பழுப்புத்தோலும் யூத மூக்கும்

அவருக்கு எதிராக அமைந்தது என்கிறார் அவரது நண்பர்.

ஆனால் தாமோதர் கேம்பிரிட்ஜ் பல்கலை கல்விப்புலப் பண்பாட்டுடன் இந்தியா திரும்பி இருந்தார். பெரியவர் சிறியவர் வேறுபாடு பாராட்டாமை, அனைவரையும் சமமாக மரியாதை செய்தது, வெட்டிக் கவுரவம் துதி பாடுதல் இன்மை, ஆசிரியராக இருந்தாலும் மனதில் பட்டதை வெளிப்படையாகப் பேசுதல், மாணவர் களிடம் ஆராய்ச்சி மனப்பான்மையை ஊக்குவித்தல் ஆகியவை ஹார்வர்டு கல்விப்புல பண்பாடுகளாக இருந்தன. அவர் இந்தியா திரும்பிய காலகட்டத்தில் இந்தியாவில் உயர்கல்வி என்பது தொடக்க நிலை யிலேயே இருந்தது. இங்கு மனப்பாடக் கல்வியே போதிக்கப்பட்டது. காலனிய ஆட்சியில் அடிமைகளே கல்விப் புலங்களில் உருவாக்கப்பட்டு வந்தனர்.

மொத்தத்தில் தாமோதர் போன்ற ஆராய்ச்சி மனப்பான்மை கொண்டவர்களுக்கு இந்தியாவில் இடம் இல்லை என்பதே நிலைமை. இதனால் இத்தாலி, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் கூட உயர்கல்வி வாய்ப்பைத் தேடிப்பார்த்தார். பலனில்லை. இறுதியாக வாரனாசி பல்கலையில் கணிதவியல் பேராசிரியராகச் சேர்ந்தார். அங்கு இரண்டு ஆண்டுகள் கூட நீடிக்க முடியவில்லை. அடுத்து பணி செய்த அலிகார் முஸ்லிம் பல்கலையிலும் இதே நிலைதான். அடுத்து புனே ஃபெர்குசன் கல்லூரியில் 12 ஆண்டுகள். புனே நகரில் தனக்கான வீட்டைக் கட்டிக்கொண்டார். ஃபெர்குசன் கல்லூரியிலும் நிர்வாகத்துடன் தேனிலவு காலம் ஒன்றிரண்டு ஆண்டுகள்தாம். குறிப்பாக அறிவுப்புல மலட்டுத்தனத்தை தனக்கேயுரிய கூர்மையான சொற்களால் பகடி செய்தார். உதட்டில் அறிவியலும் உள்ளத்தில் சனா தனமும் கொண்டிருந்த நிர்வாகத்தால் அதைத் தாங்க முடியவில்லை.

அதே சமயம் இந்தியாவின் தலை சிறந்த கணிதவியல் ஆசிரியராகத் திகழ்ந்தார். அவரது மாணவர்கள்தான் பிற்காலத்தில் இந்திய கணிதவியல் துறையையே கட்டி ஆண்டார்கள். அதுமட்டு மல்லாமல் புள்ளியியல், நாணயவியல், மரபியல் ஆராய்ச்சிக்கு ஃபெர்குசன் கல்லூரியில்தான் வித்திட்டார். குறிப்பாக இந்த ஆராய்ச்சிகளே வரலாறு எழுதுதலில் அறிவியல் பார்வையை உரு வாக்கியது. அதுவரை இலக்கிய சுலோக மேற் கோள்களின் தொகுப்பாக இருந்துவந்த இந்திய வரலாற்றாராய்ச்சியை அறிவியல் சான்றாதாரங்களை நோக்கித் திருப்பினார். இதனால்தான் கோசம்பி வரலாற்றாசிரியர்களின் ஆசிரியர் என பாராட்டப் படுகிறார்.

மறுபக்கத்தில் அவரது அறிவியல் ஆராய்ச்சி விளைவுகள் இன்று உரு செயலாக்கம் (image processing), சமிக்ஞை செயலாக்கம் (signal processing), தரவு ஒடுக்கம் (data compression), கடலலையியல் (oceanography), வேதி பொறியியல் (chemical engineering), திரவ பொறியியல் (fluid mechanics) ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படுகிறது.

கோசம்பியின் ஆய்வுகள் துறைசார் மேதை மையின் தூண்டுதலால் அல்லாமல் தன்னுணர்வுத் தூண்டுதலால் (intuitive) மேற்கொள்ளப்பட்டவை எனலாம். அறிவியல் புலத்தில் இதற்கு மதிப்பு குறைவுதான். ஆனால், அறிவியலானாலும் கலைகளானாலும் படைப்பாக்கத்தின் அடித்தளம் உள்ளுணர்வுத் தூண்டுதல்தான். இப் பணிகளோடு இந்திய கணிதவியல் சங்கத்திலும் தீவிரமாகப் பங்கெடுத்தார். அத்துடன் பெங்களூரில் தொடங்கப்பட்டஇந்திய அறிவியல் நிறுவனத்தில் சொற்பொழிவுகள் ஆற்றினார். தொடர்ந்து இந்திய அணுவியல் தந்தை எனப் போற்றப்படும் ஹோமி பாபா தொடங்கிய டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தில் (TIFR) இணைந்தார்.

இதற்கிடையே அவருக்கு கணிதமேதை ராமானுஜம் விருது வழங்கப்பட்டது. பல்கலைக் கழகங்களின் அழைப்பின் பேரில் அமெரிக்கா. இங்கிலாந்து நாடுகளில் சுற்றுப்பயணம் மேற் கொண்டு தொடர் வகுப்புகள் எடுத்தார். தாமோ தரின் இந்த அமெரிக்க பயணத்தின்போதுதான் இக் கட்டுரையின் முகப்பில் கூறப்பட்ட ஐன்ஸ்டீன் கோசம்பி சந்திப்பு நிகழ்ந்தது.

டாடா ஆராய்ச்சி மையத்தில் ஹோமி பாபாவும் கோசம்பியும் இரட்டைக்குழல் துப்பாக்கி போல் பணியாற்றினர். இடையே 1945 செப்டம்பரில் ஹிரோசிமாவில் வீசப்பட்ட அணுகுண்டு கோசம்பி உள்ளிட்ட மனிதநேய அறிவியலாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. உலகம் முழுவதும் அணுகுண்டு சோதனைக்கு எதிரான முழக்கம் எழுந்தது. உலக சமாதான இயக்கம் பேரெழுச்சி கொண்டது. இதன் இந்திய முகமாக கோசம்பி இயங்கினார். அணுகுண்டு தயாரிப்பது மட்டுமல்ல அணுக்கதிரியக்கம் மூலம் மின்சாரம் தயாரிப்பதையும் எதிர்த்தார். பொதுவாக, அறிவியல் குறித்த மேலை நாடுகளின் பார்வையைப் பின்பற்றுவது ஆபத் தானது என்றார். இந்தியா போன்ற காலனிய நாடு கள் வளர்வதை மேலை நாடுகள் விரும்பாது. இந் நிலையில் நாம் மேலை நாடுகளின் தொழில் நுட்பங்களை அப்படியே இறக்குமதி செய்தால் நாம் காலம் காலமாக அவர்களின் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுபவர்களாகவே இருப்போம் என்றார். இதற்காக சீனாவை உதாரணம் காட்டி அதன் அறிவியல் கொள்கைகளைப் பின்பற்றக் கோரினார்.

ஆனால் அன்றைய இந்திய அரசின் பார்வை வேறாக இருந்தது. மிகவும் பின் தங்கியுள்ள இந்தியாவை பெரும் திட்டங்கள் மூலமே தன்னிறைவு கொண்டதாக அமைக்க முடியும் என்று ஆட்சி யாளர்கள் நம்பினர். குறிப்பாக அணு ஆற்றலை வளர்ச்சிக்கு பயன்படுத்துவதில் நேரு முனைப்பாக இருந்தார். இதையொட்டி இந்திய அணு ஆற்றல் கழகம் உருவாக்கப்பட்டு அதன் தலைவராக ஹோமி பாபா நியமிக்கப்பட்டார். இதனால் கோசம்பியின் கொள்கை செயல்பாடுகள் பாபாவுக்கு நெருடலாக

அமைந்தது. இறுதியில் பாபாவே 1961 இல் கோசம்பியை பதவி நீக்கம் செய்தார்.

ஆனால் டி.டி.கோசம்பி இன்று எதற்காக அறியப்படுகிறாரோ அது கோசம்பி நமக்களித்த கொடை. ஆமாம், இந்தியாவின் வரலாறு அரசர்கள் ஆண்ட காலங்களின் வரிசையாகவும் அதற்கு ஆதாரமாக புராணங்களும் இதிகாசங்களும் இலக்கிய மேற்கோள்களாகவும் இருந்ததை கோசம்பி மாற்றினார். இதற்காக நேரம் கிடைத்தபோதெல்லாம் உழைத்தார். தமது அறிவியல் பார்வை முழுவதையும் செலுத்தினார். ஹரப்பா நாகரிகம் அழிந்தது தொடங்கி மத்திய காலம் வரை வரலாற்றை மீட்டெடுத்தார்.

சமசுகிருத கவி பதரஹரி, வித்யாகர் ஆகியோரின் நூல்களின் மறைந்துபோன சுவடிகளைத் தேடி புத்தாக்கம் செய்தார். அந்த நூல்களில் காணப்படும் பிற்போக்கான கருத்துகள் மீது தனது கருத்துகளையும் பதிவு செய்தார். இப் பணிகள் தமிழில் சங்க இலக்கியம் மற்றும் காப்பியங்களின் பிரதிகளைத் தேடிக் கண்டுபிடித்து ஒப்பு நோக்கி மறுபதிப்பு செய்த உ. வே. சா, சி. வை. தாமோதரனார், ஆறுமுக நாவலர் போன்றோர் பணிகளோடு ஒப்புநோக்கத் தக்கவை.

இந்திய வரலாறு எழுதுதலில் பெரும் செல்வாக்கு ஏற்படுத்திய திருப்புமுனை புத்தகமான டி.டி.கோசம்பியின் 'இந்திய வரலாற்றைக் கற்பதற்கான அறிமுகம்' (Introduction to the Study of Indian History) எனும் புத்தகம் 1950களில் வெளியானது (வெளியீடு Popular Publication of Bombay, 1956). அதன் முன்னுரையில் அவரே கூறுவதுபோல் "இந்தப் புத்தகம் இந்திய வரலாறு முழுமையும் கூறவில்லை. இந்திய வரலாற்றைக் கற்பதில் நவீன அணுகுமுறையை அறிமுகப்படுத்துகிறது. அவ்வளவுதான். இனியாகிலும், வாசகர்கள் வரலாறு வாசிப்பார்கள் என்ற நம்பிக்கையிலும் அல்லது நம்மைச் சுற்றியுள்ள நாட்டினை பெரும் அனுதாபத்துடனாவது கவனிக்கத் தொடங்குவர் என்ற எதிர்பார்ப்பிலும்" எழுதப்பட்டது. இப் புத்தகத்தின் எழுத்து கோசம்பியின் கூர்மையான பகடிகள், விமர்சனங்கள் நிறைந்தது. இருப்பினும் இறுதியாக அவரது நோக்கம் "வரலாறு என்பது உற்பத்தி உறவுகள் மற்றும் கருவிகளில் ஏற்பட்ட தொடர் மாற்றங்களின் காலவாரியான வெளிப்படுத்தல்" என்பதை வரையறுப்பதாகும்.



***எந்த ஒரு தொழில்நுட்பமும் மேலைநாடுகளில் உருவாக்கப்படுகின்றன. அவை மேலை நாடுகளின் சூழலுக்கு ஏற்பவும் அந்நாடுகளின் முதலாளிய வளர்ச்சிக்கு ஏற்பவும் தகவமைக்கப்படுகின்றன. அதனால் அத்தகைய தொழில்நுட்பங்கள் உடனடியாக வளரும் நாடுகளுக்குப் பரவுவதை விரும்புவதில்லை. எனவே, ஒரு புதிய தொழில்நுட்பம் இந்தியா வந்துசேர குறைந்தது 15 ஆண்டுகள் ஆகிறது.***

நீண்ட நெடிய இந்திய வரலாற்றின் சிறப்பம்சம் என "எந்த ஒரு படையெடுப்பும் இல்லாமலே இந்தியப் பண்பாட்டின் செல்வாக்கு வடக்கில் சீனம் ஜப்பானிலும், தெற்கில் தென் கிழக்கு ஆசியாவின் பல நாடுகளிலும்" ஊடுருவியதைக் கோசம்பி குறிப்பிடுகிறார். மேலும், "இதனால்தான் இந்தியப் பண்பாட்டின் தாக்கம் அங்கெல்லாம் ஆயிரம் ஆண்டுகள் கடந்து இன்றும் விளங்குகிறது" என்றார். இது வரலாற்றுப் பார்வையின் ஒரு முகம். இருப்பினும் இது ஒரு வரலாற்று உண்மையும்கூட. இதில் புத்த மதத்தைப் பின்பற்றிய பேரரசுகளின் விரிவாக்கக் கொள்கையின் வரம்புகளோடு இந்த உண்மை வாசிக்கப்பட வேண்டும் என்பது நினைவு கொள்ளத் தக்கது. இதுவே, இந்திய சமூக உருவாக்கத்தில் காணப்படும் பன்மைத்துவமும் வன்முறையற்ற வழியும் ஏராளமான இந்திய தொல்குடிகளின் பண்பாடுகளும் நம்பிக்கைகளும் காலம் காலமாக நீட்டித்து வருவதற்குக் காரணமாகும். அதே பன்மைத்துவமும் வன்முறையற்ற வழியுமே இப் பண்பாடுகளை காலம் காலமாக, பிரித்தானிய காலனியம் வரும்வரை பாதுகாத்து வந்துள்ளது என்பதே கோசம்பியின் கண்ணோட்டம் இவ்வாறு இந்திய வரலாறு எழுதுதலில் பல கூறுகளில் கோசம்பி முன்னுதாரணமாகத் திகழ்கிறார். இதைத்தான், நம் சமகாலத்தில் புகழ்பெற்ற வரலாற்றாசிரியராக உயர்ந்துள்ள ரொமிலா தாபர் இந்திய வரலாற்றைக் கற்பதில் கோசம்பி ஒரு புதிய முன்னுதாரணத்தை உருவாக்கியுள்ளார் என்று குறிப்பிடுகிறார்.

உலகப்புகழ் பெற்ற உயிரியல் அறிவியலாளரும் இடதுசாரி வரலாற்றுச் சிந்தனையாளருமான பெர்னல் தனது 'வரலாற்றில் அறிவியல்' என்னும் புகழ்பெற்ற நூலில் "கோசம்பியின் புத்தகம்தான் இந்திய வரலாறு கற்பதில் ஒரு ஒருங்கிணைந்த முறையை முதல் முதலாக அறிமுகம் செய்தது" என்று புகழ்ந்து எழுதியுள்ளார்.

கோசம்பி வாழும் காலத்தில் வெளியான நூல் பண்டைய இந்தியாவின் பண்பாடும் நாகரிகமும் ஒரு வரையறை (Culture and Civilization of Ancient India in Outline) ஆகும். இது தமது ஆழமும் அகலமும் கொண்ட வரலாற்றறிவை சாரமாக்கி எளிய நடையில் எழுதப்பட்ட நூல் ஆகும். அவர் கடைசி வரை வரலாற்றாய்வுகளை நிறுத்தவில்லை. உண்மையில் அவரது ஆய்வுகள் முடியவில்லை. அதற்கு முன்பாகவே காலம் முந்திக்கொண்டது. அவரது கட்டுரைகள் அவரது மறைவுக்குப் பின்னர் நூல்களாக வெளிவந்து வரவேற்பு பெற்றன.

இரண்டு மகள்கள் மாயா, மீரா. மூத்த மகள் மாயா டாக்டர் சர்க்கார் திருமணமாகி கணவருடன் ஸ்வீடன் நாட்டுக்குக் குடிபெயர்ந்தார். இவர்களுக்கு 1960ல் நந்திதா எனும் மகள் பிறந்தார். இரண்டாவது மகள் மீரா ஃபெர்குசன் கல்லூரியில் பட்டம் பெற்று சில காலம் அக் கல்லூரியில் பணியாற்றி வந்தார்.

1966 ஜனவரி 24 அன்று ஹோமி பாபா விமான விபத்தில் அகால மரணமடைந்தார். அதே ஆண்டு ஜூன் மாதம் 28 அன்று காலையில் கோசம்பி மருத்துவரிடம் சென்று உடல் பரிசோதனைகளை முழுமையாகச் செய்து கொண்டார். கோசம்பி உடல்நிலையில் மருத்துவர் முழு நிறைவு கண்டார். அன்று இரவு தன் பணிகளை முடித்துக்கொண்டு பின்னிரவில் கண்ணுறங்கிய கோசம்பி எழுந் திருக்கவே இல்லை. தூக்கத்தில் ஏற்பட்ட கடும் மாரடைப்பில் அவர் உயிர் பிரிந்தது.

மத்திய கால இந்திய வரலாறு குறித்து பல கட்டுடைப்புகளை மேற்கொண்டதே கோசம்பியின் முக்கியப் பங்களிப்பு ஆகும். குறிப்பாக வேதங்களையும் புராணங்களையும் கட்டுடைப்பு செய்தார். முதல் முதலாக அறிவியல் பார்வையுடன் அதனை கால வரிசைப்படுத்த முயன்றார். ஆனால், அவருக்கிருந்த வாய்ப்பு வசதிகள் மிக, மிகக் குறைவு. எந்த ஒரு பல்கலைக்கழகம் அல்லது நிறுவனங்களிடம் இருந்தும் உதவி பெறவில்லை. பெரும்பாலும் தமது ஊதியத்தில் இருந்தே தமது ஆராய்ச்சிகளுக்காகப் பெரும்பகுதியை செலவளித்தார். வரலாறு எழுதுவதற்காக அவர் வரலாற்றாய்வில் ஈடுபட வில்லை. அதிகார வர்க்கத்திடம் இருந்து காலம் காலமாக அதிகாரத்தில் இருப்பவர்களிடம் இருந்து சனாதன அறிவுப்புலத்திடமிருந்து வரலாற்றை மீட்டெடுப்பதற்காக வரலாற்றாய்வில் ஈடுபட்டார். 3500 ஆண்டுகளில் எவ்வாறு ஆரியம் இந்திய பன்மைத்துவ பண்பாட்டுக்குள் ஊடுருவி, இந்திய தொன்மங்களைத் திருடியது எனும் வரலாற்றைப் பதிவு செய்தார். சிந்துவெளி நாகரிகத்துக்குப் பின்னர் ஆரிய வருகைக்கு முன்னர் இந்தியாவின் மேற்கிலிருந்து கிழக்கு வரை, வடக்கில் இருந்து தெற்கே தக்காணம் வரை சிந்து, கங்கை நதிகளின் சமவெளிகளில் இருந்து விந்திய, சாத்புரா மலைப்பகுதிகள் வரை எண்ணற்ற தொல்குடி இனக்குழுக்கள் வாழ்ந்து வந்ததை வரலாற்றின் மறைக்கப்பட்ட பக்கங்களில் இருந்து கோசம்பி அவிழ்த்தார்.

இந்தியாவில் குலங்களாகவும் குடிகளாகவும் குடியரசுத் தன்மை கொண்டவர்களாகவும் வாழ்ந்த இந்திய பூர்வகுடிகள் எவ்வாறு வர்ண அமைப்புக்கு கொண்டுவரப்பட்டனர் என்ற சதிவரலாற்றை அம்பலப் படுத்த முயன்றார். அவரது ஆய்வுகளில் இன்று பல ஐயங்கள் எழுப்பப்படலாம். இதற் கெல்லாம் உரிய கட்டமைப்பு உதவிகள் இல்லாமைதான் காரணம். இருப்பினும் இயங்கியலை இந்தியத் தன்மையுடன் அணுகி வரலாற்றை நோக்கும் அடித்தளத்தை அமைத்தது கோசம்பியே. இதற்காக அவர் இன்று புகழப்பட்டாலும் அறிவியல் குறித்து கோசம்பி உருவாக்கிய இந்தியப் பார்வை கருவிலேயே நசுக்கப்பட்டு விட்டதுதான் வரலாற்று சோகம். பிரித்தானியர் சென்ற பின் இந்தியாவை கொள்ளையடித்து கொழுக்க நினைத்த லாப வெறி கொண்ட முதலாளிய ஆதரவாளர்களும் அவர்களின் கால் நக்கி சுகம் காண நினைத்த மேட்டுக்குடி வர்க்கமும்தான் அப்படி ஒரு இந்தியத் தன்மை கொண்ட அறிவியல் தொழில்நுட்பம் வளர்த்தெடுக்கப்படாததற்குக் காரணம்.

குறிப்பாக, காலனி ஆதிக்கத்தில் இருந்து விடுதலை அடைந்த இந்தியாவில் உண்மையான வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் அரசியல் அதிகாரம் முதல் பொருளாதார, தொழில்நுட்பம் வரை மையப்படுத்தப்பட்ட நிர்வாக முறை பரவலாக்கப்பட வேண்டும் என்பதைத் தொடக்கம் முதலே கோசம்பி வலியுறுத்தினார். உள்ளூர் 'தன் ஆளுகை' நிறுவனங்கள் பரவி, விரிந்து, வலுப் பெறுவதன் மூலம் பலமான மையப்படுத்தப்பட்ட அரசு படிப்படியாக உதிரும் என்றார் கோசம்பி. வளர்ந்த நாடுகளில் மையப்படுத்தப்பட்ட முறையில் தொழில் துறை இருப்பதால் பகாசுர ஆலைகளாகத் திட்டமிடப்படுகிறது. ஆனால், கிராமங்களில் உள்ள ஆதாரங்கள் மனித வளங்களைக் கொண்டு கிராமங்களின் தேவைக்காகச் சிறிய அளவில் திட்டமிடும் போது கிராமங்கள் தன்னிறைவு பெறுகின்றன. உதாரணமாக, இரும்பு ஆலைகள் மையப்படுத்த முறையில் பகாசுர ஆலையாக திட்டமிடப்படாமல் கிராமம் தோறும் செங்கல் உலைகள் மூலம் உள்ளூர் கொல்லர்களைக் கொண்டு தேவையான இரும்பினைத் தயாரித்துக் கொள்வதன் மூலம் கிராமங்கள் எக்காலமும் தன்னிறைவு கொண்டிருக்க இயலும் என்பதைக் கண்டார்.

இம் முறையால் வேளாண்மை, காடுகள், மேய்ச்சல் நிலங்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, சிறு தொழில்கள் பாதுகாப்பு, கூட்டுறவு முறையில் கொள்முதல் மற்றும் விற்பனை ஆகிய கூறுகளில் சீனா பின்பற்றும் கம்யூன் முறை இந்தியச் சூழ்நிலைகளிலும் பயனளிக்கத்தக்கது என்பதனைப் புரிந்துகொண்ட, கோசம்பி பல சந்தர்ப்பங்களில் இந்திய அரசிடம் அவர் பரிந்துரைத்தார். விடுதலைக்குப் பின் நடந்த முதல் அறிவியல் மாநாடுதான் புதிய அரசின் அறிவியல் கொள்கையின்

தலைவிதியை உருவாக்கிய மாநாடு ஆகும். நேரு தலைமையில் நடந்த இந்த மாநாட்டில் அனைவரும் மையப்படுத்தப்பட்ட கனரக தொழில்களின் வளர்ச்சியை முன்னெடுக்க கோசம்பி மட்டும் ஒற்றைக்குரலாக பொருளாதார வளர்ச்சி பரவலாக்கம் பெற புதிய தொழில்நுட்பங்களும் பரவலாக்கத்தினை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என நேருவின் முன்னிலையிலேயே வலியுறுத்தினார். ஆனால், சுதந்தர இந்தியாவை வேட்டையாட மூலதனத்துடன் தயாராக இருந்த முதலாளிய கொள்கையாளர்கள் அவரைச் சூழ்ந்து இருந்ததால் எடுபடவில்லை. அதன் பலனை 70 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

உதாரணமாக, இந்தியாவில் கிராமப்புற நீர்ப்பாசன வசதிகளைவிட மாபெரும் நீர்த்தேக்கங்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதனால் பெரு விவசாயிகளே அதிகம் பயன் பெறுவர். அதுமட்டுமல்லாமல் இத்தகைய திட்டங்களுக்கே முழு கவனமும் அளிக்கப்படுகிறது என்றார்.

பெரிய அணைகட்டுவதானால் பணம் விரயம். சிறிய அணை என்றால் அடிக்கடி வறண்டு விடும். என்றாலும், கிடைக்கக் கூடிய மழை அளவு, நீர் வினியோகம் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்தால் குறைந்தது இருபது ஆண்டுகளுக்கு வறட்சி காணாது. இவ்வாறு தொலை நோக்கிலான அணைகள் நமக்கு வேண்டும்.

இரவில் உங்களுக்குத் தேவைப்படும் மின்சாரத்தினைப் பகலில் சீரற்ற வகையில் உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். இது தீர்வு காண முடியாத ஆராய்ச்சி அல்ல. மிகச் சிறந்த சேமிப்புத் திறன் கொண்ட மின் கலன்கள் ஏற்கனவே இருக்கின்றன. பல பயன்பாடுகளுடன் கூடிய கையால் சேமிக்கக் கூடிய பொறியினை உருவாக்குவது சாத்தியமே என்றார்.

**பெரும் அணைகள் கட்டுவது குறித்து நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனுபவம் குறித்து இவ்வாறு பகிர்ந்து கொண்டுள்ளார்:**

"இறுதியாக, நில வரைபடத்தை ஆய்வு செய்தபோது பெரிய அணைகட்டுவதால் பயனேதும் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக சிறு, சிறு அணைகளாகக் கட்டினால் சரிவு நிலங்களில் சாகுபடி செய்வதற்கு மிகவும் பயனுள்ளதாக அமைவதுடன் பருவ மழையால் கிடைக்கும் தண்ணீரும் பாதுகாக்கப்படும் என்பதும் புலனாகியது. கூடுதலாக, சிறிய அணைகளைக் கட்டுவதற்கான பொருட்களை உள்ளூரில் சேகரித்துக் கொள்ளலாம்; அத்துடன் உள்ளூர் தொழிலாளர்களையே பயன்படுத்த முடியும் என்றேன். குறைந்த அளவு சிமெண்ட் போதுமானது; பொருட்களை வெளியிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய தில்லை. சிறிய அணைகள் மின் வினியோகத்துக்குப் பயன்படாது என்ற போதிலும் பருவ மழையை நம்பியுள்ள மண் அரிப்பு நிறைந்த நாட்டில் வேளாண்மைப் பயன்பாட்டுக்கு மிகவும் பலனளிக்கக் கூடியதாகும். பொருளாதார முன்னேற்றத்துக்கு வழி வகுப்பதுடன் கிராம மக்கள் தங்கள் சொந்த நிலத்தை மேம்படுத்தும் வழியில் சிறிது பணம் சம்பாதிக்கவும் கிராம மக்கள் வாய்ப்புகள் பெறுவர். சிறிய அணைகள் கட்டும்போது அதிக விவசாய நிலங்கள் தண்ணீரில் மூழ்காது. ஆனால் ஒரு பெரிய அணைகட்டுவதால் எவ்வளவு தண்ணீரைச் சேமிக்க முடியுமோ அவ்வளவு தண்ணீரைச் சேமிக்க முடியும். அப்போதைக்கு எனது திட்டம் ஏற்கப்பட்டது. ஆனால் பொறியியல் வல்லுனர் அதைத் தனது திட்டமாக அரசுக்குச் சமர்ப்பித்தார். அதன்மூலம் அவருக்குப் பதவி உயர்வும் கிடைத்தது. ஆனால், அதில் நான் குறிப்பிட்டிருந்த மேலும் பல அம்சங்கள் அடுத்த கூட்டத்தில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேயில்லை. அக் கூட்டத்துக்கு நான் அழைக்கப்படவும் இல்லை."

**அடுத்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மீதமாகும் கழிவுகளை எப்படி எரிபொருளாகவும் இயற்கை உரமாகவும் பயன்படுத்தலாம் என்பதை முன்மொழிந்துள்ளார்:**

இதுகுறித்து "ஹங்கேரிய அறிவியலாளர்கள் சிறந்த பரிந்துரை வழங்கியுள்ளனர். அவர்கள் தரவுகள் திரட்டி ஆய்வு செய்து ஒரு திட்டத்தினைப் பரிந்துரை செய்தனர். அதாவது கரும்புக் கழிவுகளின் மதிப்புமிக்க பொருள்களை வீணடிக்காமல் கரும்பாலைக்கான எரிபொருளாகப் பயன்படுத்த முடியும் என்றனர். அதாவது, கரும்புக் கழிவினை மட்கச் செய்து அதிலிருந்து நுரைத்துக் கிளம்பும் எரியாற்றல் கொண்ட வாயுவினை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பர்னர்களில் செலுத்தி எரிபொருளாகப் பயன்படுத்தலாம் என்றனர். அத்துடன் மட்கச் செய்த கரும்புச் சக்கைகளை மீண்டும் கரும்பு வயல்களில் உரமாகப் பயன்படுத்தலாம். இதன் மூலம் கரும்பு விவசாயிகளின் உர இடுபொருள் செலவு மீதமாகும் என்றனர். மேலும், இதனால் ரசாயண உரங்களால் மண் வளம் கெடுவதும் தடுக்கப்படுகிறது. இல்லாவிட்டால் தொடர்ந்து பல ஆண்டுகளாக ரசாயண உரம் காணும் கரும்பு வயல்கள் விரைவில் மலட்டுத் தன்மை பெற்று விடும். இறுதியாக, இதில் கல்வியியல் பயனும் இருப்பதை நான் சுட்டிக் காட்டினேன்: கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி எரி பொருளும் உரமும் தயாரிக்கப் படுவதைப் போல கூட்டுறவு அமைப்புகளின் விவசாய உறுப்பினர்கள் மாட்டுச் சாணத்தையும் பயன்படுத்தலாம். தற்போது மாட்டுச் சாணத்தை எருவாக்கிக் காய வைத்து எரிபொருளாகப் பயன்படுத்துகிறார்கள். இதனை மட்க வைத்துக் கிடைக்கும் திரவ வாயுவை எரிபொருளாகப் பயன்படுத்தி, பின்னர் உரமாகவும் பயன்படுத்தலாம். அதிலிருந்து கிடைக்கும் வாயு எரிபொருள் செலவைக் கட்டுப்படுத்துவதுடன் அதன் உர மதிப்பும் பாதிக்கப்படுவதில்லை; சமையல்

வேலைகளும் சுலபமாக ஆகின்றன. ஆனால், இத் திட்டத்தை அரசு ஏற்கவில்லை. இதற்கு அரசியல் ரீதியான காரணங்கள் இருந்தன. நாம் இன்னமும் கரும்பாலைக் கழிவுகளை வீணடித்துக் கொண்டுதான் இருக்கிறோம்."

**அடுத்ததாக அவர் முன் மொழிந்தது சூரிய ஆற்றல் ஆகும். இரண்டாகப் பிளக்கப்பட்டுள்ள பூமிப்பந்தில் வளர்ந்த நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்குமான ஆற்றல் வளங்களில் உள்ள அடிப்படை வேறுபாட்டினை இது போன்று பல இடங்களில் கோசம்பி சுட்டிக்காட்டி பேசியுள்ளார். அது சூரிய ஆற்றல் ஆகும்.**

"இங்கு கூடியிருக்கும் அனைத்து நாடுகளிலும் அவர்களது வளர்ச்சிக்கான சிறந்த ஆற்றல் வளமாக சூரியசக்திதான் இருக்க முடியும். அதன் சீரற்ற தன்மை ஒரு குறையாகக் காணப் பட்டாலும் சீரான வினியோகம் தேவையற்ற தருணங்களில் அதனைப் பயன்படுத்தலாம். உதானமாக, விவசாயத்துக்கான பாசன நீரை இறைக்க 5 முதல் 10 குதிரை சக்தி கொண்ட இறவை விசையைப் பயன்படுத்த சூரிய ஆற்றலைப் பயன்படுத்தலாம். இதன் மூலம் சூரிய ஆற்றல் வேளாண்மைக்கு உதவும். இதற்கு மையப்படுத்தப்பட்ட நிர்வாகமோ நிறுவனமோ கட்டுமான அமைப்புகளோ தேவையில்லை. பெருமளவில் உற்பத்தி செய்யும் போது இறவை இயந்திரம் விலை மலிவாகும். மின்சாரத்துக்கும் விலை கிடையாது. பாசனம் கொடையாகும். பராமரிப்பு சுலபமாகும். இதன் மூலம் பின்தங்கிய கிராமப்புற மக்கள் பொறியறிவு பெறுவர். சூரிய ஆற்றலைச் சமையலுக்கும் பயன்படுத்தலாம். இதனால் எண்ணெய் எரிபொருள் சேமிக்கப்படு வதுடன், குறைந்தபட்சம் கிராமங்களில் எரி பொருளுக்காக மரங்கள் வெட்டப்படுவது குறைவதால் தற்போது முக்கியப் பிரச்சனையாக உருவெடுத்து வரும் வன அழிப்பு தவிர்க்கப்பட்டு வன உருவாக்கம் நடைபெறும்" என்றார்.

உதாரணமாக, "சூரிய ஒளி இருக்கும்போது நீரை இறைத்து 50 அடி உயரத் தொட்டியில் சேமிக்க வேண்டும். இரவில் அதனைப் பாசனத்துக்குப் பயன்படுத்தும் போது குறைந்த அழுத்த டர்பைன்களைக் கொண்டு திறந்து விடுவதன் மூலம் தேவைப்படும் போதெல்லாம் மின்சாரம் தயாரிக்க முடியும். இரண்டாம் கட்டத்தில் இது திறன் மிக்கதல்ல என்றாலும், மிகக் குறைவாக உள்ள நீர் வினியோக நிலையைச் சீருடன் கையாள, கிராமம் தோறும் இது பயனுள்ளதாக இருக்கும் என்பதே முக்கிய நோக்கமாகும்" என்றெல்லாம் நீர்ப்பாசனத் துறைக்கு அறிவுறுத்தினார். அவர் இவ்வாறெல்லாம் அடித்துக்கொண்டது இந்தியா தனது ஆற்றல் பற்றாக்குறைக்காக அணு மின் ஆற்றலை நம்பியிருக்கும் நிலை உருவாகக்கூடாது என்பதற் காகத்தான். இந்தியா அணு ஆற்றலை அழிவுக்குப் பயன்படுத்துமா இல்லையா என்பது பிரச்சனை அல்ல. அணு ஆற்றல் எதற்காகப் பயன்படுத்தப் பட்டாலும் உருவாகும் அணுக்கழிவு மற்றும் அணுக்கசிவு அபாயம் தவிர்க்க இயலாது என்பதால்தான்.

"அணு மின்னாற்றலை எடுத்துக்கொண்டால் மேலை நாடுகளில் இயற்கையான ஆற்றலுக்கு பற்றாக்குறை உள்ளது. அந் நாடுகளில் தட்பவெப்ப நிலை காரணமாக வெப்பம் போன்ற இயற்கை ஆற்றல்கள் குறைவு. ஒப்பு நோக்கில் இந்தியாவில் அபரிமிதமாகக் கிடைக்கின்றன. எனவே இந்தியா போன்ற நாடுகள் மின் ஆற்றலுக்காக அணு ஆற்றலைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. சூரிய ஆற்றலைப் பயன்படுத்தி நமது மின் தேவையை நிறைவு செய்ய இயலும் என்றார் கோசம்பி. நீர் ஆற்றலை மின் உற்பத்திக்குப் பயன்படுத்துவதில்கூட கட்டுப்பாடு கோரினார். மின் உற்பத்தி கிராமங்கள்வரை பரவலாக்கம் செய்யப்பட வேண்டும் என்றார்.

எந்தஒரு தொழில்நுட்பமும் மேலை நாடுகளில் உருவாக்கப்படுகின்றன. அவை மேலை நாடுகளின் சூழலுக்கு ஏற்பவும் அந் நாடுகளின் முதலாளிய வளர்ச்சிக்கு ஏற்பவும் தகவமைக்கப்படுகின்றன. அதனால் அத்தகைய தொழில்நுட்பங்கள் உடனடி யாக வளரும் நாடுகளுக்குப் பரவுவதை விரும்புவ தில்லை. எனவே, ஒரு புதிய தொழில்நுட்பம் இந்தியா வந்துசேர குறைந்தது 15 ஆண்டுகள் ஆகிறது. இது தொடர்ந்தால் இந்தியா எப்போதும் மேலை நாடுகள் வளர்ச்சியில் இருந்து பின் தங்கியே இருப்பதோடு அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு எப்போதும் மேலைநாடுகளைச் சார்ந்துவாழ வேண்டிய நிலையே உருவாகும் என்பது கோசம்பி வாதமாகும்.

"நம்மில் பெரும்பாலோர் அறிவியல் தொழில்நுட்பங்கள் குறித்து மோகமாக இருக்கிறோம். ஆனால் அவற்றை வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்துவது என்ற விழிப்புணர்வு இல்லை. அதன் பொறுத்தப்பாட்டில் அரசியல் சமூக பொருளாதாரம் என மூன்று பயன்பாடுகள் உள்ளன. அறிவியலும் தொழில்நுட்பமும் நாடுகளின் எல்லைகளுக்குக் கட்டுப்பட்டவை அல்ல. எனவே அவை எந்த சூழல்களில் பயன்படுத்தப்படுகின்றன என்பது நமக்கு முக்கியமாகும். இவற்றில் அரசியல் சூழல் மிக, மிக முக்கியமாகும். பெரும்பாலான பின் தங்கிய நாடுகள் நீண்டகாலம் காலனிகளாக அடிமைப்பட்டுக் கிடந்த நாடுகள் ஆகும். உண்மை யில் அன்னிய காலனி சக்திகள் நம்மைச் சுரண்டிய தால்தான் நமக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது" என்று 1966ல் நடந்த ஒரு கருத்தரங்கில் கோசம்பி பேசினார். இதுவே அவரது கடைசி உரை என்பதால் இதுவே அவரது கடைசிச் செய்தியாக எடுத்துக்கொள்ளலாம்.

ஆனால் இன்று 55 ஆண்டுகள் கழிந்தாலும் அந்த கருத்து மக்களாலும் சூழலியலாளர்களாலும் வலியுறுத்தப்பட்டாலும் அரசுகள் கேளாச் செவியுடனேயே இருந்து வருவது வரலாற்றுச் சோகம்தான்.

கட்டுரை

■ என்.சரவணன்
nsarawanan@gmail.com

# இராவணனை சிங்களத் தலைவனாக ஹைஜாக் (Hijack) செய்வதன் அரசியல்!










மகாவம்சத்தில் உள்ள இரண்டு வரலாற்றுத் தகவல்கள் சிங்களவர்களுக்கு நெருக்கடிகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது.

1. சிங்களவர்கள் சிங்கத்தின் வழித்தோன்றல் என்பது
2. வங்கத்தில் இருந்து வந்த விஜயனில் தொடங்குகிறது சிங்களவர்களின் வரலாறு என்பது

சிங்கள பௌத்தர்களின் புனித வரலாற்று நூலாக கருதப்படும் மகாவம்சத்தில் சிங்களவர்களின் தோற்றம் பற்றிய கதையின் பிரகாரம் சிங்களவர்களின் பூர்வீகம் சிங்கம் என்கிறது. ஆக மிருகத்தின் வம்சாவளி என்று ஒத்துக்கொள்ள வேண்டிவரும். ஏற்காவிட்டால் மகாவம்சத்தை நிராகரித்ததாக ஆகும். மகாவம்சத்தை நிராகரிப்பது என்பது அவர்களின் இனவரலாற்றுப் பெறுமதியை இழப்பதாகும். எனவே விஜயன் சிங்கத்தின் பேரன் அல்ல என்றும், சிங்களவர்கள் சிங்கத்தின் வழித்தோன்றல் அல்லர் என்றும் அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் சிங்கள பௌத்தர்கள் மத்தியில் தோன்றியுள்ளது. ஆகவே தாம் சிங்கத்தின் வம்சம் அல்ல, அதற்கும் முந்திய இராவண வம்சம் என்கிற இன்னொரு கதையை கட்டியெழுப்ப நேரிடுகிறது.

ஐயாயிரம் வருடங்களுக்கு முந்திய பூர்வீகக் குடிகள் சிங்களவர் என்கிற புனைவை நிலைநாட்ட இராவணன் இப்போது அவசியப்படுகிறார். இதுவரை தாம் ஆரியர் பரம்பரை என்றும் கூறி வந்தவர்கள் இப்போது திராவிட பூர்வீகத்தைக் கொண்டவர்கள் என்றும் கூறியாகவேண்டும். ஆனால் அதில் அரசியல் சங்கடங்களும் சர்ச்சைகளும் நிறைந்துள்ளன. தமிழர்களை சிங்கள மொழியில் "திரவிட" (திராவிடர்) என்று தான் பொதுவில் அழைத்து வருவதை நாம் அறிவோம். அதைவிட அடுத்த சிக்கல் இக்கதைகளின் பிரகாரம் விஜயன் ஒரு அந்நியனாக இருக்கிறான். அவன் வட இந்தியாவிலிருந்து இன்னும் சொல்லப்போனால் வங்க தேசத்திலிருந்து வந்ததாக ஒத்துக்கொள்ளவேண்டும். தாம் அந்நியர் என்று ஏற்றுக்கொண்டதாக ஆகிவிடும். அது மண்ணின் மைந்தன் கருத்துருவாக்கத்துக்கும் பெருந்தடையாக ஆகிவிடுகிறது. எனவே தான், தாம் வங்கத்திலிருந்து வந்த ஆரியர் என்கிற கதைகளையும் புறந்தள்ளி, கைவிட்டுவிட்டு இராவணக் கதைகளுக்கு உயிர்கொடுத்து இராவணனை தமது தலைவனாக ஏற்பதன் மூலம் முழு இலங்கையின் பூர்வீகக் குடிகள் என்கிற இடத்துக்கு வந்து சேருகிறார்கள். இராவணனை ஹைஜாக் (Hijack) செய்வதன் பின்புலம் இதுதான்.

ஒரு கற்பிதக் காவியத்துக்கு வரலாற்றுப் பெறுமதியையும், அரசியல் பெறுமதியையும், இனப்பெறுமதியையும், மதப் பெருமையையும் கொடுத்து வெகுஜன அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் காவியமாக இன்று ஆக்கப்பட்டிருக்கிறது இராமாயணக் கதை. அந்தக் கதைக்கு தொல்பொருள் சான்றில்லாததால், காணக்கிடைக்கிற தொல்பொருள்களையெல்லாம் வலிந்து அவற்றுடன்

தொடர்புபடுத்திப் புனைகிற செயற்பாடுகள் இலங்கையில் வெகுவாக வளர்ந்திருக்கிறது.



ஆய்வணுகுமுறையில் இரு வகையுண்டு. முதலாவது கிடைக்கப்பெறும் சான்றுகளைக் கொண்டு முடிவுக்கு வருதல். அடுத்தது எடுத்த முடிவை நிறுவுவதற்கு ஆதாரம் சேர்ப்பது. முற்கற்பித முடிவுகளை நிறுவுவதற்கு வலிந்து ஆதாரம் கோர்க்கும் பணிகளே இலங்கையில் தற்போது நிறைந்துள்ளது. இதில் உள்ள சோகம் என்னவென்றால் நிபுணத்துவம் பெற்ற தொல்பொருள் ஆய்வாளர்கள் இதில் இறங்கியிருப்பது தான். அவர்களின் இனவாத பின்புலம் அவர்களை இப்பணிகளை நோக்கி உந்துகிறது.

2012 ஆம் ஆண்டு ஜனவரி 11 அன்று திவயின பத்திரிகைக்கு வீரசேன அல்கெவத்த என்பவர் எழுதிய "இராவணன் வரலாற்றுப் பாத்திரமா? என்கிற கட்டுரையில் இப்படித் தெரிவிக்கிறார்: "மகாநாம தேரர் மகாவம்சத்தில் பல தகவல்களை திட்டமிட்டே மறைத்துவிட்டார். விஜயன் வந்திறங்கிய தினத்தில் தான் புத்தரின் இறப்பு நிகழ்ந்திருக்கிறது. அதே வேளை புத்தர் இறப்பதற்கு முன்னர் இலங்கைக்கு வந்திருக்கிறார். அப்போது இயக்கர்களும் நாகர்களும் இருந்திருக்கிறார்கள். அரசர்களுக்கு இடையிலான பிரச்சினைகளைத் தீர்த்திருக்கிறார். அப்படியென்றால் அவர் வரும்போது இந்தத் தீவு வெற்றுத் தீவாக இருக்கவில்லை. அப்படி இருக்கும் போது அதன் பின் பல ஆண்டுகள் கழித்து வந்த விஜயனில் இருந்து தான் சிங்கள இனத்தின் பூர்வீகம் தொடங்கியது என்றது எதற்காக? தனது இந்தியப் பூர்வீக உரிமையை எழுத்தில் நிலைநாட்டவா மாநாம தேரர் முயற்சித்திருக்கிறார்...

இலங்கையில் அதற்கு முன்னர் இருந்தே பண்டைய காலத்தில் வாழ்ந்த ராவண ராஜ்ஜியம் பற்றி இந்தியாவில் இருந்து கூறும்போது நமது வரலாற்றாசிரியர்கள் ஏன் அதைக் கண்டுகொள்ளவில்லை. விஜயன் வரும்போது எந்தக் குடிகளும் வாழவில்லை என்பது ஏன்? மகாவம்சம் இராவணனை இருட்டடிப்பு செய்துவிட்டது" என்கிறார்.

### இராவண உயிர்ப்பு எங்கிருந்து தொடங்கியது?

இராமாயணம் பற்றிய தேடல்கள் இலங்கையில் உயிர்த்த காலம் 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தான். ஆங்கிலேய அறிஞர்களின் இலக்கியவரலாற்றுத் தேடல்களின் மூலம் அது நிகழ்ந்தது எனலாம். ராஜரீக ஆசியக் கழகத்தின் இலங்கைக் கிளையின் சஞ்சிகையில் இது பற்றிய பல விவாதங்கள், ஆய்வுக் கட்டுரைகளின் சமர்ப்பிப்புகளைக் காண முடிகிறது. இதேவேளை இலங்கையின் பாட நூல்களில் இராமாயணம் பற்றி இந்தியாவில் நிலவுகிற அதே இராமயாணக் கதையின் சுருக்கத்தைத் தான் கற்பித்து வந்தார்கள். ராமனை நாயகனாகவும், சீதையை நாயகியாகவும், சீதையைக் கவர்ந்து கடத்தி வந்து சிறைவைத்து சண்டையிட்ட இராவணனை வில்லனாகவும் சித்திரிக்கிற கதை தான் நெடுங்காலமாக சிங்களப் பாடநூல்களில் இருந்தன. இராவணன் இலங்கையில் வாழ்ந்தான் என்றும் இலங்கை தவிர வேறெங்கும் வாழவில்லை என்கிற கருத்தே உறுதிபட அக்கதைகளின் மூலம் மாணவர்களுக்கு போதிக்கப்பட்டது. சிங்கள அரசர்களான விஜயன், துட்டகைமுனு போன்ற வரலாற்றுப் பாத்திரங்களுக்கு முன் இராவணன் ஒரு சிங்கள வீரன் அல்லன். இராவணனுக்கு எந்த மரியாதைப் பெறுமதியும் கொடுக்கப்படவில்லை. ஒரு வகையில், மாற்றான் மனைவியைத் திருடிய திருடனாகவே இராவணன் உருவகப்படுத்தப்பட்டிருந்தான்.

இராவணின் வீரதீரச் செயல்கள் பற்றியோ, இராவணனின் இராஜ்ஜியம் பற்றியோ, இராவணின் போர் முறைகள் பற்றியோ, இராவணனின் பறக்கும் வானூர்தி பற்றிய கதைகளோ கூட முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. கணக்கில் கொள்ளப்படவில்லை. வீரம் செறிந்தவர்களாக இராமனும் அனுமானும் முக்கியப்படுத்தப்பட்டிருந்தனர். கதையின்படி இவர்கள் இராவணனைத் தோற்கடித்துச் சீதையை மீட்டுக்கொண்டனர். சுப்பர்மன் (Superman) பற்மன் (Batman) ஆகிய இருவரும் செய்கிற தீரச் செயல்களைத் தொலைக்காட்சியில் பார்க்க முடியாத ஒரு காலத்தில் இராவணனின் பறக்கும் வானூர்தி பற்றிய உருவகம் நிச்சயமாக பலரைக் கவர்ந்திருந்தது. அப்படியான உருவகங்கள் வழியாகத்தான் இராவணன் முற்றுமுழுதாக நீங்காமல் பலரது நினைவில் இருந்தான் என்று நான் நினைக்கின்றேன். சிங்கள இனத்தின் மாவீரனாக இராவணன் உணரப்பட்டதில்லை.

### "ஹெல ஹவுல" இயக்கம்

இலங்கையின் மிகப் பிரசித்திபெற்ற சிங்கள மொழிப் பண்டிதராகவும், இலக்கியவாதியாகவும் கருதப்படுபவர் குமாரதுங்க முனிதாச. 1941 ஆம் ஆண்டு ஜனவரி 11 அவரின் தலைமையில் அவரின்

வீட்டில் வைத்து உருவாக்கப்பட்ட இயக்கம் தான் “ஹெல ஹவுல” (Hela Havula) என்கிற இயக்கம். ஒரு வகையில் இதை மொழித் தீவிரவாத இயக்கம் என்றும் அழைப்பார்கள்.[1]

“ஹெல” என்பதே சிங்கள மொழியின் மூல மொழி என்றும் அதை பலப்படுத்தும் வகையில் தான் “ஹெல ஹவுல” என்று பெயர் வைத்துக்கொண்டார்கள் என்றும் சிங்கள இனத்தை தூயமைப்படுத்த வேண்டும் என்றால் சிங்கள மொழியும் அந்நிய கலப்பில்லாத தூய்மையான சிங்கள மொழியாக இருத்தல் வேண்டும் என்றும் அந்த இயக்கத்தவர்கள் கூறினார்கள். சிங்களத்தில் கலந்துள்ள பாலி, சமஸ்கிருதம் என்பவற்றின் செல்வாக்கை நீக்க வேண்டும் என்றும் இயங்கினார்கள். அது மட்டுமன்றி காலனித்துவ போத்துக்கேய, ஒல்லாந்து, ஆங்கிலேயக் கலப்புகள் கூட இல்லாத சிங்களத்தை வளர்த்தெடுக்க வேண்டும் என்கிற இயக்கத்தை முன்னெடுத்தார்கள். ஹெலியோ (The Helio) என்கிற ஒரு சஞ்சிகையும் 1941 இல் தொடக்கி நாடளாவிய ரீதியில் நடத்தினார்கள்.[2] குமாரதுங்க முனிதாச எழுதிய சிங்கள இலக்கணம் குறித்த நூல் ஒரு தலையாய நூலாகத் திகழ்கிறது.[3]



● குமாரதுங்க முனிதாச

இந்திய ஆரியவாத செல்வாக்கிலிருந்து சிங்கள மொழியையும், இலக்கியங்களையும் மீட்கவேண்டும் என்று இயங்கியது இவ்வியக்கம். அதுபோல ஒரு இனம் பூரணப்படாமல் மொழி மட்டும் தனித்து எப்படி வாழும் என்றார்கள். இலங்கையின் பிரபல நாடகாசிரியர் ஜோன் த சில்வா 1886 இல் முதற் தடவையாக இராமாயணத்தை இலங்கையில் மேடையேற்றினார். அந்த இராமாயண நாடகத்தின் பிரதி பல ஆண்டுகளாக மேடையேற்றப்பட்டு வந்தது. அந்த பிரபலமான இராமாயணக் கதை இலங்கையின் சுயத்துக்கு இழுக்கு என்று “ஹெல ஹவுல” தீர்மானித்தது. இராமாயணத்துக்கு மாற்றாக அவர்கள் “சக்வித்தி ராவண” என்கிற ஒரு நாடகத்தை இயக்கினார்கள். அது 1946இல் முதன் முதலில் மேடையேற்றப்பட்டது. சிங்கள சமூகத்தில் பிரசித்திபெற்ற இந்த நாடகம் இன்றும் ஆயிரக்கணக்கான தடவைகள் மேடையேற்றப்பட்டு வருகிறது. அந்த நாடகத்தில் வரும் “பொம்புளே மேக் பொம்புளே” என்கிற பாடல் தமிழர்கள் பலரும் அறிந்த பிரசித்தமான பாடல்.

ஹெல ஹவுல இயக்க திட்டத்தின் ஓர் அங்கமாக, இதிகாச வாயிலாகக் கூறப்பட்ட சிங்களவர்களின் மூதாதையரான விஜயனின் வருகைக்கும் முற்பட்ட காலத்தைப் பற்றிய கண்ணியமான வரலாறொன்றினை கட்டியெழுப்புவதன் முக்கியத்தை உணர்ந்தார்கள். விஜயனின் வருகைக்கு முன்னரும், அதன் பின்னர் இந்தியச் செல்வாக்குகள் ஊடுருவுவதற்கு முன்னரும், இலங்கையில் தூய்மையான வரலாற்றைக் கொண்ட பாரம்பரியமும் நாகரிகமும் இருந்தன என்பதை வலியுத்தினார்கள்.

இராவணனின் கற்பனைக் கதைக்குப் புத்துயிர்ப்பு அளிக்கும் போது இராவணனை இயக்கன் என்றும் இராட்சத அரசன் என்றும் குறிப்பிடுவது வழக்கம். ஆரம்பத்தில் இயக்கர்களும் (Yakshas), இராட்சதர்களும் (Rakshas) இலங்கையில் வாழ்ந்தனர் என்றும் அவர்கள் மனிதர்கள் அல்லர் என்றுமே சிங்களப் புராணக் கதைகளில் காணப்படுகின்றது. “இயக்கர்’, இராட்சதர்” என்ற பதங்களின் வர்ணனைகளின் மூலம் அவர்கள் மனிதர்களை விழுங்கி தீங்கு விளைவிக்கிற பேய்களைப் போலத்தான் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இப்படியான இராவணனின் பேய்த்தோற்றத்தையும், இயக்கர்களின் பேய்த் தோற்றத்தையும் மாற்றி, மானிட உருவம் கொடுத்தது இந்த இயக்கம். 2002 ஆம் ஆண்டு இங்கிலாந்து இராணி எலிசபத் இராணியாக பதவியேற்று 50 வருட நிறைவைக் கொண்டாடும் முகமாக பக்கின்ஹோம் மாளிகையில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக இந்த நாடகமும் தெரிவானது. அந்நாடகத்தை இராணி மிகவும் இரசித்தார் என்கிற பதிவுகளையும் காண முடிகிறது.[4] இந்த நாடகத்தில் தான் இராவணன் முதற் தடவையாக ஒரு கதாநாயகனாக மாற்றப்படுகிறான். இந்த நாடகம் இராவணனை பற்றி புதிய கோணத்தில் சிந்திக்க வைத்தது. அதுவே இராவணனைப் பற்றிய தேடலையும் தூண்டியது. இராவணன் இலங்கையின் தலைவன் தானே, நமது தலைவன் அல்லவா? சிங்களத் தலைவன் அல்லவா என்கிற முடிவுக்கும் வந்தார்கள்.

---

[1] A. Jeyaratnam Wilson - Politics in Sri Lanka, the Republic of Ceylon: A Study in the Making of a New Nation - Macmillan; 1st ed 1st printg edition (9 May 1974)

[2] K. E. O. Dharmadasa, - Language, Religion, and Ethnic Assertiveness: The Growth of Sinhalese Nationalism in Sri Lanka - University of Michigan Press, 1992

[3] Professor of Linguistics James W Gair, - Studies in South Asian Linguistics: Sinhala and Other South Asian Languagesir - Oxford University Press, 1998

[4] ஜினதாச நிவித்திகல-இங்கிலாந்து மகாராணியை மகிழ்வூட்டிய ஹனுமான்-திவயின-21.04.2019

## இராவணப் புனைவின் முன்னோடி நூல்

இராவணன் பற்றிய புனைவுகளை வரலாற்று உண்மை போல சித்திரிக்கும் வகையில் வெளியான முன்னோடி நூல் ஆரியதாச செனவிரத்ன என்பவர் 1991இல் எழுதிய (ශ්‍රී ලංකා - රාවණ රාජධානිය ஸ்ரீ லங்கா : இராவண ராஜ்ஜியம்) என்கிற நூல். இன்று இராவணனைப் பற்றிய நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள நூல்கள் வெளிவந்திருந்தாலும் இராவணனை சிங்களவர்கள் மத்தியில் மீளுயிர்த்ததில் இந்நூலுக்கு முக்கிய பங்குண்டு. அந்த நூல் பின்னர் பல (திருத்திய) பதிப்புகளைக் கண்டது. அந்நூலில் இராவணனின் உயில். (இறுதி ஆசை) என்றெல்லாம் கட்டுக்கதைகள் நிறைந்த அத்தியாயங்கள் உள்ளன. இந்நூல் அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசவை கௌரவிக்குமுகமாக வெளியிடப்பட்டது. அப்போது இந்தியாவை கடுமையாக எதிர்த்தபடி இருந்தார் பிரேமதாச.

இராவணன் இந்தியாவிற்கு எதிராகக் கொண்டிருந்த உணர்வலைக்கும், பிரேமதாச கொண்டிருந்த உணர்வலைக்கும் இடையிற் காணப்பட்ட நேரடி ஒருமைப்பாட்டினை இந்நூலில் அவர் விளக்குகின்றார். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இராவணன் காட்டிய துணிச்சலும், தியாக உணர்வும், உண்மையில் பிரேமதாசவின் வீரத்தை ஒத்திருந்தன என்கிறார். இராவணன் காட்டிய துணிச்சலும், தியாக உணர்வும், பிரேமதாசவின் வீரத்தை ஒத்திருந்ததாக அந்நூலின் முகவுரையில் அவர் குறிப்பிடுகிறார். அப்போது பிரேமதாச துணிச்சலுடன் இந்தியாவை பகைத்துக்கொண்டார். IPKF ஐ வெளியேறச் சொன்னார். சமாதானத்தை நிலைநாட்டுவது என்ற பொய்யான போர்வையில், இந்தியாவின் புதிய அவதாரமான இராமரினால் அனுப்பப்பட்ட அந்நியப் படைகளை (IPKF) பிரேமதாச தனது சொற்போரினால் விரட்டியடித்தார்" என்கிறார்.

1995 இல் சசாங்க பெரேரா எழுதிய கட்டுரையொன்றில் விஜயன் பற்றி புனைந்து சிங்கள மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றியிருக்கும் மகாவம்சக் கதைகளை இல்லாமல் செய்வதோ இராவண கதைக்கு புத்தியிரப்பளிப்பதோ வெற்றியடையமாட்டாது என்றும் அவர்களின் கற்பனையில் கூட இராவணனின் கதை பதியவில்லை என்றும், அது சாத்தியமில்லை என்றும் குறிப்பிடுகிறார்.[5] ஆனால் சரியாக இப்போது 25 வருடங்கள் ஆகும் போது அந்த கணிப்பை தகர்த்திருக்கிறது பேரினவாத நிகழ்ச்சிநிரல் என்று தான் கூறவேண்டும். ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் ஒரு பண்பாட்டு ஆக்கிரமிப்பின் மூலம் நில ஆக்கிரமிப்பையும் அதன் வழியாக ஒட்டுமொத்த தமிழர் அபிலாஷைகளை நிறைவுக்கு கொண்டுவரும் நிகழ்ச்சிநிரலின் அங்கமே இந்த இராவணக் கடத்தல் எனலாம்.

## வெகுஜனமயப்படுத்தப்படும் இராவணன்

ராவணன் பற்றிய கதைகளும் அல்லது இராவணப் புனைவுகளும் இராமாயணக் காவியம் உருவாக்கப்பட்ட இந்தியாவிலும், இலங்கை வாழ் சிங்கள – தமிழ் மக்கள் மத்தியிலும் மட்டுமன்றி இந்திய உபகண்ட நாடுகளிலும் தாய்லாந்து, மியான்மார், பாலித்தீவு போன்ற தென் கிழக்காசிய நாடுகளிலும் பாரம்பரிய நாட்டார் கதைகள் மூலமும், இலக்கியங்களின் மூலமும், நம்பிக்கைகளின் மூலமும் செல்வாக்கு செலுத்தி வருகிறது. மேற்கு நாட்டு அறிஞர்களையும் கலைஞர்களையும் கூட ஈர்க்கிறது, ஏனெனில் இதற்கு ஒரு இலக்கியக் காவியப் பெறுமதி உண்டு என்பது உண்மை. இது மாய, மந்திர, போர், காதல், பழிவாங்குதல் மற்றும் கதாநாயக வழிபாடு என ஈர்க்கிறது. அந்த வகையில் காவியப் பெறுமதிக்கப்பால் அதற்கென்று ஒரு நம்பகப் பெறுமதி கிடையாது. ஆனால் அக்காவியம் மக்களின் செவி வழிக்கதைகளினூடாகவும், நாடகம், கூத்து என இன்னும் பல கலை இலக்கிய வடிவங்களின் ஊடாகவும் வழிவழியாக வெகுஜன செல்வாக்கை நிறுவியிருக்கிறது.

இராமாயணத்தையும், இராவணனையும் வரலாற்று, தொல்லியல் வழிமூலம் எவரும் நிறுவியது கிடையாது. ஆனால் இன்று வரை இந்தியாவில் இந்துத்துவ பாசிச சக்திகளால் புனிதப்படுத்தப்பட்டு இராமனை தெய்வமாக கோவில் கட்டி வழிபடுவதோடு நிற்காமல் இராமனை இன்றைய இந்துத்துவ போரின் தலைமை வடிவமாகவும் கொண்டு வந்து சேர்த்திருக்கின்றனர். அதே இந்தியாவில் இராவணனின் உருவப்பொம்மையை தீயிட்டு கொளுத்தி இராவணனைக் கொன்ற நாளாகக் கொண்டாடுவதை இந்திய வட மாநிலங்களில் இராமலீலா என்கிற பேரில் பண்டிகையாக நெடுங்காலமாக கொண்டாடப்படுகிறது.

வெகுஜனத் தளத்தில் இராமாயணமும், இராமனும், வட இந்தியாவில் எப்படி நம்பகமான கதையாக நிறுவப்பட்டுள்ளதோ அதுபோலவே இலங்கையில் இராவணன் சிங்களவர்கள் மத்தியில் சமீபகாலமாக நம்பகமானதாக நிறுவப்பட்டுவருகிறது. ஆனால் இலங்கையில் சிங்களவர்கள் இராவணனைக் கொண்டாடிய அளவுக்கு இராமாயணத்தை கொண்டாட முற்பட்டதில்லை. ஏனென்றால் இராமாயணத்தில் வில்லன் "சிங்களத் தலைவன் இராவணன்". ஆனாலும் இராமாயணத்தை தவிர்த்து

[5] சசங்க பெரேரா - இராவணன் புத்துயிர் பெறுகின்றான் - தேர்ந்த கட்டுரைகள் தொகுதி - 33 - விடுதலைப் புலிகளின் அரசியல் பிவி வெளியீடு - யூலை 1995

இராவணக் கதைகளை நிறுவமுடியாததால் இராமாயணத்தை சில சிங்கள தொலைகாட்சி சேனல்கள் வெளியிட்டன. இந்தியாவில் இந்தி மொழியில் வெளியான இராமாயணத் தொடரை சிங்கள டப்பிங்குடன் வெளியிட்டு வந்தார்கள் அவர்கள். அதை மீண்டும் மீண்டும் வெளியிட்டார்கள்.

அதன் பின்னர் 2018இல் இராவணன் பற்றிய மெகா தொலைகாட்சி "உரையாடல்" தொடரொன்றை சிங்கள மொழியில் "ராவண" (රාවණ) என்கிற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் இனவாத தொலைக்காட்சிச் சேனலாக இயங்கிவரும் "தெரண" என்கிற சேனலில் இந்தத் தொடர் 100 தொடர்களையும் கடந்தது. இராவணன் பற்றிய ஊகங்களையும், புனைவுகளையும், கட்டுக்கதைகளையும் பேச பல சிங்கள வரலாற்றாசிரியர்கள், இலங்கையின் அதி பிரசித்திபெற்ற தொல்பொருள் நிபுணர்கள், பாரம்பரிய கலைஞர்கள் பலர் அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் இந்தக் கற்பிதங்களை தொழில்சார் நிபுணர்களாக (Professionals) எப்படி இது முடிகிறது என்றே நமக்குத் தோன்றும்.

பின்னர் கடந்த நவம்பரிலிருந்து தொலைக்காட்சி நாடகத் தொடராக இன்னொரு "ராவண" என்கிற பேரில் தெரண தொலைக்காட்சிச் சேவையில் ஞாயிறு நாட்களில் 8.30 மணியளவில் காண்பிக்கப்பட்டு வருகிறது. இந்த நேரம் Hi peak என்று சொல்லக்கூடிய அதிக பேர் பார்க்கக் கூடிய நேரம் என்பதால் ஒளிபரப்பு செலவும், விளம்பரக் கட்டணமும் உயர்ந்த நேரம் என்பதும் கவனிக்கத்தக்கது. இம்மாதம் (2020 யூன் மாதம்) அது 21 வாரங்களையும் கடந்து போய்க்கொண்டிருக்கிறது. துஷார தென்னகோன் என்பவர் இதனை இயக்கிவருகிறார். 100 வாரங்கள் வரை எட்டுவதே தனது இலக்கு என்று அவர் குறிப்பிட்டிருந்தார். அவர் இது பற்றிய ஆய்வுகள் பல நிகழ்த்தியவர் என்கிற செய்தியுடன் தான் அதன் விளம்பரங்களும் வெளியிடப்பட்டன. இது வெளிவர முக்கிய பாத்திரம் வகித்த "தெரண" தொலைக்காட்சியின் உபதலைவரான லக்சிறி விக்கிரமகே கதையின் மூலத்தைப் பற்றி இப்படி தெரிவிக்கிறார்:

"இராவணன் ஒரு அதிசயிக்கத்தக்க அரசன். அப்பேர்பட்ட ஒரு ஒரு தலைவனைப பற்றிப் பேச வான்மீகியின் இராமாயணத்தை ஒரு "மூலமாக" நாங்கள் பயன்படுத்தவில்லை. வால்மீகியின் இராமாயணத்தில் இராவணன் ஒரு துஷ்டனாக காண்பிக்கப்படுகிறது. ஆனால் உண்மையில் நிகழ்ந்தது பாரதத் தரப்பை அவர் தோற்கடித்தார். அதனால் தான் அவர்கள் இராவணனை துஷ்டனாக காண்பிக்கிறார்கள்."[6] இராவணன் தின்கிற திரைப்படமாகத் தயாரிப்பதே ஆரம்பத்தில் இருந்த திட்டம் என்கிறார் மேலும் அவர். இதைத் தவிர அரச தொலைக்காட்சி சேவையான ITNஇல் (சுயாதீன தொலைக்காட்சிச் சேவை) "இராவண புராணம்" (ராவண புராணய රාවණ පුරාණය) என்கிற ஆவணப்படத் தொடர் சென்ற ஆண்டு தொடங்கப்பட்டு 21 வாரங்கள் காண்பிக்கப்பட்டன. இத்தொடரில் இராவணன் புலங்கியதாக சொல்லப்படும் இலங்கையின் பல பகுதிகளுக்கு பயணித்து அங்குள்ள குகைகள், மலைகள், காடுகள், நதிகள் என்பவற்றைக் காட்டி பல கதைகளை அவிழ்த்து விடுகிறார்கள். இங்கு உறங்கினார், குளித்தார், சீதையை மறைத்துவைத்திருந்தார், ஐந்து வானூர்திகளை வைத்திருந்தார். இங்கு தான் இறக்கினார், என்றெல்லாம் கதை விடுகிறார்கள். இது ஒரு அரச தொலைக்காட்சியின் சொந்த நிகழ்ச்சி என்பதை கவனிக்க.

இந்த புனைவுகளின் உச்சம் என்னவென்றால் ஒரு இடத்தில் இப்படி குறிப்பிடுகிறார்: "இராவணனின் உடல் இன்னும் பக்குவமாக இருக்கிறது. ஆனால் தயவு செய்து எங்கே இருக்கிறது என்று தேடப்போகாதீர்கள். அது ஆபத்தானது. அப்படிப்பட்ட முயற்சிகளில் இறங்கியவர்களுக்கு என்ன ஆனது என்பதை நாங்கள் அறிவோம் அதனால் தான் கூறுகிறோம்" என்கிறார் இந்த நிகழ்ச்சியின் தயாரிப்பாளரான கயான் சந்தகெலும். இவரின் இன்னொரு காணொளியும் காணக்கிடைத்தது அதன் தலைப்பு "இராவணன் பௌத்தனா? இந்துவா?" அதில் அவர் "புத்தருக்கு முற்பட்ட காலத்து இராவணனை" பௌத்தன் என்று நிறுவ அதிக சிரத்தை எடுக்கிறார். புத்தர் பௌத்தத்தைத் தந்தவர்களில் இடைப்பட்டவர் தான் என்றும் அதற்கு முன்னரே அத்தத்துவத்தை தந்துவிட்டு சென்றவர்கள் இருக்கிறார்கள் என்றும், ஆகவே இராவணன் ஒரு பௌத்தன் தான் என்றும் நிறுவ முற்படுகிறார்.

இந்திரஜித்தின் கிரியோடிஷ்ய (ඉන්ද්‍රජිත්ගේ ක්‍රියෝඩිශය) என்கிற தலைப்பிலான சிங்கள நூலொன்றின் விமர்சனத்தை யூடியூப் சேனலில் சமீபத்தில் கண்டேன். இந்த விமர்சனத்தைச் செய்தவர் பேராசிரியர் லீலானந்த விக்கிரமாராச்சி. இராவணனின் மகன் இந்திரஜித் கையாண்ட போர் நுட்பங்கள் பற்றியதாம் இந்த நூல். இது தேவநாகரி எழுத்து வடிவத்தில் கிடைக்கப்பெற்ற ஓலைச்சுவடியை சிங்களத்துக்கு மொழிபெயர்த்து அச்சுக்கு கொணரப்பட்ட நூல் என்று அறிமுகம் செய்கிறார். பேராசிரியர் லீலானந்த விக்கிரமாராச்சி பாரம்பரிய சிங்கள தற்காப்புக்கலைகளை கற்றுக் கொடுப்பதில் பிரசித்தி பெற்றவர். இலங்கை இராணுவத்துக்கு சிறப்புப் பயிற்சிகளை அவர் செய்பவர் என்பதை அவரின் இணையத்தள விபரங்களில் இருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

---

[6] "இலங்கையின் தொலைகாட்சி நாடகத்துறையை உயர் தரத்துக்கு கொணர்வதே எமது இலக்கு" என்கிற தலைப்பில் வெளியான நேர்காணல் <http://www.saaravita.lk/> 4 දෙසැම්බර්2018 (நேர்கண்டவர்-நிதுன் மதுஷிக)

மேற்படி கூறிய அனைத்து நாடகங்களும், ஆவணப்படங்களும், உரையாடல்களும். நூல் விமர்சனமும் youtube இல் காணக்கிடைக்கிறது. இக்கட்டுரைக்காக அங்கிருந்துதான் அவற்றை ஆதாரத்துக்குப் பயன்படுத்திக்கொண்டேன். இராவணனைப் பற்றி ஒருதொகை வீடியோக்கள் சிங்களத்தில் அங்கு உள்ளன.

*இராணவன் பற்றி சிங்களச் சூழலில் இதுவரையான எனது அவதானிப்பில் கண்டு கொண்ட சில புள்ளிகள்:*

இராவணின் வழித்தோன்றல் தாங்கள்தான் என்று உரிமைகோரும் சிங்களக் கிராமங்களே உள்ளன. அதன் தொடர்ச்சியாக இராவணின் உறவுக்காரர் தாங்கள் தான் என்று அறிவித்துக்கொண்டு வாழ்வோர் இலங்கையில் உள்ளனர். இராவணன் மீண்டும் எழுவார் என்றும் இன்னும் சிலர் இராவணன் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார் என்றும் நம்மைச் சுற்றி இருக்கிறார் என்கிற ஐதீகங்களும் உள்ளன.

இலங்கையின் அதிசயங்களில் ஒன்றாக பார்க்கப்படும் சீகிரிய மலைக் கோட்டையை செய்தது இராவணன் என்கிற நம்பிக்கை உண்டு. அந்த மலையின் மேல் இராவணின் விமானம் இறங்கும் இறங்குதளத்தின் தடங்கல் இருப்பதாக நம்பப்படுகிறது. சீகிரிய ஓவியத்தில் காணப்படுகிற ஓவியத்தில் இருப்பது இராவணின் மனைவி மண்டோதரியும், மண்டோதரியின் பரிவாரப் பெண்ணும் தான். இதைப்பற்றிய செவிவழிக் கதைகள் இப்போதும் அந்த ஊர்களில் நிலவுகின்றன.

சிகிரியவைச் சுற்றி உள்ள ஊர்களில் கிராமியப் பாடல்களாக இன்னும் இப்படி ஒரு பாடல் பாடப்படுவதுண்டு.

*சிகிரியா பாறையின் ஏரியை கட்டியவர் யார்*

*சிகிரிய ஓவியத்தை வரைந்தவர் யார்*

*சிகிரிய தோற்றத்தில் இருப்பவர் யார்*

*இம்முக்கேள்விக்கு விடை தருவார் யார்*

*பதில்:*

*ராவணன் கடவுள் சிகிரிய பாறையில் ஏரியைக் கட்டினார்*

*அவர் சிகிரியா பாறையில் ஓவியம் வரைந்தார்*

*சிகிரிய உருவத்தில் மண்டோதரி வியப்பூட்டுகிறார்*

*இம்முக்கேள்விக்கும் விடை தீர்த்தேன் நான்.*[7]

*(இப்பாடல் ஏககாலத்தில் இருந்து தொடரப்பட்டது, யாரால் இயற்றப்பட்டது போன்ற விபரங்களை அறிய முடியவில்லை. ஆனால் இப்பாடலை பல சிங்கள கட்டுரைகளிலும் மேற்கோள் காட்டுகிறார்கள்.)*




இராமனையும், இராமாயணத்தையும், அதன் வழியாக வைணவத்தையும் கொண்டாடுவதும், வழிபடுவதும், நீட்சியாக இராவணனைக் கொண்டாடும் வெகுசிலராக தமிழர்கள் குறுகிவிட்ட நிலையில் இராவணன் தமது தலைவனே என்று சிங்களவர்கள் கொண்டாடத் தொடங்கியுள்ளனர். இராவணன் அரக்கர் இனத்தில் இருந்து வந்த"ஹெல" இனத்துத் தலைவன் என்றும், அந்த இராவணின் வழித்தோன்றல் குவேனி என்றும் குவேனியை கரம்பிடித்தவர் விஜயன் என்றும் அவர்களின் வழித்தோன்றலே சிங்களவர்கள் என்றும் நிறுவுகிற நூல்களை இப்போதெல்லாம் நிறையவே காணக் கிடைக்கின்றன. குறிப்பாக இராவணனைக் கொண்டாடுகின்ற சிங்கள நூல்கள் கடந்த பத்தாண்டுக்குள் மாத்திரம் 500 க்கும் அதிகமான நூல்கள் வெளிவந்திருப்பதாகக் கணிக்க முடிகிறது. ஒரு அரை மணி நேர இணையத் தேடலில் இராவணன் பற்றிய 50க்கும் மேற்பட்ட சிங்கள நூல்களின் அட்டைப் படங்களை தேடியெடுக்க முடிந்தது. உதாரணத்திற்கு 15 நூல்களின் தலைப்புகளை இங்கு தருகிறேன். இவை அனைத்தும் 2012க்குப் பின் வெளிவந்தவைதான்.

1. *இராவணன் மீள எழுகிறான்*
2. *இலங்கையில் ராவண அரசனின் பின்னர் தோன்றிய நமது அரச*

---

[7] ஹன்சி சந்தமாலி "රාවණාගේ අපරිමිතප්‍රේමයේ හිමිකාරී, මන්දෝදරී" (இராவணனின் எல்லையில்லாக் காதலுக்கு உரிமைக்காரி மண்டோதரி) - https://roar.media

பரம்பரையினர்

3. சிங்களவர்களின் தலைவன் இராவணன்
4. இராவண சக்கரவர்த்தியின் திதுலன பம்பர கோட்டை
5. இராவண நடவடிக்கை (Ravana operation)
6. சிங்களவர்களின் முன்னோடி இராவணன்
7. மகாராஜா இராவணன் கட்டியெழுப்பிய பண்பாடு
8. புனைவற்ற இராவண புராணம்
9. இராவணனின் தளம்
10. இராவணக் கோட்டை
11. இலங்கையில் இராவண இராஜதானியும் சீகிரிய புராணமும்
12. இலங்கையின் இராவண சக்கரவர்த்தியின் கலாசார மரபு
13. இராமாயணம் என்கிற மூவுலகையும் வென்ற நமது தலைவன் இராவணன்
14. சிங்கள வம்சத்தின் இராவணவாதம்
15. ஸ்ரீ லங்கேஷ்வர மகா இராவணன்

**இராவணன் பற்றிய விசித்திரமான–வியப்பான சமீப கால சிங்களக் கட்டுரைகளின் தலைப்புகளைப் பாருங்கள்**

1. இராவணனின் வரலாற்றை மூடி மறைக்க முடியாது
2. இராவணனின் விமானத் தொழினுட்பமும் பண்டைய விமானமும்
3. வெள்ளையருக்கு முன்னரே இராவணன் மேலே பறந்த இரகசியம்
4. இராவண அரசனின் போர் முறை
5. இராவணனின் இரத்தச் சொந்தங்களைக் காண ஒரு கிராமத்துக்குச் சென்றோம்.
6. இராவண வரலாற்றைப் புதைத்துவிட முடியாது

### "வரிக பூர்ணிகா"

இயக்கர்களைப் பற்றிய பல விபரங்களை உள்ளடக்கியதே "வரிக பூர்ணிகா" (වරිග පූර්ණිකාව - Vargapurnikawa அல்லது Wargapurnikawa) என்கிற ஓலைச்சுவடிகள். இது இராவணன் காலத்திலிருந்து வாய்மொழியாகவும், கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள் வழியாகவும் இராவணப் பரம்பரை காத்து வந்த தகவல்களை ஒன்றிணைத்து எழுதப்பட்ட ஒன்று என நம்பப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் மகாவம்சத்துக்கும் முந்தியது இது. கண்டி ராஜ்ஜியத்தில் ராஜாதிராஜசிங்கன் ஆட்சியின் போது "மனாபவி அருணவெசி நீலகிரிக போதி வங்க்ஷாபய" என்கிற ஒரு பௌத்த துறவியால் ஓலைச்சுவடிகளாக தொகுக்கப்பட்டது.

இயக்கர்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், சட்டதிட்டங்கள் மட்டுமன்றி பல கதைகளையும் குறிப்பாக இராவணன் பற்றிய கதைகளையும் கொண்டது அது என்கின்றனர். "வரிக பூர்ணிகா" பற்றி எழுதியிருப்பவர்கள் கௌரான மண்டக்க (කෞරාණ මන්ඩක) என்று அதில் குறிப்பிடப்படுவது இராவணனைத் தான் என்று அடித்துச் சொல்கின்றனர். கௌரான என்பதன் சிங்கள அர்த்தம் "பூரணமானவர்". "மண்டக்க" என்பதன் அர்த்தம் "அரக்கர்" என்பதாகும். இதன்படி இராவணனை "பூரணத்துவமுடைய அரக்கன்" என்றே அழைத்திருக்கிறார்கள் என்று கொள்ளலாம்.

"வரிக பூர்ணிகா" ஓலைச்சுவடிகள் தற்போது மெனேவே விமலரதன தேரர் வசம் உள்ளது. பரம்பரை பரம்பரையாக இறுகல் பண்டார ரவிஷைலாஷ ராஜகருணா என்கிற வம்சத்தவர்கள் தான் பேணி வந்திருக்கிறார்கள். அந்த வம்சத்தைச் சேர்ந்த பௌத்த பிக்கு தான் மெனேவே விமலரதன தேரர் (මානැවේ විමලරතන හිමි) இவர் வசம்







● மெனேவே விமலரதன தேரர்

ஏராளமான ஓலைச்சுவடிகள் உள்ளன. அவரால் ஆராயப்பட்ட சில ஓலைச்சுவடிகளை அவர் நூல்களாகவும் வெளிக்கொண்டு வந்திருக்கிறார். அப்படி அவர் வெளியிட்ட நூல்களில் ஒன்று தான் "இயக்கர்களின் மொழியும் ரவிஷைலாஷ வம்சத்தின் கதையும்" (යක්ෂ ගෝත්‍රික භාෂාව හා රවිශෛලොශ වංශ කථාව) என்கிற நூல். 2012 இல் முதன் முதலில் வெளியிடப்பட்ட இந்த நூலில் தான் அவர் "வரிக பூர்ணிகா" பற்றிய விபரங்களையும் வெளியிட்டிருந்தார். அதற்கு முன்னர் இந்த விபரங்கள் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

இந்த நூல் வெளிவந்ததன் பின்னர் தான் இராவணனை சிங்களத் தலைவராக முன்னிருந்தும் பல முனைப் பணிகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டன. அதுவரை இராவணன் பற்றிய கதைகள் மிக மெல்லியதாகவே இருந்தன. இன்னும் சொல்லப்போனால் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர், தமிழர்களின் மீதான நில ஆக்கிரமிப்பை செய்வதற்கும், நிலத் துண்டாடலைப் புரிவதற்குமான பேரினவாத முஸ்தீபுக்கு "சிங்கள இராவண" பிம்பத்தை உயிர்ப்பிப்பது வாய்ப்பாக ஆனது. சிங்களவர்கள் மத்தியில் இராவணப் புனைவை கருத்தேற்றுவதும், தமிழர்கள் மத்தியில் இராவண வழிபாட்டை பறித்தெடுப்பதுமான ஒரு பண்பாட்டு ஆக்கிரமிப்பு அவர்களுக்கு அவசியமாக உள்ளது என்றே கருத வேண்டியிருக்கிறது.

அது மட்டுமன்றி இராவணனின் பெயரில் அமைப்புகள், இணையத்தளங்கள், சமூக வலைத்தளங்கள் அத்தனையும் குறுகிய காலத்தில் ஆயிரக்கணக்கான முன்னெடுப்புகள் நகர்ந்தன. இலங்கையில் இப்போது இயங்கிவரும் சிங்கள பௌத்த பாசிச இயக்கமான "பொதுபல சேனா" இயக்கத்துக்கு நிகராக "ராவண பலய" என்கிற பேரினவாத அமைப்பும் இந்த நூலைத் தொடர்ந்து தான் உருவாக்கப்பட்டது. இப்போதும் இராவணன் பற்றிய பல முகநூல் பக்கங்களையும், இணையத்தளங்களையும், youtube சேனல்களையும், பல்லாயிரக்கணக்கான கட்டுரைகளையும், ஆய்வுகளையும், விவாதங்களையும், கலைப் பண்பாட்டு படைப்புகளையும் காண முடிகிறது.

"வரிக பூர்ணிகா" 20 பக்கங்களைக் கொண்ட நூல் என்கிறார். அதேவேளை அதன் உப நூல்களாக "ரங்தெலம்பு பெந்தி அனபத்த" கிரிதெலம்பு பெந்தி அனபத்த (රංතෙලෙඹු බැඳි අණපත, කිරි තෙලෙඹු බැඳි අණපත) என்கிற இரண்டு உள்ளதாகவும் அவை முறையே 500, 300 ஓலைப் பக்கங்களைக் கொண்டதாகவும் குறிப்பிடுகிறார். இவற்றில் "ரங்தெலம்பு பெந்தி அனபத்த" என்பதானது "ரவிஷைலாஷ இயக்கர் மொழி"க்கு வழிகாட்டுவதற்கான அகராதியாக இருப்பது அதன் விசேடத்துவம். கடைசி அத்தியாயத்தில் இலங்கையின் வடக்கு பகுதியில் வாழ்ந்த "கேவேசஷ்ட இயக்கர்" பற்றிய விபரங்கள் உள்ளடங்கியிருக்கிறது. ஆனால் இவை எதுவும் தமிழ் ஆய்வுகளுக்கு கிட்டாதவை என்பதை இங்கு கூறியாகவேண்டும்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஏற்கெனவே கண்டெடுக்கப்படுகின்ற பௌத்த தொல்பொருள் எச்சங்களை காண்பித்து "பௌத்த எச்சங்கள் ஆகவே இது சிங்கள பௌத்தர்களுக்கு சொந்தமானது" என்று உரிமை கோரத் தொடங்கிவிட்டார்கள். தமிழர்கள் ஒரு காலத்தில் அங்கு பௌத்தர்களாக இருந்தார்கள் என்பதையோ, பௌத்தம் தமிழர்களிடம் தழைத்தோங்கியிருந்தது என்பதையோ கொண்டாடாததன் விளைவு அந்த இடைவெளியை அவர்கள் நிரப்ப தலைப்பட்டிருக்கிறார்கள். அதே கதிதான் இன்று இராவணனுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் இராவணனைப் பற்றியும், இயக்கர்களைப் பற்றியும், குவேனியைப் பற்றியும் ஏராளமான விபரங்கள் உள்ளதாக கூறப்படுவதில் எத்தனை தூரம் உண்மை என்று தெரியவில்லை. "வரிக பூர்ணிகா" வை எழுதியவர் நீலகிரிக போதி வங்க்ஷாபய என்கிற ஸ்ரீ போதி வங்ச விதான என்கிற ஒரு பௌத்த துறவியாவார். கண்டி மன்னன் ராஜாதிராஜசிங்க ஆட்சியின் போது வாழ்ந்த பௌத்த துறவி அவர். ராவணன் காலத்திலிருந்து பல நூற்றாண்டுகளாக பரம்பரையாக பாதுகாக்கப்பட்ட நூல்களைத் தொகுத்தே இந்த நூல் உருவாக்கப்பட்டதென்கிறார் மெனேவே விமலரதன தேரர்.

மெனேவே விமலரதன தேரர் ஒரு "திபிடக பண்டிதராக" உயர் நிலையில் வைத்து போற்றப்படுபவர் என்பது இன்னொரு தகவல். இராவணன் உருவாக்கிய சிங்கள ஆயுர்வேத மருத்துவ முறைகள் என்றே பல மருத்துவ முறைகளை அழைத்து வருகிறார்கள். ஆயுர்வேத வைத்தியர்கள் இராவணனை வணங்கிவிட்டு மருத்துவம் செய்யும் மரபும் இருக்கிறது. ஆனால் அது எப்போதிலிருந்து கடைபிடிக்கத் தொடங்கினார்கள் என்பதை அறிதல் வேண்டும்.

சமீபத்தில் மெனேவே விமலரதன தேரர் யூடியுப் சேனல் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் தன்னிடமுள்ள பல ஓலைச்சுவடிகள் குறித்து விபரித்திருந்தார். பல ஓலைச்சுவடிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான குறியீடுகளை தான் இன்னமும் உறுதியாக கண்டுபிடிக்கவில்லை என்கிறார். அந்த நேர்காணலில் 26 வது நிமிடத்தில் ஒரு ஓலைச்சுவடியை எடுத்து உதாரணத்துக்கு விளக்குகிறார். "இது இயக்கர்கள் பற்றிய ஓலைச்சுவடி இல்லை. ஆனால் இது தமிழில் எழுதப்பட்டிப்பது தெரிகிறது. நாம் அதையிட்டு

குழப்பமடையத் தேவையில்லை. எனது தகப்பனார் இவற்றை வாசிக்கக் கூடியவர். என்னால் கூட புரிந்துகொள்ள முடியவில்லை. இதை வாசித்தறியும் அறிவு இன்று இல்லாமல் போய் விட்டது. சில வல்லுனர்களின் உதவியுடன் அவற்றில் சில ஆராயப்பட்டு மொழியாக்கம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன." என்கிறார் அவர்.

மகாவம்சமும் சொல்லாத "வரிக பூர்ணிகா" சொல்லியுள்ள "சிங்களவர் கதை" என்ன என்பதைத் தேடி இன்று வரலாற்று ஆய்வாளர்களும், தொல்பொருள் ஆய்வாளர்களும் கிளம்பிக் கொண்டிருக்கின்றனர். சில மதங்களுக்கு முன்னர் எழுத்தாளர் பிரபாத் அத்தநாயக்க என்பவர் அப்படி ரிட்டிகல என்கிற இடத்தில் இராவணனின் அடிச்சுவட்டைச் தேடிச் சென்றதாக கூறி ஒரு கட்டுரையை எழுதினார். 29.02.2020 அன்று வெளியான அந்தக் கட்டுரையின் தலைப்பு கூட "மகாவம்சத்தில் இல்லாத "வரிக பூர்ணிகா"வில் இருக்கிற இராவணனின் வரலாற்றைத் தேடி ரிட்டிகல பயணம்" என்று இருந்தது. "வரிக பூர்ணிகா" புனைவுகளைக் கொண்ட பெரும் திரிபு என்று வாதிடும் ஆய்வாளர்களும் உள்ளார்கள். ஆனால் இதுவரை இராவணன் பற்றி எழுதிய தமிழ் ஆய்வாளர்களின் பார்வைக்கு இந்த விபரங்கள் எட்டியதாகத் தெரியவில்லை.

**இலங்கையில் வரலாறும், தொன்மம் பற்றிய மரபும், அதன் முதுசமும் இருவேறு மொழிகளில், இரு வேறு வழிகளில், இருவேறு அர்த்தங்களில், இருவேறு வியாக்கியானங்களில் நெடுங்காலமாக பயணித்தபடி இருப்பதை அவதானித்தாக வேண்டும். இப்போதும் தமிழில் பேசப்படுகிற வரலாற்றுத் தொன்மை பற்றி சிங்களவர் அறியார்.**

### இராவணனின் தற்காப்புக்கலை !?

அதேவேளை சிங்களவர்களின் தற்காப்புக் கலையாக இன்று போற்றப்படும் "அங்கம்பொற" கலையை கற்பவர்களும், கற்பிப்பவர்களும் இராவணனை வணங்கிவிட்டு தொடருகின்றனர். அது இராவணனின் கலை என்கின்றனர். ஆனால் சமீப காலம் வரை அக்கலை கேரளாவிலிருந்து இலங்கைக்கு வந்த களரி இலங்கைக்கான வடிவமெடுத்தே "அங்கம்பொற" ஆனது என்றே கூறி வந்தனர். 2019 மார்ச் மாதம் இலங்கையின் அமைச்சரவையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் "அங்கம்பொற" கலையை மரபுரிமையாக பிரகடனப் படுத்தும் முடிவை எடுத்தார்கள். அதைத் தொடர்ந்து பெரிய விழாவெடுத்து இலங்கையின் "மரபுரிமையாக" அதை பிரகடனப்படுத்தியதும் நினைவிருக்கலாம்.

இராவணனைப் பற்றி அதிகம் எழுதி அக்கருத்துக்களை வெகுஜனமயப்படுத்தியதில் பேராசிரியர் மிராண்டோ ஒபேசேகரவின் ஆராய்ச்சிகளைப் பற்றி லங்காதீப பத்திரிகையில் "இராவண அரசனின் போர்முறை" என்கிற தலைப்பிலான கட்டுரையில் "அங்கம்பொற" கலையானது இராவணன் நமக்கு விட்டுச் சென்ற தற்காப்புக்கலை என்று நிறுவ முயல்கிறார். இராவணனுக்குப் பின்னர் விபீஷணன் போன்றோர் அக்கலையை முன்னெடுக்காததன் விளைவு அது "அங்கம்பொற" கலையைக் கற்றிருந்த குலமொன்று இந்தியாவுக்குச் சென்று விட்டதென்றும் அவர்கள் தென்னிந்தியாவில் "அகம்படியார்" என்கிற சாதியாக மாறிவிட்டனர் என்றும், இந்த அகம்படியார் சாதியானது இராவணனின் வழித்தோன்றலே என்றும், முதலாவது விஜயபாகு அரசர் அவர்களை மீண்டும் இலங்கைக்கு வரவழைத்து அவர்களுக்கு கிராமங்களை பரிசளித்து குடியேற்றினார் என்றும், அவர்கள் குடியேற்றப்பட்ட வெளிதொட்ட என்கிற பகுதி தான் இப்போது தெற்கில் பலபிட்டிய என்கிற பிரதேசம் என்கிறார்.

இராவணனின் மருத்துவ முறைகளை இவர்கள் "அங்கம்" கலையோடு சேர்த்து பேணி வந்ததாகவும் குறிப்பிடுகிறார். இதைவிட அடுத்த புரட்டு என்னவென்றால் "இராவணனின் அமைச்சரவையில் இருந்த அமைச்சர் இராவணனைக் காண நான்கு சில்லு பொருத்திய வாகனத்தில் தான் வந்து போனார். இந்த வாகனத்துக்கு என்று அதிசயிக்கத்தக்க எஞ்சின் பொருத்தப்பட்டிருந்ததுடன், அது சூரிய ஒளியில் இயங்கியது. இவை ஓலைச்சுவடிகளிலும், செய்திகளிலும் காணக்கிடைக்கின்றன. இதன்படி சக்கர வண்டிகளின் தோற்றம் இராவண காலத்தில் இருந்தா? இந்த நாற்சக்கர வண்டியை உலகுக்கு அறிமுகப்படுத்தியது இலங்கையா என்கிற கேள்வி புதிய தேடலுக்கு வழிவகுக்கும்" என்கிறார்.[8]

இலங்கையில் இராவணனின் அடையாளங்கள் இருப்பதாக நம்பப்படும் பல இடங்களை குறிப்பிட்டு வருகின்றனர். அவ்வாறான பல இடங்களுக்கு உல்லாசப் பயணங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். குருநாகல் மாவட்டத்தில் வாரியபொல என்கிற ஒரு ஊர் உண்டு. அங்குள்ள ஒரு புறநகர்ப் பகுதியில் ஒரு பலகையின் அடையாளக்குறிப்பில் "நீங்கள் வாரியபொல நகரினுள் பிரவேசிக்கிறீர்கள். இராவணனின் ஆட்சிக்காலப் பகுதியில் இந்நகரம் காற்றிலும் பார்க்க அதிவேகம் கூடிய வாகனங்கள் தரையிறங்கும் பகுதியாக விளங்கியது" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்பலகை வாரியபொல பிரதேச சபையினால் பல சில தசாப்தங்களாக அங்கு வைக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

அந்த நகருக்கு அந்தப் பெயர் வரக் காரணமாக இப்படிச் சொல்லப்படுகிறது. 'வா' என்பது

[8] அசங்க ஆட்டிகல - "இராவண அரசனின் போர்முறை" - லங்காதீப -09.09.2014



காற்றையும், ரிய' என்பது வாகனத்தையும், 'பொல' என்பது இடப்பரப்பையும் குறிக்கின்றன. இவ்வாறு இம்மூன்று கருத்துக்களையும் ஒன்று சேர்க்கையில், இந்த ஊகம் காற்றினால் இயங்கும் அல்லது காற்றின் வேகத்தில் பறக்கும் வாகனங்கள் தறையிரங்கிய இடத்தைக் குறிக்கின்றது எனலாம். இராவண கற்பனைக்கதையை வரலாற்றுண்மைகளாக மாற்றியமைப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு முயற்சிகளில் இதுவும் ஒன்று.

### தமிழருக்கா சிங்களவருக்கா இராவணன் சொந்தம்

இப்போது உள்ள வாதம் இதுதான்; இராவணனை தமிழர்கள் தான் கொண்டாடி வந்தார்கள். தமிழர்களின் தலைவனாகத் தான் பெருமிதமடைந்து வந்தார்கள். கோவில் கட்டினார்கள். சிலைகள் எழுப்பினார்கள். தொல்பொருள் ஆதாரங்களை தமதேன்றே கூறிவந்தார்கள். குறிப்பாக வடக்கு கிழக்கில் இராவணன் தமது புராண தமிழ்–இந்துத்துவ தலைவனாகவே கொண்டாடி வந்திருக்கிறார்கள்.

இப்போது சிங்களவர்கள் தமது தலைவன் என்று வாதிடத் தொடங்கியிருப்பதுடன், தமது பெரும்பான்மை பலத்துடனும், அரச அதிகாரத்தின் அனுசரணையுடனும் அதை பலமாக நிறுவி வருகிறார்கள். வெகுஜனப் புனைவுப் பரப்புரை தொடக்கம், தொல்பொருள் புனைவுகள் வரை அது நீண்டுவிட்டிருக்கிறது. வடக்கு கிழக்குப் பகுதியில் நில ஆக்கிரமிப்புக்காகவும், பண்பாட்டு ஆக்கிரமிப்புக்காகவும் தற்போது மேற்கொள்ளப்பட்டு தொல்பொருள் ஆக்கிரமிப்பின் இன்னொரு வடிவமாகவும் மாறியுள்ள இராவணனின் இடங்கள்தான் இவை. எனவே இது சிங்களவர்கள் நிலமே என்கிற தர்க்கத்தை முன் வைக்கத் தான் போகிறார்கள். வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஏற்கெனவே கண்டெடுக்கப்படுகின்ற பௌத்த தொல்பொருள் எச்சங்களை காண்பித்து "பௌத்த எச்சங்கள் ஆகவே இது சிங்கள பௌத்தர்களுக்கு சொந்தமானது" என்று உரிமை கோரத் தொடங்கிவிட்டார்கள். தமிழர்கள் ஒரு காலத்தில் அங்கு பௌத்தர்களாக இருந்தார்கள் என்பதையோ, பௌத்தம் தமிழர்களிடம் தழைத்தோங்கியிருந்தது என்பதையோ கொண்டாடாததன் விளைவு அந்த இடைவெளியை அவர்கள் நிரப்ப தலைப்பட்டிருக்கிறார்கள். அதே கதிதான் இன்று இராவணனுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

இலங்கையில் வரலாறும், தொன்மம் பற்றிய மரபும், அதன் முதுசமும் இருவேறு மொழிகளில், இரு வேறு வழிகளில், இருவேறு அர்த்தங்களில், இருவேறு வியாக்கியானங்களில் நெடுங்காலமாக பயணித்தபடி இருப்பதை அவதானித்தாக வேண்டும். இப்போதும் தமிழில் பேசப்படுகிற வரலாற்றுத் தொன்மை பற்றி சிங்களவர் அறியார். சிங்களவர் மத்தியில் ஊன்றியிருக்கும் வரலாற்று மரபு குறித்து தமிழர் அறியார். இந்த இரண்டும் தற்செயலாக ஆங்காங்கு சந்தித்துக்கொள்ளும்போது திடுக்கிட்டு வியக்கின்றன. மோதிக்கொள்கின்றன. ஈற்றில் பெருமிதத் தொன்மை பேசி இருப்பைத் தக்கவைக்கும் அவசர நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இந்த நிலை மிகவும் அபாயகரமானது. குறிப்பாக இனத்துவ முறுகலின் உச்சத்தில் இருக்கிற இந்த நாட்டில் இந்த துருவமயப் போக்கு ஆபத்தை தக்கவைத்துக்கொண்டிருக்கிறது. ஆபத்தை தூண்டிக் கொண்டிருக்கிறது. வெடித்து வெடித்துத் தணிகிறது.

இப்போது இராவணனை தங்கள் பாரம்பரிய புராதன பண்பாட்டின் நாயகன் என்று பரஸ்பர பகைமையுணர்வு கொண்ட சிங்களவர்களும், தமிழர்களும் கொண்டாடுகின்றனர். புராணக் கதைகளும் இதிகாசங்களும் இப்போது அரசியல்வாதிகள், தேசியவாதிகள், இனவாதிகள் அனைவருக்குமே தமது கைகளில் சூழ்நிலைக்கிசைந்த கருவியாக மாறியுள்ளது. இவற்றை இனமத தேசியவாதத்துடனும் இணைத்து அவற்றின் அரசியல் நிகழ்ச்சிநிரலுக்காக பயன்படுத்திகொள்கின்றனர். புனித மேன்மைக்கு அவற்றைக் கொண்டு வைப்பதன் மூலம் அதற்கு ஒரு ஆன்மீக அந்தஸ்தையும் கொடுத்துவிடுகின்றனர்.

இராவணனை சொந்தம் கொண்டாடுவதில் இன்னமும் இரு இனங்களுக்கும் மத்தியில் இதுவரை சண்டைகள் வெடிக்கவில்லை. ஆனால் அப்படிப்பட்ட நெருக்கடிகளுக்குள் தற்போது இந்த உரிமைகோரல் நெருங்கிக்கொண்டிருப்பதாக அச்சம் கொள்ள முடிகிறது.

இராவணனை விட்டுக்கொடுப்பதை விட, அல்லாது போனால் இராவணனை உரிமை கோருவதைவிட செய்யவேண்டியது என்னவென்றால் இராவணன் நம் தலைவன் இலங்கையின் தலைவன். நீயும் நானும் வேறல்ல. நாம் இரு சாராருமே மண்ணின் மைந்தர்கள் தான், நாம் இந்தியாவில் இருந்து வந்தவர்கள் அல்ல என ஒப்புக்கொள்வதே இனப்பிரச்சினைக்கு முடிவைக் கட்டும். இனங்களுக்கிடையிலான புரிதலையும் எட்டச் செய்யும். ஈற்றில் இனப்பிரச்சினையையும் தீர்க்க உதவும்.

இராவணனை ஹைஜாக் (Hijack) செய்வதன் அரசியல் சூட்சுமத்தை இப்படித்தான் நாம் விளங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

கடைசிப் பக்கம்

இரா.எட்வின்

65/66

# காக்கைச் சிறகினிலே

29.06.1952, திருவான்மியூர்

சலவைத் தொழிலாளிகள் மாநாடு நடக்கிறது. அன்றைய முதல்வர் மாண்புமிகு ராஜாஜி அவர்கள் சிறப்பு விருந்தினராக அந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

ஒரு மிக முக்கியமான ஒரு கோரிக்கையை அவரிடத்திலே வைக்கிறார்கள் சலவைத் தொழிலாளர்கள், “எங்கள் குழந்தைகள் பள்ளிக்கூடம் சென்று படித்து அறிவு வெளிச்சம் பெறுவதற்கான வாய்ப்புகளை மாண்புமிகு அய்யா அவர்கள் கருணையோடு செய்துதர வேண்டும்”

அதற்கு ராஜாஜி இப்படியானதொரு நீண்ட பதிலைத் தருகிறார்.

**“அவனவன் ஜாதித் தொழிலை அவனவன் செய்ய வேண்டும்.**

**வண்ணார் வீட்டுப் பிள்ளைகள் படிக்க வேண்டியதில்லை. குலத் தொழிலைச் செய்தால் போதும்.**

**எல்லோரும் படித்தால் எங்கிருந்து வேலை வரும்?”**

(குலக்கல்வியை ஒழித்த பெரியார் இயக்கம் - போராட்ட வரலாறு - முதல் பாகம் - பக்கம் 60)

ஏதோ ஒரு அளவிற்கு நாம் இன்று பெற்றிருக்கும் கல்வியறிவு அப்படி ஒன்றும் சும்மா கிடைத்துவிடவில்லை என்பதையும் ராஜாஜி மாதிரி ஆட்களின் நேரடியான எதிர்ப்பையும் தடைகளையும் போராடிக் கடந்த பிறகே அது நமக்கு சாத்தியப் பட்டிருக்கிறது என்பதையும் நாம் அவசியம் உணர வேண்டும்.

நமக்கான கல்வியை மறுத்த ராஜாஜி ஒன்றும் சாதாரணமான மனிதர் அல்ல. கல்வியைத் தருவதற்கும் மறுப்பதற்குமான அதிகாரத்தைத் தன்னிடத்திலே வைத்திருந்த சக்தி வாய்ந்த மனிதர்.

இரண்டு விஷயங்களைப் பிரதானமாக இங்கு வைக்கிறார் ராஜாஜி.

அவனவனும் அவனவன் ஜாதித் தொழிலை செய்ய வேண்டும். எல்லோரும் படித்துவிட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் வரும்.

எவ்வளவு தெளிவாக, எவ்வளவு ஆணவமாக உரையாடுகிறார் பாருங்கள்.

சலவைத் தொழிலாளிகள் மாநாட்டிலேயே, சலவைத் தொழிலாளிகள் முன்னால் நின்றுகொண்டே சலவைத் தொழிலாளர்க்கு எதிராக இவ்வளவு தைரியமாக அவர் பேசியிருக்கிறார் என்றால் அமைச்சரவைக் கூட்டத்தில், என்னவெல்லாம் பேசியிருப்பார், சட்டமன்றத்தில் என்னவெல்லாம் செய்திருப்பார்.

அவனவனும் அவனவன் தொழிலை செய்ய வேண்டும் என்றால் என்ன?

செருப்பு தைப்பவன் வீட்டுப் பிள்ளைகள் செருப்பு தைக்க வேண்டும். மாடு மேய்ப்பவன் பிள்ளை மாடு மேய்க்க வேண்டும், சலவைத் தொழிலாளியின் பிள்ளை சலவைத் தொழில் செய்ய வேண்டும்.

மற்றபடி கலக்டர், வக்கீல், நீதிபதி, மருத்துவர், மற்ற அரசுப் பணிகள் உள்ளிட்டவற்றை பார்ப்பனர்களும் உயரடுக்கு மேட்டுக் குடியினரும் பார்த்துக் கொள்வார்கள்.

எல்லோரும் படித்துவிட்டால் வேலை கிடைக்காதாம். இது என்ன நியாயம்?

எல்லோருக்கும் படிப்பைத் தரவேண்டிய பொறுப்பைச் சுமந்துகொண்டிருந்த ஒருவரை எவ்வளவு கேவலமாக பேச வைத்திருக்கிறது ஜாதிவெறி. எல்லோருக்குமான வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டிய முதல்வர், எல்லோரும் படித்தால் வேலை கிடைக்காது என்கிறார்.

நாம் எளிதாகப் புரிந்துகொள்வதற்காக இப்படி வைப்போம். அன்றைய தேதியில் ஒரு லட்சம் வேலைகள் இருந்ததாகக் கொள்வோம்.

அந்தப் பணியிடங்களில் பார்ப்பனர்களும் உயரடுக்கு மேட்டுக் குடியினரும் மட்டுமே இருந்திருப்பார்கள். ஏனெனில் அவர்கள் மட்டுமே அதுவரைப் படித்தவர்கள்.

இப்போது எல்லா ஜாதியினரும் படித்து வந்துவிட்டால் ஒரு லட்சம் பணியிடங்கள் எண்பதாயிரமாக்க் குறைந்துவிடப் போவதில்லை.

ராஜாஜிக்கும் இது தெரியும். அவரது பதற்றத்திற்கான காரணம் வெளிப்படையானது.

எல்லோரும் படித்துவிட்டால் இதுவரை பார்ப்பனர்களும் மேட்டுக்குடியினரும் மட்டுமே அனுபவித்து வந்த பணிகளில் இவர்களுக்கும் பங்கு தர வேண்டும். அவர்களது பணியிடங்களைத் தக்க வைப்பது மட்டுமே அவருக்கான திட்டம் எனில் அவர்களது வாய்ப்பு பறிபோகாத அளவிற்கு பணியிடங்களை கூடுதலாக உருவாக்கி இருக்கலாம்.

அவரது திட்டம் விஷமமானது, இந்து மதத்தால் ஒடுக்கப்பட்ட மற்ற ஜாதிக்காரர்கள் கல்வி பெறுவதன் மூலம் ஒரு அங்குலமும் உயர்ந்துவிடக் கூடாது. 1952-இல் அவர் இப்படிப் பேசி இருந்தாலும் அதற்கு முன்னமே இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த அன்றையக் குழந்தைகள் நீதிக்கட்சி ஆட்சி மற்றும் ஓமாந்தூரார் ஆட்சி ஆகியவற்றின் முயற்சியால் ஏற்கனவே பள்ளிகளில் இருந்தார்கள் என்பதையும் அறிந்தவராகவே அவர் இருந்தார். அதனால்தான் மிகக் கவனமாகக் காய்களை நகர்த்தத் தொடங்குகிறார்.

அவரது அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்த மாண்புமிகு M.V.கிருஷ்ணராவ் அவர்கள் மூலமாக சட்டசபையில் 20.03.1953 அன்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருகிறார். அந்தத் தீர்மானம் கீழ்க்காணும் திட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது.

1. **தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் படிக்கும் கால அளவை நாளொன்றுக்கு மூன்றுமணி நேரமாகக் குறைப்பது.**
2. **மிச்சப்படும் நேரத்தில் குழந்தைகள் பெற்றோர்களது தொழிலைக் கற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்வது.**
3. **பரம்பரைத் தொழில் இல்லாத குழந்தைகளை வயல்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் அனுப்பி தொழில்களை கவனித்துக் கற்றுக் கொள்ளச் செய்வது.**
4. **விவசாயத் தொழில்கள், கொட்டகை போடுதல், செங்கல் அறுப்பு, கிணறு வெட்டுதல் போன்ற வேலைகளைக் கற்கச் செய்வது.**

(புரிந்துகொள்வதற்கு வசதியாக எண்களிட்டுப் பிரித்தும் சில சொற்களை எளிமைப்படுத்தியும் இருக்கிறேன்)

அதற்கு அடுத்த நாளே (21.03.1953), “சிறுவர் கல்வியைப் பாழாக்கும் புதிய திட்டம் உஷார்” மக்களை எச்சரித்தது ‘விடுதலை தலையங்கம்’.

அன்று தொடக்கம் தந்தை பெரியார் ஆவேசமாக களமாடுகிறார். இடதுசாரிகள் களமாடுகிறார்கள். திமுக களமாடுகிறது.

அதன் விளைவுதான் இந்த மட்டுக்குமேனும் நம்மால் வர முடிந்திருக்கிறது.

குலக்கல்வி குறித்து அடுத்த தலைமுறைக்கு கொண்டுசெல்ல வேண்டிய தேவை இருக்கிறது. காரணம் அவர்கள் “நவீன குலக் கல்வித் திட்டத்தை” சந்திக்க இருக்கிறார்கள். முடியுமெனில் இந்தக் காரியத்தைத் தொடர்ந்து முன்னெடுப்போம்

○○○

சங்கரின் கொலை வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதி மன்றம் இன்று தனது தீர்ப்பினை வழங்கி இருக்கிறது.

அந்தப் பகுதியில் இருந்த CCTV கேமராவில் கொலை தெளிவாகப் பதிவாகி இருக்கிறது. அதன் மூலமாக குற்றவாளிகளை அடையாளம் தெரிகிறது. அவர்களை நீதிமன்றம் குற்றவாளிகள் என்று உறுதி செய்து கீழ் நீதிமன்றம் அவர்களுக்கு அளித்திருந்த தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து தீர்ப்பளித்திருக்கிறது.

தூக்குத் தண்டனைக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுக்கிறோம் என்ற வகையில் இந்தத் தண்டனைக் குறைப்பை வரவேற்கிறோம். அதே நேரம், அந்தக் கொலையை கௌசல்யாவின் தந்தையோ, தாயோ, மாமாவோ செய்யவில்லை என்பது உறுதியாகத் தெரிவதால் கீழ்நீதிமன்றம் அவர்களுக்கு விடுதலை அளித்திருந்ததை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இதில் கொலையாளிகள் கௌசல்யாவின் உறவினர்களோ ஜாதிக்காரர்களோ இல்லை என்று தெரிய வருகிறது. இதன் மூலம் அவர்களுக்கு சங்கரை கொல்வதற்கான எந்தவிதமான மோட்டிவும் இல்லை என்பது உறுதியாகிறது. எனில் ஏன் இவர்கள் சங்கரை கொலை செய்தார்கள்? கௌசல்யாவின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் யாரோ கொடுத்த பணத்திற்கு கொலை செய்திருக்கிறார்கள். கொலை செய்தவர்களைத் தண்டித்தது சரி. கொலையாளிகளை ஏற்பாடு செய்தவர்கள் குற்றவாளிகள் இல்லையா நீதியரசர்களே?

○○○

கொரோனா வந்தது. ஊரடங்கும் வந்தது. கொரோனா நீடித்தது. ஊரடங்கும் நீண்டு கொண்டே போகிறது.

ஊரடங்கு மட்டும் இல்லாது போயிருந்தால் இந்நேரம் நினைத்தே பார்க்க முடியாத அளவிற்கு பாதிப்பும் மரணங்களின் எண்ணிக்கையும் கூடிப் போயிருக்கும். ஆனால், இவ்வளவு நீண்ட ஊரடங்கு தந்திருக்க வேண்டிய பயன் கிடைக்கவில்லை.

காரணம் மிகவும் சுளுவானது. ஊரடங்கு அவசியம் என்று சரியாக முடிவெடுத்த அரசுகள் ஊரடங்கை எப்படிப் பயன்படுத்துவது என்பதில் தெளிவற்றிருந்தன. அதன் விளைவுதான் ஒவ்வொரு நாளும் தொற்றின் எண்ணிக்கையும் மரணங்களின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டே போகிறது. இதுதான் இப்படி என்றால் ஊரடங்கை ஒட்டி அதற்கு முன்னதாக செய்திருக்க வேண்டிய முன்னேற்பாடுகளை செய்யாததால் ஏராளமானோர் சொந்த ஊர்களுக்கு நடக்கும்போதே செத்திருக்கிறார்கள். பலர் பசிக்கு பலியாகி இருக்கிறார்கள். தொற்று நாளுக்கு நாள் வீரியம் பெறுகிற நிலையில் அரசும் தனது செயல்பாட்டை வீரியப் படுத்த வேண்டும்.

●



Printed by **H. Dhanasekaran** and Owned, published by **V.Muthaiah** and Printed at **Sekar Offset Printers,** New No. 50 (Old No. 168/1) Big Street, Chepauk, Chennai - 600 005 and Published at 17/14, Diwan Rama Road, Purasaivakkam, Chennai - 600 084. Editor: **V.** Muthaiah



# காக்கைச் சிறகினிலே மாத இதழ் முன்னெடுக்கும் ஆறாவது ஆண்டு கவிஞர் கி பி அரவிந்தன் நினைவு இலக்கியப் பரிசு உலகத்தமிழ் 'அறிவியல் புனைவு சிறுகதைப் போட்டி 2021

வள்ளுவராண்டு 2052

2050-களில் புவியில் தமிழர் வாழ்வு என்பது சிறுகதையின் மையக்கருவாக இருக்க வேண்டும்.

போட்டிக்கான கால எல்லை: 03.01.2021
போட்டி முடிவு: மார்ச்சு 2021இல் வெளிவரும்

காக்கைச் சிறகினிலே இதழின் தொடக்க நெறியாளராகப் பணியாற்றி மறைந்த இலக்கியவாதி 'கி பி அரவிந்தன்' கனவின் மீதியில் எழும் புதிய தடமாக அமைகிறது இந்தப் போட்டி.

பாரதி கண்ட "சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!" என்ற கனவை நனவாக்கும் முயற்சிகளில் ஒன்று. உலகெங்கும் வியாபித்தவர்களாகி தொடரும் வாழ்வில் அடுத்தடுத்த தலைமுறையினர் எண்ணங்களைக் கொண்ட எழுத்துகளையும் படைப்புகளையும் ஊக்குவிக்கும் முகமாக இப் போட்டி அமைகிறது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என வாழும் தமிழ் மக்களின் பூர்வீகம் - புலப்பெயர்வு அதன் நீட்சியென வாழத் தலைப்பட்ட வாழ்வினரது எதிர்காலக் கதைகளை பரவலாக எதிர்பார்க்கிறோம்.

**நெறியாளர்**

மதிப்புக்குரிய பத்மநாப ஐயர் (இங்கிலாந்து)

**நடுவர் குழு**

மதிப்புக்குரிய பேராசிரியர் சு. இராமசுப்பிரமணியன் (இந்தியா)
மதிப்புக்குரிய பேராசிரியர் ச. சுகிர்தராஜா (இங்கிலாந்து)
மதிப்புக்குரிய எழுத்தாளர் திரு ரஞ்சகுமார் (ஆஸ்திரேலியா)
மதிப்புக்குரிய பேராசிரியர் சு. ஸ்ரீதரன் (அமெரிக்கா)
மதிப்புக்குரிய எழுத்தாளர் திருமதி கீதா மதி (ஆஸ்திரேலியா)

படைப்பு அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி: *kipian2021kaakkaicirakinile@gmail.com*

படைப்பு அனுப்பவேண்டிய கடைசி நாள்: 03.01.2021

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 / 43921
Postal Registration No. TN / CCN / 588 / 2019-2021 WPP No. TN/PMG (CCR) / WPP-354/2019-2021.
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month



**போட்டியின் விதிமுறைகள் :**

1. அறிவியல் புனைவுச் சிறுகதைப் போட்டியில் பங்கேற்கும் போட்டியாளர் தனது மின்னஞ்சலூடாக மட்டும் தனியாக இணைக்கப்பட்ட தனது சுயவிபரக் கோவையுடன் முழுப் பெயர், புனைவுப் பெயர், முகவரி, தொலைபேசி, செல்பேசி உள்ளிட்ட விவரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும். போட்டியில் பங்கேற்கும் சிறுகதைகள் எழுத்தாளரின் சொந்தக் கற்பனை என்றும் இந்தப் போட்டிக்காகவே எழுதப்பட்டது என்றும் மின்னஞ்சலில் உறுதிப்படுத்தல் வேண்டும்.
2. போட்டியில் இடம்பெறும் சிறுகதை ஊடகங்களிலோ போட்டிகளிலோ பங்கேற்கவில்லை எனும் உறுதிமொழியை மின்னஞ்சலில் வழங்க வேண்டும். போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும் வரையில் எந்த ஊடகங்களிலோ இணைய தொலைத் தொடர்பு சாதன வலைகளிலோ வெளியிடக் கூடாது.
3. கதைக் கரு மற்றும் களம்–காலம் அறிவியல் தகுநல் தகைமையுடன் அமைதல். சிறுகதைக்கான தலைப்பு எழுத்தாளரது தெரிவு.
4. வார்த்தைகள் 1200 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் (காக்கை இதழில் 5 பக்கங்கள்). யூனிகோட் எழுத்துருவில் ஆக்கங்கள் அமைதல். சிறுகதை இணைக்கப்படும் மின்னஞ்சல் தலைப்பில் கவிஞர் கிபி அரவிந்தன் நினைவு இலக்கியப் பரிசு 2021–‘உலகத் தமிழ் அறிவியல் புனைவுச் சிறுகதைப் போட்டி’ எனக் குறிப்பிடல்.
5. பரிசுக்குரிய கதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
6. பங்கேற்கும் போட்டியாளர்களுடன் அஞ்சல், தொலைபேசி, மின்னஞ்சல் விசாரிப்புகள் நடைபெறாது. முடிவுகள் அறிவிக்கபட்ட பிறகே உரிய தொடர்பாடல்கள் நடைபெறும்.
7. போட்டி முடிவு 2021 மார்ச்சு மாத இறுதியில் காக்கை குழுமத்தினால் முறைப்படி அறிவிக்கப்படும்.
8. போட்டி நிறைவு நாள்– 2021 சனவரி 03.
9. பரிசுக்குத் தெரிவாகும் சிறுகதைகளை காக்கை இதழ்க் குழுமம் உரிய முறைமையில் வெளியிடும்
10. இந்தப் போட்டிக்கான மின்னஞ்சல் முகவரி kipian2021kaakkaicirakinile@gmail.com

- **முதல் பரிசு :**
  **10000**
  **இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்**
- **இரண்டாவது பரிசு :**
  **7500**
  **இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்**
- **மூன்றாவது பரிசு :**
  **5000**
  **இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்**
- **நான்கு ஆறுதல் பரிசுகள் :**
  **தலா 2000**
  **இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்**
- **ஊக்கப் பரிசு :**
  **சான்றிதழ்**

காக்கைச் சிறகினிலே
காக்கை கரவா கரைந்துண்ணும்

இதழ்க் குழுமம்

kaakkaicirakinile@gmail.com
www.facebook.com/kakkai.cirakinile
kaakkai.in

(நன்றி : இப்போட்டிக்கான பணப் பரிசினை வழங்கும் கிபி அரவிந்தன் குடும்பம் சார்பாக திருமதி சுமதி மற்றும் இலண்டன் துளிர் நண்பர்கள்)